# எழுநா

இதழ் 3




பாக்கியநாதன் அகிலன்


கந்தையா சண்முகலிங்கம்


பி.ஏ. காதர்


ந. இரவீந்திரன்


என். கே. எஸ். திருச்செல்வம்


கந்தையா பகீரதன்


இரா.சடகோபன்


பாலசுப்ரமணியம் துவாரகன்


சு. சிவரெத்தினம்


முனைவர் பால.சிவகடாட்சம்


பரமு புஷ்பரட்ணம்


அனுதர்ஷி கபிலன்


அமரசிங்கம் கேதீஸ்வரன்


வி. துலாஞ்சனன்


சி. கிருபானந்தகுமரன்


தியாகராஜா சுதர்மன்


பேராசிரியர்
எம். சின்னத்தம்பி

# உள்ளே...


ஈழத்தமிழரும் கறுப்புச் சுற்றுலாவும்
– பாக்கியநாதன் அகிலன் 04

கனடாவில் பன்மைப் பண்பாட்டுவாதம்
– கந்தையா சண்முகலிங்கம் 07

காலனித்துவ ஆட்சியாளர் விட்டுச்சென்றவையும் (Colonial legacy) பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட சமூக – பொருளாதார மாற்றங்களும்
– பி.ஏ. காதர் 12

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுதல்
– பி.ஏ. காதர் 18

இன்னொரு உலக ஒழுக்காறு: உலக நாடுகளின் இயக்கச் செல்நெறி
– ந. இரவீந்திரன் 27

இலங்கையில் தமிழர் பற்றிய பிராமிக் கல்வெட்டுக்கள் – ஓர் அறிமுகம்
–என். கே. எஸ். திருச்செல்வம் 32

இலங்கையின் பாரம்பரிய விவசாய வரலாறு
– கந்தையா பகீரதன் 35

பாரம்பரிய விவசாயமும் சூழல் சமநிலையும்
– கந்தையா பகீரதன் 39

இலங்கையில் தேயிலையின் தந்தை 'ஜேம்ஸ் டெய்லர்'
– இரா. சடகோபன் 44

உலகையே அடிமையாக்கிய இலங்கைத் தேயிலை
– இரா. சடகோபன் 47

தோட்டத் தொழிலாளர்களும் அதிகார வர்க்கத்திற்கெதிரான முரண்பாடுகளும்
– இரா. சடகோபன் 50

மருத்துவர் கிறீனின் யாழ்ப்பாண வருகை
– பாலசுப்ரமணியம் துவாரகன் 53

யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருத்துவத்தின் வெற்றிக்கு வித்திட்ட மருத்துவர் கிறீன்
– பாலசுப்ரமணியம் துவாரகன் 56

டி. எஸ். சேனநாயக்காவும் ஜி.ஜி.பொன்னம்பலமும்
– சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம் 59

இரசவர்க்கம் – மருந்தாகும் மசாலாப் பொருள்கள் பகுதி 1
– முனைவர் பால.சிவகடாட்சம் 67

18ம் நூற்றாண்டில் வடஇலங்கையின் வேளாளர்கள் : வர்த்தகமும் முயற்சியாண்மையும் சமூக உயர்ச்சியும்
– கந்தையா சண்முகலிங்கம் 74

இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வுகள்
– பரமு புஷ்பரட்ணம் 79

பண்பாட்டுத் திணிப்பும் பால்நிலைச் சமத்துவம் நோக்கிய நகர்வும்
– அனுதர்ஷி கபிலன் 86

வனவளமும் வன முகாமைத்துவமும்
– அமரசிங்கம் கேதீஸ்வரன் 90

கீழைக்கரையும் அதன் புவிச்சரிதவியலும் I
– விவேகானந்தராஜா துலாஞ்சனன் 93

கீழைக்கரையும் அதன் புவிச்சரிதவியலும் II
– விவேகானந்தராஜா துலாஞ்சனன் 97

பால்: உணவு முதல் வணிகம் வரை
–சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 106

அரிசிசார் யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகள்
– தியாகராஜா சுதர்மன் 111

இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கையும் இயற்கைச்சூழலின் மீது அதன் தாக்கங்களும்
– பேராசிரியர் எம். சின்னத்தம்பி 117

மலையகத்திலே ஒரு பல்கலைக்கழகமும் சமூக பொருளாதார மேம்பாடும்
– பேராசிரியர் எம். சின்னத்தம்பி 121

# எழுநா

**இதழ் 3**


**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**ஆசிரியர் குழு**
மாயழகு பவித்ரா
பரமசிவம் பவதாரணி

**குரல் வடிவம்**
பாலரூபன் கிருஷிகா
இராதாகிருஷ்ணன் தர்ஷினி

**ஆலோசகர் குழு**
கந்தையா ரமணிதரன்
கதிர் சயந்தன்
சிவகுமார்
மகேந்திரன் திருவரங்கன்
தில்லைநாதன் கோபிநாத்

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே
கனகலிங்கம் சுகுமார்


முந்தைய இதழ்




FOLLOW

எழுநா

- https://ezhunaonline.com/
- https://youtube.com/user/Ezhuna
- https://www.facebook.com/Ezhunax/
- https://twitter.com/Ezhuna
- https://www.instagram.com/ezhunaa/
- https://www.tiktok.com/@ezhuna
- https://open.spotify.com/show/4Xn
- https://tinyurl.com/ykj8ru3f
- https://tinyurl.com/3zfkzxme
- https://tinyurl.com/2p83m8zj
- https://pca.st/swr6zomk
- https://radiopublic.com/6rX3L4
- https://tinyurl.com/bdeky92h
- https://anchor.fm/ezhuna
- https://www.clubhouse.com/club/ezhuna


**மின்னஞ்சல்:**
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

**தொடர்பு முகவரி :**
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.



கட்டுரை

பாக்கியநாதன் அகிலன்

# ஈழத் தமிழரும் கறுப்புச் சுற்றுலாவும்



The War Children's Victim Monument in the Lidice Memorial Park

Image source - www.culturaobscura.com

**இக்கட்டுரைத் தொடர் வரலாற்றுத் தடயமாகவும், இனத்துவ அடையாளமாகவும் இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களிடையே – குறிப்பாக தமிழ் மக்களிடையே – மரபுரிமைகளைப் பாதுகாத்தலின் பல பரிமாணங்களை எடுத்துரைத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழரின் மரபுரிமை அம்சங்களை வெளிக்கொணர்வதாகவும், அதேநேரத்தில் அழிந்து கொண்டிருக்கும் மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் அதன் சமகால தேவைகளை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றது.**

அண்மைக் காலத்தில் அதிகம் கவனிப்புப் பெற்ற ஒரு சுற்றுலா முறையாகச் கறுப்புச் சுற்றுலா (Black tourism) காணப்படுகிறது. குறிப்பாக 1990களில் இது முக்கியமான புலமை உரையாடலாக உருவாகியது. சில வேளைகளில் இருள் சுற்றுலா (Dark tourism) அல்லது துயரச் சுற்றுலா (Grief tourism) எனும் பெயர்களாலும் அழைக்கப்படும். இது ஒரு மக்கள் குழுமத்தின் அல்லது தேசத்தின் துயரடார்ந்த நிகழ்ச்சிகளான இறப்பு, கொலை, அழிவு முதலியன நடைபெற்ற இடங்களை அவற்றின் சான்றாதாரங்களை உள்ளடக்கிய சுற்றுலா முறையாகும். கறுப்புச் சுற்றுலா பற்றிய புலமையாளர்களான ஜோன் லினொன் மற்றும் மக்லம் பொலி ஆகியோர் கறுப்புச் சுற்றுலாவை "மனிதப்பண்பற்ற செயல்களின் பிரதிநிதித்துவமாயும், காண்போருக்கு அவை எவ்விதம் வியாக்கியானமாகின்றன என்பது பற்றியதுமான" பயணமாக வரையறை செய்கிறார்கள். கெவின் பொக்ஸ் கோத்தம் "துயரம், கொடுமை, வலியினாலான இடங்களை நோக்கி மக்களை எடுத்துச்செல்லும்" பயணமாகக் கறுப்புச் சுற்றுலாவைக் காண்கிறார். அது அடிப்படையில் பொழுதுபோக்கு, மகிழ்வளிப்புச் சார்ந்த ஒன்றாக அல்லாமல் ஒருவகையான கல்வியூட்டடற் சுற்றுலாவாக அமைய வேண்டும் என கறுப்புச் சுற்றுலாப் புலமையாளர்கள் வாதிக்கின்றனர்.

றாமி கலால் றசீக் இவ்வகை இடங்களைக் காணச்செல்லும் சுற்றுலாப் பயணிகளை "இருள் சுற்றுலாவினர்" என அழைக்கிறார். இவ்வகைப் பயணிகள் கறுப்பிடங்களின்

வரலாற்று முதன்மை, அதன் சான்றாதாரத் தன்மை, நிகழ்ந்து முடிந்த மானிடத் துயரத்திற்கு மதிப்பளித்தல் அதனைக் கூட்டாகப் பகிர்தல் என்பனவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு இவ்விடங்களுக்குப் பயணம் செய்கிறார்கள் எனப் பொதுவாகக் கூறப்படும். கறுப்புச் சுற்றுலாவானது, அதன் பார்வையாளர்களிடம் சமூக நீதிக்கான நாட்டத்தையும், பொறுப்புக் கூறல் உணர்வுத்தோழமையும் எதிர்பார்ப்பதுடன் எதிர்காலத்தில் இவை மீளவும் நடைபெறக் கூடாது என்ற மனநிலையை வருங்கால சந்ததியிடம் ஏற்படுத்தலையும் நோக்கமாகக் கொண்டது. ஒருவகையில் ஒரு கூட்டுத்துக்கம், கூட்டு மனக்காயத்தை ஆற்றுதல் முதலான விடயங்களுக்கான களங்களாகவும் இவை காணப்படுகின்றன. கல்லறைகள், வரலாற்று அரும்பொருளகங்கள், படுகொலைக் களங்கள், அழிவிடங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய ஒன்றாக இச்சுற்றுலா அமையும்.



Holocaust museum

Image source - www.pbs.org

ஸ்ரோண் கறுப்புச் சுற்றுலாவின் பிரதானமான அங்கங்களாக ஏழு விடயங்களைக் குறிக்கிறார். இவற்றில் 'கறுப்பு விளையாட்டுத் தொழிற்சாலை' என்பது கரிய விடயங்களை நாடகப் பாங்கில் நிகழ்த்திக்காட்டல் முதலியவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டிடம், 'கறுப்புக் கண்காட்சிகள்' - ஹொலகோஸட் சார்ந்த பலகாட்சிகள் இதற்கான சிறந்த சான்றுகள் ஆகும். இவற்றை விடக் கறுப்பு நிலவறைகள், கறுப்பு ஓய்விடங்கள்(பெரும்பாலும் கல்லறைகள்) கறுப்பு ஆலயங்கள், கரிய முரண்பாட்டு இடங்கள், கரிய படுகொலை முகாம்கள், கறுப்பு அழிவிடங்கள் என அவற்றை வகை பிரித்துள்ளார். இந்தப் பிரிவு அதிகபட்சம் மேற்கத்தையவயமானது என்பதுடன் இவை தமது பிராந்தியங்கள், இடங்கள், சந்தர்ப்பங்களைப் பொறுத்து வேறுபடக் கூடியவை என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.


**ஒரு மக்கள் குழுமத்தின் அல்லது தேசத்தின் துயரார்ந்த நிகழ்ச்சிகளான இறப்பு, கொலை, அழிவு முதலியன நடைபெற்ற இடங்களை அவற்றின் சான்றாதாரங்களை உள்ளடக்கிய சுற்றுலா முறையாகும்.**

பொதுவாக இச் சுற்றுலாவில் பங்கேற்பவர்களிடமிருந்து குறிப்பிட்டவகையான ஒழுக்கப் பெறுமானங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவை மரணத்தையும் - இழப்பையும் கனம் பண்ணல் என்ற அடிப்படையில் இருந்து உருவாகியவை. ஒளிப்படக் கட்டுப்பாடுகள், மரியாதைக்குரிய உடல்மொழி மற்றும் ஆடைமுறை, சிரித்தல் - சத்தமிடல் முதலியவற்றைக் கட்டுப்படுத்தல், மரியாதையற்ற மற்றும் பொருத்தமற்ற வகையான குறிப்புக்கள் - பேச்சுக்களை அவ்விடங்களிற் தவிர்த்தல், அதுசார்ந்த அரும்பொருளகப் பொருட்களை கையாளும் முறையில் அதற்கான மரியாதையைத் தருதல் முதலான விடயங்கள் வற்புறுத்தப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் பல கரிய மையங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அதில் முதன்மையானவையாக நாசிவதை முகாம்கள், செர்நோபில் அணுநிலையம், ஹீரோசிமா முதலியன உட்பட 9/11 நினைவுச்சின்னம், கம்போடிய கொலைக் களங்கள் காணப்பட்டாலும், எவற்றைத் தெரிவு செய்வது அல்லது மூடிமறைப்பது முதலானவற்றின் பின்னால் உலகளாவிய அரசியல் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதையும் இவ்விடத்தில் நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே அவற்றை நிர்ணயித்தல், செயற்படுத்தல் என்பதுவும் ஒரு தொடர் போராட்டம்தான்.

ஈழத்தமிழர்கள் மத்தியில் கறுப்புச் சுற்றுலா பற்றிய சிந்தனைகளும் - அதனை நோக்கிய செயற்பாடுகளும் தேவைப்படுகின்றன.

அவர்களது தேசப்படம் இவ்வகைப்பட்ட பல படுகொலைகள், கல்லறைகள், நினைவுச் சின்னங்கள் அழிவுக் களங்கள், உடைப்புக்கள், வதைமுகாம்கள், பயணப் பாதைகள், கைப்பற்றப்பட்ட கிராமங்கள், இழக்கப்பட்ட கட்டுமானங்கள் முதலான பல்வேறு கரிய மையங்களால் ஆகியுள்ளன. அவற்றை அடையாளப்படுத்தி இணைத்தொரு அழிப்பு வரலாற்றைக் கூறும் வரைபடமும் எடுத்துரைப்பும் தொகுப்பட்ட



Hỏa Lò Prison, Hanoi, Vietnam

Image source - www.atlasobscura.com

நிலையில் ஈழத் தமிழர்களிடம் பொதுவெளியில் இவை இல்லை. அழிப்பு வரலாற்று அருங்காட்சியகம், ஒளிப்படக் காப்பகம், ஆவணக்காப்பகம், நிலத்துண்டங்கள் சிறைகள், முகாம்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள், கடற்பகுதிகள், கடற் தடுப்புக்கள், காவலரண்கள், முதலியவற்றை உள்ளடக்கி ஒரு சுற்றுலா வலைப்பின்னல் அமைய வேண்டும்.

அது வரலாற்று ஆவணமாகவும், எடுத்துரைப்பாகவும் அமையும் அதேவேளை, அது அழிவுகள், இழப்புக்கள் வழியால் உருவாகிய புதிய அடையாள உருவாக்கத்திற்கான அடித்தளமாயும், வேலைத் திட்டமாயும் அமையும்.

இன்னொரு புறம் தனிமனித மற்றும் கூட்டு மனக்காயங்களை ஆற்றுதற்கான தேற்றற் புலங்களாயும் தொழிற்பட முடியும். இவ்விடங்கள் சார்ந்து உள ஆற்றுப்படுத்தலை நிகழ்த்தத்தக்க ஆற்றுகை, சடங்கியல் அம்சங்களையும் இணைக்க முடியும். ஒப்பாரிப் பாடல்களும், அபரக் கிரியை சார்ந்த அம்சங்களும், இவற்றின் பகுதியாக இணைக்கப்படலாம். அது அடிப்படையில் நினைவைப் பேணுதலுக்கான ஒரு திட்டமாகவும் மறத்தலை மறுதலிக்கும் ஒரு அரசியற் செயற்பாடாகவும் அமை யும்.

தொடரும்.



Oradour-sur-Glane massacre,France

Image source - www.wikipedia.org





● கந்தையா சண்முகலிங்கம்

கனடா, பெல்ஜியம், சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா (Spain) ஆகிய ஆறு நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமைகளைப் பற்றி ஆழமான ஆழமான ஆய்வுகளாக இக்கட்டுரைதொடர் அமைகிறது. மேற்குறித்த நாடுகளின் அரசியல் வரலாறும், அரசியல் யாப்பு வரலாறும், போருக்கு பிந்திய இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையும், அரசியல் பாடங்களை (political lessons) கற்றுக்கொள்வதற்கு உதவுவனவாக அமைகின்றன.

# கனடாவில் பன்மைப் பண்பாட்டுவாதம்

பன்மைத்துவத்தின் மத்தியில் ஒற்றுமையைப் பேணுதல் என்ற விடயம் கனடாவின் வரலாற்றின் ஆரம்பம் தொட்டு இன்று வரை அந்தத் தேசத்தினரது கவனத்தை ஈர்க்கும் ஒரு விடயமாக இருந்து வந்ததை ஆய்வு நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாகச் சில முக்கியமான நூல்கள் 1970 களின் பின்னர் பிரசுரிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். சர்வதேச தராதரங்களின் படியான மதிப்பீட்டில் கனடா தேசம் பன்மைத்துவத்தின் மத்தியில் ஒற்றுமையை பேணுவதில் வெற்றிகண்டுள்ளது என்றே கூறவேண்டும். கனடா உலகின் சமஷ்டிகளுள் பழமையானது. அது உறுதியான ஒரு சமஷ்டியாக நிலைத்துள்ளது. பன்மைத்துவத்தின் பலபரிமாணங்களை யும் ஒரே சமயத்தில் எதிர்கொள்ளும் வல்லமையுடைய சமஷ்டியாக அது விளங்குகிறது. கனடா பன்மைத் தேசியங்களின் நாடாக இருந்து வருவதோடு கியூபெக் பகுதியில் எழுந்த தனித்தேசியம் என்ற கோரிக்கை, பழங்குடிமக்களின் 'முதலாவது தேசியங்கள்' (First Nations) என்ற கருத்து என்ற இரண்டையும் நேர்முறையாக அணுகியது. கனடாவில் பிரதேச உணர்வும் பிராந்திய அடையாளமும் மிகுதியாக உள்ளன.




**கனடா வரைபடம்**

Image source - api.ndla.no

அது 'சமஷ்டியாக ஒன்று சேர்ந்த சமூகம்' (Federal Society) என்ற தன்மை உடையது. குடிப்பரம் பல், சனத்தொகை, பொருளாதாரம், வளங்கள் என்பன வற்றில் அங்கு பிராந்திய வேறுபாடுகள் பெரிய அளவில் உள்ளன. அது குடியேறிகளால் உருவான நாடு. அங்கு பன்மைத்துவமும் வேறுபாடுகளும் மிகுதியாக உள்ளன. பன்மைப் பண்பாடுடைய சனத்தொகையைக் கொண்ட இந்நாட்டில் பால்நிலை, வர்க்கம் போன்ற ஏனைய வேறுபாடுகளும் ஒன்றிணைந்து சிக்கலான பரிமாணங்க ளைப் பெற்றுள்ளன.

புவியியல் இடப்பரப்பில் மிகவும் பெரியதான கனடாவில் (9,984,670 சதுர கிலோ மீற்றர்) சனத்தொகை அடர்த்தி மிகக் குறைவு. 2008 ஆம் ஆண்டில் ஒரு சதுர கி. மீற்றருக்கு 3.3 ஆட்கள் வதிந்தனர். அங்கு மொத்தம் 33.2 மில்லியன் மக்கள் வாழ்ந்தனர். சனத்தொகை வளர்ச்சி 0.8 வீதமாக உள்ளது. ஐக்கிய அமெரிக்கா - கனடா எல்லையோரமாகவும், சில பெரு நகரங்களிலும் கனடாவின் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். கனடாவின் மக்களில் 59.3 வீதத்தினரின் தாய்மொழி ஆங்கிலம் ஆகும். 23.2 வீதத்தினரின் தாய்மொழி பிரஞ்சு ஆகும். ஏறக்குறைய 9.7 வீதத்தினர் வெளிநாடுகளில் பிறந்தோராவர். கத்தோலிக்க சமயத்தினர் 42.6 வீதமாகவும், புரட்டஸ்டாந்திய சமயத்தினர் 23.3 வீதமாகவும், பிற சமயங்களைச் சேர்ந்தோர் 4.4 வீதத்தினராயும் உள்ளனர். உலகின் பிற சமயங்கள் பலவற்றையும் பின்பற்றுவோர் கனடாவில் வாழ்கின்றனர்.

அரசியல் யாப்புக்குட்பட்ட வரம்புடைய முடியாட்சி, நாடாளுமன்ற ஜனநாயகம், சமஷ்டி அரசியல்முறை ஆகிய பண்புகளை ஒருங்கே கொண்ட அரசியல்முறை இங்கே உள்ளது. கனடாவின் நாடாளுமன்ற நிறுவனங்கள் பிரித்தானியாவில் இருந்து பெறப்பட்டவை. 1867 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி கனடா ஒரு 'கொன்பெடரேசன்' (Confederation) ஆக உருவாகியது. 1931 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசியல் யாப்புச்சட்டம் (Constitution Act) கனடாவை பிரித்தானியாவின் ஆதிக்கத்தில் இருந்து விடுவித்தது. சுதந்திரம், சமத்துவம், வாழ்க்கைத் தரம் ஆகிய அளவுகோல்களைக் கொண்டு ஒப்பீட்டு மதிப்பீட்டைச் செய்யும் பொழுது கனடா உலகின் மிகச் சிறந்த ஜனநாயக நாடுகளில் ஒன்றாக உள்ளது. 2008 ஆம் ஆண்டில் கனடாவில் ஆளொருவருக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 39,300 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். 'ப்பிரீடம் ஹவுஸ்' (Freedom House) என்ற அமைப்பின் மதிப்பீடுகளின்படி கனடா அரசியல் உரிமைகள், சிவில் உரிமைகள் விடயத்தில் உயர் புள்ளிகளைப் பெறுகின்றது. 'ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல்' என்ற அமைப்பு ஊழல் பற்றிய கணிப்பில் உலக நாடுகளை தரவரிசைப்படுத்துகிறது. இத்தரவரிசையில் ஒப்பீட்டளவில் கனடா ஊழலில் மிகக் குறைந்த சுட்டியைக் கொண்ட நாடாகவும் (8.7 புள்ளி) உலக நாடுகளில் 9 ஆவது இடத்தைப் பெறுவதாகவும் உள்ளது .

பிராந்திய ரீதியாக சிறுபான்மை இனங்கள் செறிந்து வாழும் நாடுகளாகவுள்ள சமஷ்டிகளில் எதிர்நோக்கப்படும் பிரதான பிரச்சினை பன்மைத்துவத்தின் மத்தியில் ஒற்றுமையைப் பேணுவது (Unity in Diversity) எவ்வாறு? என்பதாகும். வேற்றுமைகளிடையே ஒற்றுமையைப் பேணும் இந்த விடயத்தில் கனடா முன்னணியில் நிற்கின்றது. கனடாவின் முன்னுதாரணம் மூன்று அம்சங்களில் வெளிப்பட்டுத் தெரிகிறது.

1. முதலாவதாக கனடாவில் வேற்றுமைகள் பற்றிய விவாதம் நடைபெற்றது. கியூபெக் தனி நாடாகப் பிரிந்து போக வேண்டுமா என்ற விடயத்தைக்கூட ஆரோக்கியமான முறையில் அங்கே விவாதித்தார்கள். இந்த விவாதம் அமைதி வழியில், மதிப்புமிக்க முறையில் ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் முறையில் நடத்தப்பட்டது.



**கனடா தேசியக் கொடி**

Image source - fr.april-international.com

2. இரண்டாவது அம்சம் அங்கே தொடர்ச்சியாக இடம்பெறும் 'பேரம்பேசல்' ஆகும். அந்நாடு புரட்சியொன்றினால் உருவானதன்று, அங்கே ஒற்றைப் பெரும்பான்மை ஆதிக்கம் இடம்பெறவும் இல்லை. கனடா 'பேரம்பேசி' உருவான நாடு என்ற தகுதியை உடையது. இந்தப் பேரம்பேசல் ஐரோப்பியர்கள் அங்கு குடியேறத் தொடங்கிய போது பழங்குடிச் சுதேசிகளுடன் ஆரம்பித்தது. பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் பேரம்பேசல் மூலம் சிலவகை ஒழுங்கமைப்புக்களை ஏற்படுத்தினர். இதனால் 1867 இல் கனடா ஒரு 'கொன்பெடரேசன்'

**கனடா நாட்டு மக்கள் தமக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கையாள்வதில் வெற்றி கண்டுள்ளனர், அதற்கான காரணம் அந் நாட்டில் சாதகமான பல விடயங்கள் இருப்பது தான் என்று கிம்லிக்கா (Kymlica) என்ற அறிஞர் கூறுகிறார்.**

புவியியல் இடப்பரப்பில் மிகவும் பெரியதான கனடாவில் (9,984,670 சதுர கிலோ மீற்றர்) சனத்தொகை அடர்த்தி மிகக் குறைவு. 2008 ஆம் ஆண்டில் ஒரு சதுர கி. மீற்றருக்கு 3.3 ஆட்கள் வதிந்தனர். அங்கு மொத்தம் 33.2 மில்லியன் மக்கள் வாழ்ந்தனர். சனத்தொகை வளர்ச்சி 0.8 வீதமாக உள்ளது. ஐக்கிய அமெரிக்கா - கனடா எல்லையோரமாகவும், சில பெருநகரங்களிலும் கனடாவின் மக்கள் செறிந்து வாழ்கின்றனர். கனடாவின் மக்களில் 59.3 வீதத்தினரின் தாய்மொழி ஆங்கிலம் ஆகும். 23.2 வீதத்தினரின் தாய்மொழி பிரஞ்சு ஆகும். ஏறக்குறைய 9.7 வீதத்தினர் வெளிநாடுகளில் பிறந்தோராவர். கத்தோலிக்க சமயத்தினர் 42.6 வீதமாகவும், புரட்டஸ் டாந்திய சமயத்தினர் 23.3 வீதமாகவும், பிற சமயங்களைச் சேர்ந்தோர் 4.4 வீதத்தினராயும் உள்ளனர். உலகின் பிற சமயங்கள் பலவற்றையும் பின்பற்று வோர் கனடாவில் வாழ்கின்றனர்.

அரசியல் யாப்புக்குட்பட்ட வரம்புடைய முடியாட்சி, நாடாளுமன்ற ஜனநாயகம், சமஷ்டி அரசியல்முறை ஆகிய பண்புகளை ஒருங்கே கொண்ட அரசியல்முறை இங்கே உள்ளது. கனடாவின் நாடாளுமன்ற நிறுவனங்கள் பிரித்தானியாவில் இருந்து பெறப்பட்டவை. 1867 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி கனடா ஒரு 'கொன்பெடரேசன்' (Confederation) ஆக உருவாகியது. 1931 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசியல் யாப்புச்சட்டம் (Constitution Act) கனடாவை பிரித்தானியாவின் ஆதிக்கத்தில் இருந்து விடுவித்தது. சுதந்திரம், சமத்துவம், வாழ்க்கைத் தரம் ஆகிய அளவுகோல்களைக் கொண்டு ஒப்பீட்டு மதிப்பீட்டைச் செய்யும் பொழுது கனடா உலகின் மிகச் சிறந்த ஜனநாயக நாடுகளில் ஒன்றாக உள்ளது. 2008 ஆம் ஆண்டில் கனடாவில் ஆளொருவருக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 39,300 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும். 'ப்பிரீடம் ஹவுஸ்' (Freedom House) என்ற அமைப்பின் மதிப்பீடுகளின்படி கனடா அரசியல் உரிமைகள், சிவில் உரிமைகள் விடயத்தில் உயர் புள்ளிகளைப் பெறுகின்றது. 'ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல்' என்ற அமைப்பு ஊழல் பற்றிய கணிப்பில் உலக நாடுகளை தரவரிசைப்படுத்துகிறது. இத்தரவரிசையில் ஒப்பீட்டளவில் கனடா ஊழலில் மிகக் குறைந்த சுட்டியைக் கொண்ட நாடாகவும் (8.7 புள்ளி) உலக நாடுகளில் 9 ஆவது இடத்தைப் பெறுவதாகவும் உள்ளது .

பிராந்திய ரீதியாக சிறுபான்மை இனங்கள் செறிந்து வாழும் நாடுகளாகவுள்ள சமஷ்டிகளில் எதிர்நோக்கப்படும் பிரதான பிரச்சினை பன்மைத்துவத்தின் மத்தியில் ஒற்றுமையைப் பேணுவது (Unity in Diversity) எவ்வாறு? என்பதாகும். வேற்றுமைகளிடையே ஒற்றுமையைப் பேணும் இந்த விடயத்தில் கனடா முன்னணியில் நிற்கின்றது. கனடாவின் முன்னுதாரணம் மூன்று அம்சங்களில் வெளிப்பட்டுத் தெரிகிறது.

1. முதலாவதாக கனடாவில் வேற்றுமைகள் பற்றிய விவாதம் நடைபெற்றது. கியூபெக் தனிநாடாகப் பிரிந்து போக வேண்டுமா என்ற விடயத்தைக்கூட ஆரோக்கியமான முறையில் அங்கே விவாதித்தார்கள். இந்த விவாதம் அமைதி வழியில், மதிப்புமிக்க முறையில் ஜனநாயக விழுமியங்களை மதிக்கும் முறையில் நடத்தப்பட்டது.

2. இரண்டாவது அம்சம் அங்கே தொடர்ச்சியாக இடம்பெறும் 'பேரம்பேசல்' ஆகும். அந்நாடு புரட்சியொன்றினால் உருவானதன்று, அங்கே ஒற்றைப் பெரும்பான்மை ஆதிக்கம் இடம்பெறவும் இல்லை. கனடா 'பேரம்பேசி' உருவான நாடு என்ற தகுதியை உடையது. இந்தப் பேரம்பேசல் ஐரோப்பியர்கள் அங்கு குடியேறத் தொடங்கியபோது பழங்குடிச் சுதேசிகளுடன் ஆரம்பித்தது. பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் பேரம்பேசல் மூலம் சில வகை ஒழுங்கமைப்புக்களை ஏற்படுத்தினர். இதனால் 1867 இல் கனடா ஒரு 'கொன்பெடரேசன்' ஆகியது. இக்காலம் முதல் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், நாணய ஒழுங்கமைப்பு ஆகிய விடயங்கள் பற்றி சமஷ்டி அரசுக்கும் மாநில அரசுகளிற்கும் இடையே பல உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. மிக அண்மைக்

காலத்தில் கனடாவில் குடியேறுபவர்கள் தொடர்பான கொள்கை, அவர்களை நாட்டின் பிரஜைகளாக ஏற்று ஐக்கியப்ப டுத்தல், 'முதலாவது தேசியங்கள்' எனப்ப டும் பழங்குடி மக்களை சமத்துவமானவர் களாக ஏற்று அங்கீகரித்தல், உள்ளீர்த்தல் ஆகிய விடயங்களில் உடன்பாடுகள் ஏற் பட்டுள்ளன.

3. மூன்றாவதாக கனடாவில் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வழி முறை பற்றிய அடிப் படை அனுமானம் அல்லது நம்பிக்கை ஒன்று உருவாகி உள்ளது. வேற்றுமைகளை (Difference) மதிப்பளித்து ஏற்றுக்கொள்ள வேண்டும், அவற்றுக்கு இணங்கி இடம் கொடுக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. வேற்றுமைகளை நிராகரிப்பதோ அல்லது வேற்றுமைகள் இங்கே இல்லை என்று மறுப்பதோ (Rejection or Denial) சரியான வழியல்ல என்ப தைக் கனடா ஏற்றுக் கொண்டுள்ளது.

1998 ஆம் ஆண்டில் பிரிவினை பற்றிய உயர்நீதிமன்ற வழக்கில் கனடாவின் மாதி ரியின் (Canadian Model) அடிப்படை விழு மியங்களை நீதிமன்றம் எடுத்துக்கூறியது. முக்கியம் வாய்ந்த இந்த நீதித் தீர்ப்பில் கனடாவின் சமஷ்டியை வழிகாட்டி நடத் தும் கொள்கைகள் என்று பின்வருவன வற்றை நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது:

- **ஜனநாயகம் சமஷ்டி** (Federalism)
- **அரசியல் யாப்புவாதமும்** (Constitutionalism)
- **சட்டத்தின் ஆட்சியும்** (Rule of Law)
- **சிறுபான்மையினர் உரிமைகளுக்கு மதிப்பளித்தல்**

மேற்குறிப்பிட்ட விழுமியங்கள் 1867 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை இன்று வரை யாப்புச் சட்டவிளக்கங்களில் வெளிப் பட்டு நிற்கும் விழுமியங்களாகவும் உள் ளன.

கனடா நாட்டினர் வேற்றுமைகளின் மத்தி யில் ஒற்றுமையைத் தாம் பேணியுள் ளோம். அதில் வெற்றி கண்டுள்ளோம் என்பதையிட்டு பெருமிதம் கொள்கின்ற னர். இருப்பினும் தலைகுனிவுக்குரிய சில விடயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள வும் வேண்டும். அமைதியான கனடாவின் அரசியலில் இடைக்கிடையே மோதல்க ளும் இடம்பெற்றன. 1919 ஆம் ஆண்டின் பொது வேலைநிறுத்தம், ஐரோப்பியர் அல்லாத குடியேறிகள் குழுமங்கள் மீது காட்டப்பட்ட இனவாதமுறைப் பாரபட்சம் (சீனர்கள் மீதும் பின்னர் இரண்டாம் உலக யுத்தத்தின் போது குடிபுகுந்த ஜப்பானியர் மீதும் பாரபட்சம் காட்டப்பட்டது) பழங் குடி மக்களை மிக அண்மைக்காலம் வரை பாரபட்சம் காட்டியும், புறத்தொதுக்கியும் வைத்திருந்தமை, இரண்டு உலக யுத்தங்க ளின் போதும் இராணுவத்திற்கு கட்டாய ஆட்சேர்ப்பு செய்தமையால் ஏற்பட்ட நெருக்கடி, 1970 ஒக்டோபர் மாதத்தில் கியு பெக்கில் ஏற்பட்ட குறுங்காலம் தொடர்ந்த பிரிவினைவாதக் கிளர்ச்சியால் சிவில் உரி

> **ஐரோப்பாவினதும் ஐக்கிய அமெரிக்காவினதும் எல்லைகளில் மூன்றாம் உலக நாடுகள் உள்ளன. கனடா எந்தவொரு மூன்றாம் உலக நாட்டையும் எல்லையாகக் கொண்டிருக்கவில்லை. அதனால் கனடாவில் குடிவரவு பற்றிய பிரச்சினை ஒப்பீட் டளவில் பெரிய சவாலாக அமையவில்லை.**

மைகளைத் தடைசெய்தமை போன்ற பல சம்பவங்கள் கனடாவில் நிகழ்ந்தன என் பதை மறக்கமுடியாது. பிரஞ்சுமொழி பேசுவோரான கியூபெக் மாகாணத்தினர் கனடாவின் சமஷ்டி தங்கள் அபிலாசைக ளைப் பூர்த்தி செய்யவில்லை என்று கூறு கின்றனர். கியுபெக் தனித்த தேசியம் (Nation) அல்லது சமூகமாக அரசியல் யாப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும் அல்லது கனடா சமஷ்டியுடன் பொருளாதார, அர சியல் தொடர்புகள் சிலவற்றை மட்டும் வைத்துக்கொண்டு தாம் தனிநாடாகப் பிரிந்து செல்லவேண்டும் என்று கியுபெக்கி யர் கருதுகின்றனர். பழங்குடி மக்கள் கனடா சமூகத்தின் விளிம்புநிலை மக்களாக உள் ளதோடு, வறுமை, சுகாதாரம் போன்றவற் றில் மிக மோசமான நிலையில் உள்ளனர். அவர்களுக்கு வேறுபல சமூகப் பிரச்சினை களும் உள்ளன. தமக்கு ஏதாவது வகையி

லான சுயாட்சி வேண்டும் என்றும், தமக்கு ஏனைய கனேடிய மக்களைப் போன்று சமத்துவமாக வாழவும், பிறமக்களோடு நீதியான உறவுகளைப் பேணவும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் விரும்புகின்றனர். ஏனைய மாநிலங்களி லும் பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக கனடாவின் மேற்குப் பகுதி மாநிலங்கள் தமது நலன்களை மத்திய சமஷ்டி அர சில் (ஒட்டாவோ நகரில்) பிரதி நிதித்து வம் செய்வதற்கு வாய்ப்புக்கள் அரிதாக உள்ளதாகக் கருதுகின்றனர். மேற்குப்ப குதி மாநிலங்களோடு அத்திலாந்திக் கன டாவும் பிரதேச ரீதியான பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டுள்ளது. பொருளாதார மீள்கட்டமைப்பு மூல மும் சமத்துவப்படுத்தும் செயற்திட்டங் கள் மூலமும் இக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.

சிறுபான்மைப் பண்பாட்டுக் குழுமங்கள் பல, கனடாவின் முன்னைய குடிவரவுக் கொள்கையால் வரலாற்று அநீதிகள் சில வற்றுக்கு உள்ளாயின.
இவை இன்று கனடாவிலும், கியூபெக் மாகாணத்திலும் சமூக வாழ்வில் தம்மை வெற்றிகரமாக இணைத்துக் கொள்வதி லும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி யுள்ளன. மறுபுறத்தில் கனடா நாட்டின் ஆங்கிலம் பேசுவோரும், 'பன்மைத்துவம் பற்றிப் பேசப்படு கின்றதேயன்றி, நாட் டில் ஒற்றுமையை வளர்க்கும் திட்டங்கள் இல்லை? சமுதாய ஒற்றுமையும் ஐக்கிய மும் இல்லாமல் போகிறதே' என்று கவ லைப்படுகின்றனர்.
தனிநபர்களை சமுதாயத்துடன் ஒட்ட வைக்கும் அம்சம் இங்கு இல்லையே. வித்தியாசங்களைப் போற்றும் இந்த நாட்டில் ஐக்கியத்திற்கான அடிப்படை என்று என்ன உள்ளது என்று கேள்வி எழுப்புகின்றனர்.

கனடா நாட்டு மக்கள் தமக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கையாள்வதில் வெற்றிகண்டுள்ளனர், அதற்கான கார ணம் அந்நாட்டில் சாதகமான பல விட யங்கள் இருப்பதுதான் என்று கிம்லிக்கா (Kymlica) என்ற அறிஞர் கூறுகிறார். சமூக உட்கட்டமைப்புக்கள் நன்றாக வியா பித்து வளர்ச்சியுற்று இருத்தல், உற்பத்தி விளைதிறன் உயர்வாக உள்ள பொருளா தார முறை இருத்தல், கல்வி விருத்தி உயர்மட்டத்தில் இருத்தல், நட்பு நாடான ஐக்கிய அமெரிக்கா அயலில் இருத்தல், ஜனநாயகப் பாரம்பரியத்தையும், பண் பாட்டையும் நெடுங்காலமாகப் பேணி வரும் நாடாக இருத்தல் என்பன கிம் லிக்கா கூறும் சாதகமான விடயங்களா கும். இச்சாதகமான விடயங்கள் பெரும் பாலான வளர்ச்சியடைந்துவரும் நாடுக ளில் இல்லை.
ஐரோப்பாவினதும் ஐக்கிய அமெரிக்கா வினதும் எல்லைகளில் மூன்றாம் உலக நாடுகள் உள்ளன. கனடா எந்தவொரு மூன்றாம் உலக நாட்டையும் எல்லையா கக் கொண்டிருக்கவில்லை. அதனால் கன டாவில் குடிவரவு பற்றிய பிரச்சினை ஒப் பீட்டளவில் பெரிய சவாலாக அமைய வில்லை.

தொடரும்.

**தந்திரம், சமத்துவம், வாழ்க்கைத் தரம் ஆகிய அளவு கோல்களைக் கொண்டு ஒப்பீட்டு மதிப்பீட்டைச் செய் யும் பொழுது கனடா உலகின் மிகச் சிறந்த ஜனநா யக நாடுகளில் ஒன்றாக உள்ளது.**

2008 ஆம் ஆண்டில் கனடாவில் ஆளொருவருக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 39,300 ஐக்கிய அமெரிக்க டொலர்களாகும்.

கனடா ஊழலில் மிகக் குறைந்த சுட்டியைக் கொண்ட நாடாகவும் (8.7 புள்ளி) உலக நாடுகளில் 9 ஆவது இடத்தைப் பெறுவதாகவும் உள்ளது .

கனடா எந்தவொரு மூன்றாம் உலக நாட்டையும் எல்லை யாகக் கொண்டிருக்கவில்லை. அதனால் கனடாவில் குடிவரவு பற்றிய பிரச்சினை ஒப்பீட்டளவில் பெரிய சவாலாக அமையவில்லை.

# காலனித்துவ ஆட்சியாளர் விட்டுச்சென்றவையும் (Colonial legacy)

# பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களும்





கட்டுரை

● பி. ஏ. காதர்


1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய்ந்து விளக்குகின்றது.

வரலாற்று போக்குகளைப் பற்றி பேசும்போது “அந்த காலம் போல இனிவருமா” என்று பலர் சலித்துக்கொள்வது புதிய விடயம் அல்ல. சில நல்ல விடயங்கள் மறைந்து வருகின்றன என்பது உண்மைதான். அன்றிருந்த காடுகள், தெளிவான ஆற்றுநீர், தூயகாற்று போன்ற பலவற்றை இன்றைய தலைமுறை இழந்திருக்கிறது. சமூக வாழ்க்கையில் கூட அன்பான குடும்ப உறவு, நாணயம், பெரியோரை மதித்தல் போன்ற நல்ல விழுமியங்கள் மறைந்து வருகின்றன. ஆயினும் கடந்த காலமே பொற்காலம் என்று அன்றிருந்த அனைத்தையும் கொண்டாட முடியுமா? நாம் கற்காலத்திற்கு திரும்பமுடியுமா? வரலாறு முன்னோக்கி செல்கிறது. சமுதாயம் மேல் நோக்கி முன்னால் நகர்கிறது. இதனை இயங்கியல் ரீதியாக புரிந்துகொண்டு மேலும் இந்த சமூகத்தை முன்னோக்கி நகர்த்த முயலும் போக்கே முற்போக்கு எனப்படுகிறது. பின்னோக்கி வழிபட்டுக்கொண்டு வரலாற்றை பின்னோக்கி தள்ள முயலும் அத்தனை விடயங்களும் பிற்போக்கானவை எனப்படுகிறன. இதைத்தான் பாரதியார் இரத்தினச் சுருக்கமாகவும் கேலியாகவும் “பாட்டன் தோண்டிய கிணறு என்பதற்காக மூடன் உப்பு நீரை பருகுகிறான்” என்று கூறினார்.

இலங்கையின் வரலாறும் அப்படித்தான். இலங்கை காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் வரும்போது அது ஒன்றும் பொன்கொழிக்கும் பூமியாக இருக்கவில்லை. நிலப்பிரபுத்துவ காலகட்டத்துக்கே உரிய, அடிக்கடி மாறுகின்ற




புராதான இலங்கை


Image source - nadi.lk

எல்லைகளைக்கொண்ட, இராச்சியங்களாகவும் இராஜதானிகளாகவும் பிளவுண்டு தமக்குள் யுத்தம் புரிந்து கொண்டிருந்த ஒரு தீவாகவே அது திகழ்ந்தது. வாளையும் வேலையும் அம்பையும் வில்லையும் ஆதாரமாகக்கொண்ட அக்காலத்துக்குரிய போர்முறை கூட இன்றைய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கியே இருந்தது. சனத்தொகையும் மக்களின் தேவைகளும் குறைவாக இருந்தபடியால் இலங்கையின் இயற்கை வளம் காரணமாக நெல்லும் ஏனைய உணவு பொருட்களும் விளைந்ததால் பட்டினி சாவு அரிதாகவே இடம்பெற்றது. ஆயினும் வறுமை என்பது உழைக்கும் அனைவருக்கும் பொதுவானதாக இருந்தது.

இலங்கை நீண்டகாலம் பல்கலாச்சார நிலப்பிரத்துவ நாடாக திகழ்ந்துவந்தது. அந்த காலத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் - இலங்கை ஒரு குட்டி தீவாக இருந்த போதும் - இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் படி - எந்த நாட்டிலும் இல்லாத அளவு சிறப்பான இலங்கைக்கே உரித்தான புராதன நீர்ப்பாசன முறையை இலங்கை கொண்டிருந்தது. இன்றளவும் பயன்படுத்தப்படுகின்ற இத்தகைய புராதன நீர்ப்பாசன முறையை வேறெந்த நாட்டிலும் காண முடியாது. இத்தகைய நிர்மாணத்துக்குரிய பொறியியல் நிபுணத்துவமும், அவற்றை உருவாக்க தேவையான கருவிகளை தயாரிக்கும் திறனும் உள்நாட்டில் இருந்தது. அதேபோல இலங்கைக்கே உரிய சுதேச மருத்துவம் பிராந்திய தன்மையுடன் வளர்ந்துக்கொண்டிருந்தது.

இலங்கையின் இயற்கை வளமே ஒரு விதத்தில் இந்நாட்டின் வளர்ச்சிக்கு தடையாக இருந்தது என்று கூறலாம். இப்படியான இயற்கை வளம் மிக்க இன்னொரு நாட்டை உலகில் வேறெங்கும் காண்பதரிது. உலகின் சொர்க்கப்புரி என்றும் இந்து சமுத்திரத்தின் முத்து என்றும் அறியப்பட்ட நாடு இது. 103 நதிகளையும், அதில் 16 ஜீவநதிகளையும் கொண்ட குட்டித்தீவு, நான்கு புறமும் மீன்வளம் மிக்க கடலால் சூழப்பட்ட ஒரு மிதக்கும் அழகு பூங்காவனம்; ஒரு பாலைவனமோ ஒரு பனிமலையோ இன்றி முழு நிலப்பரப்பின் ஒவ்வொரு அங்குலமும் விவசாயத்திற்கு உகந்ததான இரு பருவகால மழையால் பச்சை புன்னகை பூக்கும் ஒரு செழிப்பு மிக்க நாடு இது.

கைத்தொழில் வளர்ச்சியே முன்னேற்றத்தின் அடையாளமாக மாறும்முன்னர் சிறந்த விவசாய நாடாக இது திகழ்ந்திருக்கிறது. புல்டோசர் அறிமுகம் செய்யப்படுமுன்னர் யானைகளை கொண்டே நாட்டில் பெரும்பாலான பணிகள் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் யானைக்கான ஏற்றுமதி சந்தையாக திகழ்ந்தது. மன்னார் முத்துக் குளிப்புக்கும் மீன் பிடிப்புக்கும் பிரசித்தி பெற்று திகழ்ந்ததுடன் தென் இந்தியாவுடனான தொடர்புக்கான பாலமாகவும் இருந்தது. உலகில் தலை சிறந்த இரத்தினக்கற்களும் கறுவாவும் ஏனைய வாசனை திரவியங்கள், மிளகு பாக்கு வெற்றிலை என்பனவும் மத்திய மலைநாட்டிலும் - மழை வீழ்ச்சியால் பயன்பெற்ற - ஏனைய பகுதிகளிலும் கிடைத்தன. இவற்றை அராபியரும் பின்னர் ஐரோப்பியரும் தேடிவந்தனர் எனவே இலங்கையர்கள் இவற்றை விற்பதற்கு வெளிநாட்டு சந்தைகளைத் தேடி அலையவேண்டிய தேவை ஏற்படவில்லை. இதனால் கப்பல் கட்டுவதிலும் தூர கடல் பயணம் செய்வதிலும் இவர்கள் நாட்டம் செலுத்தவில்லை.



நிலவுடமை சமுதாயத்தை விபரிக்கும் படம்

Image source - wikimedia.org

வாட்டும் குளிருக்கு வெப்பமூட்டும் ஆடைகள் இலங்கையருக்கு தேவைப்படவில்லை எனவே ஆடைத்தொழில் செழிக்கவில்லை. ஐரோப்பியர்களின் வளர்ச்சிக்கு இவையாவும் பற்றாக்குறையாக இருந்ததும் அவற்றைத் தேடி ஆசியாவுக்கு ஆப்பிரிக்காவுக்கும் அலையவேண்டி இருந்தமையும் ஒரு பிரதான காரணமானது.

இவ்வாறு சுயத்தேவை பொருளாதாரத்தில் திருப்தி கொண்ட - சனத்தொகை குறைவான - விவசாய நாடாக இருந்த இலங்கை நாளடைவில் சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்பவும் நவீன தேவைகளின் உந்துதலாலும் ஜப்பான் போன்ற நாடுகளைப் போல படிப்படியாக முன்னேறி தனக்கேற்ற ஒரு ஆட்சிமுறையை உருவாக்கிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை அதிகமாகவே காணப்பட்டது. அதற்கு இந்து சமுத்திரத்தின் சர்வதேச கடல் பாதையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பது கூடுதலான சாதகத்தன்மையை வழங்கியது. இதுவே இலங்கையை ஐரோப்பியர்கள் கைப்பற்றுவதற்கு பிரதான காரணமாகவும் மாறியது. அத்துடன் இந்திய துணைக்கண்டம் (அப்போது இன்றைய இந்தியாவும் பாகிஸ்தானும் பங்களாதேசும் பர்மாவும் இணைத்திருந்தன) இலங்கைக்கு அருகில் அமைந்திருந்தாலும், உலகின் தலை சிறந்த இயற்கை துறைமுகங்களில் ஒன்றான திருகோணமலை துறைமுகம் இங்கு இருந்ததாலும், இந்திய துணைக்கண்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவது காலனியல்வாதிகளுக்கு அவசியமானதாக இருந்தது. . இலங்கையின் இயல்பான வளர்ச்சி ஐரோப்பியர்களின்

காலனித்துவ ஆக்கிரமிப்பால் தடைப்பட்டு ஒருவித மான சார்பு முதலாளித்துவம் உருவானது. இலங்கை 1505 முதல் 1948 வரை 443 நீண்ட வருடங்கள் மூன்று மேற்கத்தைய நாடுகளின் காலனியாக கிடந்தது. முத லில் போர்த்துக்கேயர் 1505 முதல் 1658 வரை இலங் கையை தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந் தனர். அவர்களிடமிருந்து நாட்டைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் 1658 முதல் 1796 வரை தமது காலனித்துவ ஆட்சியின் கீழ் வைத்திருந்தனர். அதன்பின்னர் 1796 முதல் 1948 வரை ஆங்கிலேயரின் காலனித்துவ பிடிக் குள் வந்தது. சார்பு முதலாளித்துவமும் - dependent capital ism காலனித்துவ நவீனத்துவமும் - Colonial Modernity - அறிமுகமாதல்.

## போர்த்துகேயர் காலம்

போர்த்துகேயர் தமது ஆட்சி காலத்தில் பெரும்பகு தியை தமது ஆட்சியை நிலைநாட்டுவதிலேயே செல விட வேண்டியிருந்தது. அவர்கள் இலங்கையில் காலடி எடுத்து வைக்கும்போது இலங்கையில் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று பிரதான இராச்சியங் கள் இருந்தன. இந்த மூன்று இராச்சியங்களும் மேலும் பல சிற்றரசுகளாக பிரிந்திருந்தன. இவற்றையெல்லாம் கைப்பற்றுவது போர்த்துகேயரால் முடியாத காரியமா யிருந்தது. அவர்கள் முஸ்லீம் வணிகர்களது தாக்குதலுக் கும் மன்னர்கள் தலைமையிலான போர்களுக்கும் மாத் திரமல்ல பல்வேறு கிளர்ச்சிகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. அவர்களால் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடியவில்லை. யாழ்ப்பாண இராச்சியத்தை 1619 ல் கைப்பற்றி தனியாக அதனை நிர்வாகம் செய்த னர். இது இலங்கை ஆட்சி முறையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களில் ஒன்றாகும்.

இதைத்தவிர போர்த்துகேயரின் பிரதான குறி இலங்கை யின் கறுவாவாகும் . உலகின் தலை சிறந்த கறுவா இலங் கையில் தான் விளைந்தது. அது இயல்பாக காடுகளில் வளர்ந்தது. அப்போது அதனை பயிரிட முடியாதென்ற நம்பிக்கை நிலவியது. குளிர்சாதனப்பெட்டி கண்டுபி டிக்கப்படாத காலம் அது. ஐரோப்பாவில் மாமிசத்தை பேணி பாதுகாப்பதற்கு கறுவா இன்றியமையாத மூலப்பொருளாக இருந்தது. அப்போது கடலாதிக்கம் செலுத்திய அராபிய வர்த்தகர் கையில் இருந்த இவ்வி யாபாரம் போர்த்துகேயர் வசமானது.

இவர்களின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணத்தில் புகை யிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் அதிகரித்தது. மன்னர் காலத்தில் நிலவிய சாதி அடிப்படையிலான நிர்வாக கட்டமைப்பும் வேலைப்பிரிவினையும் அப்படியே தொடர்ந்தது. போர்த்துகேயர் காலத்தில் சட்டம் ஒழுங்கு முறைப்படுத்தப்படவில்லை கிளர்ச்சிகள் மூர்க்கமாக நசுக்கப்பட்டன. கிளர்ச்சி செய்த கிராமங்கள் தீக்கிரை யாக்கப்பட்டன பொதுவாகவே அவர்கள் மூர்க்கமாக நடந்து கொண்டனர். விகாரைகள் கோயில்கள் மசூதி கள் தகர்க்கப்பட்டன. பிற மத போதகர்கள் எதிரிகளாக பார்க்கப்பட்டனர். இலங்கையின் நீர்ப்பாசனங்கள் புறக்கணிக்கப்பட்டன. சிறிதளவு பணப்புழக்கம் உண் டானது. பண்டமாற்று முறையுடன் காசுக்கு பொருள் வாங்கும் முறை அரும்புவிட தொடங்கியது.


அவர்கள் காலத்தில் ஏற்பட்ட பிராதான மாற்றங்களில் ஒன்று ரோமன் கத்தோலிக்க மதம் தீவிரமாக பரப்பப் பட்டமையாகும். கத்தோலிக்க மதமும் போர்த்துகேய மொழியும் அரசின் சலுகைக்கும் உயர் பதவிக்குமான தகைமைகளாக இருந்தன. இவர்களின் காலத்தில் ஏற் பட்ட மற்றொரு முக்கிய மாற்றம் மிஷனரி பாடசாலை கள் உருவாக்கப்பட்டமையாகும்.

அரசாங்கத்தின் செலவில் இயங்கிய இவற்றில் போர்த் துக்கேய மொழியுடன் தாய்மொழியும் கணிதமும் கத் தோலிக்க மதமும் போதிக்கப்பட்டன. கத்தோலிக்க மதத்தை பரப்பும் மையமாக இவை திகழ்ந்ததுடன் தேவா லயங்களே இவற்றை மேற்பார்வை செய்தன. போர்த் துக்கேயருக்கும் சுதேசிகளுக்கும் இடையில் உருவான கலப்பினமாக பறங்கியர் என்ற புதிய இனம் ஒன்று உரு வானது. இவர்களால் பேணப்பட்ட போர்த்துக்கேய ‘பைலா’ பாடல்கள் இன்றும் சிங்கள பாடல்களில் ஒரு அம்சமாக திகழ்கிறது. இவர்கள் காலத்தில் தான் இலங் கையில் துப்பாக்கி அறிமுகமானது.

## ஒல்லாந்தர் காலம்

போர்த்துக்கேயரின் துப்பாக்கியாலும் இரத்தத்தாலும் ஓரளவுக்கு ஒன்றிணைக்கப்பட்ட கரையோர பிரதே சத்தை ஒல்லாந்தர் கைப்பற்றியபோது யுத்த நிலைமை யும் கிளர்ச்சிகளும் ஓரளவுக்கு ஓய்ந்து போயிருந்தன. பெரிதும் சிறிதுமான சில கிளர்ச்சிகள் அவ்வப்போது வெடித்தபோதும் கூட கண்டி இராச்சியத்தோடு பெரும் பா லும் சமாதானமாகவே போக முயன்றனர். இவர்கள் புரட்டஸ்தாந்து மதத்தை ஆரம்பத்தில் தீவிரமாக பரப் பினாலும் பின்னர் அப்போக்கை தளர்த்தினர். பௌத்த பிக்குகளுக்கு ஆதரவு நல்கினர். போர்த்துகேயர் ஆரம் பித்த பாடசாலைகளை அதே விதத்தில் தொடர்ந்த னர். தமது டச்சு மொழியை பரப்ப பெரிதும் முயன்றா லும் அம்முயற்சியில் அவர்கள் வெற்றி பெறவில்லை. அதற்கு ஒரு காரணம் போர்த்துகேய மொழி அரச தொடர்பு மொழியாக அக்காலத்தில் நிலைப்பெற்று விட்டது. இவர் களும் போர்த்துக்கேயர்களைப்போலவே மன்னர் காலத்தில் நிலவிய அதே சாதிகட்டமைப்பையும் நிர் வாக முறையையும் சில மாற்றங்களோடு தொடர்ந்த னர். ஆயினும் இவர்களின் காலத்தில் நிர்வாகம் போர்த் துக்கேயர் காலத்தை விட ஒப்பீட்டளவில் சீராக நடைபெற்றது.

ஒல்லாந்தர் காலத்தில் சிங்கள சமூகத்துக்குள் சாதிய மைப்பில் ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டது. அது கராவ,




**கறுவா பொதிசெய்யும் இலங்கையர்கள்**

**Image source - www.namathumalayagam.com**

(மீனவ பின்புலம் கொண்டோர்) துராவ, (கள் இறக்கும் பின்புலம் கொண்டோர்) சலாகம (கறுவா உரிப்போர் பின்புலம் கொண்டோர்) ஆகிய மூன்று சாதியினர் முக்கியத்துவம் பெற்றமையாகும். இவர்கள் தென் இந்தியாவிலிருந்து சில நூற்றாண்டுக்கு முன்பிருந்து வந்து குடியேறியவர்களாவர். நாளடைவில் இவர்கள் சிங்கள சமூகத்தால் உள்வாங்கப்பட்டுவிட்டனர். ஒல்லாந்தர் ஆட்சி செய்த பகுதிகளில் இலங்கை சிங்கள சமூகத்தில் உயர் சாதியினரான கொவிகமவினரின் ஆதிக்கத்திற்கு சவால் விடும் அளவுக்கு ஆங்கிலேயர் காலத்தில் இவர்கள் உருவெடுத்திருந்தனர். சாதிபாகுபாட்டிலிருந்து விடுபடுவதற்காக கிறிஸ்த்தவர்களாக மாறி சலுகைப்பெற்றனர். இவர்களே நிலப்பிரபுத்துவத்தில் இருந்து ஆரம்ப முதலாளித்துவத்துக்கு முதலில் காலடி வைத்தவர்களாவர்.

இவர்களில் சலாகம சாதியினரின் துயர்தோய்ந்த வரலாறு ஒரு தனிக்கதை. இவர்கள் போர்த்துகேயர் காலத்திலும் கறுவா சேகரித்து உரிப்பவர்களாக சேவகம் புரிந்தாலும் ஒல்லாந்தர் காலத்தில் அடிமைகள் போல மலேரியா நுளம்பு மலிந்த காடுகளில் கறுவா சேகரித்து 'இராஜகாரிய முறையின்கீழ்' அவற்றை உரித்து அரசுக்கு ஒப்படைக்கும் கடுமையான சாதிரீதியான ஊழியத்தை செய்தனர். ஒல்லாந்தரின் பிற்காலத்தில் இவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டன. இவர்கள் நிலத்துடனான பிணைப்பிலிருந்து விடுபட்ட ஒரு சமூகம் என்ற முறையிலே பிற்கால ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நகர தொழி லாளர் களாகவும் வணிகர்களாகவும் முதன் முதலில் பயன்பெற்றவர்கள் இவர்களே. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தில் அமரபுர நிகாயாவின் பாத்திரம் முக்கியத்துவம் வாய்ந்தது. முன்னர் சாதிபாகுபாட்டிலிருந்து விடுபடுவதற்காக கிறிஸ்த்தவர்களாக மாறிய இவர்கள் எதிர்பார்த்த சாதிபாகுபாடு மாறாததால் பெருமளவில் பௌத்தராக மாறி இந்த இயக்கத்தின் முன்னணியில் திகழ்ந்தனர்.

ஒல்லாந்தர் ஆட்சியின் போது போர்த்துகேயர் காலத்தை விடவும் கூடுதலான ஆரம்ப முதலாளித்துவ மாற்றங்கள் உண்டாக்கின. ரோமன் டச்சு சட்டமும் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றங்களும் உருவாக்கப்பட்டன. போர்த்துக்கேயர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒருதார மண முறையும் திருமணமும் கரையோர சமூகம் முழுவதும் பரவியது. ஒல்லாந்தரின் பெரும் பகுதி கடல் மட்டத்துக்கு கீழே இருக்கிறது. எனவே நீரோட்டத்தை கட்டுப்படுத்தவும் அவற்றைப் பயன்படுத்தவும் தேவையான் நிபுணத்துவம் அவர்களிடம் இருந்தது. கறுவா களனி பள்ளத்தாக்கின் காடுகளிலும் சிலாபம் முதல் வளவே கங்கை வரையிலான கோட்டை இராச்சியத்தின் கரையோரப் பகுதிகளிலும் செழித்து வளர்ந்தது. இங்கு கிடைக்கும் கறுவாவை நீர்வழியாக போக்குவரத்து செய்வது இலாபகரமானதாக இருந்தால் தமது நிபுணத்துவத்தை பயன்படுத்தி மூன்று கால்வாய்களை திறம்பட அமைத்தனர். அத்துடன் சில கைவிடப்பட்ட நீர்த்தேக்கங்களையும் புனருத்தாரணம் செய்தனர்.

அதுவரை இயற்கையாக மாத்திரமே கறுவா விளையும் என்ற நம்பிக்கையை உடைத்து உலகின் முதலாவது கறுவா பெருந்தோட்டத்தை இலங்கையில் இவர்கள் வெற்றிகரமாக உருவாக்கினர். .இதனையடுத்து அவற்றை துறைமுகங்களுக்கு கொண்டுசெல்லும் போக்குவரத்து வசதிகள் உருவாக்கப்பட்டன. மாட்டு வண்டி பாதைகள் பல உருவாகின.


ஒல்லாந்தர் கறுவா ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெருமளவு தங்கியிருந்தாலும் ஏனைய காசுப்பயிர் உற்பத்தியிலும் ஆர்வம் காட்டினர். மிளகு பாக்கு கோப்பி என்பன இவற்றுள் முக்கிய இடத்தை வகித்தன. இவை தோட்ட பயிர்செய்கையாக மேற்க்கொள்ளப்பட்டன. அதிலும் கோப்பி மூலம் கிடைத்த ஏற்றுமதி வரு

மானம் கணிசமானதாக இருந்தது. 1782ல் ஜாவாவின் கோப்பி போட்டியிட தொடங்கும் வரை அராபியரின் கோப்பியோடு இலங்கை கோப்பி வெற்றிகரமாக போட்டியிட்டது. அத்துடன் நெல் உற்பத்தியையும் பெருந்தோட்ட முறையில் மேற்கொள்வதற்கு முயன்ற இவர்கள் அந்நோக்கத்திற்காக நிலத்தை ஒதுக்கி தென் இந்தியாவில் இருந்து சுமார் மூவாயிரம் விவசாய தொழிலாளர்களை வரவழைத்தனர். ஆயினும் அம்முயற்சி வெற்றிபெறவில்லை அவ்விவசாய தொழிலாளர்கள் என்னவானார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் கறுவா பெருந்தோட்டங்களில் உள்வாங்கப்பட்டிருக்கலாம் என்பதே ஊகமாக உள்ளது.



ஒல்லாந்தரது ஆட்சிப் பரம்பல்


Image source - 2kexam.blogspot.com



போர்த்துகேயர் கால இலங்கை அரசுகள்

Image source - www.tamilinfopoint.it

இவர்களின் காலத்தில் நிலம் விற்பனைப் பண்டமாக சிலப்பகுதிகளில் மாறிக்கொண்டிருந்தது. தென்னை, பனை, கள் வியாபாரம் மற்றொரு தொழிலாக வளர்ந்தது. யாழ்ப்பாணத்தில் புகையிலை தோட்டப்பயிராக வளர்க்கப்பட்டு ஏற்றுமதி வருவாய் தரும் ஒரு தொழிலாக மாறியிருந்தது. அத்துடன் யானை விற்பனைக்கான பிரதான சந்தையாகவும் உருவாகியிருந்தது. தென் இந்தியாவுக்கு அருகில் இருந்ததால் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தின் மற்றொரு முக்கிய மையமாக மன்னர் மாறியது.



சிங்கள சாதியத்தை விபரிக்கும் படம்

Image source - bp.blogspot.com

கண்டி இராச்சியம் கரையோர பகுதிகளைப்போல் முதலாளித்துவ அம்சங்களுக்கு பரிச்சயமில்லாமல் கண்டிக்கே உரிய தன்மைகொண்ட நிலபிரபுத்துவ சமூகமாகவே இருந்தது. இது பௌத்த மதத்தின் காவலனாக செயற்பட்டதுடன் போர்த்துகேயரினால் அச்சுறுத்தலுக்குள்ளான முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்து அதனால் பயன் பெற்றது. முஸ்லிம்களின் வியாபார திறனை அது பயன்படுத்திக்கொண்டதுடன் அவர்களை மலையகத்தின் பிரதான கால்வாய்களிலும் கிழக்கு மாகாணத்திலும் குடியேற்றி போர்த்துகேயரிடமிருந்தும் பின்னர் ஒல்லாந்தர் காலத்திலும் இடம்பெற்ற படையெடுப்புகளை முறியடிப்பதில் இவர்களது பங்களிப்பைப் பெற்றுக்கொண்டது. கிறிஸ்துவ மதம் இங்கு காலனித்துவத்தின் மற்றொரு காவலரணாக சந்தேகத்துடன் பார்க்கப்பட்டதால் கிறிஸ்துவ மதம் இங்கு குறிப்பிடத்தக்களவில் வளரவில்லை. கண்டிய சமூகத்தில் சாதி ஆழவேரூன்றியிருந்தது. இங்கு செல்வாக்குமிக்க நீண்ட பாரம்பரியம் கொண்ட உயர்குல குடும்பங்களின் ஆதிக்கம் நிலவியது. உதாரணமாக கண்டி பிரதானிகளில் ஒருவனாக இருந்த எகலபொலவின் குடும்பம் 150 வருடங்களுக்கு முன்பிருந்தே செல்வாக்கு செலுத்திவந்தது.

அரசனே பௌத்தமதத்தின் பாது காவலனாகவும் அதிகார ஏணியின் உச்சத்திலும் இருந்தான். கண்டிய பிரதானிகளைக் கொண்ட ஆலோசகர்சபை அதற்கடுத்த நிலையில் இருந்தது. இவர்கள் ஏகமனதாக வழங்கும் ஆலோசனைகளுக்கு அரசன் கட்டுப்படுவது சம்பிரதாயமாக இருந்தது. பொதுவாகவே கண்டிய பிரதானிகள் குடும்பச்சச்சரவு, தனிப்பட்ட பகை, காழ்ப்புணர்ச்சி அகம்பாவ போட்டி போன்ற காரணங்களால் பிளவுண்டிருந்தனர். 1739 முதல் 1815 வரை 76 ஆண்டுகள் கண்டியை ஆட்சி செய்தவர்கள் தெலுங்கு - நாயக்க வம்சத்தவராவர். இவர்கள் பௌத்த மதத்தை சிரத்தையுடன் பின்பற்றினர்.

இவர்களது அரசசபை மொழி தமிழாகவே இருந்தது. 1815ல் வஞ்சனையால் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியபோது அதனை ஆட்சி செய்த கடைசி இலங்கை மன்னன் ஸ்ரீ விக்ரமராஜசிங்கனின் இயற்பெயர் கண்ணுசாமி. கண்டியை ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க நாயக்க மன்னன் காலத்தில் தான் இன்றும் விமர்சையாக கொண்டாடப்படும் எசல பெரஹெர அறிமுகப்படுத்தப்பட்டது. கண்டி இராச்சியத்தில் முன்னர் மன்னனுக்கு எதிரான கிளர்ச்சிகள் அவ்வப்போது வெடித்தாலும் நாயக்கர் மன்னர் ஆட்சிக்காலத்தில் அமைதியே நிலவியது - கடைசிமன்னன் விக்ரமசிங்க காலத்தில் மாத்திரமே குழப்பநிலை நிலவியது.

புராதன நீர்ப்பாசன சிறு நாகரிகம் தழைத்த நுவர கலாவிய என்றழைக்கப்படும் பகுதியும் கண்டி இராச்சியத்துக்குரியதாய் இருந்தாலும் அது பெரும்பாலும் கைவிடப்பட்ட மக்கள் குடியேற்றம் குறைவாகியிருந்த வறிய பிரதேசமாக இருந்தது. கண்டி இராச்சியம் ஒன்பது நிர்வாக பிரிவுகளாக (Rata) பிரிக்கப்பட்டிருந்தது. அவை கண்டி தலைநகரை சுற்றிலும் இருந்த மலைபகுதியிலும் பீட பூமிகளிலும் பரவி கிடந்தன. இவை செழிப்பானவையாக இருந்தன. இதனைவிட வளம் குன்றிய பரந்த பகுதிகள் பல திசவினிகளாக பிரிக்கப்பட்டிருந்தன இவற்றுள் மலைநாட்டில் இருந்த உலப்பன உடபலாத்த ஆகிய இரண்டைத்தவிர ஏனையவை தாழ் நிலத்தில் ஒல்லாந்தரின் எல்லை வரை சென்றன. நிர்வாக அலகுகளில் மாத்தளை (நான்கு கோறளை) ஊவா (ஏழு கோறளை) என்பன மிகவும் மதிப்புக்கு ரியவையாக திகழ்ந்தன. கண்டி மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருந்த வன்னி பகுதிகள் வன்னிய பிரதானிகளால் நிர்வகிக்கப்பட்டு மன்னனுக்கு திறை செலுத்தப்பட்டது.

இன்றைய நுவரெலிய மாவட்டத்தின் பெரும்பகுதிகள் மனித குடியேற்றம் இல்லாமலே இருந்தது. இங்கிருந்த அடர்ந்த காடுகளிலிருந்து பெரும்பாலான நதிகள் உற்பத்தியானதால் அவை பாதுகாக்கப்பட்டன. சில சமயங்களில் மன்னர்கள் அங்கு வேட்டைக்கு செல்வதுண்டு. ஆயினும் கடும் குளிர் காரணமாக அங்கு அன்று மனிதர்கள் வாழமுடியாமல் இருந்தது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையை ஆண்டபோது ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சி இன்னும் வெடித்திருக்கவில்லை. எனவே அவர்கள் காலத்தில் கைத்தொழில் - முதலாளித்துவ பொருளாதார மாற்றங்கள் பாரிய அளவில் ஏற்படவில்லை. அவர்கள் வர்த்தக முதலா ளித்துவ காலகட்டத்துக்குரியவராக இருந்தனர். ஒல்லாந்தரின் ஆட்சியின் இறுதி காலகட்டத்தில் ஐரோப்பாவிலே கைத்தொழில் புரட்சி நடைபெற்றிருந்தாலும் அதன் பாதிப்பு இலங்கையில் குறைவாகவே இருந்தது.

எனவே இலங்கையில் விளையும் வாசனைத்திரவியங்களை, குறிப்பாக கறுவாவை, ஏற்றுமதி செய்வதே இவர்களது பிரதான குறியாக இருந்தது. ஆயினும் அன்றைய மேற்கத்தைய முதலாளித்துவத்தின் ஆரம்ப விதைகளை இவர்களே விதைத்தார்கள்.

உலகை மாற்றிய கைத்தொழில் புரட்சி 1760 ன் பின்னரே பிரித்தானியாவில் நடைப் பெற்றது. 1765ல் ஜேம்ஸ் வாட் நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தார். 1804ல் தான் நீராவியால் இயங்கும் முதலாவது புகையிரதம் ஓடியது. 1885ல் தான் வானொலி கண்டுபிடிக்கப்பட்டது. 1886 ல் தான் முதலாவது கார் அறிமுகப்படுத்தப்பட்டது. நவீன தார் பாதைகள் 1834 ம் ஆண்டு முதல் தான் போடப்பட்டன. 1903ல் தான் முதலாவது விமானம் பறந்தது.

**போர்த்துக்கேயரின் துப்பாக்கியாலும் இரத்தத்தாலும் ஓரளவுக்கு ஒன்றிணைக்கப்பட்ட கரையோர பிரதே சத்தை ஒல்லாந்தர் கைப்பற்றிய போது யுத்த நிலைமையும் கிளர்ச்சிகளும் ஓரளவுக்கு ஓய்ந்து போயிருந்தன. பெரிதும் சிறிதுமான சில கிளர்ச்சிகள் அவ்வப்போது வெடித்தபோதும் கூட கண்டி இராச்சியத்தோடு பெரும்பா லும் சமாதானமாகவே போக முயன்றனர்.**

பிரித்தானியர் இலங்கையை தமது காலனித்துவ பிடிக்குள் 1796ல் கொண்டுவந்தபோது அவர்களே உலகில் மிகவும் முன்னேறிய உற்பத்திமுறையைக் கொண்டிருந்தனர்.
சூரியன் அஸ்தமிக்காத அவர்களது விரிந்த சாம்ராஜ்யம் உதயமாகிக்கொண்டிருந்தது.
ஆனால் இலங்கையோஇன்னும்பின்தங்கிய - நிலப்பிரபுத்துவ - சுயதேவை பொருளாதாரத்தையே கொண்டிருந்தது. இந்தியாவில் காணப்பட்ட முன்னோடி - தொழில்மயமாக்கப்பட்ட முகலாய வங்காளம் (Protoindustrialized Mughal Bengal) போன்ற ஆரம்ப முதலாளித்துவ வளர்ச்சி இங்கு காணப்படவில்லை. பிரித்தானியர் கண்டியை 1815 ல் கைப்பற்றி முழு இலங்கையையும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்த பின்னர்தான் இலங்கையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

தொடரும்...

# பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுதல்

1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய்ந்து விளக்குகின்றது.




கட்டுரை


● பி. ஏ. காதர்




**திருகோணமலை இயற்கை துறைமுகம்**

Image source - www.pinterest.com.mx/pin

**12** ஆம் நூற்றாண்டில் இந்து சமுத்திரத்தில் அதுவரை கடலாதிக்கம் செலுத்திய சோழ சம்ராச்சியம் பலவீனப்பட்டபோது அவர்களது பிடியில் இருந்த கடல் வர்த்தகம் அரேபியர்களினதும் முஸ்லிம்களின தும் கைகளுக்கு மாறியது. ஐரோப்பிய நாடுகளின் கடல் வலிமை ஓங்கியபோது அவர்களது துப்பாக்கிப் பலத்தின் முன்னால் ஆரியர்களின் வாளும் வேலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை. முதலில் போர்த்துகேயர் இலங்கைக்கு வந்தது ஒரு தற்செயலான விடயம். அவர்கள் கடலாதிக்கத்துக்காக அரேபியர்களோடும், இலங்கையிலும் இந்தியாவிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட - அப்போது நிலவிய நிலவுடைமை சமூகத்தின் காவலனாகத் திகழ்ந்த - உள்ளூர் மன்னர்களோடும் போராட வேண்டியிருந்தது. இலங்கையில் வாசனைத்திரவியங்களின் கட்டுப்பாடு முஸ்லிம் வர்த்தகர்களின் பிடியில் இருந்ததால் அவர்களும் போர்த்துகேயருடன் மோதினர். இச்சவால்களை எல்லாம் போர்த்துகேயர் துப்பாக்கி முனையால் மாத்திரம் சமாளிக்கவில்லை; குரூரமான அடக்குமுறையாலும் வஞ்சனையாலும் சூழ்ச்சிகளாலும், தமக்கு ஆதரவான



கிழக்கிந்திய வர்த்தக கம்பெனி
Image source - www.bbc.com

சுதேசத் தலைவர்களுக்கு பதவியும் லஞ்சமும் கொடுப்பதன் மூலமும், மிசனரி கல்விமூல மும், கிறிஸ்தவ மதத்தை பரப்பி மதமாற்றம் செய்வதன் மூலமும் அதனை வெற்றிகரமாக செய்தனர். ஆயினும் அவர்களால் இலங்கை யிலும் அவர்கள் கைப்பற்றிய ஏனைய ஆசிய நாடுகளிலும் தொடர்ச்சியாக ஆட்சி செய்ய முடியாமல் போனதற்கு மற்றுமொரு புதிய சவால் காரணமாகியது. அதுதான் ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா ஆகிய ஐரோப்பிய நாடுகளும் காலனியல் கொள்ளையில் போட் டியிடத் தொடங்கியமையாகும். ஸ்பெயின் போன்ற நாடுகளின் கவனம் புதிய உலகமான அமெரிக்க கண்டத்தின் மீது இருந்தபடியால் அவர்கள் இந்து சமுத்திர பிரதேசத்தில் கவ னம் செலுத்தவில்லை. எனினும் அதுவரை நிலப்பிரபுத்துவ காலத்தில் வளர்ச்சி பெற்றி ருந்த ஆசிய மன்னர்களின் நிலகொள்ளைக்கான மையமாகத் திகழ்ந்த இந்து சமுத்திர பிரதே சம், ஐரோப்பிய நாடுகளின் காலனித்துவ கொள்ளைக்கான போட்டியின் மற்றொரு குவிமையமானது.

## திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவம்

இலங்கை இந்தியாவுக்கு அருகில் இருந்தபடி யாலும் - இரு பருவக் காற்றின் போதும் பாது காப்பாக கப்பல்களை நிறுத்தக்கூடிய - உல கின் இரண்டாவது பெரிய ஆழ்கடல் இயற்கை துறைமுகமான திருகோணமலை துறைமுகம் இங்கிருந்தபடியாலும் காலனியல் போட்டி யில் இலங்கையின் முக்கியத்துவம் அதிகரித் தது. ஒல்லாந்தர் போர்த்துகேயரிடமிருந்து இலங்கையின் கரையோரங்களை கைப்பற்றி யதற்கு இலங்கையில் விளையும் கறுவா ஒரு காரணமாக இருந்தாலும் இந்தியாவில் தமது நிலைகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கு திரு கோணமலைத் துறைமுகத்தின் தேவையும் மற்றொரு முக்கிய காரணமாக அமைந்தது. ஆனால் பிரித்தானியர் இலங்கையைக் கைப் பற்றியதற்கு ஒரே முக்கிய காரணமாக திருகோண மலை இயற்கைத் துறைமுகமே அமைந்தது. இந்தியாவில் முகலாயப் பேரரசு (1526 - 1757) வீழ்ச்சியடைந்துக்கொண்டிருந்த வேளையது. ஐரோப்பிய காலனித்துவ நாடுகள், துணைக் கண்டத்தில் ஏற்பட்ட அதிகார வெற்றிடத்தை நிரப்ப போட்டியிட்டன. பிரித்தா னிய கிழக் கிந்தியக் கம்பனிக்கும் பிரெஞ்சுக்காரர்களுக் கும் இடையிலான போட்டி கடுமையானது. இந்தியாவின் மலபார் மற்றும் கோரமண்டல் கடற்கரையில் நிலைகொண்டிருந்த பிரித்தா னிய கட்டளை நிலைகளை பாதுகாப்பதற்கு இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் உள்ள திருகோணமலை இயற்கைத் துறைமுகம் பிரித்தானியாவுக்கு தேவைப்பட்டது. எனவே திருகோணமலைத் துறைமுகத்தை ஒல்லாந்த ரிடம் இருந்து பிரித்தானியர் 1782 ஜனவரி 8 ஆம் திகதி கைப்பற்றினர். அதனால் பிரான்ஸ் படை அதனை அதே வருடம் ஒகஸ்ட் 29 ஆம் திகதி மீட்டு ஒல்லாந்தரிடம் மீண்டும் சில மாதங்களில் ஒப்படைத்தது. இது திருகோண

மலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவத்தினை உணர்த்தும் மற்றொரு உதாரணமாகும்.

அதனைத்தொடர்ந்து ஆங்கிலேயர் ஒல்லாந்தருடனும் பிரெஞ்சுக்காரருடனும் திருகோணமலைத் துறைமுகத்தை கைப்பற்றுவதற்கான போட்டியில் ஈடுபட்டு அம்முயற்சியில் இறுதியில் 1796 இல் வெற்றி பெற்றனர். அதன் பின்னர் டச்சுக்காரர்களை தீவில் இருந்து வெளியேற்றத் தொடங்கினர். ஐரோப்பாவில் நடைபெற்ற திடீர் மாற்றங்களும் பிரித்தானியரின் சூழ்ச்சித் திறனும் இதற்கு பெரிதும் காரணமாயின.

அப்போது பிரெஞ்சுப் புரட்சி (17921801) யுத்தங்கள் நடந்துகொண்டிருந்தன. ஒல்லாந்து பிரெஞ்சுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இதனால் ஒல்லாந்தைக் கைப்பற்றிய பிரெஞ்சுக்காரரிடம் தமது ஆளுகையின் கீழிருந்த இலங்கை கரையோரப்பகுதிகளையும் ஒல்லாந்தர் தாரைவார்த்து கொடுத்து விடுவார்களோ என்ற பீதியில் ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்ற விரும்பினர். ஆனால் ஒல்லாந்தர் கோட்டைகள் அமைத்து தமது பகுதிகளை பலமாக அரண்செய்திருந்தனர். பிரான்சியருடன் மோதிக் கொண்டிருந்த சமயத்தில், இந்தியாவில் கூடி கவனம் செலுத்தவேண்டிய தருணத்தில், இலங்கையில் நீண்டதொரு யுத்தத்தை நடத்த அவர்கள் தயாரில்லை. ஆகவே நரித்தனமாக தமது காய்களை நகர்த்தத் தொடங்கினர்.

## ஒல்லாந்தரிடமிருந்த கரையோரங்களின் ஆட்சி ஆங்கிலேயர் வசமாதல்

ஒல்லாந்து கவர்னரின் கீழ் இருந்த கரையோரப்பகுதிகள் பலவும் கொழும்பில் இருந்த கவர்னரின் மாளிகையும் சுவிட்சர்லாந்தின் திறமைமிக்க கூலிப் படை வீரர்களின் துணையோடு பலமாகக் காவல் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. இந்த சுவிட்சர்லாந்து காவலாளிகளை தம்பக்கம் இழுக்க ஒரு காரியத்தை பிரிட்டிஷார் செய்தனர். செயின்ட் ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்த 34 வயதான ஹியூக் கிளெஹோர்ன் (Hugh Cleghorn) என்ற ஒரு ஸ்காட்லாந்துகாரரை தமது ஏஜெண்டாக மாற்றினர். இலங்கையில் உள்ள சுவிட்சர்லாந்தின் கூலிப்படைகள் சுவிஸ் பிரபுவான கவுண்ட் சார்லஸ் டி மியூரனுக்கு (Count Charles de Meuron) சொந்தமான தனியார் இராணுவத்தின் ஒரு பிரிவாக இருந்தது. அந்தப் பிரபுவை பிரித்தானிய ஏஜென்டான ஹியூக் இரகசியமாக சந்தித்து டச்சுக்காரர்கள் செலுத்தும் பணத்தை விட கூடுதலான தொகையை தருவதாகவும் அதற்கு கைமாறாக இலங்கை கவர்னரிடம் சேவையிலிருக்கும் அவரது படைகளை லாவகமாக பிரித்தானியருக்கு சாதகமாக நடந்துகொள்ளவேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது. இலங்கையில் கூலிப்படைக்கு தலைமை தாங்கிய சுவிஸ்பிரபுவின் சகோதரருக்கு டச்சு காவலர்களுக்கு தெரியாமல் கவுண்டின் கட்டளையை கொண்டு சேர்ப்பதில் பெரும் சிக்கல் இருந்தது. சமயோசிதமாக, ஹியூக் கவுண்டின் கையொப்பமிடப்பட்ட கட்டளையை ஒரு வெண்ணெய்க் கட்டியில் (cheese) மறைத்துக்கொண்டுபோய் உரியவரிடம் ஹியூக் ஒப்படைத்தார். இவ்வாறுதான் பெப்ரவரி 1796 இல் பெரிதாக எந்த யுத்தமும் நடத்தாமல் பிரிட்டிஷ் படையிடம் ஒல்லாந்துப் படை சரணடைந்தது.



**ஆள்பதி பிரடெரிக் நோர்த்**

**Image source - www.geni.com**

எனினும் அப்போது ஐரோப்பாவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபடியால் இலங்கை மீண்டும் டச்சுக்காரர்களிடம் ஒப்படைக்கப்படுமோ என்ற ஐயம் பிரித்தானியரிடம் நிலவியதால் மெட்ராஸ் பிரசிடென்சியின் (Presidency of Madras) ஒரு பகுதியாக கிழக்கிந்தியக் கம்பெனியால் இலங்கை நிர்வகிக்கப்பட்டது. ஆனால் இந்தியப் பாணியில் கிழக்கிந்தியக் கம்பெனி விதித்த வரிகளை எதிர்த்து மக்கள் கிளர்ந்ததால் இரண்டு ஆண்டுகளுக்குள் 'இரட்டை ஆட்சி முறை' (dual system) நிறுவப்பட்டது. இதன்படி கிழக்கிந்தியக் கம்பனி இலங்கையின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்திய அதே சமயம் சட்டமும் நிர்வாகமும் ஆளு

நரின் கைகளில் இருந்தது. அவர் பிரித்தானிய அர சாங்கம், கிழக்கிந்தியக் கம்பனி ஆகிய இரண்டுக்கும் பதில் கூறவேண்டியிருந்தது.

இந்த "இரட்டை ஆட்சிமுறை" 1798 முதல் 1802 வரை நீடித்தது. 1801 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் செய்துகொள்ளப்பட்ட அமியன் (Peace of Amiens) ஒப்பந்தத்தின்படி பிரான்சும் பிரித்தானியாவும் தற் காலிக யுத்த நிறுத்தத்துக்கு இணங்கின. பிரித்தா னியா - பிரான்சுக் குடியரசை அங்கீகரித்தது. ஒல் லாந்தர் இலங்கைத் தீவில் தம்மிடமிருந்த ஆட்சி உரிமையை பிரித்தானியர்களிடம் முறையாக ஒப்ப டைத்தனர். அதன் பின்னர் இலங்கை பிரிட்ட னின் முதலாவது முடிக்குரிய காலனியாக மாறியது. இலங்கையின் முதலாவது ஆள்பதியாக இருந்த 32 வயதே ஆன ஃபிரடெரிக் நோர்த் புத்தி சாலித்தன மான ஆனால் உல்லாச - ஆடம்பரப் பிரியராக இருந்தார். கலைப்பட்டதாரியான திருமணமாகாத இளைஞரான இவர் மூன்றாவது ஜோர்ஜ் மன்னனின் பிரதமராக இருந்த நோர்த் பிரபுவின் மகன். ஆகவே ஃபிரடெரிக் நோர்த் செல்வாக்கு மிக்கவராக இருந் தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் தலையீடுகள் அவ ருக்கு பிடிக்கவில்லை. தனது செல்வாக்கை பிரிட்ட னில் பயன்படுத்தி இரட்டை ஆட்சி முறையை இவ்வாறு 1802 இல் முடிவுக்கு கொண்டுவந்தார்.

## 1803 கண்டி மீதான படையெடுப்பு

அவரது அளவுகடந்த உற்சாகம் சீக்கிரம் அவரை சிக் கலில் மாட்டிவிட்டது. அப்போது கண்டி இராச்சி யத்தின் இயற்கை வளம் வெகுவாக அறியப்பட்டி ருக்கவில்லை. கண்டியின் படையெடுப்புகள் பெரும்பா லும் ஒய்ந்து போயிருந்தன. ஆகவே கண்டி தனி இராச்சியமாக தொடர்வதையிட்டு பிரித்தானியா அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. அவர்களுக்கு ஆசியாவில் விரிந்து செல்லும் அவர்களது சாம்ராச்சி யத்தின் பாதுகாப்புக்கு இலங்கையின் கரையோரப்ப குதிகள் தேவைப்பட்டன. ஆனால், நாயக்க வம்ச ஆட்சியில் அதிருப்தியுற்றிருப்பதாக காட்டிக்கொண்டு அரியணையின் மீது குறிவைத்திருக்கும் அதிகார அடுக்கில் மன்னனுக்கு அடுத்த இடத்தில் இருந்த மகா அதிகாரம் பிலிமத்தலாவையுடன் தொடர்பை ஏற்படுத்தி, அவனது ஆதரவைப் பெற்றுக்கொண்ட தால் பெரிதும் உற்சாகமடைந்த ஆள்பதி ஃபிரடெ ரிக் நோர்த் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடி வெடுத்தார்.

இயற்கை அரணால் பாதுகாக்கப்பட்ட கண்டி இராச் சியத்தின் அரண்மணை நிலைவரம் தெரியாமல் கண்டி மக்களின் மனநிலை தெரியாமல் ,சுருக்கமா கக்கூறின் போதிய தகவல்களும் ஆதரவும் இன்றி - கண்டிய பிரதானி பிலிமத்தலாவையை நம்பி - 1803 ஆம் ஆண்டு 3,400 படையினரைக் கொண்டு (இத் தொகை பல துணை இராணுவபிரிவுகளையும் உள் ளடக்கியதாகும்). மெக் டோவெல் (McDowell) தலை மையில் கண்டிமீது அவர் போர் தொடுத்தார்.


ஆரம்பத்தில் பிலிமத்தலாவையின் மறைமுக ஆதர வோடு பிரித்தானிய படைகள் முன்னேறிச்சென்றன.



ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
Image source - www.mahawansaya.com

தாம் வெற்றிபெற்றுவிட்டதாகக் கருதி அவசரப் பட்டு போலி இளவரசன் ஒருவனை முத்துசாமி என்ற பெய ரில் 1803 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி கண்டி மன் னனாக ஆங்கிலேயர் பிரகடனப்படுத்தினர்.

இதனால் அரியணையில் அமர்வதற்கு ஆசைப்பட் டுக்கொண்டிருந்த பிலிமத்தலாவ ஏமாற்றமடைந்து ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினான். கண்டி மக் கள் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் பின்னால் அணிதிரண் டனர். ஆங்கிலேயப் படைகளை உள்ளேவரவிட்டு கண்டியப் படைகள் மறைந்திருந்து கொரில்லாத் தாக்குதலை நடத்தி ஆங்கிலேயப் படைகளை முற் றாக துவம்சம் செய்தன. பிரித்தானிய படைப்பிரி வொன்றுக்கு தலைமை தங்கிய மேஜர் டேவி ஒரு மரத்தில் தூக்கிலிடப்பட்டார். அந்த மரம் இன்றும் நினைவு கூறப்படுகிறது.



The reception hall in the palace of the King of Kandy 1785 JAN BRANDES

Image source - www.namathumalayagam.com

அவர்களில் ஒரே ஒருவரைத் தவிர எவரும் உயிரோடு திரும்பவில்லை. அவ்வாறு உயிர்பிழைத்த கோப்ரல் ஜார்ஜ் பார்ன்ஸ்லி (George Barnsley) தான் உயிர் பிழைத்த கதையை ஆள்பதிக்கு கூறினார். வளைத்து பிடிக்கப்பட்ட பிரித்தானியப் படைவீரர்கள் ஜோடி ஜோடிகளாகக் கட்டப்பட்டு அவர்களது மண்டை அடித்துடைக்கப்பட்டு அவர்களின் மூளை வெளியே எடுக்கப்பட்டது என்பதை விபரித்தார். பார்ன்ஸ்லி உயிருடன் இருப்பதை கண்டியர்கள் கண்டறிந்தபோது, அவர் இரண்டு முறை தூக்கிலிடப்பட் டார். ஆனால் இரண்டு முறையும் கயிறு பிரிந்தது. அவர் இறந்தவரைப் போல நடித்து இறுதியில் இருட்டில் ஊர்ந்து சென்றார். ஒரு கிராமவாசியால் பராமரிக்கப்பட்டு தப்பி வந்தார்.

இத்தோல்வியை அடுத்து ஆள்பதி ஃபிரடெரிக் நோர்த் பதவி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால் பிரித்தானிய பாராளுமன்றில் ‘கிறிஸ்தவர்களுக்கும் ஹீத்தனுக்கும் (Heathen) இடையில் நடைபெற்ற இந்த குரூரமான யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எதிரான படு கொலைக்கு எதிராக ஏன் பழிவாங்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?’ என கேள்வி எழுப்பப்பட்டது.

**1815 கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி**

உலகம் அதுவரை கண்டிராத முன்னேறிய மூர்க்கமான போர்களை ஐரோப்பா 18 மே 1803 முதல் 20 நவம்பர் 1815 வரை நெப்போலியன் காலத்தில் கண்டது. பிரித்தானியாவும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பிரான்சுடன் வாழ்வா? சாவா? யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கும் போது கண்டி மீது மற்றொரு போரை நடத்துவதில் பிரித்தானியாவினால் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால் அது கவனமாகவும் அதற்கான தந்திரமாகவும் திட்டத்தை வகுத்தது. 1803 ஆம் ஆண்டு படையெடுப்புக்குபழிவாங்குவதற்கு அப்பால் அதற்கு வேறு சில காரணங்களும் இருந்தன.

நிர்வாகத்தை ஒழுங்கமைக்கத் தொடங்கியபோது கண்டியின் தொடர்ச்சியான சுதந்திரம் சிக்கல்களை ஏற்படுத்துவதாக ஆங்கிலேயர் கருதினர். கண்டி இராச்சியத்தின் நீண்ட எல்லையைப் பாதுகாக்க பெரு மளவு செலவானது. கண்டியிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கறுவா மற்றும் பாக்கு ஏனைய வாசனைத் திரவியங்களுக்கு கணிசமான சுங்க வரி செலுத்த வேண்டியிருந்தது. தீவின் மையப்பகுதி வழியாக சாலைகள் அமைக்கப்படுமானால் நாட்டின் மேற்கு பகுதியை கிழக்குடன் நிலத் தொடர்பை விரைவுபடுத்தக்கூடியதாக இருக்கும். அத்துடன் அரசியல் ஒருங்கிணைப்பின் நன்மைகள் ஆங்கிலேயர்களுக்குத் தெளிவாகத் தெரிந்தன. எனவே கண்டி விவகாரங்களில் படிப்படியாக நிபுணத்துவம் பெற்ற சிவில் உத்தியோகத்த



Sir John D'Oyly, 1st Baronet, of Kandy

Image source - www.wikipedia.org

ரான ஜோன் டி’ஓய்லியின் (D’Oyly )தலைமையில் கண்டியை வேறுவிதமாக கைப்பற்றுவதற்கு நன்கு திட்டமிடப்பட்டது. அவர் திறமையான முறையில் தனது புலனாய்வு வலையமைப்பைக் கட்டியெழுப்பினர். 1803 இல் பிலிமத்தலாவ தனக்கெதிராக பிரித்தானியரோடு சதியில் ஈடுபட்ட பிறகும் அவனுக்கு மன்னிப்பளித்து அதே பதவி



**எஹலெபொல**

Image source - www.vaaramanjari.lk



**ஆள்பதி ரொபர்ட் பிரவுன்ரிக்**

Image source - www.alamy.com

யில் நீடிக்க ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் அனுமதித்தான். அதற்கு மற்றொரு காரணம் பிலிமத்தலாவ மீது நடவடிக்கை எடுப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆயினும் பிலிமத்தலாவ மன்னனுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சிகளை தூண்டவும் மன்னனை கொல்வதற்கு சதி திட்டங்கள் தீட்டவும் முயன்ற குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடத்தப்பட்டு அவனுக்கு 1810 ல் மரண தண்டனை வழங்கப்பட்டது. அவன் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டான். இது ஒரு சாதாரண விடயம் அல்ல. மன்னனுக்கு அடுத்த இடத்தில் இருந்த இவனுக்கே இந்தக் கதியா என ஏனைய பிரதானிகள் வெலவெலத்துப் போயினர். மறுபுறத்தில் பிலிமத்தலாவ போன்ற மகா அதிகாரம் பதவியில் இருக்கும் ஒருவருக்கு தகுந்த ஆதாரம் இல்லாமல் மரணதண்டனை விதித்தால் மக்கள் கிளர்ந்தெழுவதை தடுக்க முடியாது. ஆனால் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை.

பிலிமத்தலாவயை தேசபக்திமிக்க சிங்களத் தலைவன் என சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணங்களை பின்வருமாறு சுருக்கலாம்: சிங்களம் தெரியாத நாயக்க மன்னர்கள் தமிழ் மொழியில் அரசவை காரியங்களை நடத்திக்கொண்டு, தென் இந்தியாவிலிருந்து இளவரசிகளை வரவழைத்து திருமணம் செய்துகொண்டு தமது நாயக்க வம்ச ஆட்சியை தொடர்வதும், பெரும் தொகையான தமது உறவினர்களை அரண்மனையிலும் அரண்மையை சுற்றியுள்ள மாடமாளிகைகளிலும் குடியேற்றி அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதும் கண்டிய சிங்களப் பிரதானிகளுக்கு அதிருப்தியை தந்தது. பாரம்பரியமாக கண்டி சமுதாயத்தில் தமக்கிருந்த மரியாதையும் அதிகாரமும் குறைக்கப்பட்டு வருவதாகவும், சிங்கள மொழி முக்கியத்துவம் இழந்து வருவதாகவும், கண்டி குளம், தலதாமளிகை போன்றவற்றை கட்டுவதற்கு தென் இந்திய தொழில்வல்லுநர்கள் பயன்படுத்தப்படுவதால் கண்டியின் பாரம்பரிய தொழில்நுட்பம் பின்தள்ளப்பட்டு வருவதாகவும் கண்டியத் தலைவர்கள் உணர்ந்தனர். ஆகவே சிங்கள தேசபக்தனான பிலிமத்தலாவ நாயக்க வம்ச ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து சிங்கள வம்ச ஆட்சியை நிலைநிறுத்தவிரும்பினான். அதே சமயம் ஆங்கிலேயரின் பிடியில் கண்டி விழாமலும் கவனமாகச் செயல்பட்டான். இவையே அவர்களின் வாதமாகும்.

இந்த வாதத்தில் உள்ள அடிப்படைக் குறைபாடு யாதெனில் அக்காலகட்டத்தை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதாகும். அரண்மனைச் சதிகள் என்பன நிலப்பிரபுத்துவ காலத்துக்கே உரிய இலட்சணமாகும். அதிகார மையத்தில் இரண்டாம் நிலையில் நீண்ட காலம் இருந்த ஒருவருக்கு முதலாம் இடத்துக்கு வருவதற்கான அரிய சந்தர்ப்பம் ஒன்று வாய்க்கும் போது அதனை பெரும்பாலும் நழுவவிடுவதில்லை. அவர்கள் அரியணை ஏறுவதற்கு மதத்தை, இனத்தை, மொழியை, வம்சத்தை அல்லது சாதியை தமக்கான ஆயுதமாக பயன்படுத்தத் தவறியதில்லை. இத்தகைய அரண்மனை சதிகள் காலாகாலமாக உலகம் பூராவும் நடந்தேறியுள்ளன. நிலைமை சற்று வேறுபட்டாலும், ஜூலியஸ் சீசரை புரூட்டஸ் கொலை செய்ததும் இவ்வாறுதான் விளக்கப்படுகிறது. நாயக்க மன்னர் காலத்தில் மேலே கூறப்பட்ட அத்தனை குறைபாடுகள் இருந்தாலும் அவர்கள் பௌத்தர்களாகவும் பௌத்தமதத்தை பேணி காப்போராகவும் இருந்தனர் - பௌத்தத்தில் இந்துமத பாதிப்பை ஏற்படுத்தினாலும் கூட. கண்டி மக்கள் மத்தியில் அவர்களுக்கு மிகுந்த நன்மதிப்பு இருந்தது. அவர்கள் கட்டிகாத்த சாதி முறையால் கண்டி பிரதானிகளும் பயன் பெற்றனர். எனவே மக்கள் கிளர்ச்சிகளை தூண்டி இம்மன்னர்களை வெளியேற்றிவிட்டு ஆட்சியை தம்வசமாக்கிக்கொள்ள இவர்களால் முடியவில்லை. எனவேதான் புத்திசாலியான பிலிமத்தலாவ வேறுவிதமாக தனது திட்டத்தை வகுத்தான்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இவனே ஸ்ரீ விக்ர




A drawing depicting the Kandyan Convention being drawn up at the Audience Hall or Magula Maduwa

Image source - www.sundaytimes

மசிங்கவை அரியணை ஏற்றினான். கண்டியை ஆண்ட நாயக்கவம்ச மன்னன் ராஜாதி ராஜசிங்கனின் மரணத்திற்குப் பிறகு வாரிசுரிமை போட்டி ஏற்பட்டது. அரசிகளில் ஒருவரின் சகோதரரின் மகனை அரசவை பிரதானிகளில் ஒரு பிரிவினரின் ஆதரவுடன் அரியணையில் அமர்த்த இறந்த மன்னனின் உறவினர்கள் முயற்சித்தபோது, மன்னனுக்கு அடுத்த நிலையில் அதிகாரம் படைத்த மகாஅதிகாரம் (பிரதமர்) பிலிமத்தலாவ, மற்றொரு அரசியின் சகோதரியின் மகனான, பதினெட்டு வயது மாத்திரமே நிரம்பிய, அப்போது வசீகர குணம் கொண்ட, கண்ணுசாமி நாயுடு என்ற இளைஞனை ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் என்ற பெயரில் பட்டம் சூட்டினான்.

அப்போது அவனது நோக்கம் தனது இரத்த உறவுள்ள ஒரு அழகிய இளம்பெண்ணை மன்னனுக்கு திருமணம் செய்துவைத்து அதன் மூலம் வாரிசுரிமையை தனது குடும்பத்திற்கு சொந்தமாக்கிக் கொள்வதாகவே இருந்தது. ஆனால் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் தென்னிந்தியாவிலிருந்து இளவரசிகள் இருவரை வரவழைத்து திருமணம் செய்து கொண்டதும் பிலிமத்தலாவயின் திட்டம் தவிடு பொடியானது. எனவே நாயக்க வம்சத்தை வெளியேற்றிவிட்டு தனது வம்சத்தில் ஒருவரை அரியணையில் அமரவைப்பதற்கு ஆங்கிலேயரின் துணையை நாடினான். ஆங்கிலேயரின் நோக்கம்வேறாகஇருப்பதைபுரிந்துகொண்டதும் கண்டி அரியணை ஆங்கிலேயர் வசமாகாமல் தடுத்தான். பின்னர் மன்னனைக் கொலை செய்வதற்கு கூலிப்படையினரை வாடகைக்கு அமர்த்தினான். எப்படியும் கண்டி இராச்சியத்தை தனது வம்சத்தின் கீழ் கொண்டுவரும் அவனது முயற்சியை வாரிசுரிமை வம்ச போட்டியாகவே கருத முடியும். அதற்கு தேசபக்தி மூலாம் பூசுவது இனவாத சித்தாந்தத்தை நியாயப்படுத்துவோருக்கே சாதகமாக அமையும். பிலிமத்தலாவ விசாரணைக்கு பின்னர் கண்டியரசன் அனைத்து அதிகாரிகளையும் சந்தேகத்தோடு பார்க்கத்தொடங்கினான். அவன் தனக்கெதிராக சதியில் ஈடுபட்டவர் என சந்தேகித்தவர்களை குரூரமான முறையில் தண்டித்தான். ஏற்கனவே பாரம்பரியமாக கண்டி சமுதாயத்தில் தமக்கிருந்த மரியாதை குறைக்கப்படுவதாக அதிருப்தி கொண்டிருந்த கண்டியப் பிரதானிகள் கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் காலத்தில் மிகவும் மனசஞ்சலத்துள்ளாகினர். ஒருபுறம் மன்னன் இவர்களுக்கு அஞ்சினான், மறுபுறத்தில் பிரதானிகள் தமக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என நடுங்கினர். இத்தகைய ஒரு நிலைமையை உருவாக்கி மக்கள் மத்தியிலும் மன்னனைப்பற்றி வெறுப்பேற்படுத்தும் பொய்யான செய்திகளை தமது ஒற்றர்கள் மூலம் பரப்பி சரியான தருணத்திற்காக பிரித்தானியர் காத்திருந்



1815 கண்டி ஒப்பந்தம்

Image source - www.namathumalayagam.com

**'மலபார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து கண்டி சிங்கள மக்களை மீட்பதற்காக அவர்களின் வேண்டுகோளை ஏற்று பிரித்தானிய மன்னரின் ஆணையின்படி படையெடுக்கிறோம்' என பிரகடனப்படுத்திக்கொண்டு கண்டிக்குள் பிரவேசித்த பிரித்தானிய படைக்கு எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை, மகத்தான வரவேற்பே காத்திருந்தது.**



ஊவா கிளர்ச்சியை விபரிக்கும் படம்

Image source - www.vaaramanjari.lk

தனர். பிலிமத்தலாவவுக்கு பின்னர் அவனது மருமகன் எஹலபொல முதன்மை பிரதானி பதவிக்கு நியமிக்கப்பட்டான். அவனும் அரசனுக்கு எதிராக தனது மாமனாரின் வழியைப் பின்பற்றத் தொடங்கி பிரித்தானிய ஆட்சியாளரோடு இரகசியமாக உறவு பூண்டதை அறிந்த மன்னன் கடும் கோபமடைந்தான். எஹலபொல தப்பியோடி பிரித்தானிய ஆட்சியாளரிடம் சரணடைந்தான். ஆத்திரமுற்ற மன்னன் அவனது மனைவியையும் பிள்ளைகளையும் தண்டித்தமை தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட பீதியூட்டும் செய்திகள் பரப்பட்டன. அவை மக்களை அதிர்ச்சியடையச் செய்தன. இதனால் ஆங்கிலேயர்கள் எதிர்பார்த்த அந்த தருணம் உருவாக்கப்பட்டுவிட்டது.

'மலபார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து கண்டி சிங்கள மக்களை மீட்பதற்காக அவர்களின் வேண்டுகோளை ஏற்று பிரித்தானிய மன்னரின் ஆணையின்படி படையெடுக்கிறோம்' என பிரகடனப்படுத்திக்கொண்டு கண்டிக்குள் பிரவேசித்த பிரித்தானிய படைக்கு எந்த எதிர்ப்பும் இருக்கவில்லை, மகத்தான வரவேற்பே காத்திருந்தது. இவ்வாறு 1803 இல் பெரும் படையெடுப்பால் ஆள்பதி ஃபிரடெரிக் நோர்த் சாதிக்காததை ஒரு துளி இரத்தம் கூட சிந்தாமல் ஒரு தோட்டாவைக்கூட செலவழிக்காமல் ஆள்பதி ரொபர்ட் பிரவுன்றிக் 1815ம் ஆண்டு பெப்ரவரி 14ம் திகதி பிரித்தாளும் சதியால் - இனவாதத்தின் துணையோடு - சாதித்தார். கண்டி மாளிகையிலிருந்து தப்பியோடிய மன்னன் பின்னர் கைது செய்யப்பட்டு வேலூருக்கு நாடுகடத்தப்பட்டான். அதனைத்தொடர்ந்து மார்ச் 2, 1815 திகதி கண்டியப் பிரதானிகள் கையெழுத்திட்டு பிரித்தானியரோடு செய்துகொண்ட கண்டி ஒப்பந்தத்தை (Kandyan Convention) அடுத்து கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமானது. இவ் ஒப்பந்தம் ஒரு கண்துடைப்பாக அமைந்து கண்டிய பிரதானிகள் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்ட வரலாறு நன்கு அறிந்ததே. எனவே அது பற்றி இங்கு விபரிக்கப்படவில்லை.

## 1818 ஊவா வெல்லஸ்ச (Wellassa) கிளர்ச்சி

கண்டியப் பிரதானிகளோடு ஆங்கிலேயர் ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது கண்டி இராச்சியத்தில் கண்டியப் பிரதானிகளின் அதிகாரம் குறைக்கப்படாது என்றும் அவர்களைக் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்கப்படமாட்டாது எனவும் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் கண்டியைக் கைப்பற்றிய பின்னர் ஆங்கில அதிகாரிகளே நிர்வாகத்தை நடத்தினர். கண்டியப் பிரதானிகளுக்கு அதில் குறிப்பிடத்தக்க எந்தப் பாத்திரமும் இருக்கவில்லை. சாதாரண அரச உத்தியோகஸ்தரும் கூட இவர்களை பெரிதாக மதிக்கவில்லை. விடயம் கைமீறிப்போவதையிட்டு கண்டியப் பிரதானிகள் ஆத்திரமுற்றனர். இவர்களது ஆத்திரத்துக்கு தூபமிடுவது போல பல சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெற்றன. மறுபுறத்தில் கரையோர மக்களினதும் கண்டிய இராச்சியத்தின் மக்களினதும் மனோபாவத்தில் இருந்த வித்தியாசத்தை ஆங்கிலேயர் புரிந்துகொள்ளவில்லை. அது வரை 300 வருடங்களுக்கு மேல் - முதலில் போர்த்து

கேயரின் ஆட்சியின் கீழும் பின்னர் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழும் இப்போது ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழும் அந்நியர் ஆட்சிக்கு பழக்கப்போயிருத்த கரையோர மக்கள் ஆரம்ப முதலாளித்துவ முறைக்கும் அதன் நிர்வாகத்திற்கும் பரிச்சயமாகி இருந்தனர். ஆனால் மன்னர் ஆட்சியின் கீழ் நிலவுடமை சமுதாயத்தில் வாழ்ந்து பழகிய கண்டிய மக்களால் இந்த திடீர் மாற்றத்தை விளங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் கொடுங்கோல் மன்னனுக்கு பதிலாக நல்லாட்சி செய்யும் மன்னன் ஒருவனின் ஆட்சியையே விரும்பினர்.

அத்தோடு பரந்த கண்டி இராச்சியம் முழுவதிலும் தமது நிர்வாகத்தை ஒரேவிதமாக நடத்தும் பொறிமுறை ஒன்று அப்போது ஆங்கிலேயரிடம் இருக்கவில்லை. இத்தகைய நிர்வாகமுறை 1833லேயே கோல்புருக் ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆகவே தலைநகர் கண்டியை சுற்றியுள்ள பகுதிகளையும் கரையோர நக ரங்களுக்கருகில் இருந்த முன்னைய கண்டி இராச் சியத்தின் பகுதிகளையும் மாத்திரமே ஆங்கிலேயர்க ளால் நேரடியாகக் கண்காணித்து நிர்வகிக்க முடிந் தது.

**ஆங்கிலேயருக்கு சார்பான பல கண்டியப் பிரதானிகள் ஆங்கிலேயரோடு ஒத்துழைத்து காட்டிக் கொடுத்தனர். அத்துடன் துரைசாமி ஒரு வேடதாரி என்பது அம்பலமானபோது கிளர்ச்சியாளர்கள் மனமுடைந்தனர். அதன் பின்னர் பிரித்தானியர் கண்டியப் பிரதானிகளை நம்பவில்லை.**

கண்டி நகருக்கும் கொழும்புக்கும் வெகு தொலைவில் ஒதுக்குபுறமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த வெல்லஸ்ஸ பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான அதிருப்தியும் மன்னராட்சியை மீண்டும் உருவாக்கும் அவாவும் குவிமையம் கொண்டது. நன்கு தமிழில் பேசத்தெரிந்த வில்பாவே முதியான்சே என்ற மாஜி பௌத்த பிக்கு தன்னை நாடுகடத்தப்பட்ட ஶ்ரீ விக்ரம ராஜசிங்கனின் உறவினன் என்றும் தான் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்தவன் என்றும் தனது பெயர் துரைசாமி என்றும் கூறிக்கொண்டு போலி ராஜாவாக மாறினான். அதனை நம்பிய மக்கள் தமக்கொரு மன்னன் கிடைத்துவிட்டான் என குதூகலித்தனர், அவன் பின்னால் ஆங்கிலேயரை விரட்டியடிக்க அணிதிரண்டனர். 1817 செப்டம்பர் மாதம் கிளர்ச்சி வெடித்தது. போக்குவரத்து வசதி குறைவாக இருந்த அந்த காலத்தில் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் பிரித்தானியர் தடுமாறினார். கிராமங்களுக்கு தீவைத்து கொளுத்தினர். கண்ட இடத்தில் கிளச்சியாளர்களையும் அதன் ஆதரவாளர்களையும் சுட்டுக் கொன்றனர். இதனால் மக்களின் ஆத்திரம் மேலும் அதிகரித்தது. அப்போது ஊவா பகுதிக்கு பொறுப்பான கண்டியப் பிரதானியாக இருந்தவர் கெப்பெட்டிபொல திசாவ, கிளர்ச்சியை அடக்குவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் துப்பாக்கி படை சகிதம் அவரை அங்கு அனுப்பியது. அங்கு மக்கள் எழுச்சியால் மனம்மாறிய கெப்பெட்டிபொல திசாவ அப்பாவித்தனமாக தனக்கு தரப்பட்ட படையை, துப்பாக்கி சகிதம் திருப்பி அனுப்பிவிட்டு ‘துரைசாமியுடன்’ சேர்ந்து கிளர்ச்சியில் இணைந்து அதற்கு தலைமை கொடுத்தார். இது ஒரு திருப்புமுனையாக அமைந்தது கெப்பெட்டிபொல திசாவ கிளர்ச்சியில் இணைந்ததை அறிந்த பல பகுதிகளையும் சேர்ந்த பிரதானிகள் கிளர்ச்சியில் தாமும் இணைந்தனர்.

கிளர்ச்சியாளர்கள் மாத்தளையைக் கைப்பற்றி கண்டிவரை முன்னேறினர். அப்போது கெப்பிட்டிபொல நோய்வாய்ப்பட்ட நிலையில் ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். அவரது தலை துண்டிக்கப்பட்டது. அத்தருணத்தில் கிளர்ச்சி தோல்வியடைந்துவிட்டது. அதற்கு பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் பிரதானமானவை: கிளர்ச்சி திடீர் என வெடித்ததாலும் ஆங்காங்கு பரவியதாலும் அதனை திட்டமிடவோ மத்தியத்துவப்படுத்தவோ முடியாமல் போய்விட்டது.

ஆங்கிலேயருக்கு சார்பான பல கண்டியப் பிரதானிகள் ஆங்கிலேயரோடு ஒத்துழைத்து காட்டிக் கொடுத்தனர். அத்துடன் துரைசாமி ஒரு வேடதாரி என்பது அம்பலமானபோது கிளர்ச்சியாளர்கள் மனமுடைந்தனர். அதன் பின்னர் பிரித்தானியர் கண்டியப் பிரதானிகளை நம்பவில்லை. அநேகமாக அனைத்து கண்டியப் பிரதானிகளும் கொல்லப்பட்டனர். இதுவே ஆங்கிலேயருக்கு எதிராக இலங்கையில் வெடித்த கடைசிக் கிளர்ச்சியாகும். அதன் பின்னர் 1848 இல் மாத்தளை கிளர்ச்சி வெடித்தாலும் அது இத்தனை பாரியதாக இருக்கவில்லை. அதன் தன்மையும் வேறுபட்டது.

இப்பின்னணியில் பார்க்கையில், கண்டி இராச்சியம் 1818 இல் தான் உண்மையில் ஆங்கிலேயர் வசமானது.



கட்டுரை

● நடேசன் இரவீந்திரன்

# இன்னொரு உலக ஒழுக்காறு:

# உலக நாடுகளின் இயக்கச் செல்நெறி

திணை வாழ்வியலும், அதனைத் தகர்த்து மேலெழுந்த சாதிய மோதல்களும் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றைத் தனித்துவமான பாதையில் இயங்கி வர வழிவகுத்தன. அத்தகைய வரலாற்று அனுபவங்களைத் தொகுத்துப் பெறும் திணை அரசியல் பார்வை இன்றைய நெருக்கடிக்களுக்கான தீர்வினை எட்டுவதற்கு ஆற்றுப் படுத்த வல்லதாக அமையும் என்பதை இக்கட்டுரைத் தொடர் எடுத்துக்காட்டும்.

## நுழைபுலம்

இதுவரை இருந்தவாறு தொடர இயலாத நெருக்கடியான கட்டம் இன்று ஏற்பட்டுள்ளது. அனைத்து நாடுகளிலும் மக்களின் வாழ்வாதாரங்கள் தகர்க்கப்படும் வகையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை யேற்றங்கள் பன்மடங்காக அதிகரித்தபடி உள்ளன.

இத்தகைய பொருளாதார நெருக்கடிக்கான அடிப்படைக் காரணி ரஷ்ய - உக்ரேன் போர் என்பதாக ஊடகப் பரப்புரைகள் அமைந்துள்ளன. அமெரிக்காவும், ஐரோப்பாவும், நேட்டோ வாயிலாக ரஷ்யா மீது தாக்குதலை மேற்கொள்வதற்காக உக்ரேனைத் தளமாகப் பயன்படுத்தும் எத்தனங்களில் முனைந்திருந்த சூழலில் தற்காப்பு யுத்தம் ஒன்றை மேற்கொள்ளும் நிர்ப்பந்தம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டிருந்தது எனும் கருத்தொன்றும் மிகச் சிறிய அளவில் ஊடகங்களில் வெளிப்பட்டு இருந்தபோதிலும் 'ரஷ்யா ஆக்கிரமிப்புப் போரைத் தொடுத்துள்ளது' என்ற பிரசார முழக்கமே ஓங்கி ஒலித்தபடி உள்ளது.

இன்றைய உலக நெருக்கடிக்குள் ரஷ்யாவை மட்டுமன்றிச் சீனாவையும் சேர்த்தே குற்றம் சாட்டுவதையும் காண்கிறோம். ரஷ்ய - உக்ரேன் யுத்தத்துக்கு முன்னரே அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய அணி முன்னெடுத்த உலகப் பொருளாதாரச் செயலொழுங்குகள் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்து இருந்த சூழலில், கொரோனாப்பெருந்தொற்று ஏற்பட்டு தனது தலைமேல் பழியை ஏற்றுக்கொண்டது. அந்தக் கொரோனாவை உருவாக்கி பரப்பியது சீனாவே எனும் பிரசாரத்தை அமெரிக்கா மேற்கொண்ட போதிலும், விஞ்ஞானிகளும் உலக சுகாதார அமைப்பினரும் தொடர்ந்து அவ்வகையிலான அறிவீனமான பரப்புரைக்கு இடமளிக்காது முற்றுப்புள்ளி வைத்தனர்.

மீள இயலாத நெருக்கடிக்குள் ஏகாதிபத்தியப் பொருளாதார முன்னெடுப்புத் திணறுகின்ற போது, ரஷ்யாவும் சீனாவும் துரித முன்னேற்றத்தை எட்டுவது சார்ந்த அரசியல் யுத்தம் ஒன்று அரங்கேறி வருகின்றது. மேற்குலகின் வீழ்ச்சியும் கிழக்குலகு வீறுடன் மேலெழுந்து வருவதும் பற்றி ஆய்வுலகம் தனது கணிப்பை ஏற்கனவே வெளியிட்டிருந்தது. அமெரிக்கா, ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான்' என்ற 'ஆண்ட பரம்பரை ஏகாதிபத்திய அணி' தனது அதிகார இழப்பைத் தடுக்க வல்லமை பெற்றுள்ளதா? ஏகாதிபத்திய வரலாற்றியல் விதிப் பிரகாரம் அந்த அணி வீழ்ச்சியடைந்து புதிய சக்தியாக ரஷ்ய - சீன அணி முதல் நிலையை எட்டுமாயின் பின்னராக ஏற்படும் உலக ஒழுங்கில் மாற்றம் ஏதும் சாத்தியமா?

## இலங்கையின் எதிர்காலம்

உலகப் பொருளாதார நெருக்கடியின் வெளிப்பாடு இலங்கையில் மிக அதிகமான அதிர்வினை ஏற்படுத்தி உள்ளது. கிணற்றுத் தவளையாக இருந்துகொண்டு இங்கே தான் மிக

மோசம் எனப் பலர் நம்பும் வகையில், ஊடகப் பரப்புரைகளும் அமைந்துள்ளன. 'உணவுப் பண வீக்கத்தில் இலங்கை மூன்றாம் இடத்துக்கு வந்துள்ளது' என்பது இப்போது வீசப்படுகிற பிரசார வெடி குண்டு!

ஆட்சியாளர்களது தவறான நடைமுறைகளால் பணவீக்கப் பிரச்சினையை இலங்கை முகங்கொண்டது மெய்; அதனைத் துரிதப்படுத்தும் வகையில் உல்லாசப்பயணிகள் வருகையைத் தடுப்பற்கு ஏற்ற பரப்புரைகளை மேற்குலக ஊடகங்கள் மேற்கொண்டன. அப்போது வீண் செலவின் அடையாளமாகத் தாமரைக் கோபுரம் காட்டப்பட்டிருந்தது; சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்த பின்னர் ஒரே நாளில் கோடிக்கணக்கான பணம் உழைக்கும் தங்கக் கோபுரமாக அது காட்டப்படுகிறது.




1970 கள் வரை விடுதலை பெற்ற புதிய தேசங்களில் முதல் வரிசைக்குரிய நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கை 'மிகக் கேவலமாக கையேந்தும் முதல்நிலை நாடு' எனத் தரந்தாழ்ந்து போக நேர்ந்தது எதனால்? முப்பது வருட உள்நாட்டு யுத்தத்தின் போது பெறப்பட்ட கடன்களே மிக அதிக அளவான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன எனப் பேசப்பட்டு வருகிற சூழலிலும் இனங்களிடையே நல்லிணக்கம் வளர இயலாதிருப்பது ஏன்?

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையின் ஒரு ரூபாய் இந்தியாவின் இரண்டு ரூபாய்களுக்கு சமனாக இருந்த நிலை மாறி இன்று எமது நான்கரை ரூபாய்களுக்கு இந்தியாவின் ஒரு ரூபாய் சமமாகி உள்ளது. அப்போது கல்வி, மருத்துவம், சுகாதாரம், உட்கட்டமைப்பு எனப் பல துறை களிலும் இந்தியாவை விடவும் இலங்கை மேலான நிலையில் இருந்தது. மிக ஏழ்மை மிக்க நாடு என இலங்கை வேகமாகச் சரிந்துகொண்டிருக்கும் போது உலகின் விருத்தி பெற்ற பொருளாதார நாடு என்று இந்தியா முன்னேறிவருகிறது.

தனியே இலங்கையின் சொந்தத் தவறுகள் தான் வீழ்ச்சிக்குக் காரணமா? எம்மவர்களது தவறுகளுக்குக் காரணியாக அமைந்து எமது வீழ்ச்சிக்கு வெளியே இருந்து தூண்டுதல் வழங்கும் சக்தி ஏதும் இல்லையா? 'சீனக் கடன் பொறிக்குள் சிக்கிதவிக்க நேர்ந்தமையே இலங்கை நெருக்கடிக்குக் காரணம்' எனக் கூறி வந்த ஊடகங்கள் இப்போது 'கடன் வழங்கி உதவும் நாடாக சீனாவை முந்தும் அளவில் இந்தியா அதிகளவு கடனைத் தந்து காப்பாற்றி உள்ளது' எனக் கூறுவதன் மர்மம் என்ன? இலங்கைக்கு சீனாவை விடவும் ஐரோப்பா, அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியம் என்பனவே (அவற்றில் இறைமையை ஈடு வைக்கும் பணமுறிகளும் அடங்கும் வகையில்) வழங்கியுள்ளன என்ற உண்மையும் இதே ஊடகங்களில் வெளிப்படாமல் இல்லை.

## மூன்றாம் உலக யுத்தம்

முப்பது வருடங்கள் நீடித்த உள்நாட்டு யுத்தம் ஆளுமையுடன் திகழ்ந்த இலங்கையைச் சிதைத்திருந்தது. இந்தியாவின் அருகே இருந்த சின்னஞ் சிறிய தீவான இலங்கை ,இந்தியாவை விடவும் வளமும் ஆளுமையும் பெற்று விளங்க இயலுமானது எப்படி?

பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியாவை ஒட்டச் சுரண்டிய அளவுக்கு இலங்கையில் இருந்து பெரிய ஆதாயங்களைப் பெற்றதில்லை. இந்தியாவைக் கட்டுக்குள் வைத்து ஆள, ஏற்ற பின் தளமாக இலங்கை பயன்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் விஞ்ஞான - தொழில் நுட்பக் கல்வி - இந்தியாவில் வழங்கத்தடை இருந்த போது இலங்கையில் அனுமதிக்கப்பட்டது; 'மானிப்பாய் ஆங்கில - தமிழ்' அகராதி உருவாக காரண - காரணியாக, தமிழில் உடற்கூற்றியல், பௌதிக, இரசாயன நூல்கள் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு வெளிவந்தன.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியபோது இலங்கையும் விடுதலை பெற்றது. பிரித்தானிய ஏகாதிபத்தியம் அதன் பின்னரும் நவகாலனித்துவப் பிடிக்குள் இந்தியாவைக் கட்டுப்படுத்த ஏற்ற வகையில் இலங்கையில் விருத்திபெற்ற உட்கட்டமைப்பை உருவாக்கி இருந்தது. 1960 களில் கொழும்பைப் போல விருத்தி பெற்று வளரும் ஆர்வத்தில், சிங்கப்பூர் இங்கு வந்து கற்றுச் சென்று, தன்னைக் கட்டமைத்துக் கொண்டது. இலங்கையின் இந்த ஆளுமை சுதந்திர இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருந்த போதிலும் 1970

கள் வரை அணிசேராக்கொள்கையை இலங்கை உறுதியாகப் பின்பற்றித் தற்காத்துக்கொள்ள இயலுமாயிற்று. 1980 களில் திறந்த பொருளாதாரக் கொள்கை அனுமதிக்கப்பட்டு அமெரிக்கா கால்பதிக்க வாய்ப்பு வளர்ந்தபோது இலங்கையைக் கையாளும் இராஜதந்திரத்துக்குப் புதிய வடிவத்தை இந்தியா உருவாக்கிக் கொண்டது. இனப்பிரச்சினை யுத்தமான போது, போராட்டசக்திக்கான பின்தளமாக இயங்க இடமளித்த இந்தியாவின் பூரண கட்டுப்பாட்டுக்குள் அடங்க இலங்கை இணங்கிய நிலையில் யுத்தத்தை முடித்து வைக்கவும் உதவியது.

எழுபதாம் ஆண்டுகள் வரை இடதுசாரித்துவப் போராட்டங்கள் வாயிலாகப் பொதுவுடைமை அமைப்பை வென்றெடுக்கும் நாடாக வளரும் வாய்ப்புடன் இருந்த இலங்கையைத் தொடர்ந்தும் சுரண்டும் மேலாதிக்கத் தரப்புக்கானதாகப் பேண வேண்டுமாயின் அமெரிக்கப் பிடியை இங்கே ஏற்படுத்துவது அவசியமாயிருந்தது; அதனை எண்பதாம் ஆண்டுகளில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா மேற்கொண்ட போது இந்தியா (முதலாளித்துவச்) சோசலிசக் அக்கறையுடன் சோவியத் யூனியனின் நட்பு நாடாகவும், அமெரிக்க எதிர்ப்புணர்வுடையதாகவும் இருந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் நேரடிக் காலனித்துவ ஒடுக்குமுறை சாத்தியப்படவில்லை; சுதந்திரம் பெற்ற நாடுகளாக முன்னாள் காலனித்துவப் பிடிக்குள் இருந்த தேசங்கள் 'சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைப்' பின்பற்ற இயலுமாயிற்று. முதலாம் உலகயுத்த முடிவில் உருவான சோவியத் யூனியனுடன் இணைந்து சோசலிச முகாம் தோற்றம்பெற ஏற்றதாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மக்கள் சீனம், வட கொரியா, வியட்னாம், கியூபா போன்றன கொம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆளுகைக்குள் வந்தன. தொடர்ந்தும் முதலாளித்துவத்தைப் பின்பற்றிய ஏனைய விடுதலை பெற்ற நாடுகள் ஏகாதிபத்திய - சோசலிச முகாம் எனும், இரண்டையும் சாராத அணிசேராக் கொள்கையைப் பின்பற்றிக் கலப்புப் பொருளாதாரப் பிரயோகத்தை முன்னெடுத்தன. 'முதலாளித்துவச் சோசலிசமான' அந்தக் கலப்புப் பொருளாதாரப் பிரயோகம் 1991 இல் சோவியத் யூனியனின் தகர்வுடன் காணாமலாகி, அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியத்துக்கு நாடுகளைத் திறந்துவிடும் உலகமயமாதல் யுகம் மேலெழுந்தது.
மூன்று தசாப்தங்களாக நீடிக்கும் அமெரிக்கத் தலைமையிலான ஒற்றை மைய உலக ஒழுங்கு நீடிக்குமா? பனிப்போரில் இருமுனைப்பட்டிருந்த சோவியத் - அமெரிக்க மோதலில் அணிசேராக் கொள்கையை முன்னிறுத்தியபடியே சோவியத் சார்புடன் இருந்ததைப் போல இன்றைய இந்தியா இல்லை. இன்று அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்திய அணியுடன் கூடுதல் ஒட்டுறவை இந்தியா கொண்டுள்ளது.

அதேவேளை முந்திய நடைமுறைகளின் நீட்சியாக ரஷ்ய - சீன அணியுடனும் பகை பாராட்டாத நடைமுறையை இந்தியா முன்னெடுக்கிறது. ரஷ்ய - உக்ரேன் போரை வலிந்து உருவாக்கிய அமெரிக்கா, கிழக்கில் சீனா வன்முறை வாயிலாகத் 'தனது இறைமைக்கு உட்பட்ட பிரிக்கவியலாத பிரதேசம்' எனக் கூறுகிற தைவானை இணைக்கும் யுத்தத்தை ஏற்படுத்துவதற்கும் பல வகை முயற்சிகளை முன்னெடுக்கிறது. 'தைவான் மீது சீனா தாக்குதல் தொடுக்கும் பட்சத்தில் ரஷ்ய - உக்ரேன் போரில் வெளியே இருந்து உதவுவது போலவன்றி நேரடியாக தைவானை ஆதரித்து அமெரிக்கா போர் புரியும்' என ஜனாதிபதி பைடன் சூளுரைத்துள்ளார்.

ரஷ்யாவும், சீனாவுமே யுத்த சன்னதத்தோடு இருப்பதான தோற்றத்தைக்காட்டி மூன்றாம் உலகயுத்தம் ஒன்றை அமெரிக்கா வலிந்து உருவாக்க முனைவது ஏன்? முதலிரு உலக யுத்தங்களிலும் ஆளுகை செலுத்திய 'நட்பு நாடுகளான' பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா என்பற்றிடம் இருந்து தமக்கான காலனித்துவ நாடுகளைக் கைப்பற்ற ஏற்ற வகையில் உலகை மறுபங்கீடு செய்யும் தேவை புதிய சக்திகளாக வளர்ந்த ஜெர்மன், இத்தாலி, ஜப்பான் கூட்டணிக்கு இருந்தது.

இன்று நேரடிக் காலனித்துவம் இல்லாத சூழலில் இறைமை மிக்க, சுதந்திர நாடுகளுடன் 'புதிய பொருளாதார சக்திகளாக' வளரும் ரஷ்யாவும், சீனாவும் வணிகத்தை மேற்கொள்ளும் போது, அது ஆளும் மேலாதிக்க மேற்குலகுடன் கொள்ளும் வர்த்தக உறவைவிட ஆதாயம்மிக்கதாக வறிய நாடுகளுக்கு அமைகிறது; கடன்பொறி போன்ற பொய்யான பரப்புரைகளால் தடுக்க இயலாத நிலையில் சீனாவையும் வலிந்து போரிட வைத்துப் பலவீனப்படுத்த இயலும் என அமெரிக்கா திட்டமிடுகிறது.

## புதிய உலக ஒழுங்கு

மூன்றாம் உலகப் போர் ஒன்று ஏற்படாமல் தவிர்க்கப்பட்டாலும் இரு அணிகள் இடையே நிகழும் சமநிலை மாற்றத்துக்கான அரசியல் போர் தனக்குரிய ஒரு மாற்றத்தை எட்டியாக வேண்டும். இரண்டாம் நிலைக்குக் கீழிறங்க விருப்பமற்று அமெரிக்கா முன்னெடுக்கும் எத்தகைய முயற்சிகளையும்

1970 கள் வரை விடுதலை பெற்ற புதிய தேசங்களில் முதல் வரிசைக்குரிய நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கை ‘மிகக் கேவலமாக கையேந்தும் முதல்நிலை நாடு’ எனத் தரந்தாழ்ந்து போக நேர்ந்தது எதனால்? முப்பது வருட உள்நாட்டு யுத்தத்தின் போது பெறப்பட்ட கடன்களே மிக அதிக அளவான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன எனப் பேசப்பட்டு வருகிற சூழலிலும் இனங்களிடையே நல்லிணக்கம் வளர இயலாதிருப்பது ஏன்?

முறிபடித்தபடி சீனா தனது பொருளாதார நிலை துரிதகதியில் வளரும் வகையில் ‘சந்தை சோசலிச’ பொருளாதாரக் கொள்கையுடன் முன்னேறி வருகிறது. ரஷ்யாவுக்கான கனிமவள வாய்ப்புகளுடன் அதற்கேயுரிய அரசியல் படைக்கல ஆற்றல்களும் அதன் துரித வளர்ச்சியை உத்தரவாதப்படுத்திய படி உள்ளன.

இந்தியா இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பிரயோகித்து வளர்த்துவந்த மேலாதிக்கநிலை, அரசியல் செயலொழுங்குடன் இயங்குவதனால் ‘வேற்றுமையில் ஒற்றுமை’ பேணும் பண்பில் மோதுகின்ற இரு தரப்பாருடனும் ஊடாடிய வண்ணம் தனது வளர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. தனது பக்கத்தில் உறுதியாக இருப்புக்கொள்ள அமெரிக்கா மென்மையான அழுத்தங்களைக் கொடுத்த போதிலும் ரஷ்யாவுடன் மட்டுமன்றிச் சீனாவுடனும் ஏற்புடைய உறவுகளை இந்தியா பேணிவருகிறது.

இருப்பினும் உலக யுத்தமாக வெடித்தால் ஏதோவொரு தரப்பை இந்தியா சாரவேண்டும் அல்லவா? நட்பு நாடுகளின் அணியில் அமெரிக்கா இருந்தஅதேவேளைஇரண்டுஉலகயுத்தங்களிலும் தனது சக்தியை இழக்கும் வகையில் அது ஈடுபடவில்லை. ஜப்பான் வலிந்து தாக்கியதைச் சாட்டாக்கிக் கொண்டு அதன் மீது வீசப்பட்ட அணுகுண்டை பரீட்சார்த்தமாக வீசியன் மூலம், முதல் நிலைக்கு அமெரிக்கா வளர இயலுமாக இருந்தது. இதற்கு ஏனைய நாடுகள் யுத்தத்தில் தம்மைப் பல வீனப்படுத்தியமையும் வாய்ப்பாக அமைந்தது.

இன்றைய நிலையில் ஆளும் ஏகாதிபத்திய அணியுடன் சார்ந்திருக்கும் அரசியல் தேவை இந்தியாவுக்கு உள்ள போதிலும் ரஷ்ய - சீன அணியை அனுசரித்துப்பெறும் வாய்ப்பையும் பயன்படுத்திக்கொள்கிறது. சந்தைச் சோசலிசம் என்ற புதிய கோட்பாட்டு நிலையுடன் எதிர்காலத்தில் சீன பொதுவுடைமை நோக்கி உலகை மாற்றிவிடும் அச்சுறுத்தல் இருக்கும் காரணத்தால் இந்தியாவின் இந்தச் ‘சந்தர்ப்பவாத’ நடைமுறை பற்றி அலட்டிக்கொள்ளாமல், அதனை ஆதரித்து வளர இடங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆளும் ஏகாதிபத்திய அணிக்கு உள்ளது.

உலகச் சமநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களின் வாயிலாக அமெரிக்கத் தலைமையிலான மேற்குல ஏகாதிபத்தியம் இதுவரை பெற்றிருந்த ஒற்றை மைய மேலாதிக்கம் அற்றுப் போவதற்கு வாய்ப்புள்ளது. எழுச்சிபெறும் இந்தியா, சீனா, ரஷ்யா எனும் கிழக்குலகு மீண்டும் வேறொரு ஒற்றை மைய ஏகாதிபத்திய உலக ஒழுங்கை ஏற்படுத்தவும் வாய்ப்புண்டு. ஏற்கனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முதல் நிலைப் பொருளாதார ஆதிக்கம், இராணுவ வல்லமை, விஞ்ஞான - தொழில் நுட்ப மேலாண்மை என்பவற்றுடன் 'கார்ப்பிரேட்' மூலதனக் கட்டுப்பாட்டில் இயக்கிய ஊடகப் பரப்புரை வாய்ப்புகளே அமெரிக்க மேலாதிக்கத்தின் ஒற்றை மைய ஆளுகையைச் சாத்தியப்படுத்தியது. அதன்போதே பிராந்திய நாடுகளது அமைப்புக்களும் BRICS போன்ற பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா என்பன இணைந்து உருவாக்கிய கூட்டுறவுகளும் ஒற்றை மையத்தைக் கேள்விக்கு உட்படுத்தும் ஆளுமையுடன் வளர்ந்து வந்தன.


கிழக்குலக நாடுகள் (குறிப்பாக இந்தியாவும் சீனாவும்) வர்க்கப் பிளவுறாமல் முழுச் சமூக சக்திகளாக (திணைகளாக) மேலாதிக்கம் பெற்றுச் சாதி வடிவில் இயங்கி வந்தவை. வர்க்கங்களில் ஆதிக்க வர்க்கத்தை அழித்தொழித்து புதிய சமூக அமைப்

பாக்கம் ஏற்படுவதைப் போலன்றி, மேலாதிக்கத் திணையின் அதிகாரம் கைமாற்றப்படும்போது அதனை அழித்தொழித்துப் புதிய அமைப்பாக்கம் ஏற்படுவதில்லை - வீழ்த்தப்படும் மேலாதிக்கத் திணையினுள் முரண்படும் தரப்பையும் ஐக்கியப்படுத்தி அதிகாரம் பெறும் புதிய திணை மேலாதிக்கம், பழையதை வென்றடக்கித் தனக்குக் கீழ்ப்பட்டதாக வாழ அனுமதிக்கும். இந்த மேலாதிக்கத் திணை அரசியல் அனுபவத்துடன் இந்திய அரசு இயங்குவதனாலேயே இரு அணிகளுடனான 'வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணும்' அணுகுமுறையைக் கையாள இயலுமாக உள்ளது.

இலங்கையில் ஒழுங்கான நிர்வாகச் செயற்பாடு சாத்தியமில்லை என மக்களுக்கு உணர்த்தும் காரியங்களை இந்தியா இன்று கனகச்சிதமாக முன்னெடுத்து வருகிறது. இதன் வாயிலாக எமது இறைமையில் தனக்குரித்தானதாக பங்கெடுத்துக் கொண்டதைப் போல சுதந்திரத்திலும் பகுதிப் பங் கீட்டை இந்தியா கோருகின்றது.

## விடுதலைத் திணை அரசியல்

இந்தியாவில் மேலாதிக்கத் திணை அரசியல் செல்நெறியே உள்ளது. இலங்கையுடன் முரண்பாட்டை கையாள்வதில் தனக்கான மேலாண்மையை முன்னிறுத்தியே அது இயங்குகிறது. முப்பது வருட யுத்தத்தின் பெறுபேறைத் தனக்குச் சாதகமாக்கி இரு ஒப்பந்தங்களை (1987, 2010) செய்து கொண்டது. இலங்கை தனக்கான இறைமையின் பெரும்பகுதியை அந்த ஒப்பந்தங்கள் வாயிலாகத் தாரை வார்த்துவிட்டதை மறந்து, பூரண இறைமையுள்ள நாடாக எண்ணி இயங்க முற்படுகிறபோது பல்வேறு வழிமுறைகள் மூலம் தலையீடு செய்து வழிக்குக்கொண்டு வரும் கைங்கரியங்களை இந்தியா மேற்கொள்கிறது; இலங்கையில் ஒழுங்கான நிர்வாகச் செயற்பாடு சாத்தியமில்லை என மக்களுக்கு உணர்த்தும் காரியங்களை இந்தியா இன்று கனகச்சிதமாக முன்னெடுத்து வருகிறது. இதன் வாயிலாக எமது இறைமையில் தனக்குரித்தானதாக பங்கெடுத்துக் கொண்டதைப் போல சுதந்திரத்திலும் பகுதிப் பங்கீட்டை இந்தியா கோருகின்றது.



இதற்கு மாறாக மக்கள் சீனம், வளர்ந்த நாடு, பெரிய நாடு, பின்தங்கிய நாடு, சிறிய நாடு என்ற வேறுபாடு காட்டாமல் அனைத்துடனும் சமத்துவமான உறவுக்குரிய பஞ்சசீலக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறது. தேசிய விடுதலை வாயிலாகச் சோசலிசத்தைக் கட்டமைக்கும் மா ஓ சேதுங் அவர்களின் சிந்தனையை இன்றைய விருத்தியடைந்த சோசலிச முறைக்கு பிரயோகிக்கும் சீனப் பிரயோகம், முன்னதாகப் பேசப்பட்டு வந்த மார்க்சியத்துக்குப் புதியது. பாட்டாளி வர்க்க சோசலிச நிர்மாணத்தில் இருந்து விடுதலைத் தேசிய சோசலிச விருத்தி வேறுபட்டுள்ளதை நடைமுறை மூலம் புரிந்து கொண்டு சந்தைச் சோசலிசம் எனும் கோட்பாட்டை சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி முன்னிறுத்துகிறது.

தேசம் என்ற முழுச் சமூக சக்தி (திணை) ஏற்படுத்தும் சமூக மாற்றம் ஐரோப்பிய வர்க்க சமூகத்துக்கு உரியதினின்றும் வேறுபட்டதாகும். இவ்வகைக்குரியதான திணை அரசியல் செல்நெறி வடிவத்தை சாதியம் கட்டமைக்கப்பட்ட வட இந்தியா வெளிப்படுத்தியிருக்கவில்லை. திணைக்கோட் பாட்டை வகுத்து வரலாற்றுத் தொடக்கத்தை ஏற்படுத்திய தமிழகத்திலும் பின்னர் இயங்கிய சாதி வாழ்முறையில் திணை அரசியல் எவ்வகையில் இயங்கி வந்துள்ளது எனும் புரிதல் இல்லை.

திணை அரசியல் வடிவில் விளக்கம் பெறப்படாத போதும், தமிழக வரலாறு மேலாதிக்கத் திணைகளிடையேயான மோதல்கள் வாயிலாக இயக்கம் பெற்று வந்த சமூக மாற்றச் செல்நெறியைத் துலக்க முற எடுத்துக்காட்டி வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட ஒக்டோபர் 21 (1966) எழுச்சி மார்க்கம், விடுதலைத் திணை அரசியல் மார்க்கத்தை வடிவப்படுத்த உதவியுள்ளது.

தொடரும்.

# இலங்கையில் தமிழர் பற்றிய பிராமிக் கல்வெட்டுக்கள்

## ஓர் அறிமுகம்



திருகோணமலை மாவட்டத்தின் கோமரன்கடவல பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு

Image source - www.bbc.com



# கட்டுரை

● என். கே. எஸ். திருச்செல்வம்

இலங்கைத் தமிழர்களுக்கு 2500 ஆண்டுகளுக்குக் குறையாத வரலாறு மற்றும் வழிபாட்டு பாரம்பரியம் உள்ளது. பண்டைய இலங்கைத் தமிழர் பற்றி இதுவரை பலரும் அறிந்திராத, இதுவரை வெளிச்சத்துக்கு வராத, அரிய உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் எனும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டதாக இவ்வாய்வு அமையவுள்ளது. ஆய்வு செய்யப்பட்டு கண்டறிந்த உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தில் அவை பற்றிய விபரங்கள் அடங்கிய ஒரு படைப்பாக "இலங்கையில் பிராமி மற்றும் சிங்கள கல்வெட்டுக்களில் தமிழர் எனும் இந்த கட்டுரை தொடர்ச்சியாக வெளி வருகிறது.

## இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழும் தமிழரும்

இலங்கையில் கல்மேல் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இவற்றில் முதலாவதாக எழுதப்பட்டவை பிராமிக் கல்வெட்டுக்கள் என அழைக்கப்படுகின்றன. இவை பொ. ஆ. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் பொ. ஆ. 5ஆம் நூற்றாண்டு வரை பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றை கல்வெட்டு ஆய்வாளர்கள் முற்காலப் பிராமி, பிற்கால பிராமி என இரு வகையாக பிரித்துள்ளனர்.

இலங்கை முழுவதிலும் சுமார் 2500 பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் கல்வெட்டுக்கள் தெற்காசியாவில் இலங்கையைத் தவிர வேறெந்த பிரதேசங்களிலும் இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவை இங்குள்ள இயற்கையான கற்குகைகளிலும், கற்பாறைகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1500 கல்வெட்டுக்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 1000 கல்வெட்டுக்கள் இதுவரை பதிவு செய்யப்படவில்லை. இவற்றில் தமிழர் மற்றும் இந்து சமயம் தொடர்பான கல்வெட்டுகள் பல உள்ளதாகத் தெரிய வருகிறது. இலங்கையில் இதுவரை பதிவு செய்யப்பட்ட 1500 கல்வெட்டுக்களில் தமிழர் பற்றிய 5 கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மேலும் இந்து தெய்வங்கள் சம்பந்தமான 300 கல்வெட்டுக்களும் உள்ளன. இவற்றைத்தவிர முனிவர்கள் அல்லது சித்தர்களின் பெயர்கள் பொறிக் கப்பட்ட சுமார் 250 பிராமிக் கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. தமிழர் என்ற பெயரைத் தவிர இலங்கையில் வாழும் ஏனைய இனங்களின் பெயர் பொறிக்கப்பட்ட எந்த ஒரு பிராமிக் கல்வெட்டேனும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "தமெத" (தமிழ்) எனப் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள்

இலங்கையில் கிடைக்கப் பெற்ற பிராமிக் கல்வெட்டுக்களில் 5 கல்வெட்டுக்களில் "தமெத" எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இது தமிழ் என்பதன் பிராகிருத வடிவமாகும்.

இவற்றில் வட மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்தில் 2 கல்வெட்டுக்களும், கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை மாவட்டத்தில் 1 கல்வெட்டும், கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறை மாவட்டத்தில் 1 கல்வெட்டும், வடமத்திய மாகாணத்தில் உள்ள அனுராதபுரத்தில் 1 கல்வெட்டும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டு சான்றுகள் மூலம் 2000 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கு, வடமத்திய பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது உறுதியாகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழர் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கும், தமிழ் மொழி பேசப்பட்டுள்ளது என்பதற்கும் இக்கல்வெட்டுக்கள் முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன. இது பற்றி இலங்கையின் மூத்த வரலாற்று பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்கள் சில முக்கிய குறிப்புக்களை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவரின் குறிப்பு பின்வருமாறு.

"கி. மு. மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையிலே தமிழ் ஒரு பேச்சு மொழியாக வழங்கியமைக்கு ஆதாரமாய் அமைகின்ற பிராமிச் சாசனங்கள் தமிழர் பற்றியும் தமிழர் சமுதாயப் பிரிவுகளைப் பற்றியும் குறிப் பிடுகின்றன. அவற்றிலே பல இனங்களைச் சேர்ந்த சமூகங்களின் பெயர்களும், சமுதாயப் பிரிவுகளின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. தமிழர், நாகர், முருண்டி, காபோஜி என்னும் இனப் பெயர்கள் அவற் றில் உண்டு. பரதர், பதர், பிராமணர் என்போர் பற்றியும் அவற்றிலே குறிப்புகள் உண்டு. இரண்டாயிரத்துக்கும் மேலான பிராமிச் சாசனங்கள் காணப்படுகின்ற பொழுதிலும் அவற்றிலே சிங்களர் பற்றிய குறிப் பெதுவும் காணப்படவில்லை. "சிங்களர்" எனும் இனம் பிராமிச் சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் உருவாகியிருக்க வில்லை என்று கருத வேண்டியுள்ளது. சிங்க உருவம் பொறித்த மிகப் புராதனமான நாணயமும் நாகராசன் ஒருவனின் பெயரையே குறிப்பிடுகிறது." என

பேராசிரியர் எஸ். பத்மநாதன் தனது இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தமி ழரின் குடியிருப்புகளும், சமுதாயமும் பிராமிச் சாச னங்களின் காலம் முதலாக உற்பத்தியானவை என்று கொள்ள முடிகிறது" எனக் கூறியுள்ளார்.

தமிழர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள இக்கல்வெட் டுக்கள் பற்றி பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு கூறியுள்ளார். "இலங்கையில் வாழ்ந்த தமிழ் இனக் குழு பிராமிக் கல்வெட்டுக்களில் தமெட என்ற பெய ரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டுக்கள் அநுராதபுரத்தில் மட்டுமன்றி, அப்பால் இன்று தமி ழர் வாழும் இடங்களாகிய வவுனியா மாவட்டம் (பெரிய புளியங்குளம்), மட்டக்களப்பு மாவட்டம் (ஸேருவில)மற்றும் அம்பாறை மாவட்டம் (குடிவில்) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன."


"இலங்கையில் தமிழ் மக்கள் பற்றிக் கிடைக்கும் மிகப் பழைய எழுத்து மூலாதாரங்கள் பொ. ஆ. மு. இரண் டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்க ளாம். எனினும் அதற்கு முன் அவர்கள் இலங்கையில் இருந்திருக்கக்கூடும் என்று கொள்ளத் தொல்லியல் சான்றுகள் உள்ளன. அத்துடன் பொ. ஆ. மு. மூன் றாம் நூற்றாண்டுக்கு முன்னரே, தமிழ் பேசுவோர் பர வலாகத் தமிழ் நாட்டிலும் மற்றும் அயல் இடங்களி லும் இருந்தனர் என்று கொள்ள இடமுண்டு எனக் கொண்டால் இலங்கைக்கும் அதே காலமளவில் அவர்கள் வந்திருக்கலாம் என்று கூறலாம். தமிழ் பேசு வோர் மட்டுமன்றி வேறு திராவிட மொழிகளைப் பேசுவோரும் அங்கு இருந்திருக்கலாம்". இவ்வாறு பேராசிரியர் இந்திர பாலா தனது "இலங்கைத் தமி ழர்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக் கள் பற்றி பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் சில முக் கிய விடயங்களை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். அவரின் குறிப்பு பின்வருமாறு, "தென்னாசியாவில் பௌத்த மதம் பரவிய நாடுகளில் எல்லாம் அம்மத மொழியான பிராகிருதம் கல்வெட்டு மொழியாக இருந்தபோது இலங்கையில் தான் பிராகிருத மொழி யில் தமிழ் மொழியின் செல்வாக்கு கூடுதலாகக் காணப்படுகிறது. இதில் அவதானிக்கக் கூடிய சிறப் பம்சம் ஆரம்பகாலக் கல்வெட்டுக்களில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட பிராகிதம் மற்றும் தமிழ் மொழிக்குரிய பெயர்கள், சொற்கள் காலப்போக்கில் தமிழ் மயப்படுத்தப்பட்ட நிலையில் எழுதப்பட்டி ருப்பதாகும்."

"இந்த மாற்றத்திற்கு இலங்கையில் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்த மக்கள் புதிதாக பௌத்த மதத்துடன் அறிமுகமான பிராகிருத மொழியை அம் மொழிக்குரிய வடபிராமி எழுத்தில் எழுதிய போதும், காலப்போக்கில் தமக்குப் பரிச்சயமான தமிழ் பிராமி யிலும் பிராகிருத மொழியை எழுத முற்பட்டமை காரணம் எனலாம்". இவ்வாறு பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றி பேராசிரியர் பரமு புஷ்பரட்னம் தனது இன்னுமோர் நூலில் கூறி யுள்ள சில முக்கிய விடயங்கள் பின்வருமாறு: "இக் கல்வெட்டுக்கள் பௌத்த சங்கத்திற்கு அக்கால சமூ கத்தின் பல தரப்பட்ட மக்கள் அளித்த நிலம், குளம், கால்வாய், குகை, கற்படுக்கை, பணம், உணவு போன்ற தானங்கள் பற்றிக் கூறுகின்றன. இவற்றில் பலவற்றில் தானமளித்தவர் பெயரோடு அவரின் வம் சம், பட்டம், பதவி, தொழில், மதம், இனம் போன்ற தரவுகளும், அவர்கள் வாழ்ந்த இடம், ஊர், நாடு போன்ற செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இதனால் இக்கல் வெட்டுகள் இலங்கையின் குறிப்பிட்ட காலப்பகுதிக் குரிய மொழி, எழுத்து, மதம், பண்பாடு, சமூகம், இடப்பெயர் என்பவற்றை அறிந்துக்கொள்ளவும், சம காலப் பாளி இலக்கியங்கள் கூறும் வர லாற்றின் நம்ப கத் தன்மையை மதிப்பிடவும் உதவுகின்றன."

(தொடரும்)



**Brahmi script**

**Image source - www.newworldencyclopedia.org**

# இலங்கையின் பாரம்பரிய விவசாய வரலாறு

இக்கட்டுரைத்தொடர் இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக – பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால் உண்டாகக்கூடிய விளைவுகள், இலங்கையில் பசுமைப்புரட்சிக்காக முன்வைக்கப்படவேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் விபரிக்கின்றது.




**கட்டுரை**

● கந்தையா பகீரதன்


இலங்கையின் விவசாயப் பாரம்பரியம் ஆரியர் வருகைக்கு முன்னர் இருந்தே ஆரம்பிக்கிறது. இதற்குச் சான்றாக இலங்கையில் சுற்றுச்சூழல் தொல்லியல் துறையில் முன்னோடியான டாக்டர். ரத்னசிறி பிரேமதிலக மேற்கொண்ட சமீபத்திய ஆராய்ச்சி, நமது நீண்டகால நம்பிக்கைகளில் பலவற்றை கேள்விக்குள்ளாக்கியுள்ளது. இவ்வளவு காலமும் நாம் நம்பிக்கொண்டிருப்பது மகா வம்சமும், தீப வம்சமும் சொல்லுகின்ற ஐந்நூறு ஆண்டுகால வரலாற்றை மட்டுமே. ஆனால் உண்மையில் இந்த நாட்டின் கற்கால மனிதர்கள், பழங்குடியின வேடர்களின் மூதாதையர்கள் தான் நமது நாட்டின் ஆதிக்குடிகள் என்றும், அவர்கள் தான் முதல் விவசாயி களாக இருக்கலாம் என்றும் சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகிறது. அதற்குச் சான்றாக கிட்டத்தட்ட ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த, இலங்கைக்கே உரித்தான நெல்லின மாதிரிகளை அவிசாவளைப் பிரதேசத்தில் இருந்து கண்டறிந்துள்ளனர். அதுமட்டுமன்றி, இலங்கைக்கே உரித்தான கிட்டத்தட்ட ஆயிரம் வரையிலான நெல்வர்க்கங்கள் இலங்கையில் காணப்படுவதானது, இலங்கையின் பல ஆயிரம் ஆண்டுகால விவசாய வரலாற்றைப் பறைசாற்றி நிற்கிறது. இலங்கையின் விவசாயப் பாரம்பரியத்தை ஆழமாக உற்றுநோக்கினால், கி.மு 800 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இருந்தே மனிதன் சிறு சிறு குழுக்களாக நதிக்கரைகளை அண்டி வாழ ஆரம்பித்ததில் இருந்து, இலங்கையில் நெல் சாகுபடி சிறிதளவில் இருந்ததாகவும் பின்னர் கி.மு 390 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பெரியளவில் நெற்சாகுபடி செய்வதற்காக நீர்ப்பாசன கட்டமைப்புகள், நீர்த்தேக்கங்கள், ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கால்வாய்கள் அமைக்கப்பட்டதாகவும் வரலாற்று ஆவணச் சான்றுகள் கூறுகின்றன. புராதன காலத்தில் இருந்தே இலங்கை, உலகின் கிழக்கு நெற்தானியக் களஞ்சியம் எனப் பெயருடன் பிரபலமடைந்திருந்ததுடன் மற்ற நாடுகளுக்கு 2000 ற்கும் மேற்பட்ட உள்நாட்டு அரிசி ரகங்களையும் வழங்கியது. இலங்கையின் அரிசிச் சாகுபடியானது தூயதாகவும், நல்லதாகவும் கருதப்பட்டது. அரிசி சாகுபடி செயன்முறையும் அதன் தூய இயல்பும் இலங்கையின் பாரம்பரிய அரிசிச் சாகுபடியை நிலையானதாக்கியது. இவ்வாறு நெற் செய்கையோடு ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் விவசாயப் பாரம்பரியம், நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப, சூழலுக்கு இசைவான வகையில், விவசாயத்தோடு இணைந்த வாழ்க்கை முறையினூடாக, உணவுத் தேவையை நிறைவு செய்வதற்கான முறையில் பல் பயிர் செய்கையினூடு தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் நோக்கோடு பரிணமிக்க ஆரம்பித்தது.




துலா, சூத்திரக் கிணறு, பட்டை மற்றும் துலாக் கூடை

Image source - www.facebook.com/Villages culture



**நெல் மற்றும் வைக்கோல் களஞ்சியப்படுத்தல் முறைகள்**


Image source - www.vinavu.com

## நீர்ப்பாசனக் கட்டமைப்பும் இயற்கை விவசாயத்தின் ஆரம்பமும்

ஆரம்பத்தில் இலங்கையின் நதிக்கரை ஓரப் பகுதிகளின் ஆற்றுப் படுக்கைகளை அண்டிய பகுதியிலேயே எமது இயற்கை விவசாயம் ஆரம்பமானது. இலங்கை மக்களின் பிரதான உணவு அரிசிச் சோறு என்பதனால் எமது நாடு அக்காலத்தில் இருந்து நெற் செய்கையிலேயே பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றது. காலத்துக்கு காலம் ஏற்பட்ட காலநிலை மாற்றங்கள் மற்றும் வறட்சியினால் விவசாயத்துக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இதனால், விவசாய மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அக்காலத்து மன்னர் தலைமையில் பல்வேறு குளக்கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கையின் நீர்வள நாகரிகத்தை எடுத்துக் கொள்வோமானால்,அந்தக்கால மன்னர்கள் நெற்செய்கைக்கு முன்னுரிமை அளித்த உண்மையை நன்கு அறிந்து கொள்ளலாம். இதன்போது தரைத்தோற்ற அம்சங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு நில உயர வேறுபாடுகளுக்கேற்ப ஆறுகளும், நதிகளும் மற்றும் குளங்களும் கால்வாய்களினூடு இணைக்கப்பட்டு நிலைபேறான விவசாயத்திற்கான நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் ஏற்படுத்தப்பட்டன. (அட்டவணை 1).

நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் அபரிமிதமான வளர்ச்சியினால், இலங்கை முன்னொரு காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்கியது. புராதன மன்னர்களின் ஆட்சிக் காலத்தின் போது இலங்கையில் இருந்து நட்பு நாடுகள் சிலவற்றுக்கு நெல் ஏற்றுமதி செய்யப்பட்டதாக எமது வரலாற்று இலக்கிய ஆதாரங்களில் கூறப்பட்டிருக்கிறது. அதேசமயம் வட இந்தியாவின் சில பகுதிகளை ஆட்சி செய்த அன்றைய மன்னர்கள், நீர்ப்பாசனக் குளங்களை அங்கு அமைத்துக் கொள்வதற்காக இலங்கையிடமிருந்து தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. நீர்ப்பாசனக் கட்டமைப்புகளுக்கும் நெற்செய்கைக்கும் இவ்வாறு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்ததன் காரணமாகவே இலங்கையில் எக்காலமும் பஞ்சம் தலைவிரித்தாடியதில்லை. பண்டைய காலத்தில் விவசாயத்தை மேம்படுத்த அரசர்கள் “நிலத்தில் விழும் ஒரு துளிநீரையேனும் வீணாக கடலில் செல்ல இடமளியேன்” எனப் பாடுபட்டார்கள். சங்க காலத்தில் பொ.ச.மு. 500 - பொ.ச. 300 விவசாயம் தமிழர்களின் முக்கிய தொழிலாக இருந்தது. இது வாழ்க்கையின் அவசியமானதென்றபடியால், எல்லாத் தொழில்களிலும் முதன்மையானது விவசாயமே என்று கருதப்பட்டது. விவசாயிகள் அல்லது உழவர் சமூக வகைப்பாட்டின் உச்சியில் வைக்கப்பட்டனர். அவர்கள் உணவு தானியங்களைத் தயாரிப்பவர்களாக இருந்ததால் அவர்கள் சுய மரியாதையுடன் வாழ்ந்தார்கள். சங்க காலத்தின் ஆரம்ப கட்டங்களிலேயே விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நீர்ப்பாசனம், உழவு, உரம், சேமிப்பு மற்றும் விநியோகம் ஆகியவற்றின் மேம்பாடுகளுடன் இது படிப்படியாக வளர்ச்சியடைந்தது. பண்டைய தமிழர்கள் பல்வேறு வகையான மண் வகைகள் அவற்றில் பயிரிடக்கூடிய பயிர்கள் மற்றும் பிராந்திய வேறுபாடுகளுக்கு ஏற்ற பல்வேறு நீர்ப்பாசன திட்டங்கள் குறித்து அறிந்திருந்தனர்.



5000- year- old rice husk Phytolith from Sirigampola

Image source - www.sundaytimes.lk

நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் திறம்பட அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட போது ஆண்டு முழுவதும் குள நீர்ப்பாசனத்தினூடு பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல், சிறுதானியங்கள் மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கைகள் தன்னிறைவைக் கண்டன.

இவ்வாறு அனுராதபுர காலத்தில் இருந்து எழுச்சி பெற்று வந்த நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் கி. பி 13 ஆம் நூற்றாண்டில் இருந்து மெது மெதுவாகக் கைவிடப்பட்டு

அழிவை நோக்கிச் செல்ல ஆரம்பித்தன. இதற்குக் காரணம் காலநிலையாகும். விவசாயத்தில் ஏற்பட்ட அழிவுகள் காரணமாக உணவுத் தட்டுப்பாடு, அந்நியர்களின் தொடர்ச்சியான படை எடுப்புகள், மற்றும் மலேரியா நோயின் தாக்கம் போன்றவற்றால் மக்கள் இலங்கையின் தென்மேற்கு நோக்கி இடம் பெயர்ந்தமையே ஆகும்.

## பண்டைய விவசாயப் பழக்கங்களும் விழுமியங்களும்

எமது பண்டைய விவசாய முறைகளும் பழக்க வழக்கங்களும்எமதுவாழ்வியலுடனும்கலாசாரவிழுமியங்களுடனும் பின்னிப் பிணைந்தவை. தமிழர்களினுடைய விவசாயப் பழக்க வழக்கங்களை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு வருடத்தினுடைய தை மாதத்தின் 1 ஆம் திகதியன்று, புதிய அறுவடையில் இருந்து கிடைக்கும் நெல்லைக் கொண்டு பொங்கல் பொங்கி சூரியனுக்கு படைத்து சூரிய வழிபாடு செய்வதில் இருந்து ஆரம்பிக்கும். விவசாயிகள் சூரியனையே இந்த இயற்கை அசைவின் கடவுளாகவும் தங்கள் விவசாயத்தின் காப்பானாகவும் நினைத்து சூரியனை மகிழ்வித்து விவசாயக் கடமைகளைச் செய்ய ஆரம்பிப்பார்கள். பின்னர் இதர செயற்பாடுகளாக தைப்பொங்கலுக்கு அடுத்தநாள் விவசாயத்தின் உயிர்த் தோழனாக விளங்குகின்ற கால்நடைகளை மதித்து பட்டிப் பொங்கல், தைப் பூசத்திலே புதிர் எடுத்தல், சித்திரைத் திருநாளிலே குப்பை எருக்கொட்டுதல், ஆடியிலே தேடித் தேடி கோடை உழவு செய்தல், வளர் பிறையிலே விதை நாள் செய்தல் போன்ற சடங்குகள் மற்றும் விஜய தசமியிலே ஆயுத பூசை செய்தல், அறுவடைக்கு முன்னர் வயலுக்கு காய்ச்சிப் படைத்தல் போன்றன இடம்பெறும். இவை முக்கிய சமய நாட்களுடன் பின்னி பிணைக்கப்பட்டிருக்கின்றமையையும் நாங்கள் பார்க்கலாம்.

## பண்டைய விவசாய முறைகள் மற்றும் செயற்பாடுகள்

பாரம்பரிய விவசாய முறைகள் ஒரு தொடரான வட்டச் செயற்பாடாக காலநிலையைக் கருத்தில் கொண்டு நடைபெற்றன. இதனைச் செய்வதற்காக இலங்கையினுடைய பயிர்ச்செய்கை காலத்தை இரண்டாகப் பிரித்தார்கள். அவையாவன காலபோகம் (*Maha season*): மாரி காலத்தில் கிடைக்கும் பெரிய அளவிலான மழையை நம்பிச் செய்யும் பயிர்ச்செய்கை முறை; மற்றும் சிறுபோகம் (*Yala season*) கோடையில் கிடைக்கும் சிறிதளவிலான மழை வீழ்ச்சியையும் மற்றும் குளத்தில் இருக்கும் நீரையும் பயன்படுத்தி விவசாயம் செய்யும் முறையாகும். இதற்காக மரபுவழியாக அனுபவ (எழுதாப்) பயிர்ச் செய்கை நாட்காட்டியை (*nonwritten Cropping Calendar*) பயன்படுத்தினார்கள்.

**1. குப்பை, எரு இடல்/கொட்டல்:** உழுவதற்கு முன்னர் வீடுகளில் சேகரிக்கப்பட்ட உக்கக் கூடிய இலை குழைகள், கால்நடைக் கழிவுப் பொருட்கள் வயலில் பரவப்பட்டன. பரவப்பட்ட கழிவுகள் உழும்போது மண்ணுடன் கலக்கப்பட்டு மண்ணுக்கு உரம் ஊட்டப்பட்டது. செயற்கை உரம் என்ற ஒன்றே இருக்கவில்லை, அனைத்துமே இயற்கை உரங்கள். இதனால் மண்ணின் வளம் மற்றும் கட்டமைப்பு வலுப்பெற்றதுடன் பீடை மற்றும் நோய்த்தாக்கங்கள் பெரிதளவில் இருக்கவில்லை. மண்ணின் நைதரசன் வளத்தை அதிகரிப்பதற்காக பயிர் செய்வதற்கு முன்னர் நைதரசனை அதிகளவில் பாதிக்கும் அவரைக் (*Fabaceae*) குடும்ப தாவரங்களான சணல் மற்றும் காவிளாய் போன்றவற்றை வளர்த்து அவற்றை அப்படியே உழுதார்கள். அது மட்டுமன்றி, பனை ஓலை, பசுந்தாள் பசளைகளான கிளிரிசிடியா, பன்னை, பூவரசு போன்ற இலைகளையும் மண்ணில் இட்டு உழுவதன் மூலம் மண் வளம் மெருகூட்டப்பட்டது. இதற்கு மேலதிகமாக பட்டி கட்டுதல் / அடைத்தல் மூலமும் நேரடியாக மாட்டினுடைய சாணம் மற்றும் கோசலம் போன்ற மண்ணுக்கு உரமூட்டக்கூடிய கழிவுகள் வயல்களுக்கு கிடைத்தன. பட்டி அடைத்தல் என்றால் 50க்கும் மேற்பட்ட மாடுகளை அவற்றை வளர்ப்பவர்களிடம் இருந்து, வாடகைக்குப் பெற்று தமது பயிர் நிலங்களில் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கும் காலத்துக்கு முன்னராக இரண்டு, மூன்று நாட்கள் அடைத்துவைத்து, அதன் கழிவுகளைப் பெறும் முறையாகும்.



பண்டைய நெற் செய்கை முறைகள் ஒரு தொகுப்பு

Image source - www.borgenproject.org

**2. நிலப் பண்பாடு:** பண்டைய காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத போது பொறிமுறைச் சக்தி மூலம் கையாளக் கூடிய உபகரணங்களே பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக வயல் உழுவதற்கும் மற்றும் நிலத்தைப் பண்படுத்தவும் காளை மாடுகள் பூட்டி இழுக்கப்படும் கலப்பைகளே பயன்படுத்தப்பட்டன. இதற்காக ஒவ்வொரு வீட்டிலும் காளை மாடுகள் வளர்க்கப்பட்டன. விவசாயத் தேவைக்காக பாரம்பரியக் கருவிகளான ஏர், கலப்பை, முள்ளுக் கலப்பை, நுகம், கத்தி, அரிவாள், தோட்ட மண்வெட்டி, கிண்டி, கடப்பாரை, குப்பை வாரி மற்றும் உளவாரை போன்றன தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டன.

**3. விதை விதைப்பு:** பண்படுத்தப்பட்ட மண்ணில் பாரம்பரிய விதைகள் விதைக்கப்பட்டன. நெற் செய்கைக்காக மானாவாரிப் பயிர் செய்யும் இடங்களில் விசிறல் மூலம் நெல் விதைகள் விதைக்கப்பட்டன. குளம் அல்லது கால்வாய் மூலம் நீர் நன்றாக கிடைக்கக் கூடிய இடங்களில் சேறடித்து நாற்று நாடல் நுட்பம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டது. சேறடித்தல் என்றால் நீர் நிரப்பப்பட்ட வாயில்களில் எருமை மாடுகள் மற்றும் காளை மாடுகள் இறக்கி

விடப்பட்டு வயல்கள் சேறாக நுதப்பப்படும். பின்னர் கால்நடைகள் அகற்றப்பட்டு, நீர் வடிக்கப்பட்டு, பலகைகள் கொண்டு மட்டம் அடிக்கப்படும். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட, வயல்களில் நாற்றுக்கள் நடப்படும். சேறடித்து நாற்று நடப்பட்ட வயல்களில் நெல்லினுடைய மட்டம் அதிகம் வெடிப்பதினால், விளைச்சல் அதிகமாகக் கிடைத்தது .

**4. நீர்ப்பாசனம்:** வயல்களுக்கு நீர்பாசனம் செய்வதற்காக கிணறு, கேணி, துரவு மற்றும் குளம் என்பன பயன்படுத்தப்பட்டது. நீர்ப் பம்பிகள் இல்லாத காலத்தில் சமவுயரக் கோட்டுத் தத்துவத்தைப் பயன்படுத்தி வாய்க்கால்கள் அமைக்கப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டது. கிணற்றில் இருந்து நீரை தொடர்ச்சியாக வாய்க்கால்கள் வழியே பாய்ச்சுவதற்காக துலா மிதித்தல் மற்றும் சூத்திரக் கிணறு சுற்றுதல் போன்ற நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டன. கேணி மற்றும் துரவுகளில் இருந்து நீரைப் பெறுவதற்காக பனை ஓலையால் பின்னப்பட்ட துலாக் கூடை மற்றும் பட்டை என்பன பயன்படுத்தப்பட்டன.

**5. பயிர் பாதுகாப்பு:** இரவு நேரங்களில் பயிர்களை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பதற்காக வயற்கரைகளில் பரண் அமைத்து இரவு பகலாக ஒருவர் பயிரைப் பாதுகாப்பார். பயிர்களை பறவைகளில் இருந்து பாதுகாப்பதற்காக வெருளிப் பொம்மைகளை (சோளக் காட்டுப் பொம்மை) வயலின் நடுவே ஆங்காங்கே நிறுத்தினார்கள் மற்றும் பாரிய ஒலிகளை தகரத்தில் தட்டி எழுப்பி விலங்குகள் மற்றும் பறவைகளை விரட்டினார்கள். பீடைகளை அழிப்பதற்காக வயலில் இருக்கும் பிட்டிகளில் இரவில் நெருப்புக்கள் மூட்டப்பட்டன. இதனால் ஒளிக்கு கவரப்படும் பூச்சிகள் தீயில் எரிந்து அழிந்தன. கார்த்திகை விளக்கீட்டின்போது சொக்கப்பானை கொளுத்தும் சடங்கு இதற்காகவே செய்யப்படுவதாக விஞ்ஞானவிளக்கம் அளிக்கப்படுகிறது. பீடை பூச்சிகளில் இருந்து பயிர்களைக் காக்கும் இரைகவ்விப் பறவைகளை கவர்ந்தது இழுப்பதற்காக, பறவைகளின் கூடுகளை அமைத்து வயல்களின் அருகே இருக்கும் மரங்களில் வைத்தார்கள்.

**6. களை எடுப்பு:** களைகளைப் பற்றி நம் முன்னோர் நன்றாகவே அறிந்திருந்தனர். இதனாலேயே, களைகளைக் கட்டுப்படுத்தலை நிலப்பண்படுத்தலுடன் ஆரம்பிக்கின்றனர். முன்னைய பயிர்ச் செய்கையில் களைகள் அதிகமாகக் காணப்பட்ட வயல் நிலங்களில் உமியைக் கொட்டி எரித்தனர். இதனால் பெருமளவான களைகளின் விதைகள் மற்றும் முளைக்கும் பருவங்கள் அழிக்கப்படுகின்றன. வயல்களைப் பண்படுத்தும்போது வரம்புகளை புதிதாக அமைத்தல் மற்றும் நீரைத் தேக்கி களைகளை அழுகப் பண்ணுதல், பயிர்கள் நாட்டப்பட்ட பின்னர் இரண்டு கிழமைக்கு ஒருதடவை பெண் தொழிலாளர்களைப் பயன்படுத்தி களை எடுத்தல், நெல் அல்லாத பயிர்களுக்கு இடையில் களைகள் வளராதவாறு ஊடுபயிர் செய்தல் போன்ற தந்திரோபாயங்களை காலம்காலமாகப் பயன்படுத்தினர்.

7. மேற்கட்டுப் பசளையிடல்: பயிர்கள் பூக்கும் பருவத்தை அடையும்போது மேற்கட்டுப் பசளையாக கூட்டெரு, தொழு உரம் மற்றும் உக்கிய சாணம் என்பன பயன்படுத்தப்பட்டன. பண்டைய காலத்தில் முற்று முழுவதுமாக நாட்டினங்கள் பயன்படுத்தப்பட்டதால் மேற்கட்டுப் பசளையின் தேவை அதிகம் நெல்லுக்கு இருக்கவில்லை. ஆறுகள் மூலம் குளத்தை அடைந்த நீரில் அதிகளவான கனியுப்புக்கள் நிறைத்திருந்ததால் இவற்றை பயிர்கள் அகத்துறிஞ்சின. மற்றைய மரக்கறிப் பயிர்களுக்கே மேற்கட்டுப் பசளைகள் அதிகம் பயன்படுத்தப்பட்டன.

**8. அறுவடையும் சேமிப்பும்:** நெற்பயிர்கள் நன்கு முற்றியவுடன், நெல் அறுவடைத் திருவிழா ஆரம்பமாகும். இதன்போது வயலைக் காத்த நாயன்மார்கள் மற்றும் கன்னிகளுக்கு அறுசுவை உண்டிகள் சமைத்து படைக்கப்படும். பின்னர், நெல் அறுவடைக்கு அதிகளவான பெண் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டனர். அரிவாள்கள் மூலம் அறுவடை செய்யப்பட்ட அரிவிகள் கட்டுகளாகக் கட்டப்பட்டு தலையிலே சுமந்து சூடடிக்கும் மேட்டு நிலங்களுக்கு (களம்) கொண்டு செல்லப்பட்டது. களப் பாய்களிலே அரிவிக்கட்டுகள் அடுக்கப்பட்டு ஓரிரு நாட்களுக்கு சூடு வைக்கப்படும். சூடு வைக்கும் போது அனைத்து நெல்மணிகளும் நன்றாகப் பழுத்து, சூடடிக்கும் போது இலகுவாகக் கொட்டுண்டும். சூடு அடிப்பதற்காக இரண்டு முறைகள் பயன்படுத்தப்பட்டன;

**கையால் சூடடித்தல்:** நெல்மணிகள் நிறைந்த அரிவிகள் பெரிய கல்லின் மீது அல்லது மரக்கட்டையின் மீது அடிக்கப்படும், இதனால் நெல்மணிகள் வைக்கோலில் இருந்து இலகுவாகப் பிரியும். இந்த முறைக்கு நேரம் அதிகம் தேவைப்படும் ஆனால் நெல் மணிகள் சேதமடையாது.

காளை மாடுகள் அல்லது எருமை மாடுகளைக் கொண்டு சூட்டை மிதித்தல்: இதன்போது நேரம் மிச்சப்படுத்தப்படும், செலவு குறைவு ஆனால் சேதம் அதிகம். சூடு மிதித்து முடிந்தவுடன், பெரிய தூசிகள் மற்றும் கூழங்கள் அகற்றப்பட்டு, காற்றின் உதவியுடன் குல்லம் (சுளகு) கொண்டு, சப்பி மற்றும் சாவட்டை (அறைவயிற்றன்) நெல்மணிகள் தூற்றப்படும். இம்முறை மூலம், நாக்கு முற்றிய சேதமடையாத நெல்மணிகள் மாத்திரம் வேறாக பிரிக்கப்பட்டு சாக்குகளில் கட்டப்படும். நெல்லை அளப்பதற்காக படி, கொத்து, சேர் மற்றும் பறை என்ற பல அளவு முறைகளைப் பயன்படுத்தினர்.

துப்புரவாக்கப்பட்ட நெல் மூடைகள் மாட்டு வண்டிகளில் ஏற்றப்பட்டு நெற்களஞ்சியங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. களஞ்சியங்களில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கொள்கலன்களில் சேமிப்பதற்கு முன்னர் நன்கு உலர்த்தப்பட்டன. அதேபோல் வைக்கோலும் மாட்டுவண்டிகளில் ஏற்றப்பட்டு வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு வைக்கோல் போராக குவியப்பட்டு மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறாக எமது பாரம்பரிய விவசாயம் இயற்கையுடன் முரண்படாமல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணும் அளவுக்கு சிறப்பாக நடை பெற்றது. ஒவ்வொரு வீட்டிலும் நெல் இருந்தது, கால்நடைகள் இருந்தன, பஞ்சம் என்ற சொல்லுக்கே இடம் இருக்கவில்லை. பாரம்பரிய விவசாயம் விற்பனை நோக்கத்திற்கு முன்னுரிமை அளிக்காததால், வேறு நாடுகளுடன் விற்பனைப் போட்டி இருக்கவில்லை.

எமது பாரம்பரிய விவசாயத்துக்கு, பதினாறாம் நூற்றாண்டில் இருந்து மேலைத்தேயர்களின் படையெடுப்புடன், அழிவு ஆரம்பமானது. குறிப்பாக இலங்கை பிரித்தானியர்களின் காலனித்துவத்துக்கு உட்பட்ட காலத்தில் இருந்து வர்த்தகப் பயிர்ச்செய்கைக்கு (தேயிலை, கோப்பி, வாசனைத் திரவியங்கள்) அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டமையால், பிரதான நெல் மற்றும் சிறுதானியப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்ததோடு பல்வேறு பிரச்சினைகளும் அதனூடாகத் தோற்றம் பெற்றன.

இக்கட்டுரைத்தொடர் இலங்கையின் பாரம்பரிய வேளாண்மை முறைமையில் உள்ள சாதக – பாதகங்கள், அதிலுள்ள போதாமைகளை நிவர்த்திக்கும் வகையில் நவீன நுட்பங்களைப் புகுத்துதல், நவீன நுட்பங்களால் உண்டாகக்கூடிய விளைவுகள், இலங்கையில் பசுமைப்புரட்சிக்காக முன்வைக்கப்படவேண்டிய விவசாயக் கொள்கைகள் என்பன பற்றி விரிவாகவும், ஆய்வுத்தளத்திலும் விபரிக்கின்றது.



பல்லுயிர் பல்பயிர்ச்செய்கை

Image source - www.siwi.org

கட்டுரை

கந்தையா பகீரதன்

# பாரம்பரிய விவசாயமும் சூழல் சமநிலையும்

**அறிமுகம்**

மனிதன் ஒரு சமூக விலங்கு. மனிதன் கூட்டமாக அலைந்து திரிந்து வேட்டையாடி உண்ணுகின்ற வேடுவ நாகரிகத்தில் இருந்து நதிக்கரைகளை அண்டி நிரந்தரக் குடியேற்றங்களை அமைத்து, விவசாயம் செய்து வாழத் தொடங்கியதில் இருந்து மனித நாகரிகத்தில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல் வேளாண்மை யுகமும் ஆரம்பமானது. இவ்வாறு தான், மனித நாகரிக வளர்ச்சி உலகம் முழுவதும் ஏற்பட்டது. இதனைச் சான்றாக வைத்துத் தான் நான் எனது முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன், வேடுவர் தான் இலங்கையின் விவசாயப் பூர்வீகத்தின் முன்னோடிகள் என்று, ஏனென்றால், வேடுவனாக காட்டில் மனிதன் அலைந்து திரிந்த போது, தனியே வேட்டையாடும் நுட்பங்களை அவன் கற்கவில்லை. மேலதிகமாக, எந்த இயற்கைச் சூழலில் என்னென்ன விலங்குகள் வாழ்கின்றன, அவை எவற்றை உண்கின்றன, எந்தக் காலநிலையில் எந்த விலங்குகளின் நடமாட்டம் அதிகம், அந்தக் காலங்களில் எந்தத் தாவரங்கள் வளர்கின்றன, அந்தத் தாவரங்களுக்கு என்ன சூழல்

நிபந்தனைகள் தேவை போன்ற விடயங்களை கற்றதோடு பல இயற்கையாக வளர்ந்த தானியங்கள் மற்றும் விலங்குகள் உண்ணும் பழத்தை தானும் ருசித்து அவற்றில் தனக்குப் பிடித்த விதைகளை யும் சேகரித்தான். பின்னர், நதிக்கரைகளை அண்டி கூட்டமாக வாழ்ந்தபோது, தான் வாழ்ந்த சூழலில் அத் தானியங்களையும் மற்றும் பழங்களையும் பயிரிட்டான். அந்தச் சமயத்தில் இருந்து வேடுவ யுகம் முடிந்து விவசாய யுகம் ஆரம்பித்தது. பண்டைய விவசாயம் முற்றுமுழுதாக இயற்கையை அண்டிய இயற்கைச் சூழல் விவசாயமாகக் காணப்பட்டது.



இலங்கையில் இயக்கவியல் விவசாய முறைகள்

Image source - www.biodynamicsrilanka.org

## நாம் வாழும் சூழல்தொகுதி

சூழல்தொகுதி (ecosystem) என்பது இப்பிரபஞ்சத்தின் ஒரு வரையறுக்கப்பட்ட பகுதியிலுள்ள உயிரற்ற இயற்பியல் கூறுகளுடன், உயிரினங்கள் ( தாவரங்கள், விலங்குகள், பூஞ்சைகள், நுண்ணுயிர்கள், மனிதன்) ஊடுதொடர்பு முறைமையில் இடைத்தாக்கம் புரிந்து ஒருமித்து இணைந்து வாழ்கின்ற ஒரு இயற்கை அலகு ஆகும். உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் தாங்கள் வாழும் இடத்தின் சூழலைப் பொறுத்து, ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. 1930 ஆம் ஆண்டில் ரோய் கிளஃபாம் (Roy Clapham) என்பவர், சூழலின் இயற்பியல் மற்றும் உயிரியல் கூறுகளை அவற்றிடையேயான தொடர்புகளுடன் சேர்த்து ஓரலகாகக் பயன்படுத்துவதற்காக சூழல் மண்டலம் என்பதற்குச் சரியான ecosystem என்னும் ஆங்கிலச் சொல்லை உருவாக்கினார். சூழல் தொகுதிகளை எண்ணற்ற வழிகளில் வரையறுத்து விளக்க முடியும் என்பதுடன் எங்கெங்கெல்லாம் உயிரினங்களுக்கும் அவற்றின் சூழலுக்கும் இடையே தொடர்பு உள்ளதோ அவற்றையும் சூழல் மண்டல அடிப்படையில் விபரிக்க முடியும்.

இப் பூமிப்பந்தில் இரண்டு மிகப் பெரிய சூழல் தொகுதிகள் காணப்படுகின்றன.

நீர்ச் சூழல்தொகுதி (Aquatic Ecosystem): நீர்சார் சூழல் தொகுதி என்பது நீர்நிலைகளில் காணப்படும் ஒரு சூழல் தொகுதி ஆகும். இதில் ஒன்றில் ஒன்று, தம்முடைய சூழலிலும் தங்கியிருக்கும் பல்வேறு உயிரினங்கள் ஒருமித்து வாழ்கின்றன.

நிலச் சூழல்தொகுதி (Terrestrial Ecosystem): நிலம்சார் சூழல்தொகுதி என்பது நிலத்தில் காணப்படும் சூழல் தொகுதி ஆகும். உதாரணமாக காடு சூழல்சார் தொகுதி, புல்வெளி சூழல்சார் தொகுதி மற்றும் பாலைவனம் சூழல்சார் தொகுதி போன்றனவாகும்.

இந்த ஒவ்வொரு சூழல் தொகுதியும் வெற்றிகரமாக இயங்குவதற்கு அந்த அந்தச் சூழல் தொகுதியில் காணப்படும் உயிரற்ற பௌதீகக் காரணிகளான சூரிய ஒளி/ ஆற்றல், வெப்பநிலை/ வெப்பம், வாயுக்கள், நீர்/ மழைவீழ்ச்சி/ ஈரப்பதன், மண், கனிமங்கள் போன்றன மிகப் பொருத்தமாக இருக்க வேண்டும்.

இவற்றை ஆதி மனிதன் மிகத்திறமையாக தெரிந்துகொண்டு இயற்கை மாற்றத்திற்கு ஏற்றவாறு பயிர்களைப் பயிரிட்டான்.

மனிதன் சூழலின் ஒரு கூறு மாத்திரமேயாகும் என்பதுடன் சூழலின் உயிர்வாழ்விற்கு மனிதன் இன்றியமையாத காரணி அல்ல, ஆனால் மனிதனின் நிலையான இருப்புக்கு சூழல் சமநிலை அவசியம்.

இதை உணர்ந்த பண்டைய மக்கள், மனிதன் இயற்கையால் ஆளப்படுகிறான் என்பதை எண்ணி வாழ்ந்தனர். ஆனால் சமூக பரிணாம வளர்ச்சியுடன், சூழல் என்பது மனித விருப்பத்திற்கு ஏற்ப பயன்படுத்தக்கூடிய ஒரு சொத்தாக மாறியது. இதன் விளைவாக, உலகளாவிய ரீதியில் சூழல் மாசடைவு அதிகரித்து வருகிறது.

இயக்கவியல் விவசாய உள்ளீடுத் தயாரிப்புகள் மண்ணின் குணங்களை, குறிப்பாக அதன் வளத்தை மீட்டெடுக்க முக்கியம். அனைத்து இயக்கவியல் விவசாய உள்ளீடுத் தயாரிப்புகள் இயற்கை தயாரிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை. இயக்கவியல் விவசாய உள்ளீடுத் தயாரிப்புகள் போது, மாட்டின் கொம்பு போன்ற விலங்குகளின் உடல் பாகங்கள் அண்ட ஆற்றலைப் பயன்படுத்த பயன்படுத்தப்படுகின்றன. கூடுதலாக, இயக்கவியல் விவசாய உள்ளீடுத் தயாரிப்புகளின் போது விண்மீன் கூட்டத்தின் சந்திர நிலையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இயக்கவியல் விவசாய உள்ளீடுத் தயாரிப்புகளில் தாவரங்கள் அல்லது விலங்குகளின் சாறுகள் அடங்கும், அவை காலப்போக்கில் புளிக்கவைக்கப்படுகின்றன இந்த சாறுகள் தாவரங்கள் அல்லது மண்ணில் ஒரு குழம்பாக சிறிய அளவில் சேர்க்கப்படுகின்றன.

இயக்கவியல் விவசாயத்தில் பயன்படும் உள்ளீடுகள் ( Some Biodynamic Inputs)

BD 500 - Cow Horn Manure
BD 501 - Silica Quartz Crystal
BD 502 - Yarrow flowers
BD 503 - Chamomile flower
BD 504 - Stinging Nettle
BD 505 - Oak bark
BD 506 - Dendelion flowers
BD 507 - Valerian flower

விரிவான விளக்கத்துக்கு (https://agrislanka.blogspot.com/2018/03/biodynamic-preparations-vitalizers.html)

## பண்டைய விவசாயமும் சூழல் சமநிலையும்

ஆரம்பத்தில் மனிதன் இயற்கையாக இருந்த சிறு சிறு நிலப்பரப்புக்களில் தான் வேடுவனாக இருந்த போது சேகரித்த தானியங்களை எந்த நிலப் பண்படுத்தலை செய்யாமல் பயிரிட்டான், அதில் வெற்றியும் கண்டான். இந்த வெற்றி மேலும் பயிர் செய்வதற்கு அவனுக்கு உற்சாகத்தை ஏற்படுத்த, மெதுவாக புதர்கள் மற்றும் சிறு மரங்களை வெட்டி நிலத்தை துப்பரவு செய்து விஸ்தரிக்கப்பட்ட அளவில் பயிர் செய்ய ஆரம்பித்தான். உணவு கிடைத்தது, மனிதக் குடித்தொகை பெருக ஆரம்பித்தது. இப்படிச் செய்யப்பட்ட விவசாயம் முற்று முழுவது மாக இயற்கையுடன் ஒன்றிணைந்து இயற்கை சமநிலைக்கு குந்தகம் ஏற்படாமல் நடைபெற்றது. இயற்கையைப் பாதுகாப்பதற்காக அனைவரும் இயற்கையை நேசிக்கும் முகமாக, கடவுள் நம்பிக்கை யுடனும் மற்றும் சமயத்துடனும் இயற்கையை இணைத்தனர். உதாரணமாக இந்துசமய நம்பிக்கையாக "பூவுலகில் உள்ள அனைத்தும் இறைவனுடையதே" உயிருள்ள உயிரற்ற அனைத்திலும் இறைவனுடைய சக்தி வியாபித்துள்ளது, இதனால் ஒருவர் தனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு மிகுதியை இறைவனுக்கு விட்டு விட வேண்டும் என காலம் காலமாகச் சொல்லப்படுகிறது.

செவ்விந்தியர்களின் சூழல் ஒழுக்கநெறி (Environmental Ethics) எதைத் தெளிவுபடுத்துகிறது என்றால், அவர்களின் "உன்னதமான நம்பிக்கையான பூமியில் காணப்படும் ஒவ்வொரு அங்குல நிலமும் அதன் பகுதிகளும் எமது மக்களினுடைய சொத்துக்கள், சூரிய ஒளியினால் மரங்கள் மற்றும் கற்பகதருக்கள் சக்தி பெறுகின்றன. வெள்ளை மணலால் சூழப்பட்ட கடற்கரைகள், திறந்த வெளிகள், காடுகள் மற்றும் நுண்ணுயிர்கள் அனைத்தும் எமக்காக இறைவன் அருளிய வளங்கள். ஆறுகளில் பாய்ந்து செல்லும் நீர் எமது மூதாதையரின் உதிரம். ஆற்று நீரின் ஒலி எமது முன்னோர்களின் பேச்சொலி. வாசனை உள்ள மலர்கள் எமது சகோதரர்கள். வனவிலங்குகள் இல்லாத பூமியில் மனிதன் தனிமைப்பட்டு இறப்பான். இவை அனைத்தும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளன. இயற்கையை அழித்தால் மனிதன் அழிவான்" என அவர்கள் அதிகமாக நம்பினார்கள். மற்றவர்களுக்கும் அவ்வாறான நம்பிக்கையை ஏற்படுத்தினார்கள்.

இந்த சமய மற்றும் பரம்பரை நம்பிக்கைக்கைகளுக்கு அமைவாக பல்வேறுவகைப்படுத்தப்பட்ட விவசாய முறைகள் தோற்றம் பெற்றன. அவையாவன

A. **இயற்கை விவசாயம்** (Nature Farming)

B. **உயிர் இயக்கவியல் விவசாயம்** (Biodynamic Farming)

C. **சூழல் நேய விவசாயம்** (Ecological Farming)

D. **சேதன அல்லது கரிம விவசாயம்** (Organic Farming)

இவை சிறு சிறு மாறுபட்ட முறைகளுடன் செய்யப்பட்டாலும், எல்லா விவசாய முறைகளினதும் பிரதான குறிக்கோள் மண், நீர், விலங்குகள், மற்றும் தாவரங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதன் மூலம், சூழல் சமநிலையைப் பேணுதல் ஆகும். மேலும்

சூழல் சமநிலையை வலுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகளும் விவசாயத்தில் பின்பற்றப்பட்டன.

### கழிமுகங்கள் மற்றும் ஆற்றுப் படுக்கையை அண்டிய விவசாயம்:

ஆரம்பத்தில் அனைத்து விவசாயம் சார்ந்த மனித நாகரிகங்களும் கழிமுகங்கள், ஆற்றுப்படுக்கையை அண்டியே உருவாகின. உதாரணமாக, உலகின் மிகப் பழமையான இந்தியாவின் வடமேற்கே சிந்து ஆற்றின் கரைமருங்கு இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குமுன் சிறந்த விவசாய நாகரிகத்தோடு விளங்கியிருந்து. பின் மண்மூடுண்ட 'மொஹெஞ்சொதரோ' 'ஹரப்பா' முதலிய பெரு நகரங்கள், அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டன. ஏன் அன்று வேளாண் குடிகள் நதிக்கரைகள் மற்றும் ஆற்றுப் படுக்கைகளை தேர்வு செய்து குடியேறி விவசாயம் செய்தார்கள் என்றால், ஆற்று நீர் அடித்து வரும் மண் கடலுடன் சேருமிடத்தில் (கழிமுகம்) மிக வளமான வண்டல் மண் அதிகம் காணப்பட்டமை தான். வண்டல் மண் (*Alluvial Soil*) என்பது மலையில் இருந்து ஓடிவரும் ஆறு, மக்கிய செடி, கொடி, தழைகளையும் பல தாதுப் பொருள்களையும் அடித்தவாறு சேதனப் பொருட்கள் ஒன்றிணைந்து உருவாகிறது. எனவே இவை வேளாண்மைக்கு மிகவும் ஏற்றதாகவும் தழைச்சத்து (*Nitrogen*), மணிச்சத்து (*Phosphorus*), சாம்பல்சத்து (*Potassium*), மற்றும் இதர கனிமங்கள் உடையதாகவும் உள்ளன. இந்த மண்ணில் பயிர்கள் மிகவும் செழித்து வளர்ந்தன மற்றும் மண்ணை பண்படுத்தவேண்டிய தேவையும் இருக்கவில்லை.

### 2. விவசாயத்தில் உயிரியற் பல்வகைமையைப் பேணுதல்:

பண்டைய காலப் பயிற்செய்கையில் இயற்கைக் காட்டுச் சூழல் தொகுதியை ஒத்த முறையே பயன்படுத்தப்பட்டது. ஒரு இயற்கைக் காட்டுச் சூழல் தொகுதியை எடுத்தோமானால் பலதரப்பட்ட உயிர்கள் பலதரப்பட்ட உயிரிகளுடன் அண்டிவாழும் நிலைமையை பார்க்கலாம். மரங்களை எடுப்போமானால், பல்வேறு உயரத்தில் மரங்கள் காணப்படும். அனைத்து மரங்களும் சூரிய ஒளி கிடைக்கக் கூடியவாறான ஒழுங்கில் அமைந்து இருக்கும். உயரமான மரங்களில் சிறிய கொடிகள் படர்ந்து இருக்கும். மரங்களின் கிளைகளில் பறவைகள், சிறு முலையூட்டிகள், இரைகவ்விகள் மற்றும் பூச்சிகள் வாழும். நிலத்தில் பெரிய தாவர உண்ணி மற்றும் ஊன் உண்ணி விலங்குகள் மற்றும் ஊர்வன வாழும். மண்ணில் பல கோடிக்கணக்கான நுண்ணங்கிகள் வாழும். காட்டினூடு ஆறுகள் ஓடும், மரத்தின் வேர்கள் மண்ணில் பல்வேறு ஆழத்தில் காணப்படும், மரங்களில் இருந்து விழும் இலைகள் மற்றும் இறந்த உயிரினங்களின் உடல் மண்ணுக்கு உரம் சேர்க்கும். இது ஒரு மூடிய சூழல் தொகுதி. இச் சூழல் தொகுதியில் அனைத்து உயிரிகளும் இயற்கையின் நியதிக்கு ஏற்ப சமநிலையாக வாழ்கின்றன. ஏதாவது ஒரு உயிரியினுடைய குடித்தொகை அபரிமிதமாக அதிகரிப்பதும் இல்லை, குறைவடைவதும் இல்லை. அனைத்து சூழல் இயற்கை வட்டங்களும் உதாரணமாக நீர்வட்டம், நிதர்சன வட்டம், காபன் வட்டம் போன்றன வரிசைக் கிரமமாக நடைபெறுகிறது.

இந்தமுறையே ஆரம்பத்தில் விவசாயத்திலும் கையாளப்பட்டது. பல பயிர்கள், பல் பயிர்ச்செய்கைக் கோலங்கள், இறந்த தாவர விலங்குக்கழிவுகளை மண்ணுக்கு இட்டு உரமூட்டுதல், பருவப் பெயர்ச்சிக்கு ஏற்றவாறான பயிர்களை உற்பத்தி செய்தல், கால்வாய்கள் மூலம் நீர்ப்பரிபாலனம், வன விலங்குகளைக் பயன்படுத்தி நிலப் பண்பாடு மற்றும் அறுவடை போன்றன நடைபெற்றன. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இயற்கைச் சமநிலை பேணப்பட்டது.

### விவசாயத்தில் உயிர் இயக்கவியல் சக்தியைப் (Biodynamic Forces) பயன்படுத்தல் :

உயிர் இயக்கவியல் சக்தியைப் பயன்படுத்திய விவசாயம் என்பது எமது மூதாதையர்களினால் பயன்படுத்தப்பட்ட ஒருமுறை. இந்தமுறையில் எமது வேதங்களில் சொல்லப்பட்ட பஞ்ச பூதங்களின் சக்தியை விவசாயத் தேவைகளுக்காக குறிப்பாக தாவரங்களின் உற்பத்தித்திறன் மற்றும் மண்ணின் வள மேம்பாடு ஆகியவற்றில் பயன்படுத்தினார்கள். எம்முன்னோர்கள் விவசாயக் காலநிலைகளை வகைப்படுத்த சூரியன் மற்றும் சந்திரனின் சுழற்சி மற்றும் அதன் அசைவைப் பயன்படுத்தி பயிர்நாட்காட்டியை (*Cropping Calendar*) உருவாக்கி அதன் மூலம் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இந்தப் பரம்பரைப் பழக்கம் உயிர் இயக்கவியல் சக்தியைப் பயன்படுத்திய விவசாயம், விஞ்ஞான ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் 1924 ஆம் ஆண்டு ருடால்ஃப் ஸ்டெய்னர் (18611925) என்பவரால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விவசாயத்தின் ஒரு வடிவமாக பிரபல்யமடைந்து வருகிறது. உயிர் இயக்கவியல் விவசாயம் (*Biodynamic Farming*) மண் வளம், தாவர வளர்ச்சி மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகியவற்றை சூழலியல் ஒன்றோடொன்று தொடர்புடைய பணிகளாக கருதுகிறது மற்றும் ஆன்மீக மற்றும் மாயக் கண்ணோட்டங்களை வலியுறுத்துகிறது.

இயக்கவியல் விவசாயம், கரிம (*organic*) அணுகுமுறைகளுடன் மிகவும் பொருத்தப்பாடானது. இயக்கவியல் விவசாயம் இயற்கை உரங்களின் பாவனையை வலியுறுத்துகிறது மற்றும் மண் மற்றும் தாவரங்களில் செயற்கை (செயற்கை) உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் பயன்பாட்டை

விளக்குகிறது. இயக்கவியல் விவசாய அணுகுமுறையின் தனித்துவமான முறைகள், விலங்குகள், பயிர்கள் மற்றும் மண்ணை ஒரே அமைப்பாகக் கையாளுதல் போன்றவற்றை வலியுறுத்துவதோடு, சில ஜோதிட விதைப்பு முறைகள் மற்றும் நடவு நாட்காட்டியைப் பயன்படுத்துகின்றன. உதாரணமாக பூரணை தினத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் விதை விதைத்தல் அல்லது பூரணை தினத்தில் இருந்து 35 நாட்களின் பின்னர் நாற்று நடுதல் போன்றவற்றை முக்கியத்துவப்படுத்துகிறது. இவ்வாறு விதைப்பதனால், சந்திரனுடைய சக்தி முழுவதுமாக தாவர வளர்ச்சியைத் தூண்டுகிறது மற்றும் வேரினுடைய சக்தியை அதிகரிக்கிறது. இதன் மூலம் தாவரத்தின் உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. இவற்றுடன், பூரணைதினம் (பூரணை தினத்தில் அறுவடை செய்யக் கூடாது), அமாவாசை (பெரிய மரங்கள் அறுவடை செய்வதால் மரம் பழுதடையாமல் தடுக்கப்படுகிறது), சதுர்த்தி மற்றும் வளர்பிறை போன்றன இயக்கவியல் விவசாயத்தில் முக்கியமாகக் கருதப்படுகின்றது. அதுமட்டுமன்றி பசுவின் கொம்புகளின் குவார்ட்ஸ் மற்றும் சாணியை நிரப்பி மண்ணில் புதைப்பதன் மூலம் “மண்ணில் உள்ள பிரபஞ்ச சக்திகளை” அறுவடை செய்வதாகக் கூறப்படும் வேளாண் விஞ்ஞானத்தை விட இறைமந்திரத்திற்கு மிகவும் ஒத்த முறைகளைப் பயன்படுத்தி இவை தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் இயற்கைசக்திகள் விவசாயத்தில் பயன்படுத்தப்படுவதினால் சூழல் சமநிலை ஏற்படுகிறது.

இலங்கையில் இயக்கவியல் விவசாயத்தை மேலும் வலுப்படுத்துவதற்காகவும் பண்டைய அனுபவ விவசாய முறைகளை மேம்படுத்தி இயற்கை விவசாயத்தை மற்றும் கரிம விவசாயத்தை மேம்படுத்துவதற்காகவும் Biodynamic Association of Sri Lanka (BDASL) என்ற அமைப்பு இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## 4. விவசாய விரிவாக்கமும் சூழல் சமநிலைக் குலைவும்

சூழலுக்கு இசைவான விவசாய நடைமுறைகளை எமது முன்னோர்கள் பயன்படுத்தி உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தார்கள். இவ்வாறு சுகாதாரமான உணவை உற்பத்தி செய்து உண்டு சந்தோசமாக வாழத் தொடங்கியபோது, மனிதக் குடித்தொகை பெருக ஆரம்பித்தது. சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு உணவு உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியதோடு மட்டுமல்லாமல் மனிதன் வாழ்வதற்கான இடத்திற்காகவும் காடுகளை அழிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் மனித உணவிற்காக கால்நடைகள் மற்றும் பண்ணை விலங்குகளைப் பெருக்கவேண்டிய



**சூழல் சமநிலையைக் குறைக்கும் விவசாய நடைமுறைகள்**

Image source - rdmc.nottingham.ac.uk

நிலைக்கும் மனிதன் தள்ளப்பட்டான். இவ்வாறு பெருகிய மனிதக்குடித்தொகை கூட்டம் கூட்டமாக வேறு இடங்களுக்கு சென்று வாழத் தொடங்கியபோது வாழும் இடங்களில் காடுகளை அளித்து சேனைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல்லுயிர் பயிர்ச்செய்கை முறையில் இருந்து ஓரினப் பயிர்செய்யும் (Monocropping) முறையை ஆரம்பித்தான். இதனால் ஒருசில பூச்சிக ளுக்குத் தேவையான உணவு அதிகமாகக் கிடைத்தது, இதனால் பீடைக் குடித்தொகை அதிகரித்து பீடைத்தாக்கம் அதிகரித்தது. பீடைத் தாக்கத்தின் மூலம் ஏற்படும் விளைச்சல் குறைவை குறைக்க பீடைநாசினி களைப் பாவிக்க ஆரம்பித்தான். இதன்மூலம் இயற்கை எதிரிகள் அழிவடைந்தன.

இவ்வாறு மனிதனுடைய செயற்பாடுகள் இயற்கையைச்சீண்டும்முகமாகவும்மற்றும்கைத்தொழில்புரட்சியின் மூலம் இயற்கையால் அடக்கி ஆளும் முகமாகவும் அமைய ஆரம்பித்தது. இச்செயற்பாடுகள் காலநிலை மாற்றத்துக்கு முக்கிய பங்காக விளங்கும் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியீட்டுக்கு வகை செய்தது. இப் பச்சை வீட்டுவாயுக்களினால் பூகோள வெப்பநிலை அதிகரித்ததோடு மட்டுமல்லாமல் காலநிலை மாற்றத்தினையும் தோற்றுவிக்கின்றது. இக்காலநிலை மாற்றத்தினால் சூழல் ரீதியாக, பொருளாதார ரீதியாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. குறிப்பாக பனிப்படலம் உருகுதல், வரட்சி, சூறாவளி ஏற்படுதல், கடல் நீர் மட்டம் அதிகரித்தல், சூழல் மாசடைதல், மற்றும் பீடைத் தாக்க அதிகரிப்பு அபாய நிலை ஏற்பட்டிருக்கிறது.

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து மனித நடவடிக்கைகளாலும், இயற்கைச் சமநிலைக் குலைவு ஏற்பட்டு விவசாய நடவடிக்கைகளிலும் மற்றும் உணவு உற்பத்தியிலும் பாரிய மறை விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது.


# இலங்கையில் தேயிலையின் தந்தை ஜேம்ஸ் டெய்லர்



கட்டுரை

இரா. சடகோபன்

இக்கட்டுரைத்தொடர் இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களைகளையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.



Father of the Ceylon Tea Industry
James Taylor

Image source - www.namathumalayagam.com

இலங்கையில் தேயிலைத் தொழில்துறை அதன் நூற்றி ஐம்பது வருடகால வரலாற்றைப் பதிவு செய்து கொண்ட போது (1867 - 2017), தேயிலைத் தொழிலின் தந்தையெனப் போற்றப்படும் ஜேம்ஸ் டெய்லரும் கௌரவிக்கப்பட்டு நினைவு கூரப்பட்டார்.

ஜேம்ஸ் டெய்லர் இந்த நாட்டுக்கு தேயிலை பொருளாதாரத்தை வளர்த்து, கட்டியெழுப்பியிருக்காவிட்டால், இலங்கை ஒரு செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழ்ந்திருக்க முடியாது. இந்த ஆய்வுக் கட்டுரைத் தொடரை நான் எழுத ஆரம்பித்ததன் நோக்கம் கோப்பி வரலாற்று காலத்தைப் போலவே தேயிலை வரலாற்றுக் காலம் முழுவதும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எவ்வாறு வஞ்சிக்கப்பட்டு, சுரண்டப்பட்டு இன்றுவரையில் துன்ப துயரத்தில் தள்ளப்பட்டுள்ளனர் என்பதை அம்பலப்படுத்தத் தான்.

எனினும் அதற்காக இந்நாட்டுக்கு தேயிலைப் பொருளாதாரத்தை பெற்றுத்தந்த ஜேம்ஸ் டெய்லரை குற்றம்சாட்ட முடியுமா? என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. ஜேம்ஸ் டெய்லரும் ஏனைய தோட்டத்துரைகளை போலவே ஒரு தோட்டத் துரையாக இருந்தவர் தான். ஆனால் ஒரு சராசரி தோட்டத் துரையாக இருந்து விட்டு போய் விடாமல் தனது மிகக் கடின உழைப்பால் தேயிலைப் பொருளாதாரம் உருவாகக் காரணமாக இருந்து, இந்த நாட்டின் வரலாற்றில் நிரந்தரமான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டவர். இவர் தனது தோட்டத்தில் கூலி வேலை செய்த தொழிலாளர்கள் மீது அன்பும் பரிவும் காட்டியதனால் அவர்கள் அவரை "சாமித்துரை" என்ற பட்டப்பெயர் வைத்து போற்றிப் புகழ்ந்தனர்.

ஜேம்ஸ் டெய்லர் இங்கிலாந்தின் ஸ்கொட்லாந்து பிரதேசத்தில் கிங் கார்ட்சயர் என்ற இடத்தில் மொன் பொடோ என்ற தோட்டத்தில்



James Taylor's Loolkandura - The First Tea Plantation in Sri Lanka

Image source - www.amazinglanka.com

(Monbodo) மோஸ் பார்க் (Moss park) என்று பெயரி டப்பட்ட வீட்டில் 1835 ஆம் ஆண்டு மார்ச் 29 இல் பிறந்தார். இவரது தந்தையான மைக்கேல் டெய்லர் அவரது முதலாவது மனைவி இறந்து மூன்று மாதத்திலேயே மார்க்ரெட் மொயார் (Margeret Moiyar) என்ற இரண்டாவது மனைவியை மணந்து கொண்டார். அதன் காரணமாக ஆரம்பத்திலிருந்தே தனது தந்தையின் இரண்டாவது மனைவியும் தனது சிறிய தாயுமான மார்க்ரெட் மொயாருடன் மனத்தாங்கலுடனேயே இவர் வாழ்ந்து வந்தார். இந்த மனத்தாங்கலும் ஜேம்ஸ் டெய்லர் இலங்கைக்கு வருவதற்கான ஒரு தள்ளு விசையாக இருந்துள்ளது என்று தெரிகிறது.


ஜேம்ஸ் டெய்லர் என்ற அந்த இளைஞன் தனது 16 ஆவது வயதில், அவனது அதே வயதைச் சேர்ந்த மச்சினனான ஹென்றி ஸ்டீபனுடன் 1857ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை நோக்கி செல்வதற்காக ஸ்கொட்லாந்தில் இருந்து லண்டன் நோக்கி சென்ற கப்பலில் பயணமானான். அவர்கள் லண்டன், கல்கத்தா, என மூன்று கப்பல்களில் 122 நாட்கள் பயணித்து 1852 பெப்ரவரி 20ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர். அவர்களது கப்பல் பிரயாணம் மிக சுவாரஸ்யமானதாகவே அமைந்திருந்தது என அவர் தனது தந்தைக்கு அவ்வப்போது எழுதிய கடிதங்களில் இருந்தும் அவர் தன்னுடன் வைத்திருந்த குறிப்புப் புத்தகத்தில் இருந்தும் தெரியவந்துள்ளது என்று “டீ எம்பயர்” (Tea Empire) என்ற நூலை எழுதியுள்ள ஆய்வாளர்களான ஏஞ்சலா மெக்கார்த்தி மற்றும் டி. எம். டிவைன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.
இவர்கள் கொழும்பில் இருந்த போது மெகவுட் இல்லத்தில் (Mack Wood House) தங்கி இருந்துள்ளனர். இது கோப்பி பெருந்தோட்ட முன்னோடிகளில் ஒருவரான கேப்டன் வில்லியம் மெக்வுட்டுக்கு சொந்தமானது. இந்த நிறுவனம் 1845ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அண்மைக்காலம் வரை தேயிலை நிறுவனமாக இயங்கி வந்துள்ளது. அவர்கள் சில தினங்கள் கொழும்பில் தங்கியிருந்து புறநகர்ப் பகுதிகளைச் சுற்றி பார்த்துவிட்டு கண்டி நோக்கி குதிரை வண்டி ஒன்றில் பயணமானார்கள். கண்டி செல்லும் வழியில், தான் பார்த்த காட்சியை பின்வருமாறு வியப்புடன் விவரிக்கின்றார் ஹென்றி ஸ்டீவன்: -

“கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் மலைகளை ஒன்றுக்கு மேல் ஒன்று அடுக்கி அடுக்கி வைத்தது போல் அவை தலையை நிமிர்த்தி கொண்டிருந்தன. சில மலைகளின் உச்சி வரையில் மரங்கள் அடர்ந்து வளர்ந்த மரங்களுக்கு இடைநடுவே பெரும்பர்வதங்கள் துருத்திக் கொண்டு தலையை தூக்கி பயமுறுத்திக் கொண்டிருந்தன. ஆங்காங்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் உள்நாட்டு மக்களின் நெல்வயல்கள் பாய் விரித்து பரவிக் கிடப்பது போல் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பரவலாகக் காணப்பட்டன. ஒருவராலும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு ஒரு பிரமாண்டமான அழகிய காட்சி கண்முன் விரிந்து கொண்டிருந்தது. பாம்புகள் வளைந்து நெளிந்து செல்வதைப்போல காணப்பட்ட வண்டில் பாதைகளின் இரு மருங்குகளிலும் வரிசையாகப் பெட்டிக்கடைகள் நிறைந்து காணப்பட்டதால் மக்கள் செறிந்து வாழ்கின்றார்களோ என்ற ஒரு மாயத்தோற்றம் தோன்றினாலும் ,எங்குமே மக்களை அதிகமாகக் காண முடியவில்லை”.
அவர்கள் கண்டியை அடைந்து அடுத்த நாளே தாம் தொழில் பார்க்க வேண்டிய தோட்டங்களுக்கு தனித்தனியாக செல்ல வேண்டியவர்களாக இருந்தார்கள். அதன் பிரகாரம் ஜேம்ஸ் டெய்லர் கண்டிப் பிரதேசத்தில் இருந்த லூல் கொந்தரா தோட்டத்துக்கும் ஹென்றி ஸ்டீவன் கண்டிக்கு வடக்கே இருந்த அங்கும்புர தோட்டத்துக்கும் சென்றனர். அதன் பின் ஜேம்ஸ் டெய்லர் அவரது மச்சினன் ஸ்டீபனை ஒரு போதும் சந்திக்கவுமில்லை, ஜேம்ஸ் டெய்லர் ஒருபோதும் தன் தாய்நாட்டுக்குத் திரும்பி போகவும் இல்லை. இந்த இரண்டு தோட்டங்களும் அப்போது ஜார்ஜ் பிரைட் என்பவருக்கு சொந்தமாக இருந்தன.

அதன்பின்னர் சுமார் 40 ஆண்டு காலத்தை கோப்பி, சிங்கோனா, பின்னர் தேயிலை பயிர்ச்செய்கை வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் டெய்லர். ஆரம்பத்தில் கோப்பிப் பயிர் வளர்ச்சி பெற பெரிதும் உழைத்து இருந்தாலும் தேயிலைத்தொழிலின் வளர்ச்சிக்கு அவர் செய்த பங்களிப்புக்காகவே “தேயிலையின் தந்தை” என அவர் இலங்கையர்களால் போற்

றப்படுகின்றார். தான் பொறுப்பேற்றுக்கொண்ட சகல பணிகள் மற்றும் கடமைகளின் போது மிக உயரிய பொறுப்புணர்வு, அர்ப்பணிப்பு, விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகள் என்பவற்றை அவர் கடைப்பிடித்துள்ளார்.

அவரால் தொடங்கப்பட்ட முதல் பணி, லூல் கொந்தரா தோட்டத்தின் மலை உச்சியில் 300 ஏக்கர் உயர்ந்த மரங்கள் அடர்ந்த காட்டை அழித்து சுத்தப்படுத்துவது ஆகும். முதல் கட்டத்திலேயே இது ஒரு மாபெரும் சூழல் அழிவாகும் என்று திகைத்துப் போகிறார் டெய்லர். தடித்த, உயரமான, உருக்குப் போன்ற பெறுமதிமிக்க மரங்களை வெட்டி வீழ்த்தி, நெருப்பிட்டு கொளுத்தி அழிக்கும் பணியில் ஈடுபட அவர் மனம் உடன்பட மறுத்தது. என்றாலும் கோப்பிப் பயிர்ச்செய்கை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து கடந்த மூன்று தசாப்த காலமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் காட்டு நிலங்கள் சுத்தப்படுத்தப்பட்டு லட்சக்கணக்கான மரங்கள் அழிக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டு விட்டன என்பது அவர் அறியாத விடயம் அல்ல. இதில் ஜேம்ஸ் டெய்லருக்கு மீள் பரிசீலனை செய்வதற்கு எதுவும் மீதம் இருக்கவில்லை. எனினும் மரங்களை வெட்டி வீழ்த்தி குவித்து உலர்த்தி நெருப்புப் போடுவதற்கு தமிழ்க் கூலிகள் பயன்படுத்தப்படவில்லை. அந்தப் பணிக்கு ஏற்கனவே சேனைப் பயிர்ச்செய்கை மூலம் இது தொடர்பில் காடு வெட்டி, தீமூட்டி அனுபவம் பெற்றிருந்த சிங்கள ஒப்பந்தக்காரர்களே அமர்த்தப்பட்டனர்.



Tea empire book
Image source - www.goodreads.com

இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில் ஏற்கனவே நூற்றுக்கணக்கான கோப்பித் தோட்டங்கள் உருவாகியிருந்தன. அக்காலத்தில் ஜேம்ஸ் டெய்லரின் தோட்டம் எல்லாவற்றுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தது. ஒவ்வொரு நாளும் அவரையும் அவரது தோட்டத்தையும் பார்த்துவிட்டுப் போகவென பல விருந்தாளி கள் வந்த வண்ணமிருந்தனர். அப்படி வந்து போனவர்கள் தோட்டத்தில் அவரது செயற்பாடுகளைப் பார்த்துவிட்டு அவர்களும் தமது தோட்டங்களில் ஜேம்ஸ் டெய்லரின் செயல்முறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். ஜேம்ஸ் டெய்லர் தனது தோட்டத்தில் செய்த முதலாவது பணி தோட்டத்துக்கு உள்ளும் வெளியிலும் போக்குவரத்தை இலகுபடுத்த, கல் பதித்து செப்பனிடப்பட்ட பாதைகளை அமைத்ததாகும். இங்கிலாந்தில் இவரது ஊரான ஸ்கொட்லாந்து பிரதேசம் மலைப்பாங்கானது. ஆதலால் இப்பிரதேசத்தவர்களுக்கு இங்கிலாந்தில் "மலைநாட்டினர்" (The Islanders) என்ற பட்டப் பெயரும் வழங்கப்பட்டிருந்தது. ஆதலால் அவருக்கு இலங்கையில் மலைநாடு என்பது அந்நியமானதாக இருக்கவில்லை. அவர் தான் அமைத்த பாதைகள், மழைநீரால் கரைந்து அழிந்து போவதில் இருந்து பாதுகாக்க, உயர் மலை உச்சியிலிருந்து அடிவார ஓடைகள் வரை, செங்குத்தாகவும் கிடையாகவும் சமமான இடைவெளிகளில் கான் வடிகால் முறை ஒன்றையும் அமைத்து உருவாக்கினார். இவற்றுக்கு நடுவில் நடுநாயகமாகஇருக்கும்கான் "நெற்றிக்கான்" என அழைக்கப்பட்டது. இவை மண் அரிப்பை மட்டுமின்றி மண்சரிவு அபாயத்தையும் தடுத்தன.

இத்தகைய மழைநீர் வடிகால் கான் தொகுதிகள் அமைப்பு மலையகத் தோட்டங்களில் அண்மைக்காலம் வரை நன்கு பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் இவை இப்போது கைவிடப்பட்டு தூர்ந்து போய்விட்டன. கொஸ்லாந்தை மீரியபெத்த தோட்டத்தில் இவ்வித நீர் வடிகாலமைப்பு கைவிடப்பட்டமை காரணமாகவே அங்கே மண்சரிவு ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இவ்வித சூழல் மீதான அக்கறைக்கு மேலாக ஜேம்ஸ் டெய்லர், தான் கற்றிருந்த விஞ்ஞானக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு நீரின் வேகத்தை பயன்படுத்தி சிறிய நீர்ச்சில்லு முறையிலான மின்பிறப்பாக்கி (Electric Generator) ஒன்றையும்உருவாக்கினார். இந்தநீர்ச்சில்லுமின்பிறப்பாக்கி முறை பின்னர் பிரித்தானியாவில் இயந்திரமாக உருவாக்கப்பட்டு அனேகமான தோட்டங்களில் தொழிற்சாலைகள் இயங்குவதற்கு தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டது. இந்த முறை இலங்கையில் மின்சாரம் அறிமுகப்படுத்தப்படும் வரை பாவனையில் இருந்தது.

ஜேம்ஸ் டெய்லரின் முதல் தொகை தேயிலை 1872 ஆம் ஆண்டு கல்கத்தா சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்ட போது அது ஒரு றாத்தலுக்கு 2 பவுண் அல்லது 9 டொலர் என்று விலையை பெற்று முதல்தர தேயிலை என்ற அந்தஸ்தை தனதாக்கிக் கொண்டது. அதன்பின் ஒரு தசாப்த காலத்திலேயே உலகெங்கும் லண்டன் உள்ளடங்கலாக இலங்கைத் தேயிலை முதல்தர தேயிலை என்ற நாமத்தை சுவீகரித்துக் கொண்டது. விரைவிலேயே ஏனைய பெருந்தோட்டப் பயிர்களை விட அதிக அளவில் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை தனதாக ஆக்கிரமித்துக் கொண்டது.

ஜேம்ஸ் டெய்லர் தனது 57 ஆவது வயதில் 1892 ஆம் ஆண்டு இறக்கும் வரை தனியாகவே வாழ்ந்து வந்துள்ளார். எனினும் அவர் பார்வதி என்ற தமிழ்ப்பெண்ணுடன் 10 ஆண்டுகள் வாழ்ந்ததுடன் அவர்களுக்கு குழந்தைகளும் இருந்துள்ளனர். பின்னர் அவர் சில காலம் மெனிக்கே என்ற சிங்கள பெண்ணுடனும் வாழ்ந்துள்ளார். அவர் எப்போதும் தோட்ட முகாமையாளராகவே இருந்தார் என்றும் தோட்டச் சொந்தக்காரராக ஒரு போதும் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இவர் பற்றி கருத்து தெரிவித்த லூல்கொந்தரா தோட்டத்தின் உரிமையாளர் மார்ட்டின் லீக், "அவர் ஒரு உன்னதமான கடும் உழைப்பாளி, அர்ப்பணிப்பு மிக்கவர். லாபம், சுயநலம் கருதாதவர். கற்பனைத்திறன், அறிவுத்திறன், சாதிக்க வேண்டும் என்ற வேட்கை என்பனவே அவரது சொத்துக்களாக இருந்தன "என்று குறிப்பிட்டுள்ளார் .

தொடரும்.



கட்டுரை

● இரா. சடகோபன்

# உலகையே அடிமையாக்கிய இலங்கைத் தேயிலை



**இலங்கை தேயிலை**

Image source - www.infinittravel.com

இக்கட்டுரைத்தொடர் இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களைகளையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

உலகிலேயே மிகச்சிறந்த தேயிலை இலங்கைத் தேயிலை” என்ற பெயரைப் பெற்றுக்கொள்ள ஜேம்ஸ் டெய்லரின் பங்களிப்பும், உழைப்பும் மிகவும் மகத்தானது. ஆனாலும் இந்த நிலையை அடைவதற்கு மிகப் பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாக இருந்தது. அதற்குக் காரணம் இலங்கைத் தேயிலைக்கு முன்னதாகவே சீன, இந்தியத் தேயிலைகள் உலக சந்தையை மிக வலுவாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தமையாகும். இதன் காரணமாக, ‘இலங்கைத் தேயிலை மிகச் சிறந்த தரத்தில் ஆனது’ என்ற தகுதியை வைத்து அது உலக சந்தையை வெற்றி கொள்ள வேண்டியதாக இருந்தது.

மிகக்குறுகிய காலத்திலேயே இலங்கையில் தேயிலை உற்பத்தித்துறை பன்மடங்கு வளர்ச்சி கண்டது. பல தேயிலைத் தோட்ட துரைமார்கள் ஜேம்ஸ் டெய்லரின் உற்பத்தி முறையைப் பின்பற்றலாயினர். 1882 ஆம் ஆண்டு 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டு 7 லட்சம் இறாத்தல் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை பின்னர் 1886ஆம் ஆண்டு சுமார் நான்கு வருடங்களிலேயே 900 தோட்டங்களில் செய்கை பண்ணப்படுமளவுக்கு விஸ்வரூபமெடுத்தது. 1907ஆம் ஆண்டில் 3 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட 170 மில்லியன் இறாத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இவ்வாண்டில் 16 ஆயிரம் தேயிலைத் தோட்டங்கள் உருவாகி இருந்ததுடன் இவற்றில் 4 லட்சம் கூலித் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இதற்கான மொத்த முதலீடு 50 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்டாக அதிகரித்திருந்தது.

அக்காலத்தில் புகழ்பெற்ற ஊடகவியலாளராக இருந்த ஜோன் பெர்குசன் (John Ferguson) இது தொடர்பில் வியந்து குறிப்பிடுகையில் : “வரலாற்றில் என்றும் இல்லாதபடி பாரியளவில் தேயிலையானது கோப்பி இருந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு ஆச்சரியப்படத்தக்க வகையில் அபிவிருத்தி அடைந்துள்ளது. அது, தான் இருக்கவேண்டிய எல்லைகளையும் தாண்டி இலங்கை முழுவதிலும் வியாபித்துள்ளது” என்றார். இதனை அடுத்துவந்த மூன்று வருடங்களில் இங்கிலாந்தில் அபர்டீன் என்ற இடத்தில் இயங்கிய உலகின் புகழ்பெற்ற தேயிலை வர்த்தக நிறுவனமான ’வெஸ்ட்லேண்ட் சிலோன் டீ நிறுவனம்’ (Westland Ceylon Tea Agency) உலகின் அனைத்து தேயிலைகளிலும் இன்றைய சிறந்த தேயிலை இலங்கைத் தேயிலை தான் என்பதற்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது” எனப் பிரகடனப்படுத்தியது.

1885 ஆம் ஆண்டு பிரித்தானியாவின் தேயிலைக் கொள்வனவில், சீனத் தேயிலை 62 சதவீதத்தைத் தனது பங்காகக் கொண்டிருந்தது. இது 1895 ஆம் ஆண்டில் 14 சதவீதமாக குறைந்து போனது. இக்காலத்தில் பிரித்

தானியா 35 சதவீதமான தேயிலையை இலங்கையிடம் இருந்து கொள்வனவு செய்தது. பிரிட்டனில் இவ்விதம் இலங்கைத் தேயிலையின் நுகர்வின் அதிகரிப்பும், ஏனைய நாடுகளில் உருவான தேயிலைக்கான அதிகரித்த கேள்வியும் இலங்கையில் தேயிலைப் பயிர்ச் செய்கைக்கான ஆர்வத்தை சடுதியாக அதிகரித்தன. இதனால் அழிந்து போய்க் கொண்டிருந்த கோப்பித் தோட்டக் காணிகளுக்கு திடீரென மவுசு அதிகரித்து, அவற்றை தேயிலை உற்பத்தியாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்கி, கோப்பிச் செடிகளை வேரோடு பிடுங்கி, அவை இருந்த இடத்தில் தேயிலைச் செடிகளை நாட்டினர். கோப்பிச் செடிகள் போலல்லாது தேயிலைச் செடிகள் அதி உயர் மலைப் பிரதேசங்களான 5000 அடி உயரப் பிரதேசங்களிலும் செழிப்பாக வளர்ந்தன. மத்திய மலை நாட்டின் மழை, வெயில், குளிர் கலந்த இதமான காலநிலை கோப்பியைவிட தேயிலைப் பயிர்ச்செய்கைக்கே மிக சாதகமாக அமைந்து இருந்தது.



The first known photograph of James Taylor

Image source - www.historyofceylontea.com

இத்தகைய சாதகமான தன்மைக்கு மேலதிகமாக ஏற்கனவே கோப்பிப் பயிர்ச்செய்கைக்கென ஏற்படுத்தப் பட்டிருந்த உட்கட்டமைப்பு வசதிகளான பாதைகள், பெருந்தெருக்கள், ரயில்வே போக்குவரத்து, துரைமார் பங்களாக்கள், தொழிற்சாலைகள், நீர் வடிகால் அமைப்புகள் என்பன காரணமாக பாரிய முதலீடுகளுக்கு தேவை ஏற்படவில்லை. மேலும் தலைநகரின் கப்பல் துறைமுக அபிவிருத்தி, 1869 ஆம் ஆண்டு சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டமை, கப்பல் போக்குவரத்தில் நீராவிக்கப்பல் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பவை எல்லாம் சேர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிக்கு மிக உயர்ந்த சக்தியாக அமைந்தன . இதன் காரணமாக தேயிலைச் சந்தையில் அசாம், சீனத் தேயிலை உற்பத்தியாளர்களின் ஆக்கிரமிப்பை இலங்கை முறியடிக்கக் கூடியதாக இருந்தது.

இந்தியாவின் தென் மாநிலங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட மிகக் குறைந்த செலவிலான கூலித் தொழிலாளர்கள் மற்றும் தேயிலைத் தூள் உற்பத்தி முற்றிலும் இயந்திர மயமாக்கப்பட்டமை, சீனப் பச்சைத் தேயிலையை விட இலங்கையின் கறுப்புத் தேயிலை விரும்பத்தக்க ருசி, மணம், குணம் என்பவற்றை கொண்டிருந்தமை போன்றனவும் இலங்கைத் தேயிலையின் வர்த்தகப் பெரு வெற்றிக்கு பாரிய பங்களிப்புச் செய்தன. இதற்கு மேலதிகமாக மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்ட சந்தைப்படுத்தல் உபாயங்களும் இந்த வெற்றியில் பங்காற்றின. இதன் பொருட்டு பல சர்வதேச சந்தைப்படுத்தல் உபாயங்கள் தெரிவு செய்யப்பட்டு விற்பனைக் கண்காட்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய கண்காட்சிகள் அவுஸ்திரேலியாவின் மெல்பர்ன் (1880 - 1881), லண்டன் 1886, கிளாஸ்கோ 1888, நியூசிலாந்தின் டுனேடின் (Dunedin) 1889, பாரிஸ் 1889 ஆகிய நகரங்களில் இடம்பெற்றன.

1880 ஆம் ஆண்டு ஒக்ரோபர் தொடக்கம் 1881 ஏப்ரல் வரையில் மெல்பர்ன் நகரில் இடம் பெற்ற வர்த்தகக் கண்காட்சியில் சுமார் 15 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வின் போது லூல் கொந்தரா தோட்டத்தின் தேயிலை உற்பத்திகளும் அதன் தயாரிப்பாளரான ஜேம்ஸ் டெய்லரும் மிக உயர்வாக பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். ஜேம்ஸ் டெய்லரின் தேயிலை உற்பத்தி வகைகள் என வரிசைப்படுத்தப்பட்ட ஒரேஞ் பெக்கோ, பிலவரி (Flavery ) பெக்கோ, சச்கொங் பெக்கோ, புரோக்கன் பெக்கோ ஆகிய தேயிலைத் தூள் வகைகள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த எல்லாத் தேயிலைகளிலும் பார்க்க சிறந்ததென முதல்தர திறமை சான்றிதழ்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டன. கண்காட்சியின் முடிவில் இடம்பெற்ற மிகச் சிறந்த தேயிலை உற்பத்திக்கான விருது வழங்கும் விழாவில் போட்டிக்கு விண்ணப்பித்திருந்த 78 வகையான பிரிவுகளில் 36 வகையான பிரிவுகளுக்கான முதல் தர திறமை விருதுகளை ஜேம்ஸ் டெய்லரின் உற்பத்திகள் பெற்றுக்கொண்டன. அந்த விருதுகளையும் சான்றிதழ்களையும் ஜேம்ஸ் டெய்லரின் சார்பில் லூல்கொந்தரா தோட்ட உரிமையாளர்கள் கெயார் மற்றும் டண்டாஸ் (Keir and Dundas) அன்ட் கம்பெனியினர் பெற்றுக்கொண்டனர். இந்தச் சம்பவம் தேயிலையையும் ஜேம்ஸ் டெய்லரையும் வாழ்நாள் முழுவதும் ஒன்றிலொன்று இரண்டறக் கலக்கச் செய்துவிட்டது. அந்தக் கண்காட்சியை தொடர்ந்து அவுஸ்திரேலியச் சந்தையில் இலங்கைத் தேயிலையின் விற்பனை பன்மடங்கு அதிகரித்தது.

ஆரம்பத்தில் இரண்டு லட்சத்து 92 ஆயிரத்து 670 இறாத்தல்களாக இருந்த அவுஸ்திரேலியாவுக்கான தேயிலை ஏற்றுமதி, 1889 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் 7



**இயந்திரமயமாக்கப்பட்ட தேயிலைத் தூள் உற்பத்தி**

**Image source - www.istockphoto.com**

லட்சம் இறாத்தல்களாக அதிகரித்தது. இதேபோல லண்டனில் *1883* ஆம் ஆண்டும்,*1886* ஆம் ஆண்டும் இரண்டு தேயிலை விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப் பட்டன. இவை இரண்டுமே மிகுந்த வெற்றியைத் தந் தன. இரண்டாவது கண்காட்சியில் *5.5* மில்லியன் மக் கள் கலந்து கொண்டிருந்தனர் என்றும் அங்கு இந்தியத் தேநீர் ஒரு கோப்பை விற்ற போது இலங்கை தேநீர் *3* கோப்பைகள் விற்பனையானது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உலகெங்கும் தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்காக சிலோன் டீ சிண்டிகேட் (Ceylon Tea Syndicate) மற்றும் தேயிலை நிதியம் (Tea Fund) ஆகிய அமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டன. *1886*ஆம் ஆண்டு மே மாதம் முதல் நவம்பர் மாதம் வரை நிகழ்த்தப்பட்ட கிளாஸ்கோ சர்வதேச கைத்தொழில், விஞ்ஞானம் மற்றும் கலைக் கண்காட்சி யில் இலங்கைத் தேயிலை "தேநீர் இல்லம்" மற்றும் "இலங்கை மன்று" ஆகிய மண்டபங்கள் உருவாக்கப் பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியின் போது இங்கிலாந்தின் விக்டோ ரியா மகாராணி எதிர்பாராத வகையில் இலங்கையின் தேநீர் இல்லத்திற்கு விஜயம் செய்து ஒரு கோப்பை தேநீர் அருந்தியமையானது உலகெங்கும் பேசப்படும் ஒரு பரபரப்புச் செய்தியானது. இது இலங்கைக்கு பெரும் விளம்பரத்தை பெற்றுக் கொடுத்தது. இந்த கண்காட்சியின் போது சராசரியாக ஒரு வாரத்துக்கு *6* ஆயிரம் இலங்கைத் தேநீர்க் கோப்பைகள் விற்றுத் தீர்ந் தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது . அதனை தொடர்ந்து பிரித்தானியர்கள் அதிகம் பேர் இலங்கைத் தேநீர் பிரியர்களானார்கள். இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலில் ஒரு முக்கியமான பிரமுகராக பின்னர் புகழ் பெற்ற தோமஸ் லிப்டன் *(1838 - 1931)* ஆரம்பத் தில் வெற்றிகரமான தேயிலை வர்த்தகராகவே பிரித்தா னியாவில் அறியப்பட்டிருந்தார். இவர் பிரித்தானியா வெங்கும் பல மாவட்டங்களிலும் பரவிக் கிடந்த தனது சங்கிலித்தொடர் விற்பனை நிலையங்களில் குறைந்த விலையிலான தேயிலைத் தூள் வகைகளை அறிமுகப்ப டுத்தினார். விலையை குறைக்க, இடைத்தரகர்களை நீக்கி விட்டு அவர்களின் வேலையையும் தன் கையில் எடுத்துக் கொண்டார்.

அவர் தேயிலையை சுவையாக்குவதற்கு மற்றுமொரு வழிமுறையையும் கையாண்டார். ஒவ்வொரு பிராந்தி யத்திலும் நிலத்தடி நீரின் சுவை அவற்றில் கலந்திருக் கும் இரசாயனங்களுக்கு அமைய வேறுபடும் என்பதை தெரிந்து வைத்துக்கொண்டு, அந்தத் தண்ணீருக்கு பொருந்தும் வகையில் தேயிலைத்தூள் அளவுகளை தயாரித்து ஒவ்வொரு மாவட்டத்துக்கும் என வித்தியா சமான தேயிலைப் பைக்கற்றுகளை அறிமுகப்படுத்தி னார். இதனாலும் லிப்டன் தேயிலை பிரசித்தி பெற் றது. தேயிலை உற்பத்திக்கான செலவை விட மிகப் பெருந்தொகையான பணம் தேயிலையைச் சந்தைப்ப டுத்துவதற்காகவும் விளம்பரப்படுத்துவதற்காகவும் செல விடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று மாத்திரம் அல்ல இன்றும் அதில் எந்தவிதமான மாற்ற மும் இல்லை. தொலைக்காட்சியில் அரை நிமிட விளம் பரத்துக்கு ஒரு லட்சம் ரூபாவை செலவிடுகிறார்கள். அன்றாடம் "வட்டவல காட்ட" "பொகவந்தலாவ காட்ட" "கொட்டகல காட்ட " என்று இந்தச் சொற்களை எத் தனை முறைகள் கேட்கிறோம். ஆனால் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் சம்ப ளத்தை கொஞ்சம் கூட்டிக்கொடு என்று கேட்டால் மாத்திரம் அவர்களின் மூக்குநுனி உடனேயே வேர்த்து விடுகின்றது .

தொடரும்.



கட்டுரை

இரா. சடகோபன்

# தோட்டத் தொழிலாளர்களும் அதிகார வர்க்கத்திற்கெதிரான முரண்பாடுகளும்

இக்கட்டுரைத்தொடர் இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம் பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமி ழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களைகளையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது.

மலையக மக்களின் வாழ்வியல், அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம் போன்றவை பற்றி எல்லாம் ஆராய்ந்த ஆய்வாளர்கள் “ஏன் இந்த மக்கள் கூட்டத்தினர் தம்மை நசுக்கி, அடக்கி, ஆளுகின்றவர்களுக்கு எதிராக கிளர்ந்து எழவில்லை?” என்று வியப்புடன் கேள்வி எழுப்பியுள்ளனர். இவ்வளவு துன்ப துயரங்களையும் பொறுமையாக சகித்துக் கொண்டு எவ்வாறு இவர்களால் இவ்வளவு நீண்ட காலம் வாழ முடிந்தது? என்று கேள்வி எழுப்பி அதற்கு விடை காணவும் முயன்றிருக்கிறார்கள். நான் முன் குறிப்பிட்டப்படி இந்த மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தமக்கெதிராகக் கிளர்ந்தெழக்கூடும் என்ற பயம் அதிகார வர்க்கத்துக்கு எப்போதும் இருக்கவே செய்தது.

வரலாற்றுக் காலம் முழுவதும் "நீங்கள் எமக்கு எதிராக ஏதும் செய்ய முற்பட்டால் அதற்கான கடுமையான தண்டனை உங்களுக்கு வழங்கப்படும்" என்ற மௌனமான பயமுறுத்தல் இம்மக்களை எழ விடாது தடுக்க உபயோகிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பயமுறுத்தல் இந்த மக்களுக்கு மாத்திரமின்றி ஒடுக்கப்படும் மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றனரோ, அங்கெல்லாம் ஒடுக்குமுறையாளர்களால் விடுக்கப்படும் பயமுறுத்தலாகும் என்பது பொதுவான ஒரு எடுகோள். எனினும் அவ்வப்போது தமக்கு அதிகார வர்க்கத்தின் மீது கோபம் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் பல்வேறு எதிர்ப்பு செயல்கள் மூலம் தம் கோபத்தை கொட்டித் தீர்த்துக் கொண்டார்கள் என்பதனை இவர்களது வரலாற்றை நுணுகி ஆராயும் போது புரிந்து கொள்ள முடிகின்றது.

அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளாக பின்வரும் செயல்களை ஆய்வாளர்கள் பட்டியல்படுத்தியுள்ளனர் : வரலாற்றுக் காலம் முழுவதுமே அடிமைமுறையும் அதிகார அடக்குமுறையும் எங்கெல்லாம் காணப்பட்டதோ அங்கெல்லாம் அடக்கப்பட்டவர்கள் மௌனமாக ஒருவித கீழ்படியாமையையும் "நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்" என்ற மெத்தனப் போக்கையும் கடைப்பிடித்துள்ளனர் என ஈ. பி. தொம்சன் (E. P. Thompson) என்ற ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

அவர் அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது : அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் தாம் கொண்டு நடத்திச்செல்கின்ற திருப்தி இல்லாத வாழ்க்கை காரணமாகவும், கட்டாயம் அவ்வாழ்க்கை தம்மீது திணிக்கப்படுள்ளமையாலும், அன்றாடம் ஏதோ ஒரு விதத்தில் தம் வெறுப்பையும் இயலாமையையும் வெளிப்படுத்திக் கொண்டேதான் இருந்தார்கள். இதனை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும் இது 1, 3, 9 என பெருக்கல் விதிப்படி பெருகி அரசியலிலும், பொருளாதாரத்திலும் பாரிய "கடலடித்தள தடைகள் போல்" உருவாகி பெரும்பாதிப்பை ஏற்படுத்தியது என்பதனைப் பலரும் உணர்ந்திருக்கவில்லை. இவ்வாறுதான் அவர்கள் அரசியல் ரீதியிலான தமது இருப்பை வெளிப்படுத்தினார்கள். தாம் செல்லும் பாதையில் மறைந்திருக்கும் இந்தப் பாரிய தடைகளை அறிந்திராத கப்பல் ஓட்டிகள், வெளியே துருத்திக் கொண்டிருக்கும் உடைந்த கப்பல்களின் எச்சங்கள் தொடர்பில் மட்டுமே அதிக அச்சம் கொள்கிறார்கள் என்பது போன்றது தான் இது - என்று அவர் தனது ஆய்வில் கருத்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் கூட நம்மால் முடிந்த வரையில் எதிர்ப்பை காட்டித்தான் வந்திருக்கிறார்கள் என்பதற்கான பல சான்றுகள் உள்ளன. அத்தகைய எதிர்ப்புக்களில் ஒன்றுதான் "தாம் அவசியமான நேரத்தில் வேலைக்குப் போகாமல் விடுதல்" அவ்விதம் செய்வதன் மூலம் தொழிலாளர் மீதான தோட்டத்துரைமார்களின் அதிகாரத்துக்கு சவால்விட்டதுடன் உற்பத்தியினையும், கிடைக்கும் இலாபத்தையும் குறைவடையச் செய்ய அவர்கள் முயற்சித்தார்கள். அவர்கள் அவ்வாறு மலைக்கு வேலைக்குச் செல்லாமல் பறிக்காமல் விட்ட கொழுந்து நிரந்தரமாக பறிக்கப்படாமல் போய்விட்டதாகவே கருதப்படவேண்டும். அதனை வேறு ஒரு தினத்தில் சென்று பறிக்க முடியாது. மற்றும் வேறு ஒரு தினத்தில் வேலைக்குச் செல்வது என்பது அது அன்றைய தினத்துக்கான வேலையாக மட்டுமே இருக்கும். இவ்விதம் மறைமுகமாக நமது எதிர்ப்பை அவர்கள் தொடர்ந்து காட்டி வந்திருக்கிறார்கள் என்பது தோட்டத்துரைமாருக்கு இறுதி வரை தெரியாமலேயே போய்விட்டது.

தொழிலாளர்கள் திடீரென்று வேலைக்கு வராமல் விடுவது தோட்டங்களில் பெரும் பிரச்சினையாக இருந்தது. அது தோட்டத்துரைமார்களின் அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்துவதாக இருந்தது மட்டுமன்றி தோட்டத்தின் உற்பத்தி, அறுவடை, வருமானம் என்பவற்றையும் பாதித்தது. இதனை தடுப்பதற்காக வேலையைப் புறக்கணித்தல் மற்றும் கவனக்குறைவாக நடந்து கொண்டமை ஆகிய குற்றங்களுக்காக ஒரு தோட்டத்தின் மொத்த தொழிலாளர் தொகையின் 1450 பேரில் 577 பேர் மீது 1915 ஆம் ஆண்டு 1865 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குற்றவியல் சட்டப் பிரிவு 11இன் கீழ் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டனர். பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் வேலையை பாதியில் விட்டுச் செல்லுதல் அல்லது தாமதமாக வேலைக்கு சமுகமளித்தல் போன்ற காரியங்கள் மூலம் துரைமார்க



**அதிகாரவர்க்கத்திற்கெதிராக போராடும் தொழிலாளர்கள்**

Image source - www.vaaramanjari.lk

ளுக்கு கோபத்தையும் எரிச்சலையும் உண்டு பண்ணி னார்கள் என்றும் கூறப்படுகின்றது.

அதிக மது அருந்துகின்றமையும், இவ்விதம் மது அருந்திவிட்டு தம்முள் சண்டை போட்டுக் கொள்வ தும், இத்தகைய சண்டைகளின் போது கங்காணிக ளையும் துரைமார்களையும் கெட்ட வார்த்தைக ளால் திட்டுவதும் என்பன ஒருவிதத்தில் அதிகா ரத்துக்கு எதிரான எதிர்ப்புணர்வே என்று ஆய்வாளர் பெல்ப்ஸ் பிரவுண் (Phelps Brown) குறிப்பிட்டுள்ளார். பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர்கள் கூட்டமாக நன்கு குடித்துவிட்டு வன்முறைகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய வன்முறைகளால் தம் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் என்று துரைமார்கள் பயந்து பொலிஸ் பாதுகாப்பை நாடிய சந்தர்ப்பங்களும் இடம்பெற்றிருக்கின்றன.



வேலைக்குச் செல்லாமல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள்

Image source - www.bbc.com

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் 1886 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் நெல் விளையும் பல மாவட்டங்களில் வறட்சி ஏற்பட்டதால் நெல் விளைச்சல் வீழ்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக இலங்கையிலும் அரிசிக்குத் தட்டுப் பாடு உண்டானது. பதுக்கல் வியாபாரிகள் தானியங் களை பதுக்கி அதிக விலைக்கு விற்றனர். இதனை தொடர்ந்தும் சகித்துக்கொள்ள முடியாத தோட்டத் தொழிலாளர்கள் கூட்டமாக கண்டி நகருக்கு சென்று பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தானியக் களஞ்சியசாலை களை உடைத்து திறந்து அரிசியையும் தானியங்களை யும் பலவந்தமாக எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன் காரணமாக கண்டி நகரத்தில் பெரும் கலவரம் ஏற்பட்டது. அது கண்டி அரசாங்க அதிபருக்கு அறிவிக் கப்பட்டது. உடனே ஸ்தலத்துக்கு விரைந்த அரசாங்க அதிபர் எல்லாக் கடைகளையும் களஞ்சியசாலைகளை யும் திறக்கச் செய்து உரிய விலையில் அவற்றை விற் பனை செய்ய நடவடிக்கை எடுத்தார். இந்தச்செயலால் மேலும் கலவரம் பரவாமல் தடுக்கப்பட்டது. அதே போல தோட்டத் தொழிலாளர்கள் துரைமார்களுக்கு எதிராகவும், கங்காணிகள், மேற்பார்வையாளர்களுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்த சம்பவங்களும் வரலாற்றில் பதிவாகியுள்ளன. இதற்கு மேலதிகமாக கங்காணிகளும் துரைமார்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டுள்ள மையும் வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. 1866 ஆம் ஆண்டு ஹந்தானா தோட்டத்துறையாக பணிபுரிந்த ஜோன் பால்க்னர் (John Falconer) என்ற துரை, கங்காணி ஒருவனால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தொடர்பில் வழக்கு ஒன்று பதிவாகியுள்ளது.

மேற்படி துரை, பல தடவைகள் அந்தத் தோட்டத்தின் கங்காணி சரியாக வேலை செய்யவில்லை என்று திட் டித்தீர்த்துள்ளார். அவர் ஒரு கடுமையான போக்குள்ள வர் என்று தொழிலாளர் மத்தியில் கருத்து நிலவியது. ஒருமுறை அந்தக் கங்காணி அத்துரையைப் பார்த்து "உனக்கு என்ன தெரியும்? உன்னை மாதிரி எத்தனை துரையை நான் பார்த்திருக்கிறேன். நீ இன்னும் எத்தனை நாள் இந்த தோட்டத்தில் இருக்கிறாய் என்று பார்ப் போம்" என்று கோபமாக கத்தியிருக்கிறான். அதன் பின் னரும் ஆத்திரத்தை அடக்க முடியாமல் அந்த துரையை கடுமையாக தாக்கி கொலை செய்து விட்டான் கங் காணி.

இதேபோல் 1880 களில் மற்றுமொரு சம்பவத்தின்போது பெனிசன் (Benison) என்ற இளம் துரை கொலை செய்யப் பட்ட நிகழ்வு ஒன்றும் பதிவாகியுள்ளது. இதன்போது மேற்படி துரையின் வைப்பாட்டியான சிங்களப் பெண்ணை பாலியல் ரீதியில் வம்புக்கிழுத்தமைக்காக பென்சன் துரை அவரது சமையல்காரனை நையப்பு டைத்திருக்கிறார். அதற்கு பழிவாங்குவதற்காக தருணம் பார்த்திருந்த அந்த சமையல்காரன் "அப்பு" என்ற இன் னொரு துரையின் கைத்துப்பாக்கியை எடுத்து அதனைக் கொண்டே துரையை சுட்டு கொன்றுள்ளான். இதே காலப்பகுதியில் பெத்தே வெல்ல என்ற தோட்டத்தில் சேவை பார்த்த ஜோன்சன் (Johnson) என்ற இளம் துரை, கத்தியால் குத்தியும் வெட்டியும் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். இதில் பல தொழிலாளர்கள் சம்பந் தப்பட்டிருந்தனர். இவரும் தொழிலாளரை கடுமையாக வேலை வாங்குபவர் என்று பெயர் பெற்றிருந்தார்.

ஏனைய எல்லாச் சமூகங்களிலும் காணப்படுவது போலவே பெருந்தோட்டத் தொழிலாளர் சமூகத்திலும் வீர தீரமா கப் பேசப்பட்ட பல கதைகளும் காணப்படத்தான் செய் கின்றன. "பெருமாள் வெட்டு" என்பதும் அத்தகைய ஒரு கதைதான். நன்றாக "கவ்வாத்து" வெட்டுவான் என்று பெயர் வாங்கியிருந்த பெருமாள் என்ற அந்த இளம் முரட்டு தோட்டத் தொழிலாளிக்கு, அப்போதுதான் புதிதாக வேலை பழக வந்திருந்த வெள்ளைக்கார துரை எவ்வாறு கவ்வாத்து வெட்ட வேண்டும் என்று கற்றுக் கொடுக்க முற்பட்டிருக்கிறார்.அவர் அவன் கையில் இருந்த கத்தியை பறித்து "தேயிலைத் தூரிலிருந்து 15 அங்குலம் மேலே இப்படி வெட்ட வேண்டும்" என சொல்லிக் கொடுத்தார்."எனக்கே குண்டடிக்கிறாயா..?" என்று மனதுக்குள் கறுவிக் கொண்ட பெருமாள் ஆத்தி ரத்துடன் அவர் கையில் இருந்த கத்தியை பிடுங்கி "அப் படி இல்லீங்க.. தொர, இந்தா இப்படித்தா" என்று கூறி அவர் வலது கரத்தை இழுத்தெடுத்து முழங்கைக்கு சற்று மேலே ஒரே வெட்டு வெட்டினான். அவன் துண்டித்த கை சரியாக 15 அங்குலம் இருந்ததாக கூறப்படுகிறது. "பெருமாள் வெட்டு" என்ற கதை இப்போதும் அங்கே பேசப்பட்டு வருகிறதென்று வெலன்டின் டேனியல் (Val entine Daniel) என்ற ஆய்வாளர் தனது ஆய்வு குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தொடரும்.

# மருத்துவர் கிறீனின் யாழ்ப்பாண வருகை


இலங்கையின் வடபகுதிக்கு வருகை தந்த அமெரிக்க மருத்துவ மிசனரிகளின் வரலாற்றுடன் ஆரம்பமாகும் இக்கட்டுரைத் தொடர், யாழ்ப்பாணத்தில் 200 வருடங்களுக்கு முன் அறிமுகமான ஆங்கில மருத்துவம், அதன் பரவுகையை இன்றைய தமிழ்ச் சமூகத்துக்கு வரலாற்றுக் குறிப்புக்களூடாகத் தருகின்றது. யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மருத்துவ மிசனரிகளின் ஈடிணையற்ற தன்னார்வ மருத்துவத் தொண்டை இன்றைய தமிழ் உலகுக்குத் மீள நினைவூட்டுகிறது. 1820 இல் ஆரம்பமாகும் வடபகுதி ஆங்கில மருத்துவ வரலாற்றை மருத்துவர்களது வாழ்க்கை வரலாற்றுக்கூடாக 2022 வரை எடுத்துச் சொல்ல விளைகிறது.



**கட்டுரை**


● பாலசுப்ரமணியம் துவாரகன்


*அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த 3 ஆவது தகுதிவாய்ந்த மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிறீன். இவரது தந்தை: வில்லியம் கிறீன், தாயார்: யூலியா பிளிம்டன். பதினொரு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் கிறீன் 8 ஆவது பிள்ளை. கிறீன் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாநிலத்தின் வூஸ்டா என்னுமிடத்திலுள்ள கிறீன் ஹில் என்னும் கிராமத்தில் 1822 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி பிறந்தார்.*



மருத்துவர் கிறீன் 1848இல் மானிப்பாயில் ஆரம்பித்த இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரி- மருத்துவமனை

Image Source - Medical Museum Teaching Hospital Jaffna

*கிறீனுக்கு 11 வயது ஆகும் போது அவரது தாய் யூலியா காலமானார். மூத்த சகோதரியின் அரவணைப்பில் வளர்ந்த கிறீன், பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக தமது சகோதரிகளிடமும் தந்தையாரிடமும் வீட்டிலே கற்றுத் தேறினார். கிறீன் பொதுவாகவே உடல்வலிமை குறைந்தவராகக் காணப்பட்டார். வாழ்வின் பல்வேறு காலப்பகுதிகளில் கிறீனுக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டது.*

*கிறீன் 1841 இல் நியூயோர்க்கிலுள்ள மருத்துவர்கள் மற்றும் சத்திரசிகிச்சை நிபுணர்களுக்கான கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்தார். இங்கே மருத்துவக் கல்வியுடன் ஜேர்மன், இலத்தீன், கேத்திரகணிதம், இயற்கை விஞ்ஞானம் மற்றும் தத்துவம் முதலான பாடங்களையும் கற்று, பரந்த அறிவை வளர்த்துக் கொண்டார். கிறீன் மருத்துவ மாணவனாக இருந்த காலப்பகுதியில் ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் இருதடவைகள் அவரது மருத்துவக் கல்வி தடைப்பட்டது; இதனால் மருத்துவக் கல்வியை 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்ய இயலவில்லை; ஓராண்டு தாமதமாகி 1845 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி மருத்துவராகத் தகுதி பெற்றார்.*

*எப்போதும் ஆன்மிகத்திலும் மிசனரி சேவையிலும் நாட்டமுள்ளவராக விளங்கிய மருத்துவர் கிறீன், பிறதேசங்களுக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க மிசன் பணியகத்துடன் 1846 இல் தொடர்புகளை*



**சாமுவேல் பிஸ்க் கிறீன்**

Image Source
Medical Museum Teaching Hospital Jaffna

ஏற்படுத்திக் கொண்டார்.
இலங்கையில் அமெரிக்க மருத்துவ மிசனரியின் பணியை ஆற்றுவதற்கு விரும்பிய மருத்துவர் கிறீன், தமது விருப்பத்தைக் கடிதம் மூலம், பிற தேசங்களுக்கு மிசன் தொண்டர்களை அனுப்பும் அமெரிக்க மிசன் பணியகத்துக்கு (ABCFM) அனுப்பினார். கிறீனது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்ட அமெரிக்க மிசன் பணியகம் கிறீனுக்கு அனுமதி வழங்கும் நியமனக் கடிதத்தை அனுப்பியது. கிறீன் இந்தக்கடிதத்தை 1846 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பெற்றுக் கொண்டார். அனுமதிக் கடிதம் கிடைத்ததும் கிறீன் இலங்கைப் பயணத்துக்கான ஆயத்தங்களையும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களைக் குறித்தும் வினவி, அமெரிக்க மிசன் பணியகத்துக்குக் கடிதம் வரைந்தார்.

கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, மற்றும் ஜேர்மன் முதலான மொழிகளைக் கற்றிருந்த கிறீன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு முன்பே அமெரிக்காவிலே தமிழ் மொழியைக் கற்க விரும்பினார். 1833-1843 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலே அமெரிக்க இலங்கை மிசனில் கடமையாற்றியவரும், நியுஜெர்சியில் வசித்துவந்தருமான வண. சாமுவேல் ஹச்சிங்ஸ் அவர்களிடம் சில வாரங்கள் தமிழ் படிப்பதற்கு விரும்பினார். இதற்கான அனுமதியைக் கேட்டு அமெரிக்க மிசன் பணியகத்துக்குக் கடிதம் வரைந்தார்; ஹச்சிங்ஸை சந்தித்து உரையாடியும் வந்தார்.

கிறீன் யாழ்ப்பாணத்தில் தனக்கு ஏற்படும் இன்றியமையாத செலவுகளையும், ஏற்கனவே தாம் பயணத்துக்கு தயார் செய்தபோது ஏற்பட்ட செலவுகளையும் குறித்துக் கணக்கு அறிக்கையைத் தயாரித்து அமெரிக்க மிசன் பணியகத்துக்கு அனுப்பியிருந்தார். அமெரிக்காவிலிருந்து குதிரை வண்டில் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல அனுமதியும் பெற்றி ருந்தார். 1840 களில் யாழ்ப்பாணத்திலே குதிரை ஒன்றின் விலை 100 அமெரிக்க டொலர்; அதேவேளை அமெரிக்காவிலே தரம் வாய்ந்த கை மணிக்கூடு ஒன்றின் விலை 25 அமெரிக்க டொலர்.
கிறீன் அமெரிக்காவின் போஸ்டன் துறைமுகத்திலிருந்து “ஜேக்கப் பேர்க்கின்ஸ்” என்ற கப்பலில் இலங்கையை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார். நீண்ட கடற்பயணத்தின் போது தமிழ்மொழியைக் கற்பதற்காக தமிழ் இலக்கண நூல் ஒன்றை எடுத்துச் செல்ல விரும்பி அமெரிக்க மிசன் சங்கத்துக்கு விண்ணப்பித்தார். எனினும் சில தினங்களில் திரு. கிரேன் என்பவரிடம் இருந்து தமிழ் இலக்கண நூல் ஒன்று கிறீனுக்குக் கிடைத்தது. இதனை அமெரிக்க மிசன் சங்கத்துக்குக் கடித மூலம் தெரியப்படுத்தினார்.

மருத்துவர் கிறீன், போஸ்ரன் துறைமுகத்திலிருந்து 1847 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி “ஜேக்கப் பேர்க்கின்ஸ்” என்ற கப்பலில் யாழ்ப்பாணம் நோக்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணத்தை ஆரம்பித்தார். அந்தக் கப்பல், அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைத் தாண்டி இலங்கைத் தீவைச் சுற்றிச் சென்று 1847 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி சென்னையை அடையும் வரை நான்கரை மாதங்கள் எங்குமே தரிக்கவில்லை.

கப்பல் ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையை அண்மித்தபோது மிகக் கடுமையான புயல் தாக்கியதால் கவிழும் நிலைக்குச் சென்றது. இதன்போது கிறீன் காயமடைந்தார். கப்பல் இலங்கைத் தீவைச் சுற்றி பயணித்த போது தீவின் அழகையும் அமைப்பையும் கிறீன் பார்வையிட்டவாறு சென்றார். மருத்துவர் கிறீன் சென்னையில் அமெரிக்க மிசனரிகளுடன் இரு வாரங்கள் தங்கியிருந்துவிட்டு, 1847 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி பருத்தித்துறை வந்தடைந்தார். மருத்துவர் கிறீனது 200 ஆவது பிறந்த ஆண்டை யாழ்ப்பாணத்தில் நினைவு கூருதலுக்கான சொற்களின் பொழிவு:

அமெரிக்க மிசனரி மருத்துவரான சாமுவேல் பிஸ்க் கிறீன் இலங்கையில் முதலாவது மேலைத்தேச மருத்துவக் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் 1848 இல் நிறுவினார். இதுவே தென்கிழக்காசியாவில் நிறுவப்பட்ட முதலாவது மேலைத்தேச(அலோபதி) மருத்துவக் கல்லூரியாகக் கருதப்படுகிறது.
மருத்துவர் கிறீன் தமிழ்மொழியை ஆழமாகக் கற்றுத் தமிழில் சொற்பொழிவாற்றவும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கவும் கலைச்சொல்லாக்கவும் வல்ல தமிழ்ப் புலமையாளர்.
கிறீன் ஆங்கில மொழியிலிருந்த 8 பிரதான மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்ததுடன் வேறு சில அறிவியல் நூல்களையும், கலைச் சொல் அகராதிகள், மருத்துவக் கையேடுகள், கட்டுரை கள் முதலான வற்றையும் தமிழாக்கம் செய்துள்ளார்; இவை 4500 பக்கங்களில் வெளிவந்துள்ளன.
மருத்துவர் கிறீன் அவர்களை தமிழின் கலைச் சொல்

லாக்க முன்னோடி என்று 'தமிழக மற்றும் ஈழ' நாட்டுத் தமிழறிஞர்கள் போற்று கின்றனர்.

உலகிலே முதன் முதலில் 1864 ஆம் ஆண்டு தமிழ்மொழி மூலம் மேலைத் தேச மருத்துவம் மருத்துவர் கிறீன் அவர்களால் இற்றைக்கு 150 வருடங்க ளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் கற்பிக்கப்பட்டது. (*The very 1st Tamil medium batch was started in 1864 and taught by Dr. S. F. Green at the Medical School in Manipay*).

யாழ். போதனா மருத்துவமனையா னது யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த சேர். பெர்சிவல் ஒக்லண்ட் டைக் அவர்களால் 1850 இல் ஆரம்பிக்கப் பட்டது. மருத்துவர் கிறீன் அவர்களே இம் மருத்துவமனையில் கடமையாற் றிய முதலாவது வருகை சத்திரசிகிச்சை நிபுணர் ஆவர்.

1850 முதல் 1907 வரையான காலப்ப குதியில் யாழ். போதனா மருத்துவம னையில் (யாழ்ப்பாணம் ஆபத்துக்கு தவி வைத்தியசாலை) கடமையாற்றிய மருத்துவர்களிற் பெரும்பாலானோர் மருத்துவர் கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்றவர்களே.


தமிழ்நாட்டில் மொழிப்போராட்டம் தீவிரமடைந்த காலத்தில் தமிழ்நாட்டில் அனைத்திலும் தமிழுக்கே முதலிடம் என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

தமிழ் மொழியில் அறிவியலும் மருத்துவமும் கற்பிக்கப்ப டல் வேண்டும் என்ற கல்விக்கொள்கை முன்வைக்கப் படு கிறது.

தமிழ்நாட்டிலே தமிழில் ஆங்கில மருத்துவத்தைப் கற் பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்மொழிந்த போது, திராவிட இயக்கத் தலைவர்களால் தமிழ்நாட் டின் நடமாடும் பல்கலைக்கழகம் என்று போற்றப் பட்ட நாவலர் இரா. நெடுஞ்செழியன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"நாம் இப்போது தான் தமிழிலே அறிவி யலை, மேலைத்தேச மருத்துவத்தைக் கற் பிப்பது பற்றிச் சிந்திக்கின்றோம். ஆனால் சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணத் திலே ஓர் அமெரிக்கர் தமிழில் மேலைத் தேச மருத்துவத்தைக் கற்பித்தார் என்ற செய்தியை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்."

(தொடரும்)




**மனுஷவங்காதிபாதம் - 1892இல் மானிப்பாயில் உள்ள ஸ்திரோங் & அஸ்பெரி அச்சுக்கூடத்தில் அமெரிக்க இலங்கை மிசனுக்காக அச்சிடப்பட்டது**


Image source - www.noolaham.net

**கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, மற்றும் ஜேர்மன் முதலான மொழிகளைக் கற்றி ருந்த கிறீன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதற்கு முன்பே அமெரிக்காவிலே தமிழ் மொழியைக் கற்க விரும்பினார். 1833-1843 காலப்பகுதியில் யாழ்ப்பா ணத்திலே அமெரிக்க இலங்கை மிசனில் கடமையாற்றியவரும், நியுஜெர்சி யில் வசித்துவந்தருமான வண. சாமுவேல் ஹச்சிங்ஸ் அவர்களிடம் சில வாரங்கள் தமிழ் படிப்பதற்கு விரும்பினார்.**




**சாமுவேல் பிஸ்க் கிறீனினது கல்லறை**

Image source - www.findagrave.com




**எழுத்துக்களின் தெளிவுக்காக செம்மைப்படுத்தப்பட்ட பிரதி**

# யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருத்துவத்தின் வெற்றிக்கு வித்திட்ட மருத்துவர் கிறீன்

இலங்கையின் வடபகுதிக்கு வருகை தந்த அமெரிக்க மருத்துவ மிசனரிகளின் வரலாற்றுடன் ஆரம்பமாகும் இக்கட்டுரைத் தொடர், யாழ்ப்பாணத்தில் 200 வருடங்களுக்கு முன் அறிமுகமான ஆங்கில மருத்துவம், அதன் பரவுகையை இன்றைய தமிழ்ச் சமூகத்துக்கு வரலாற்றுக் குறிப்புக்களூடாகத் தருகின்றது. யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மருத்துவ மிசனரிகளின் ஈடிணையற்ற தன்னார்வ மருத்துவத் தொண்டை இன்றைய தமிழ் உலகுக்குத் மீள நினைவூட்டுகிறது. 1820 இல் ஆரம்பமாகும் வடபகுதி ஆங்கில மருத்துவ வரலாற்றை மருத்துவர்களது வாழ்க்கை வரலாற்றுக்கூடாக 2022 வரை எடுத்துச் சொல்ல விளைகிறது.

**"ஒரு சிறந்த தளபதி யுத்தம் செய்யாமல் ஒரு நகரத்தைக் கைப்பற்றவே விரும்புவான்." சன் சூ.**




கட்டுரை

● பாலசுப்ரமணியம் துவாரகன்


சீனதேசத்துப் போரியல் வல்லுநர் சன் சூ வினால் 2500 வருடங்களுக்கு முன்னர் மூங்கில் கீற்றுக்களில் எழுதப்பட்ட போர்க் கலை (*The Art of War*) என்னும் நூலானது யுத்த மூலோபாயங்களைக் குறித்த ஆலோசனை நூலாக இருந்த போதிலும், சிக்கலான நிலைமைகளில் தீர்மானங்களை மேற்கொள்ள உதவும் தலைமைத் துவ வழிகாட்டி நூலாகவும் விளங்குகிறது.

கடந்த நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களின் மனங்களை வெற்றி கொண்ட அந்நிய தேசத்தவர்கள் பலர் இருந்தார்கள். யாழ்ப்பாணத்திலே வாழ்ந்து தன்னலமற்ற பணியாற்றி தமிழர்களின் மனதிலே இடம் பிடித்த, மருத்துவத்துடன் தொடர்புடைய மறைந்து போன இருவரை இங்கே மீள நினைவூட்டுகின்றேன். ஒருவர், வடமாகாணம் என்று அழைக்கப்பட்ட அன்றைய யாழ்ப்பாண பிராந்தியத்தின் பிரித்தானிய குடியேற்ற நாட்டுப் பிரிதிநிதி, சேர் பேர்சிவல் ஒக்லண்ட் டைக் (*Sir. Percival Acland Dyke: ProConsul of the British in mid nineteenth Century Northern Sri Lanka. Dyke had lorded over as an almost autonomous administrator*).

"புரோகொன்சல்" - ஓர் அரசன் தனது சொந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பது போல் தமது ஆளுகைக்கு உட்பட்ட குடியேற்ற நாட்டு மக்களைப் பாதுகாப்பது பிரித்தானிய புரோ கொன்சல்களது கடமை. டைக் யாழ்ப்பாணத்தின் முதலாவது அரசாங்க அதிபராக (01.10.1829 - 09.10.1867) கடமையாற்றியவர். இவரே யாழ். போதனா மருத்துவமனையின் ஸ்தாபகர். டைக், யாழ்ப்பாண மக்களுக்கு அளப்பரிய சேவை செய்த அரச அதிகாரிகளில் ஒருவர். தனது சொந்த வருமானத்தில் 27 ஏக்கர் நிலப்பரப்பை வாங்கி இன்று பழைய பூங்கா என்று அழைக்கப்படும் காணியில் மரங்களை நாட்டி, வளர்த்து யாழ். நகரத்தில் ஒரு பூங்காவை உருவாக்கியவர்.

அதனை யாழ்ப்பாண மக்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்காக தனக்குப் பின்னரும் எவரும் அதனை மீள உரிமைகோராத வண்ணம் விக்ரோரியா மகாராணியாரிடமிருந்து விசேட உறுதியையும் பெற்றிருந்தார். டைக் தனது ஆளுகைக்குள் இருந்த யாழ்ப்பாணத்தில் மக்கள் அச்சமின்றி வாழும் வகையில் சட்டம் ஒழுங்கைப் பேணியவர். அன்றைய யாழ்ப்பாணத் தமிழர்கள் டைக் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். பேர்சிவல் ஒக்லண்ட் டைக் தனது சம்பளத்தின் பெரும் பகுதியை யாழ். போதனா மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளுக்காகவும் செலவிட்டவர். கோப்பாயில் வசித்து வந்த டைக்



**சாமுவேல் ஃபிஸ்க் கிறீன்**
(Dr Samuel Fisk Green.
**அக்டோபர் 10, 1822 – மே 28, 1884)**
**Image source - ourjaffna.com**

*09.10.1867* அன்று மறைந்த போது , அவருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக வட மாகாணத்தில் இயங்கிய கச்சேரி, நீதிமன்றங்கள் மற்றும் சுங்கம் முதலான அரச நிறுவனங்கள் யாவும் 5 தினங்கள் பூட்டப்பட்டன. டைக் யாழ்ப்பாண மக்களால் ராஜா என்று அழைக்கப்பட்ட கௌரவத்துக்குரியவர்.

மற்றையவர், மருத்துவர் கிறீன். முன்னவர் பிரித்தானியர், பின்னவர் அமெரிக்கர்.

*1847* ஆம் ஆண்டு ஒக்ரோபர் *6* ஆம் திகதி பருத்தித்துறையை வந்தடைந்த மருத்துவர் கிறீன் வல்வெட்டித்துறையில் வசித்த வண. கோப் பாதிரியாரது இல்லத்தில் ஓரிரவு தங்கி *1847* ஒக்ரோபர் *8* ஆம் திகதி வட்டுக்கோட்டையைச் சென்றடைந்தார். அடுத்தநாளே தமிழ் படிக்க ஓர் ஆசிரியரையும் அமர்த்திக் கொண்டார். ஓர் ஆண்டு காலத்துக்குள் தமிழில் சொற்பொழிவாற்றவல்ல தமிழ்ப்புலமையாளராக வேண்டும் என்பதை கிறீன் இலக்காகக் கொண்டிருந்தார். அதே நேரம் வட்டுக்கோட்டையிலே சிறு டிஸ்பென்சரி ஒன்றை நிறுவி நோயாளர்களைப் பார்வையிடவும் ஆரம்பித்தார்.

*1847* ஆம் ஆண்டு ஒக்ரோபர் *20* ஆம் திகதி நோயாளர் ஒருவரைப் பார்வையிடுமாறு கிறீனுக்கு அழைப்பு வந்தது. அடுத்து நிகழ்ந்தவை, யாழ்ப்பாணத்தில் கிறீன் மேற்கொண்ட முதலாவது சத்திர சிகிச்சை, தன்னை உலகப் புகழ்பெற வைக்கும் என்று கிறீனும் நினைத்திருக்கவில்லை; கிறீனை, யாழ்ப்பாணத் தமிழர்கள் கடவுளின் தூதுவர் என்று கருதி வியப்பார்கள் என்று அமெரிக்க மிசனரிகளும் நினைத்திருக்கவில்லை.

*1884* இல் மருத்துவர் கிறீன் மறைந்த போது மானிப்பாயில் கிறீன் ஆரம்பித்த மருத்துவக் கல்லூரியில் முதல் வகுப்பில் மருத்துவ மாணவனாக இருந்த மருத்துவர் இளையதம்பி வைத்திலிங்கம், கிறீன் மேற்கொண்ட முதலாவது சத்திர சிகிச்சையையும் அன்று யாழ்ப்பாணத்தில் நிலவிய சூழ்நிலையையும் நினைவு கூர்ந்து பின்வருமாறு விவரிக்கின்றார்.

“அன்று யாழ்ப்பாணத்தில் (*1847* இல்) ஒரு சில ஆங்கில மருத்துவர்களே இருந்தார்கள். அன்று ஆங்கில மருத்துவத்தைப் பின்பற்றுவதில் யாழ்ப்பாண மக்கள் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. புகழ்பெற்றிருந்த சுதேச மருத்துவர்களை மீறி, ஆங்கில மருத்துவர்களை நாட, யாழ்ப்பாணத்தவர்கள் விரும்பவில்லை. இந்த நிலையில் எனது உறவினரும் தமிழ், சம்ஸ்கிருத மொழிப் பண்டிதருமான முத்துத்தம்பி என்பவர் நீண்டகாலமாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டு எனது தந்தையாரிடம் சிகிச்சை பெற்று வந்தார். எனது தந்தையார் சுதேச மருத்துவர். முத்துத்தம்பி அவர்களைப் பீடித்த காய்ச்சல் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தது. நோயின் தீவிரத்தைத் தாங்க முடியாமல் நோயாளி சிகிச்சையை பெற்றுக் கொள்ளாது சில நாள்கள் காணமற்போயிருந்தார். அவரை சுகப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை எனது தந்தையார் இழந்திருந்தார். வேறு புகழ்பெற்ற சுதேச மருத்துவர்களிடம் ஆலோசித்த போதும் அவர்களும் முத்துதம்பியவர்களது நோயைக் குணப்படுத்த இயலாது என்றே கைவிரித்தனர்.


பண்டிதரான முத்துத்தம்பி அமெரிக்க மிசனரியிருக்குத் தமிழ் கற்பித்து வந்த போதிலும், மிசனரி மருத்துவர்களை நாட விரும்பவில்லை. சுதேச மருத்துவர்கள் அனைவரும் கூடி நீண்ட ஆலோசனைக்குப் பின்னர் வட்டுக்கோட்டைக்கு அப்போது வருகைதந்து சில நாட்களேயான ஆங்கில மருத்துவரும் அமெரிக்கருமான கிறீனை அழைப்பது என்று முடிவு செய்தனர். இம்முடிவும் விருப்புடன் எடுக்கப்பட்டதல்ல. மருத்துவர் கிறீன், முத்துத்தம்பியைப் பரிசோதித்துவிட்டு உடனடியாகச் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்; நோயாளியைக் காப்பாற்ற வேறு வழியின்றியே சம்மதித்தனர்.

கிறீன் நோயாளின் அடிவயிற்றில் காணப்பட்ட கட்டியை சத்திர சிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றி, காயத்துக்கு கவனமாக மருந்திட்டு சிகிச்சை அளித்தார். நோயாளி *100* மடங்கிலும் அதிகமாகக் குணமடைந்தார்.

ஆங்கில மருத்துவர் ஒருவர் நோயாளி ஒருவரின் வயிற்றைக் கீறி, குடலை வெளியே எடுத்து அதனை

வெட்டிச் சரிசெய்து மீண்டும் வயிற்றில் வைத்துப் பொருத்தினார் என்று மக்கள் அதிசயத் துடன் கதைத்தனர். கிறீன் மேற்கொண்ட இந்த வெற்றிகரமான சத்திரசிகிச்சை பற் றிய செய்தி யாழ். குடாநாடெங்கும் பர வியது. இதன் பின்னர் குடாநாட்டின் நாலாபுறமிருந்தும் கிறீனிடம் சிகிச்சை பெற மக்கள் கூட்டமாக வர ஆரம்பித்த னர்."

மருத்துவர் கிறீன் யாழ்ப்பாணத்தில் மேற் கொண்ட முதலாவது சத்திரசிகிச்சை கிறீ னுக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. அன்று யாழ்ப்பாணத்தில் சுதேச மருத்துவருக் கும் தமிழ்ப் பண்டிதருக்கும் பெருமதிப்பிருந் தது. மக்கள் இவர்களது ஆலோசனையை முடி வாகக் கொள்வார்கள். சுதேச மருத்துவர்களால் கைவிடப்பட்ட முத்துத்தம்பி என்னும் பண்டித ருக்கு ஒரு ஆங்கில மருத்துவர் சத்திரசிகிச்சை செய்து சுகப்படுத்தியமை யாழ்ப்பாணத் தமிழர் களை ஆங்கில மருத்துவம் நோக்கி ஈர்த்தது.


SCIENCE AND ART OF SURGERY, ... BY JOSHUA DANFORTH ... EDITED BY SAMUEL F. GREEN, M. D. MEDICAL MISSIONARY. JAFFNA: ... 1867.

இரண வைத்தியம்.


யாழ்ப்பாண ஆபத்துக்குதவி வைத்தியசாலைச் சிரேஷ்ட டிஸ்பென்சராகிய ஜோசுவா டன்பேத் மொழிபெயர்த்த இரண வைத்திய விஞ்ஞானக் கலைநுட்பம். கிறீன் வைத்தியரால் பார்வையிடப்பட்டது.

Image source - www.noolaham.net

**மருத்துவர் கிறீன் அவர்களது இறுதி விருப்பம்: தான் இறக்கின்றபோது தனது கல்லறை மிக எளிமையான தாக இருக்க வேண்டும் என்றும் கல்லறையில் "தமி ழர்களின் மருத்துவ ஊழியர்" (MEDICAL EVANGE LIST TO THE TAMILS) என்ற வாசகம் மாத்திரமே பொறிக்கப்படல் வேண்டும் என்றும் இருந்தது.**

மருத்துவர் கிறீனது 200 ஆவது பிறந்த ஆண்டை யாழ்ப்பாணத்தில் நினைவு கூருதலுக்கான சொற்க ளின் பொழிவு:

உடல் வலிமை குறைந்தவராகவும் வாழ்வின் பெரும் பாலான காலப்பகுதியில் உடல்நலம் பாதிக்கப்பட்டு நோயுடன் போராடுபவராகவும் விளங்கிய கிறீன் பல மாதங்கள் கடற்பயணம் மேற்கொண்டு யாழ்ப்பா ணத்துக்கு வருகை தந்து மானிப்பாயிலே மருத்துவக் கல்லூரியை நிறுவி 26 வருடங்கள் யாழ்ப்பாணத் திலே பணியாற்றி பல்லாயிரக்கணக்கானவர்களுக் குச் சிகிச்சையளித்து உயிர்கொடுத்தார். இவர்களில்


PREFACE.

முகவுரை.

ஜோசுவா டன்பேத் மொழிபெயர்த்த இரண வைத்திய விஞ்ஞானக் கலைநுட்பம் நூலின் முன்முகம்

Image source - www.noolaham.net

அநேகமானவர்களுக்குச் சத்திர சிகிச்சை மேற்கொள் ளப்பட்டது. மருத்துவர் கிறீன் யாழ்ப்பாணத்தில் 1848 இல் மானிப்பாயில் நிறுவிய மருத்துவக் கல்லூ ரியில் 62 தமிழ் மாணவர்களுக்கு நேரடியாகத் தானே மருத்துவம் கற்பித்தும் மேலும் 50 இற்கும் மேற்பட் டவர்களுக்குத் தனது மாணவர்கள் மூலமும் பிற ஆசி ரியர்கள் மூலமும் மருத்துவம் கற்பித்தும் யாழ்ப் பாணத்தில் மருத்துவர்களை உருவாக்கியிருந்தார். இவர்கள் அனைவரும் தமிழர்களே. இவர்களில் 33 பேர் மருத்துவர் கிறீனிடம் தமிழ்மொழி மூலம் நேரடியாக மருத்துவம் பயின்று மருத்து வர்களாயினர்.

மருத்துவர் கிறீன் அவர்களது இறுதி விருப்பம்: தான் இறக்கின்றபோது தனது கல்லறை மிக எளி மையானதாக இருக்க வேண்டும் என்றும் கல்ல றையில் "தமிழர்களின் மருத்துவ ஊழியர்" (MEDI CAL EVANGELIST TO THE TAMILS) என்ற வாசகம் மாத்திரமே பொறிக்கப்படல் வேண்டும் என்றும் இருந்தது. மாசாசுசெட்ஸ் மாநிலத்தில் உள்ள கிறீ னது குடும்பக் கல்லறைத் தோட்டத்தில் நல்ல டக்கம் செய்யப்பட்ட கிறீனது பூதவுடலின் மீது அமைக்கப்பட்ட கல்லறையில் "தமிழர்களின் மருத்துவ ஊழியர்" என்ற வாசகங்களைக் காண லாம்.

(தொடரும்)


கட்டுரை



● சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம்

# டி.எஸ். சேனநாயக்காவும் ஜி.ஜி.பொன்னம்பலமும்

அடையாள அரசியல் என்றால் என்ன என்ற கோட்பாட்டுப் புரிதலை உண்டாக்கி, இலங்கையினுடைய அடையாள அரசியலின் வரலாற்றுப் போக்கினையும், தமிழ் தலைவர்களின் அணுகுமுறைகளையும் விமர்சன நிலையில் நோக்குவதற்கு இந்தத்தொடர் முனைகிறது.



**டி.எஸ். சேனநாயக்கா**

Image source - www.wikipedia.org




**ஜி.ஜி.பொன்னம்பலம்**

Image source - www.paarvaionline.com

சோல்பரி அரசியல் அமைப்புக்கேற்ப நாடாளுமன்ற நடைமுறையினை ஏற்படுத்துவதற்காக 1947 ஆம் ஆண்டு டி. எஸ். சேனநாயக்கா முதலாளித்துவ அடிப்படைவாதக் கருத்துக்களையும் இனவாதக் கருத்துக்களையும் கொண்ட ‘தேசிய காங்கிரஸ்’, ‘சிங்கள மகாசபை’, ‘முஸ்லிம் லீக்’ ஆகிய மூன்று கட்சிகளை தமது தலைமையில் ஒன்றிணைத்து ‘ஐக்கிய தேசியக் கட்சி’ என்ற புதிய கட்சியினை ஆரம்பித்தார்.

இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் 1947 ஆம் ஆண்டே இடம்பெற்றது. நாடாளுமன்றத்தக்கான 100 ஆசனங்களில் டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 46 ஆசனங்களை வென்றது. டி. எஸ். சேனநாயக்காவின் சமயோசித நடவடிக்கையினால் சுயேச்சை வேட்பாளர்களை தம்பக்கம் இழுத்து அரசாங்கத்தினை அமைத்துக்கொண்ட போதும், ஒரு நிச்சயமற்ற அரசாங்கமாகவே டி.எஸ்.சேனநாயக்காவின் அரசாங்கம் காணப்பட்டது.

டி.எஸ்.சேனநாயக்காவுடன் கூட்டுச் சேர்ந்த கட்சிகள் சராசரியாக 15 ஆசனங்களை மட்டும் பெற்றிருந்தன எனக் கூறமுடியும். ஆனால் இவர்களை விட தனியாகப் போட்டியிட்ட லங்கா சமசமாசக் கட்சி 10 ஆசனங்களையும், போல்செவிக் லெனினிசக் கட்சி 05 ஆசனங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 05 ஆசனங்களையும் பெற்றன. இம் மூன்று கட்சிகளும் தமக்கிடையிலான கொள்கைகளை மறந்து தொழிலாளர் நலனை மட்டும் முன்னிறுத்தி கூட்டுச் சேர்ந்திருக்குமாயின் இடது



Srilankan Parliment First Sitting on October 14th 1947

Image source - www.wikipedia.org

**ஜி.ஜி.பொன்னம்பலம் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமை விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தமை யாழ். வேளாள மேலாதிக்க உணர் வின் வெளிப்பாடு எனவும் கொள்ளலாம்.**

சாரிகள் என்ற அடிப்படையில் இன்னும் 20 ஆசனங்க ளைப் பெற்றிருக்கலாம்.

இடதுசாரிக் கட்சிகள் எனச் சொல்லப்படுகின்ற இக் கட்சிகள் தங்களுக்கிடையில் எவ்வாறுதான் பிரிந்து நின்று முட்டி மோதினாலும் முதலாளித்துவவாதிகள் இவர்களை தமக்கு எதிரான ஓரணியினராகவே நோக் குகின்றனர். இந்த அடிப்படையில் எந்த முதலாளித்துவ அல்லது இனவாதக் கட்சிகளும் பெற்றிராத பெரும் பான்மையினை இவ்வருடத்தில் இடதுசாரிகள் பெற் றனர் என்பது முக்கியமான விடயம் ஆகும்.

இது போன்று சிறுபான்மையினர் என்று நோக்கும் போது ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் 07 ஆசனங்களையும், இலங்கை இந்திய காங்கிரஸ் 07 ஆசனங்களையும், மன்னாரிலும் வவுனி யாவிலும் சுயேச்சை வேட்பாளர்களாக இரு தமிழர்க ளும், நியமன உறுப்பினர்கள் 4 பேருமாக மொத்தம் 20 பேர் இடம் பெற்றிருந்தனர்.

டி.எஸ்.சேனநாயக்கா பிரதமரான பின்பு அவருடைய அரசாங்கத்தை தோற்கடித்து இடதுசாரிகளும் சிறு பான்மையினரும் சேர்ந்த அரசாங்கமொன்றை அமைக் கும் பொருட்டு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் கூடிய இடதுசாரிக் கட்சிகளும் இலங் கைத் தொழிலாளர் காங்கிரசும், சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் சிலரும் பொதுக் கொள்கைத் திட்டத் தின் அடிப்படையில் அரசாங்கத்தை அமைப்பது என்று முடிவு எடுத்திருந்த போதிலும், பொதுக் கொள் கைக்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதில் எழுந்த முரண்பாடுகளை அடுத்து இம்முயற்சி பலனற்றுப் போய்விட்டது.

சிறுபான்மையினரின் நலனுக்காக 50:50 கோரிக்கையில் விடாப்பிடி யாக நின்ற ஜி.ஜி.பொன்னம்பலம் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இடதுசாரிகளுடன் விட்டுக் கொடுப் புக்களைச் செய்து அரசாங்கத்தை அமைப்பதற்கான சந்தர்ப்பத்தினை தவறவிட்டமை அவருடைய முத லாளித்துவ வர்க்க நலனின் வெளிப் பாடே எனலாம்.

திரு.அ.மகாதேவா, ஜி.ஜி.யின் 50:50 கொள்கையுடன் முரண்பட்டு டி. எஸ். சேனநாயக்காவுடன் சேர்ந்து உள்விவகார அமைச்சராக பதவி வகித்திருந்தார். மேற்படி 1947 ஆம் ஆண்டு நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் டி.எஸ். சேனநா யக்காவின் சகபாடியாக யாழ்ப்பாணத்தில் மகாதேவா போட்டியிட்டபோது, அவரை எதிர்த்துப் போட்டி யிட்ட ஜி.ஜி. பின்வருமாறு உரையாற்றியிருந்தார். "மகாதேவா தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்து விட்டார். சோல்பரி அரசியல் திட்டம் தமிழ் மக்க ளுக்கு தீமையையே விளைவிக்கும். அத்தகைய அரசி யல் அமைப்பை ஆதரித்து மகாதேவா வாக்களித்தார். அவரின் முடிவை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர் என்பதை பிரிட்டிஷ் அரசுக்கும் உலகுக்கும் காட்ட வேண்டும். எனவே நீங்கள் திரண்டு வந்து எனக்கு வாக்களித்து மகாதேவாவின் துரோகத்தை அம்பலப் படுத்த வேண்டும்." (மேற்கோள், த.சபாரெத்தினம்) அத்துடன் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் சகபாடிகள் 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' எனும் இன உணர்ச்சியூட்டும் சுலோக அட்டைகளை யும் விநியோகித்ததாக திரு.த.சபாரெத்தினம் குறிப்பிடுகின்றார்.

தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வெற்றி பெற்றதும் ஜி.ஜி. பொன்னம்பலம் குடியேற்ற நாட்டு அமைச்சருக்கு பின்வரும் வாசகம் அடங்கிய தந்தியினை அனுப்பி வைத்தார். "சென்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசி யக் கட்சித் தமிழ் அபேட்சகருள் ஒருவராவது தெரிவு செய்யப்படாததிலிருந்தும், 1945 ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையை ஆதரித்த பழைய அரசாங்க சபை அங்கத்தவருள் ஒருவர் தவிர ஏனையோர் தோற் கடிக்கப்பட்டதிலிருந்தும், இலங்கைத் தமிழ் மக்கள் சோல்பரி அரசியல் திட்டத்தை நிராகரித்து விட்டார்

கள் என்பது தெளிவு. இலங்கையிலுள்ள சமூகங்கள் எல்லாவற்றுக்கும் சம உரிமை அளிக்கும் சுதந்திர அரசியல் திட்டமொன்றை, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கோருகிறது. இலங்கை மக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு அரசியல் நிர்ணய சபை ஒன்று வேண்டும். இப்பொழுது இருப்பதைப் போன்ற சட்டசபை, மந்திரி சபைகளுடன் கூடிய ஒற்றையாட்சி அரசாங்கத்தைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தகுந்த மாற்றுமுறை இல்லாதபடியால், நாங்கள் தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை கோருகின்றோம்." (மேற்கோள்.த.சபாரெத்தினம்)

இந்தத் தந்தியினால் தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் ஏற்படவில்லை. ஆனால் ஜி.ஜி.பொன்னம்பலம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். அன்று அவரால் ஆரம்பிக்கப்பட்ட பிரிட்டிஷ் அரசுக்கும் உலகுக்கும் காட்டுகின்ற செய்தி எனும் ஏமாற்று அரசியலுக்கு தமிழ் உணர்வை பயன்படுத்துகின்ற போக்கு இற்றைவரை எவ்வித வேறுபாடுமின்றி தொடர்வதுதான் தமிழினம் பெற்ற ஜி.ஜி.யின் அருட்கொடையாக இருக்கின்றது.



1947 நவம்பரில் இராணி மாளிகையில் வைத்து இலங்கையின் சுதந்திர சாசனத்தில் பிரித்தானியா சார்பில் சேர் ஹென்றி மொ மேசன் மூரேவும் - இலங்கையின் சார்பில் டீ.எஸ் சேனநாயக்காவும் கையெழுத்திடுகிறார்கள். பின்வரிசையில் நடுவில் சேர் ஒலிவர் குணதிலக்கவுடன் சேர்.ஐவர் ஜென்னிங்க்ஸ்

Image source - www.namathumalayagam.com

இந்தத் தந்தியினால் கோபமுற்ற டி.எஸ். சேனநாயக்கா, 1947ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவினை அடிப்படையாகக் கொண்டு சிங்கள மக்களின் எதிர்கால அரசியல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை மிக நிதானமாகத் திட்டமிட்டார். இலங்கை இந்திய காங்கிரசும், இடது சாரிக்கட்சிகளும் பெற்ற வாக்குகள் இந்தியத் தொழிலாளர்களுடைய வாக்குகளே என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இவர்களுடன் தமிழ் காங்கிரசும் சேர்வது பேரினவாத முதலாளித்துவத்துக்கு ஆபத்தானது என்பதை உணர்ந்த அவர் , அன்று மேற்குலகில் வளர்ந்து வந்துகொண்டிருந்த கம்யூனிச எதிர்ப்பை தமக்குச் சார்பானதாக பயன்படுத்திக் கொண்டார். குறிப்பாக இலங்கையை கம்யூனிசத்திலிருந்து காப்பாற்ற வேண்டிய அவசியம் குறித்து பேசலானார். இது பிரிட்டிஷாருடைய முதலாளித்துவ நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமானதாக இருந்தது. இதனால் டி.எஸ். சேனநாயக்கா, பிரிட்டிஷாரின் நம்பிக்கைக்குரியவரானார். அத்தோடு சிறுபான்மையினர் விடயத்தில் தாம் மிகத் தாராளமாகச் செயற்படுவதாக பிரிட்டிஷ் அரசுக்கு அவர் காட்டினார். இதற்காக அவர் முதலில் கையாண்ட தந்திரம், தனது அமைச்சரவையில் வவுனியாவில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சி.சுந்தரலிங்கம் அவர்களை வர்த்தக அமைச்சராக நியமித்தார். மன்னாரில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற சி.சிற்றம்பலம் அவர்களை தபால், தந்தி தொடர்புகள் அமைச்சராக நியமித்தார். இது போன்றே மலே சமூகத்தைச் சேர்ந்த டி.பி. ஜாயாவை தொழில் சமூக சேவைகள் அமைச்சராக நியமித்தார். இது சிறுபான்மையினர் விடயத்தில் நேர்மையாக நடந்து கொள்பவர் என்கின்ற பிரதிமையை பிரிட்டிஷாருக்கு ஏற்படுத்திற்று.

அடுத்ததாக அவருடைய நோக்கமாக இருந்தது, இந்தியத் தமிழருடைய பிரஜாவுரிமையைப் பறித்து தமிழர்களின் விகிதாசாரத்தை குறைப்பதாகும். ஆரம்பத்திலிருந்தே டி.எஸ். சேனநாயக்கா இந்தியப் பிரஜைகளுக்கு வாக்குரிமை வழங்குவதை எதிர்த்து வந்தவர், இந்தியப் பிரஜைகள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கினால் கண்டிய சிங்களவரின் உரிமை பறிக்கப்பட்டு விடும் என்ற கருத்தை முன்வைத்து இயங்கியவர். 1947 ஆம் தேர்தலில் 14 தொகுதிகளில் இந்தியத் தொழிலாளர்களின் வாக்குகளினால் இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றிபெற்றனர். இது டி.எஸ்.சேனநாயக்காவிற்கு கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமை யினைப் பறிப்பதற்கு அவர் கையாண்ட தந்திரம், கம்யூனிசத்திலிருந்து இலங்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோசமாகும். இதனால் பிரிட்டிஷ் அரசு டி.எஸ். சேனநாயக்காவின் நடவடிக்கைகளைக்

கண்டுகொள்ளவில்லை. தமது நலன் பாதுகாக்கப்படு வதையே பிரிட்டிஷ் அரசு விரும்பியது. அதை டி. எஸ். மிகச் சரியாக முன்னெடுத்தார். டி.எஸ்.ஸைப் பொறுத்தவரையில் ஒரு கல்லில் இரண்டு மாங்காய், அதாவது பிரிட்டிஷாருக்கு நம்பிக்கைக்குரியவராக இருப்பதோடு தமிழர்களின் விகிதாசாரத்தையும் குறைப்பதாகும்.

1948 ஆம் ஆண்டு இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்ட மசோதாவைக் கொண்டு வந்து இந்தியத் தொழிலா ளர்களின் பிரஜாவுரிமையினைப் பறிப்பதற்கான முயற்சியினை டி.எஸ் மேற்கொண்டார். இதனை தமிழ் காங்கிரசின் அனைத்து உறுப்பினர்களும் இட துசாரிகளும் எதிர்த்தனர். "இதனை எதிர்த்துப் பேசிய ஜி.ஜி, டி.எஸ்.ஸை ஒரு வகுப்புவாத வெறியர் என்றும் அந்த மசோதா நிறைவேற்றப்பட்ட தினத்தை இலங் கையின் கறுப்பு நாள் என்றும் வர்ணித்தார்."(த.சபா ரெத்தினம்) இந்தியாவும் இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தை எதிர்த்து கண்டன அறிக்கையினை வெளி யிட்டது. இந்திய எதிர்ப்பை சமாளிப்பதற்கு தமிழ் காங்கிரசை தனது பக்கம் வைத்துக் கொள்ளவேண் டும் என்ற முடிவினை டி.எஸ். எடுத்தார். இதற்காக இரு அமைச்சுப் பதவிகளை காங்கிரசுக்கு வழங்குவ தாக ஜி.ஜி.யுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண் டார். தனக்கு கைத்தொழில், கைத்தொழில் அபிவி ருத்தி, கடற்றொழில் அமைச்சை ஜி.ஜி. பொன்னம்ப லம் கோரிப் பெற்றார். வட்டுக்கோட்டை தொகுதி உறுப்பினர்.க.கனகரெத்தினம், உதவி மந்திரியாக நிய மிக்கப்பட்டார். பருத்தித்துறைத் தொகுதி உறுப்பி னர். தா.இராமலிங்கம், கோப்பாய் தொகுதி உறுப்பி னர் வ.குமாரசாமி, ஊர்காவற்துறை தொகுதி உறுப்பினர் அ.லி.தம்பிஜயா, பட்டிருப்புத் தொகுதி உறுப்பினர். எதிர்மன்னசிங்கம் ஆகியோர் ஜி.ஜி.யு டன் அரசாங்கத்தில் இணைந்து அரசாங்கத்திற்கு ஆத ரவு அளித்து இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தினை நிறைவேற்றினர்.

சிறுபான்மையினரின் உரிமைக்காக 50:50 கேட்டு போராடியவரும், டி.எஸ். ஸின் வேட்பாளரான அ.மகா தேவாவை துரோகி என்று வசைபாடி, ' என்னை வெற் றிபெறவைத்து தமிழர்களின் தீர்ப்பை உலகுக்கு காட் டுங்கள் 'என கோசமெழுப்பியவரும், டி.எஸ்.ஸை ஒரு வகுப்புவாத வெறியர் என்றும் முழங்கிய ஜி.ஜி. பொன்னம்பலம், அதே டி.எஸ். சேனநாயக்கா வழங் கிய அமைச்சுப் பதவிக்கு அனைத்தையும் உதறித்தள் ளிவிட்டு சரணாகதி அடைந்தமை அவருடைய வர்க் ககுணாம்சத்தினாலாகும்.

### ஜி.ஜி.பொன்னம்பலமும் பிரஜாவுரிமைச் சட்டமும்

ஜி.ஜி.பொன்னம்பலம் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமை விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்தமை யாழ். வேளாள மேலாதிக்க உணர்வின் வெளிப்பாடு எனவும் கொள்ளலாம். ஏனெனில் யாழ். வேளாள மேலாதிக்கம் தம்மை விட மற்றவர்களை யெல்லாம் கீழானவர்களாகவே நோக்கியது. அநாக ரிக தர்மபாலா போன்ற சிங்கள இனவாதத் தலைவர் கள், பிரித்தானியர் தென்னிந்தியாவிருந்து கீழ்ச்சாதி யினரை கொண்டு வந்து எமது தீவில் குடியேற்று கின் றனர் என்றும் அவர்களை கூலிகள் என்றும் அவமா னப்படுத்தும் வண்ணம் உரையாற்றிச் செயற்பட்ட போது, எந்தவொரு தமிழ்த் தலைவர்களும் இவ்வா றான உரைகளை மறுக்கவில்லை என்பதுடன், அவர்க ளும் தோட்டத் தொழிலாளர்களை கள்ளத்தோணி கள் என்றும் கீழ்ச்சாதிகள் என்ற அடிமை நிலைக் கண்ணோட்டத்திலேயே நோக்கினர். இதன் காரண மாக அவர்களுடைய உரிமைகளுக்கு யாழ். வேளாள மேலாதிக்கம் பெரிதளவாகக் குரல் கொடுக்கவும் இல்லை. தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக சட்டமன்றத்துக்கு தேர்வு செய்யப்பட்ட நடேச ஐயர் (1925 - 1931, 1936 - 1947) மொத்தம் 17 வருடங்கள் இந்தத் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாக குரலெழுப்பிய சந்தர்ப்பங்களில், மட்டக்களப்பைச் சேர்ந்த ஈ.ஆர்.தம்பிமுத்து, வடமாகாணத்திலிருந்து துரைசாமி ஆகிய இரு தமிழ் உறுப்பினர்கள் மாத்தி ரமே அவருக்கு ஆதரவாக இருந்துள்ள னர் என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

நாடாளுமன்றத்திலிருந்த தமிழ் உறுப்பினர்களை விட தோட்டத்தொழிலாளர்களின் பிரஜா உரிமை மற்றும் அரசியல், பொருளாதார, சமூக நலன்கள் அவர்க ளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் இடதுசாரிக ளும் சில மனிதாபிமானம் மிக்க சுயேச்சைக்குழு உறுப் பினர்களும் அக்கறையுடையவர்களாக இருந்துள்ள னர்.

பிரஜா உரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவா திக்கப்பட்ட போது, லங்கா சமசமாசக் கட்சியின் தலைவரான என்.எம்.பெரேரா பின்வருமாறு கூறி னார், "இவ்வகை இனவாதம் ஹஸ்டன் சம்பர்லேன், அடல்வ் ஹிட்லர் போன்றோரின் இனவாதமாகவே முடியும். ஓர் அரசியல்வாதி ,நாட்டுத் தலைவர் என்று தன்னைக் கூறும் ஒருவர் இத்தகைய ஒரு சட்டத்திற்கு ஆதரவளிக்கும்படி எம்மைக் கேட்பார் என நான் நினைக்கவில்லை. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உலகில் இருந்து வேறான ஒரு தனிச்சாதியாக எம்மை கற்பனை செய்து இதனை அனுமதிக்க முடியாது. நாம் மட்டுமே இந்நாட்டின் பிரஜைகளாக இருக்கும் பேறு பெற்றவர் என்பது தவறு" என்றார்.

போல்சவிக் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கொல் வின் ஆர்.டீ.சில்வா குறிப்பிடும் போது, "இச்சட்டத் தின் பின்னணியை இதன் அரசியல் காரணிகளையும் சமூக நோக்கங்களையும் பார்த்தால் பிற்போக்குத் தனத்தில் சிறந்த உதாரணமாகக் காணலாம். வகுப்பு

வாதம் பிற்போக்கிற்கு வாய்ப்பான ஆயுதம். இச்சட்டம் சர்வசன வாக்குரிமையின் எதிர்காலச் சவக்குழியைத் தோண்டப் பயன்படுவதாகும்.ஒரு குறிப்பிட்ட குழுவுக்கு எதிராக வகுப்புவாத அடிப்படையைப் பிரயோகிக்க அரசாங்கம் தொடங்குவது இன்று இலங்கையர் என ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராகவும் வேறுபாடு காட்டுவதற்கு வழிகோலும்." (மேற்கோள், குமாரி ஜயவர்த்தன) என்று எதிர்காலம் பற்றி மிகவும் தீர்க்கதரிசனத்துடன் கூறிய போதிலும், ஜி.ஜி.போன்றவர்கள் கொண்டிருந்த சாதாரண மக்கள்நாட்டமற்ற சமூக அரசியல் கருத்துநிலை காரணமாக இவற்றை விளங்கிக் கொள்வதற்கோ அல்லது ஊகிப்பதற்கோ முடியாமல் போய்விட்டது.

இதனை விட கம்யூனிசக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் அதன் பேச்சாளருமான பீற்றர் கெனமன் "இச்சட்டம் பணக்கார, படித்தவரது நன்மைக்காகச் செயற்படுகிறது. இந்நாட்டின் தொழிலாளர்களுக்கும் ஏழைகளுக்கும் எதிரானது" என்றும் "வர்க்க நலன் இச்சட்ட விதிகளில் சேர்ந்திருப்பதால் நாம் இம் மசோதாவை எதிர்க்கிறோம். இச்சட்டம் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த இந்தியர்களுக்கு எதிரானது. இங்கு எழும் வினா, வர்க்கத்திற்கு அப்பாற்பட்டது.
இம்மசோதாவின் அடிப்படைத் தத்துவம் நேர்மையற்றது. ஒரு வர்க்கத்துக்கு எதிராக வேறுபாடு காட்டும் முறையையும், இந்நாட்டு மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கும்படி கூறிக்கொண்டு யூ.என்.பி. அரசு தன் அரசியல் அமைப்பை நிலை நிறுத்த முயல்வதையும் காணலாம்." (மேற்கோள், குமாரி ஜயவர்த்தன) இங்கு பீற்றர் கெனமன் குறிப்பிடுகின்ற அரசியல் அமைப்பை பேரினவாத முதலாளித்து வத்தினுடைய அரசியல் அமைப்பாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறு பார்த்து சிறுபான்மையினர் நலனை அல்லது உரிமையினை பேசுவதற்குப் பொருத்தமான தலைவர்களாக அப்போதைய தமிழ்த் தலைவர்கள் இருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

ஆயினும் அரசாங்கத்தில் முக்கியமானவராகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் இருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க கூட பிரஜா உரிமைச் சட்டம் தொடர்பாக U.N.P அரசாங்கத்திடமிருந்து வேறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தார் என குமாரி ஜயவர்த்தன சுட்டிக் காட்டு கின்றார். அதாவது "இந்தியத் தொழிலாளர் இன்னும் தேவை என்று கருதப்பட்டால் அவர்களுக்குரிய சகல உரிமைகளும் இந்நாட்டின் தொழிலாளர்களுக்கு உரிய எல்லா நலன்களும் அளிக்கப்பட வேண்டும் என்பது பண்டாரநாயக்காவின் கருத்தாகும். இந்தியாவுக்கு திரும்ப விரும்புவோருக்கு நீதியான சிறந்த வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்." இந்த மனிதாபிமானத் தன்மையும் சமத்துவ உணர்வும் தமிழ் மக்கள் நம்பிய பெருமளவான தலைவர்களிடத்தில் இருக்கவில்லை. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரஜா உரிமைச் சட்டம் தொடர்பில் உரையாற்றும் போது "இன்று இந்தியத் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. நாளை மொழிப்பிரச்சினை வரும்போது இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இதே கதி நேரிடும். எனவே, இன்றே நாமெல்லாம் ஒன்று சேர்ந்து இந்த அநீதியை எதிர்க்க வேண்டும்" (மேற்கோள், த. சபாரெத்தினம்) என்று மிக முன்னெச்சரிக்கையோடு சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறு சுட்டிக்காட்டிய விடயத்தைக் கூட கவனத்தில் கொள்ளும் தன்மைகூட, பிரித்தானியாவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று, இலங்கையில் தலைசிறந்த சிவில் குற்றவியல் வழக்கறிஞராகவும் மகாராணியின் வழக்கறிஞராகவும் கடமையாற்றிய ஜி.ஜி.பொன்னம்பலத்திற்கு இருக்கவில்லை என்பது முட்டாள்தனமாகும். இதனுடைய எதிர்கால ஆபத்துக்கள் குறித்து சிந்திப்பதற்குக் கூட அவருக்குள்ளிருந்த மேலாதிக்க உணர்வு இடம் கொடுக்கவில்லை என்பதே உண்மையாகும்.

மகாதேவாவை துரோகி என்று கூறி, அவரைத் தோற்கடித்து சிறுபான்மையினர் உரிமைகளை வென்றெடுப்போம் என நாடாளுமன்றம் வந்தவரை தமிழ் மக்கள் பெருமளவு நம்பியிருந்தனர். ஆனால் அவருடைய படிப்பும், பட்டங்களும், பதவியும் அவருடைய சுகபோகத்துக்கு உதவினவே தவிர, தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே இருந்தன. 1948 ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்ட வாக்கெடுப்பின் போது ஜி.ஜி.யுடன் சேர்ந்து சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்திய வர்களுள் எச்.எஸ்.இஸ்மாயில், கே.கனகரெட்ணம், எம்.எஸ்.காரியப்பர், எம்.எம்.இப்ராஹிம், எஸ்.யு.எதிர்மன்னசிங்கம், ரி.ராமலிங்கம், எம்.சின்னலெவ்வே, ஏ.எல்.தம்பையா ஆகியோர் அரசாங்கத்துக்கு சார்பாக வாக்களித்தனர்.
ஆனால் இவர்களுக்கு மாறாக இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாசக் கட்சி, போல்சவிக் லெனின்ஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இலங்கை இந்திய காங்கிரஸ் என்பவற்றுடன் சேர்ந்து பிரபல அரசியல்வாதிகளாக இருந்து சுயேச்சையாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவாகிய லக்ஷ்மன் ராஜபக்ஷ, வில்மட் பெரேரா, ஆர்.எஸ்.பொல்பொல, ஐ.எம்.ஆர்.ஏ. இரியகொல்ல, எச்.ஸ்ரீநிசங்க ஆகியவர்கள் எதிர்த்து வாக்களித்தனர். இவர்களுடன் சேர்ந்து தமிழ் காங்கிரசிலிருந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சி.வன்னியசிங்கம், கு.சிவபாலன் ஆகியோர் எதிர்த்து வாக்களித்தனர். இவ்வாறு எதிர்த்து வாக்களித்தவர்களில் முஸ்லிம் சிறுபான்மையினர் எவரும் இல்லை என்பதும் கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும். மனிதாபிமானம், ஜனநாயகம், சிறுபான்மையினர் என்ற விடயங்களுக்கப்பால், அப்போதிருந்தே அரசியலை தமது இனத்துக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சாதுரியமாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.


1952 ஆம் ஆண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தோட்டத்தொழிலாளர்கள் பெரும்பான்மையோர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு 1950 ஆம் ஆண்டு

தேர்தல் பதிவேட்டின் பிரகாரம் தேர்தல் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது, இலங்கை இந்திய காங்கிரஸ், இலங்கைப் பிரஜா உரிமை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு வாக்குரிமை வழங்குமாறு வேண்டி நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில், பல்வேறு மட்ட ஜனநாயகவாதிகளும் ஒன்று கூடி தோட்டத்தொழிலாளர்களுக்கு நீதி வேண்டி உரையாற்றினர். கம்பளையைச் சேர்ந்த பிரபுத்த பிக்கு மண்டலய என்ற அமைப்பைச் சேர்ந்த 29 பௌத்த பிக்குகள் சார்பாக கே.இந்தசார தேரோ, பிரதம மந்திரிக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். “அறிவு மிக்க அரசியல்வாதி என்ற வகையிலும், பௌத்தர் என்ற முறையிலும் நெருக்கடி மிகுந்த இக்கட்டத்தில் இலங்கையின் தலைவிதியை வழிநடத்துவதில் சட்டரீதியான முறையில் அல்லாது பிரச்சினையை மனிதாபிமான முறையில் தாங்கள் அணுகவேண்டும் என்பது எங்கள் விருப்பமாகும். இங்குள்ள இந்தியர்கள் எங்கள் நாட்டின் விவசாயக் கைத்தொழிலினது மிக முக்கியமான அங்கமாவர். இதற்கு மேலாக அவர்கள் இங்கு பிரிட்டிஷாரினால் கொண்டுவரப்பட்டு மறைமுகமாகவோ, நேரடியாகவோ நாட்டின் அபிவிருத்திக்கு உதவியவர்கள், எமக்கு பயனற்ற அந்நியர்கள் என இவ்வேளை கருதுவது பெரும் அநீதியாகும். எமது பொருளாதாரத்தை நிலைநிறுத்த அவர்களது சேவையை நாம் பயன்படுத்துகிறோம். அவர்கள் கோரும் அடிப்படை உரிமைகளை நாம் வழங்க வேண்டும்” (மேற்கோள், குமாரி ஜயவர்த்தன)

இவ்வாறு இடதுசாரிகள், பௌத்த பிக்குகள், ஜனநாயகவாதிகள் எனப் பெரும்பாலானோர் சிறுபான்மையினர் உரிமைகள் தொடர்பாக அக்கறையுடையவர்களாக அவை வழங்கப்பட வேண்டும் என்பதில் விருப்பம் கொண்டவர்களாக இருந்துள்ளனர். துரதிர்ஷ்டவசமாக தோட்டத்தொழிலாளர்களின் பிரஜா உரிமை சட்டமூலம் தொடர்பாக தமிழ் காங்கிரஸினுடைய தலைவர் ஜி.ஜி.பொன்னம்பலத்துக்கும், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து, செல்வநாயகமும் அவருடன் சேர்ந்து வாக்களித்தவர்களும் நியமன உறுப்பினராக இருந்த இ.எம்.வி.நாகநாதனும் தமிழ் காங்கிரஸிலிருந்து வெளியேறி இலங்கைத் தமிழரசுக் கட்சியினை நிறுவியதைத் தொடர்ந்து, சிறுபான்மையினருடைய உரிமை, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுயநிர்ணய உரிமை என்பதிலிருந்து விலகி தமிழ் இனவாத அரசியலாக வளர ஆரம்பித்தது. ஏனெனில் எஸ்.ஜே.வி.யும் ஜி.ஜி.யும் தங்களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தினை தக்கவைத்துக் கொள்வதற்காக தமிழர்களை உணர்ச்சிகரமான அரசியல் பேச்சுக்களையும், எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்களே தவிர யதார்த்த அரசியல் பற்றி சிந்திக்கவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் சிறுபான்மையினருக்காக ஆதரவு தெரிவித்து இயங்கிய பெரும்பான்மையின நேச சக்திகளையும் விலகிச் செல்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன.

## தேசியக் கொடி விவகாரம்

1948 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும் என்கின்ற உறுதி மொழியினை பிரித்தானிய அரசு டி.எஸ்.சேனநாயக்காவுக்கு வழங்கியிருந்தது. இலங்கை சுதந்திரமடையும் போது இலங்கைக்கான தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டும் என டி.எஸ்.சேனநாயக்கா விரும்பினார். சுதந்திரத்திற்கு முற்பட்ட இலங்கை கண்டி இராச்சியம், கோட்டை இராச்சியம், யாழ்ப்பாண இராச்சியம் என்ற இராச்சியங்களாக தனித்தனியாக இருந்ததுடன் அவற்றுக்கென கொடிகளும் காணப்பட்டன. பிரித்தானியர் ஆட்சியின் போதே இந்த இராச்சியங்கள் ஒன்றிணைக்கப்பட்டு முழு இலங்கையும் பிரித்தானிய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. பிரித்தானியர் இலங்கையை, இலங்கையர்களுக்கு கையளிக்கும் போது ஒட்டுமொத்த இலங்கைக்குமான தேசியக் கொடியின் அவசியத்தினை உணர்ந்த டி.எஸ்.சேனநாயக்கா இது தொடர்பாக விவாதத்தினை 1948 ஜனவரியில் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தார்.




இலங்கை தேசிய கொடி

Image source - www.namathumalayagam.com

டி.எஸ்.சேனநாயக்கா, ஏ.ஈ.குணசிங்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்ற சிங்களத் தேசியவாதிகள் சிங்கக் கொடியே இலங்கைக்கான தேசியக் கொடியாக இருக்க வேண்டும் என்று வாதாடினர். இவர்களின் உள்நோக்கம் சிங்கள பௌத்த கருத்தியலின் அடையாளமாக சிங்கக் கொடியைக் கொண்டுவருவதும் அதனூடாக நாட்டின் அடையாளமாக சிங்கள பௌத்

தத்தை முன்னிறுத்துவதுமாகும். சிங்கள பௌத்தம் பல நூற்றாண்டுகளாக தன்னைக் கருத்தியல் ரீதியாக கட்டியெழுப்பி அமைப்பாக்கம் பெற்றுவந்த சூழலில் நாட்டிலும் நாடாளுமன்றத்திலும் சிறுபான்மையாக இருக்கின்ற தமிழர்கள் சிங்கக் கொடியை இலங்கைக்கான தேசியக் கொடியாக உடனடியாக ஏற்க மறுப்பதென்பது சிங்கள பௌத்தத்தைப் பலப்படுத்துமே தவிர, சிறுபான்மையினருக்கு எவ்வித பலனையும் பெற்றுக்கொடுக்காது என்பதை உணரத் தவறியோராக தமிழ்த் தேசியவாதிகளான எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம், சி.வன்னியசிங்கம் போன்றவர்கள் செயற்பட்டனர்.

இவர்கள் இவ்வாறு உணரத் தவறியமைக்குக் காரணம் சிங்கள பௌத்தத்தின் அடையாளமாக சிங்கத்தையும், சைவமும் தமிழும் என்பதின் அடையாளமாக நந்தியை ஏற்றுக்கொண்டதினாலாகும். இவ்விரண்டுமே, இரண்டு மேல்வர்க்கங்களின் கருத்துநிலைக் கட்டமைப்பே தவிர வரலாற்றுரீதியான இயக்கவியலுக் குட்பட்டவையல்ல என்பது எனது இக்கட்டுரைத்தொடர் 01 இல் விளக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கருத்துநிலைகளைக் கடந்து மக்களுக்கான இலங்கையை இரு தரப்பினராலும் சிந்திக்க முடியாதளவுக்கு அவர்கள் தங்கள் வர்க்கநிலையில் இருந்துள்ளனர்.



**தந்தை செல்வா**
Image source - www.dailymirror.lk

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தேசியக் கொடி தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, “இலங்கையின் தேசியக் கொடி, சிங்கள வரின் சிங்கக் கொடியையும், தமிழரின் நந்திக் கொடியையும், முஸ்லிம்களின் பிறை நட்சத்திரக் கொடியையும் கொண்டதாக அமைய வேண்டும்” என்றார்.

சுதந்திர அரசொன்றை நாம் நிறுவுகின்றபோது அதனை மதரீதியாக அடையாளப்படுத்துவதும் அதனூடாக மேலே சுட்டிக்காட்டிய இரு கருத்துநிலைகளைப் பேணுவதோடு மேலதிகமாக இஸ்லாமிய கருத்துநிலையொன்றினை உருவாக்கவுமே எஸ்.ஜே.வி. முயன்றிருக்கிறார் என்பதையே அவரது மேற்படி உரை காட்டுகின்றது.

இது யாழ்.மேலாதிக்க கருத்தியலின் வெளிப்பாடு எனலாம். ஏனெனில் இந்த நந்தி அடையாளத்துக்குள்ளோ அல்லது யாழ்ப்பாண இராச்சியத்துக்குள்ளோ கிழக்கு மாகாணமும் மலையகமும் இல்லை என்பதை நாம் மறந்துவிடலாகாது. கிழக்கு மாகாணத் தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் கவனத்தில் கொள்ளாது தனியே யாழ்ப்பாணத் தமிழர்களில் ஒரு குறிப்பிட்ட உயர் வர்க்கத்தினரை மாத்திரமே கவனத்தில் கொண்டு நந்தியை முன்மொழிந்து செல்வநாயகம் உரையாற்றியுள்ளார் என்பதை இதனூடாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மதத்தைக் கொடியில் வைத்துக் கொண்டு மதச்சார்பற்ற அரசு தொடர்பாக எவ்வாறு எம்மால் பேசமுடியும் என்பதைக்கூட அவர் சிந்திக்கவில்லை. எஸ்.ஜே.வி. தனது அதிகார வர்க்க கருத்தியலை முன்னிறுத்திக் கொண்டு செயற்படும் போது டி.எஸ்.சேனநாயக்கா தனது அதிகார வர்க்க கருத்தியலை முன்னிறுத்திச் செயற்பட்டுள்ளார். ஆனால் அவருடைய சாணக்கியம் இதனை ஒரு சிங்கள பௌத்த அடையாளமாக முன்னிறுத்தாது அதனை வரலாற்றுக்கூடாக எடுத்துரைத்த முறையில் தங்கியுள்ளது. “நான் சிங்கக் கொடி ஏற்றப்பட வேண்டும் என விரும்புவதற்கான பிரதான காரணம் என்னவெனில், நாம் எமது தேசத்தைத் தோற்று, மக்கள் இங்கிலாந்தின் அரசரைத் தமது அரசராக ஏற்றுக்கொண்ட சமயத்தில், இறுதிக் கண்டியரசன் சிம்மாசனத்திலிருந்து அகற்றப்பட்டு, அவனது சிங்கக்கொடி கீழே இறக்கப்பட்டது. இப்போது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை மீளளிக்கையில் அதனுடன் கூடவே அந்தக் கொடியையும் இங்கிலாந்து மீளளிக்க வேண்டுமென நான் விரும்பு கின்றேன். நாம் சுதந்திர தினத்தன்று சிங்கக் கொடியை ஏற்ற எண்ணுவதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

இந்தக் கொடியை ஏற்றிய பின், அதில் மாற்றம் செய்யப்படவேண்டும் என்பது யாரேனுக்கும் விருப்பமாக இருக்கும் பட்சத்தில் அவ் விருப்பத்திற்குப் பொருத்தமானதொரு கொடியை ஏற்றலாம். சிங்கக் கொடியை ஏற்றிய பின், அதற்குப் பதிலாக வேறாரு கொடியை ஏற்றுவதில் எமக்கு ஆட்சேபனை கிடையாது.” (மேற்கோள், முருகர் குணசிங்கம்) என்று மிகவும் ஜனநாயகத் தன்மையுடனும் தேசபக்தியுடனும் எடுத்துக் கூறியிருந்தார். ஜி.ஜி. பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்றவர்கள் தங்களுடைய கருத்துநிலைக் கட்டமைப்பினை விட்டு வெளியே வந்து, மேற்படி டி.எஸ் சேனநாயக்காவினுடைய கருத்துக்குள்ளே தமிழர்களையும் அடையாளப்படுத்தி, சிங்கம் இரு இனத்துக்கும் உரியது என்பதை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இவ்வாறு வெளிப்படுத்துவதற்கு பின்வரும் காரணங்களை முன்வைத்திருக்க முடியும்.

### கண்டியரசன் தமிழன் என்பதை வலியுறுத்துதல்

கண்டி இராச்சியத்துக்குள்ளும் அதனுடன் மிக வும் நெருக்கமான உறவு கொண்டதாகவும் கிழக்கு மாகாணம் இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டல்

சிங்கம் பல்லவர் காலத்திலிருந்து தமிழ் சிற்ப மரபிலும் ஓவிய மரபிலும் தவிர்க்கமுடியாத ஒரு அடையாளமாக இருந்து வந்திருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தல். என்பன போன்ற காரணங்களை முன்வைக்கின்றபோது தனியே சிங்களப் பௌத்தம் என்கின்ற தூய்மைவாத அடையாளம் சிக்கலுக்குள்ளா கின்ற நிலை யினை தோற்றுவித்திருக்க முடியும்.

இவ்வாறு தூய்மைவாதத்தினை களங்கப்படுத் துவது சாத்தியமற்றது எனக்கொண்டால் கண் டியரசனின் கொடியாக சிங்கக் கொடிதான் இருந்தது என்பதை வரலாற்று விடயங்களுக் கூடாக மறுத்திருத்தல் வேண்டும். இது பற்றி 'சிங்கக் கொடி, சிங்களக் கொடி, தேசியக் கொடி' எனும் கட்டுரையில் என் .சரவணன் பின்வரு மாறு எடுத்துரைக்கின்றார்.

"கண்டி ராஜ்ஜியம் ஏழு பிரிவுகளாக நிர்வ கிக் கப்பட்டி ருந்தது. அவற்றுக் கென கொடி களும் இருந் தன. அந்த ஏழில் ஒன்று "சத்கோறளை" எனப்படும் பிரதேசம். இன்றைய குருநா கல் பகுதியின் பெரும்பகு தியை உள்ளடக்கியது அது. சத்கோறளையின் கொடிதான் சிங்கக் கொடி. ராஜசிங்கனுக்கு எதிரான கிளர்ச்சி சத்கோற ளையிலிருந்துதான் ஆரம்பித் தது எனலாம். இலங்கை யில் சிங்கள சாதியமைப்பில் மேனி லையில் இருந்த சாதிகளுக் கென்று தனித் தனியான கொடிகள் இருந்திருக்கின்றன. கராவ (மீன்பிடி கரையார் சாதிக்கு ஒப்பானவர்கள்) சாதியினர் சிங்கத்தை தனது கொடியில் வைத்திருக்கின்ற னர்".

ஐரோப்பியர்கள் பலரின் குறிப்புகளில் மன்னர் சூரியனையும் சந்திரனையும் கொண்ட கொடி யையும் சில நேரங்களில் அன்னம், மயில், மான், கரடி, சிங்கம், புலி, யானை, மேலும் சில பறவைகள் போன்ற பல்வேறு பிராணிகளைக் கொண்ட கொடியையும் பயன்படுத்தியதாக வும் குறிப்பிடுகின்றனர். ரொபர்ட் பேர்சிவல் தனது நூலில் (*An Account of the Island of Ceylon, Containing its history, Geography*) ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனின் பரிவாரங்கள் சூரியனின் உருவத் தைக் கொண்ட கொடியை தாங்கிச் சென்றதா கக் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை இன்று நாம் பயன்படுத்தும் வாளேந்திய சிங்கத்தின் உருவத்துக்கு நிகராக ஐரோப்பாவில் பல சின்னங்களும் கொடிகளும் இலச்சினைகளும் இருந்திருக்கின்றன. இன்றும் இருக்கின்றன.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் அவர் களின் முக்கிய இலச்சினைகளாகவும் சின்னங்க ளாகவும் நாணயங்களிலும் சிங்க உருவம் பயன் படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்." என்பார். மேலும் சரவணன் குறிப்பிடுகையில், பிரித்தானி யர் கண்டியில் 3 கொடிகளை கைப்பற்றி அவற்றை செல்சீ வைத்தியசாலையில் வைத்தி ருந்ததாகவும் அவற்றில் ஒரு கொடியில் மாத்தி ரம் வாள் ஏந்திய சிங்கம் இருந்ததாகவும் குறிப் பிடுகின்றார். இக்கொடியினையே சிங்களக் கொடியாக கொண்டுவந்த னர் என்றும் குறிப்பி டுகிறார்.

இவ்வாறு வரலாற்றின் அடியாக டி.எஸ்.சேன நாயக்காவினுடைய கருத்து தவறு என்பதை வெளிப்படுத்தி எந்தவித அதிகாரக் கருத்துநி லைகளுக்கும் இடம்கொடுக்காத சமத்துவ மான கொடி ஒன்றினை முன்மொழிந்தி ருப்பார்க ளேயானால் சிங்கள பௌத்த அடிப்படைவா தத்தினை வெற்றிகொண்டிருக்க முடியும்.

**டி.எஸ்.சேனநாயக்கா, ஏ.ஈ.குணசிங்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன போன்ற சிங்களத் தேசியவாதிகள் சிங்கக் கொடியே இலங்கைக்கான தேசியக் கொடியாக இருக்க வேண்டும் என்று வாதாடினர். இவர்களின் உள்நோக்கம் சிங்கள பௌத்த கருத்தியலின் அடையாளமாக சிங்கக் கொடியைக் கொண்டுவருவதும் அதனூடாக நாட்டின் அடையாளமாக சிங்கள பௌத்தத்தை முன்னிறுத்துவதுமாகும்.**

இதை விடுத்து சிங்களத்துக்கு எதிராக தமிழ் என்று தமிழ் தலைவர்கள் எதிர்நிலை எடுத்த தன் காரணத்தினால் சிங்களம், தமிழ் என்ற இனப்பகைமை இற்றைவரை எவ்வித மாற்றமு மின்றி தொடர்வதற்கும் அழிவுகளைச் சந்திப்ப தற்கும் முதல் அடியெடுத்துக் கொடுத்த சந்தர்ப் பம் இந்த தேசியக் கொடி விடயமாகும்.

தொடரும்.



கட்டுரை

● பால. சிவகடாட்சம்

# இரசவர்க்கம் : மருந்தாகும் மசாலாப் பொருள்கள்

ஈழத்தில் தோன்றிய வைத்தியம் தொடர்பான நூல்களில் ஒன்று செகராசசேகரம். மிகத் தொன்மையான இந்த நூலின் பல பகுதிகள் அழிவடைந்த நிலையில், அதன் எஞ்சிய பகுதிகளே இப்போது நமக்கு நூலுருவில் கிடைக்கின்றது. செகராசசேகரத்தின் இந்த எஞ்சிய பகுதிகளில் 'இரசவர்க்கம்' என்பதை அடிப்படையாகக் கொண்டு அதில் சொல்லப்பட்ட நோய்களையும், அவற்றுக்கான சிகிச்சை முறைமைகளையும், மருந்து வகைகளையும் இக்காலத்துக்கேற்ற வகையில் தருவதே இந்தக் கட்டுரைத்தொடர்.

## கடுகு

படுகின்ற ரத்தம்போம் பாலார் முலை சுரக்கும்
அடுகின்ற மூலம் அணுகாதுதொடுகின்ற
தாளிதத்துக்காகும் தழலாகும் கண்டீர்
வாளித்த வல்ல கடுகு

கடுகு, பெண்களுக்கு மாதவிலக்கு காலத்தில் ஏற்படக்கூடிய கூடுதலான உதிரப்போக்கைக் கட்டுப்படுத்தும். பாலூட்டும் தாய்மாருக்குப் பாற்சுரப்பை ஊக்குவிக்கும். மூல வியாதியைத் தவிர்க்கும். சமையலுக்குத் தாளிதம் செய்வதற்கு உதவும்.

பொதுவாக ஹோர்மோன் சமநிலை பிறழ்வு காரணமாக இளம் வயதுப் பெண்களுக்கும் நடுவயது கடந்த பெண்களுக்கும் மாதவிலக்கின்போது கூடுதலாக இரத்தம் வெளியேறுவதுண்டு. இதைக் கட்டுப்படுத்தப் பயன்படும் மூலிகைகளுள் கடுகும் ஒன்று. 40 கிராம் (8 தேக்கரண்டி) கடுகை எடுத்து நன்றாகப் பொடிசெய்து வைத்துக் கொள்ள வேண்டும். மாதவிலக்கு தொடங்கும் முன்னரும் மாதவிலக்கின் போதும் கடுகுத்தூளில் இரண்டு கிராம் (அரைத்தேக்கரண்டியிலும் சற்று குறைவு) எடுத்து அதனைப் பாலுடன் அல்லது சுடுநீருடன் ஒரு நாளைக்கு இரு தடவைகள் அருந்தவேண்டும். கூடுதல் இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த இது ஒரு சிறந்த வீட்டுவைத்தியம் என்று கூறப்படுகிறது.

கடுகில் செலெனியம் (selenium) என்னும் கனிப்பொருள் நிறைந்து காணப்படுகிறது. பாலூட்டும் தாய்மாருக்கு இந்த செலெனியம் ஏனைய பெண்களைவிடச் சற்றுக் கூடுதலாகத் தேவைப்படுகிறது என்பதைச் சமீபத்தைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த ஆய்வுகளின்படி பாலூட்டும் தாய்மாருக்கு ஒருநாளைக்கு 70 μg மைக்றோகிராம் (micro gram) என்ற அளவிலும் கர்ப்பிணிப்பெண்களுக்கு ஒருநாளைக்கு 60 μg மைக்றோகிராம் என்ற அளவிலும் ஏனைய பெண்களுக்கு ஒருநாளைக்கு 55 μg மைக்றோகிராம் என்ற அளவிலும் இது தேவைப்படுகின்றது. (ஒரு மைக்றோகிராம் (μg) என்பது ஒரு கிராமின் (g) ஆயிரத்தில் ஒரு பங்காகும். (1 μg = 0.001 g)



Mustard (கடுகு)

Image source - gowsalyamart.com

தைறொய்ட் (thyroid) கோளாறு உள்ளவர்கள் கடுகைக் கூடுதலாகவும் தொடர்ந்தும் எடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது. Mustard என்பது கடுகின் ஆங்கிலப்பெயர். *Brassica nigra L.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## சீரகம்

வாயின் அரோசிகம் போம் வாந்திபோம் வாசனையாம்
நோயகலும் பித்தம் நொடியிற்போம்பாயில்
சுரமும்கடுப்பும்போம் சொன்னோமேசீரகத்தைத்
தரமுடைய கண்குளிரும் தான்

சீரகம் வாய்க்கசப்பைப் போக்கி பசியை ஏற்படுத்தும். வாந்தியை நிறுத்தும். உணவுக்கும் வாய்க்கும் ஒரு வாசனையைக் கொடுக்கும். பித்தத்தால் ஏற்படும் காய்ச்சல் தீரும். கண்ணுக்கும் நல்லது.

### பாடபேதம்:

வாய்வு அணுகாது வந்து பிணிசேராது
காயம் நெகிழாது இருகண்குளிரும்சீயான
காரனைய கூந்தல்நல்லீர் கைகண்டதித்தனையும்
சீரகத்தைத் தின்பீர் தினம்

இதன் பொருள்: சீவிய மேகம் போன்ற கூந்தலை உடைய பெண்ணே! சீரகத்தை உணவில் தினமும் சேர்த்துக் கொள்வதனால் சமிபாட்டுக் குறைவினால் ஏற்படும் வாய்வு அணுகாது. நோய் ஏற்படாது. உடல் பலவீனம் அடையாது. கண்களுக்கும் நல்லது. இவை அத்தனையும் அனுபவமூலம் கண்டறிந்தவை.

சீரகத்தில் இரும்புச்சத்து நிறைய உண்டு. பொதுவாக இந்தச் சத்துக்குறைவினால் பெண்கள், குழந்தைகள் மற்றும் பருவ வயதினரே கூடுதலாகப் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் உணவில் சீரகத்தைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்வது நல்லது. பருவம் அடைந்த பெண்களுக்கு மாதவிலக்கின்போது வெளியேறும் இரத்தத்துடன் இரும்புச்சத்து இழக்கப்படுவதால் இவர்களுக்குச் சீரகம் சேர்ந்த கறி சமைத்துக்கொடுக்கும் வழக்கம் இலங்கை மக்களிடம் இருப்பதை இவ்விடத்தில் நினைவு கூரலாம். பெண்களில் மாதவிலக்குச் சுழற்சி சீராக நடைபெறுவதற்கு சீரகம் உதவுகிறது.

**'சீரகம் தின்னச் சீரணம் யாவும்' என்பது மருத்துவப்பழமொழி. சமிபாட்டுகோளாறுகளைச் சீரகம் தீர்த்து வைக்கின்றது என்பது அநுபவமூலமாக அறியப்பட்ட உண்மை. உணவு உண்டபின் சீரகம், சீனி, மாங்காய்த்தூள் என்பன சேர்த்துத் தயாரிக்கப்படும் ஜீர கோலி (Jeera Goli) சாப்பிடுவது இந்தியர்களின் வழக்கம்.**

'சீரகம் தின்னச் சீரணம் யாவும்' என்பது மருத்துவப்பழமொழி. சமிபாட்டுகோளாறுகளைச் சீரகம் தீர்த்து வைக்கின்றது என்பது அநுபவமூலமாக அறியப்பட்ட உண்மை. உணவு உண்டபின் சீரகம், சீனி, மாங்காய்த்தூள் என்பன சேர்த்துத் தயாரிக்கப்படும் ஜீர கோலி (*Jeera Goli*) சாப்பிடுவது இந்தியர்களின் வழக்கம். சமிபாட்டை ஊக்குவிப்பதுடன் வாய்க்கு நறுமணத்தையும் சீரகம் தருகிறது.

*Cumin* என்பது நற்சீரகத்தின் ஆங்கிலப்பெயர். *Cuminum cyminum L.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர். சீரகத்தில் நற்சீரகம், பெருஞ்சீரகம் என்று இரு வகை உண்டு. பெருஞ்சீரகத்தை இந்தியாவில் சோம்பு என்றே குறிப்பிடுவார்கள்.

*Fennel* என்பது பெருஞ்சீரகத்தின் ஆங்கிலப்பெயர். இதன் கீரை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சலாட், சூப் என்பவற்றில் தாராளமாகச் சேர்க்கப்படுகிறது. *Foeniculum vulgare GAERTN* என்பது பெருஞ்சீரகத்தின் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## வெந்தயம்

மாந்தங்கணசுரத்தை மாத்திவிடும் வல்வினையால்
ஏந்தல் வாய்க்களிச்சல் ஏகுமே – போந்துடம்பு
வெச்சென்றால் போக்கிவிடும் மெல்லிநல்லீர்கேளீர்
அச்சமறும் வெந்தயத்துக் காம்



Fenugreek (வெந்தயம்)

Image source - tamil.news18.com

இதன் பொருள்: வெந்தயம் சமிபாட்டுக்குறைவினால் ஏற்படும் மந்தம், காய்ச்சல், வலிப்பு என்பவற்றைக் குணமாக்கும். வாந்தி, வயிற்றோட்டம் என்பவற்றைப் போக்கும். உடம்புச்சூட்டைக் குறைக்கும். இரவில் தூங்குவதற்கு முன் ஒரு தேக்கரண்டி அளவு சுத்தமான வெந்தயத்தை எடுத்து 200 mL (ஒரு கப்) தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். காலையில் எழுந்ததும் வாய் கொப்பளித்த பின் தண்ணீரில் ஊறிய வெந்தயத்தை சாப்பிட்டுவிட்டு அந்தத் தண்ணீரையும் குடிக்க வேண்டும். வாரம் ஒருமுறை இவ்வாறு செய்துவர உடல் சூடு, மலச்சிக்கல் என்பன

வராமல் தடுக்கலாம். கோடை காலத்தில் மோரில் வெந்தயத்தை ஊறவைத்தும் குடிக்கலாம். நீரிழிவு நோயாளர்க்கும் இது நல்லது என்று கூறப்படுகிறது.

வெந்தயத்துடன் சிறிதளவு பெருங்காயத்தையும் போட்டு வறுத்து அரைத்து எடுத்த தூளை ஒரு கோப்பை வெந்நீரில் அல்லது மோரில் போட்டுக் குடிக்க வயிற்றோட்டம் செமியாக்குணம் என்பன தீரும் என்னும் ஒரு நம்பிக்கையும் உண்டு. *Fenugreek* என்பது வெந்தயத்தின் ஆங்கிலப்பெயர். *Trigonella foenumgraecum L* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## கொத்தமல்லி

கொத்தமல்லிவெட்டைகுளிர்காய்ச்சல்வாய்வுடனே
இத்தனையும்போக்கும் இதங்கொடுக்கும்உத்தமமாம்
கண்ணுக்குக்காந்தியாம் கடுகியரோசியம்போம்
மண்ணுக்குமேல் நல்ல மருந்து

இதன் பொருள்: கொத்தமல்லிக்கு குளிர்காய்ச்சல் வாய்வு என்பன தீரும். கண்ணுக்கும் ஒளியைக்கொடுக்கும். மண்ணில் கிடைக்கக்கூடிய நல்ல மருந்து இது.

கொத்தமல்லிக்கு வெப்புக்குலையும் பழசுரம்போம்
சத்திவிக்கல்தாகம் தனைப்போக்கும்பித்தமறும்
மந்தம்தனைப்போக்கும் வாயுவிகாரம்போக்கும்
செந்திருவே இக்குணத்தைச் செப்பு

இதன் பொருள்: கொத்தமல்லிக்கு உடற்சூடு காய்ச்சல், சத்தி, விக்கல், தாகம் என்பன தீரும். பித்தம் இல்லாதொழிந்துவிடும். மந்தம் மற்றும் வாய்வினால் ஏற்படும் பிரச்சனைகளைக் குறைக்கும்.

வைட்டமின் K, வைட்டமின் A, மற்றும் வைட்டமின் C சத்துக்கள் நிறைந்த தாவர உணவுகளில் கொத்தமல்லிக் கீரையும் ஒன்று.
இரசவர்க்கத்தில் கொத்தமல்லி கண்ணுக்கும் காந்தி (ஒளி) தரும் என்று கூறப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். வைட்டமின் A கண்களின் விழிவெண்படலத்தைப் (*cornea*) பாதுகாப்பதன் மூலம் கண்களின் பாதுகாப்பை உறுதிசெய்கிறது. ஆரோக்கியமான சளியமென் சவ்வுகளினதும் சருமத்தோலினதும் ஆரோக்கியத்துக்கும் வைட்டமின் A அவசியமாகும்.
எலும்பின் அடர்த்திக் குறைவினால் ஏற்படும் ஒஸ்ரியோபொறோசிஸ் (*osteoporosis*)ஐக் கட்டுப்படுத்தும் வைட்டமின் K கொத்தமல்லிக் கீரையில் அதிக அளவில் காணப்படுகிறது. முதியவர்களுக்கு எலும்பின் அடர்த்தி படிப்படியாகக் குறைவதனால் கூன் விழுதல். எலும்பு நோவு, எலும்புமுறிவு போன்ற பிரச்சனைகளுக்கு இவர்கள் உள்ளாக நேரிடுகின்றது. மாதவிடாய் நின்றுவிட்ட பெண்களுக்கு, குறிப்பாக ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இது ஒரு பிரச்சனையாக உருவெடுக்கலாம். இவர்கள் தமது உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய கீரைவகைகளுள் கொத்தமல்லிக்கீரையும் ஒன்று.



Coriander (கொத்தமல்லி) & Cilantro (கொத்தமல்லிக்கீரை)

Image source - krishijagran.com

பொது ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு எமக்குத்தேவையான வைட்டமின் C அளவின் 30 சதவீதத்தை 100 கிராம் கொத்தமல்லிக்கீரையில் இருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

செமியாக்குணம், பித்தத்தினால் ஏற்படும் வாந்தி, தலைச்சுற்று என்பவற்றுக்கும் கொத்தமல்லிக்கீரை மருந்தாகும். இதன் வலுவான ஒட்சி எதிர்ப்புக் (*antioxidant*) குணங்கள் ஈரலின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்தி உள்ளன.
நல்ல கொலெஸ்ரறோலைப் (*HDL cholesterol*)) பாதிக்காது கெட்ட கொலெஸ்ர றோலை (*LDL cholesterol*) மாத்திரம் குறைக்கும் குணம் கொத்தமல்லிக்கு உள்ளது.

கொத்தமல்லி விதையை 'தானியா' என்று குறிப்பிடுவது இந்தியர்களின் வழக்கம். குளிர்காய்ச்சலுக்கு அல்லது தடுமலுடன் கூடிய காய்ச்சலுக்கு கொத்தமல்லியும் (தானியா) இஞ்சியும் சேர்த்துக் காய்ச்சிய குடிநீர் மருந்தாகும். சரக்குத்தூளில் (*curry powder*) கொத்தமல்லியும் தவறாமல் சேர்க்கப்படுவதுண்டு. இந்தியர்கள் தமது சமையலின் முடிவில் கறிகளில் கொத்தமல்லிக் கீரையைச் சுவையூட்டியாகச் சேர்த்துக்கொள்ளத் தவறுவதில்லை.

கொத்தமல்லிக் கீரையை சிலன்ரோ (*cilantro*) என்னும் பெயரில் கனடா உட்பட மேலைத்தேய நாடுகளில் அனைத்து பலசரக்கு மற்றும் காய்கறிக் கடைகளிலும் பெற்றுக்கொள்ளமுடியும் Coriander மற்றும் Cilantro என்பவை கொத்தமல்லியின் ஆங்கிலப்பெயர்கள். *Dhanaiya* என்பது இதன் வர்த்தகப் பெயர் *Coriandrum sativum L.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

தொடரும்.





## பெருங்காயம்

அட்டகுன்மம் தானும் அணுகாது ஆகமதில்
ஒட்டியவாய்வுத் திரட்சி ஓடுமேமுட்டவே
வருங்காயம் புட்டியாம் மாரிழையீர் கேளீர்
பெருங்காயம் என்று குணம் பேசு

இதன் பொருள்: எட்டுவகையான குன்மங்களும் சேராது. வாய்வுப் பிரச்சனைகளை ஒட்டிவிடும். உடலுக்கு வலுவைக்கொடுக்கும். பெண்ணே பெருங்காயத்தின் குணம் இதுவாகும்.

மேலதிக விபரம்: பெருங்காயம் என்பது பெருஞ்சீரகக்குடும்பத்துக்குரிய ஒரு தாவரத்தின் வேர்க்கிழங்கிலிருந்தும் தண்டில் இருந்தும் பெறப்படும் ஒரு பிசின் ஆகும். ஈரான் தேசத்துக்குரியது இந்தத்தாவரம். இந்த மூலிகைப் பொருளைக் கட்டியாகவோ தூளாகவோ கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும். செமியாக்குணம், வாய்வு என்பற்றைத் தீர்த்து வைக்கும் சிறந்த மருந்தாகப் பெருங்காயம் உள்ளது. எளிதில் சமிபாடு அடையாத போஞ்சி கடலை மற்றும் பருப்பு வகைகளைச் சமைக்கும்போது பெருங்காயத்தையும் சேர்த்துக்கொள்வதன் மூலம் வாய்வுக்கோளாறுகள் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

இருமலுக்குப் பெருங்காயக்குடிநீரை சிறிதளவு தேனுடன் குடிக்கலாம். இரத்தத்தில் கூடுதலாக உள்ள கொலெஸ்ரெறோல் உட்பட்ட கொழுப்புக்களின் அளவைக்குறைக்கும் குணமுடையது பெருங்காயம் என்று கூறப்படுகிறது.

*Asafoetida* என்பது பெருங்காயத்தின் ஆங்கிலப் பெயர். *Hingu* என்பது இதன் வர்த்தகப் பெயர். *Ferula assafoetida L.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞா னப்பெயர்.

## இஞ்சி

இஞ்சிக்கு வாதம் இருமல் இவை தோன்றாது
வஞ்சிக்கும் சோகைதனை மாற்றுமேதுஞ்சவரும்
சூலை கயரோகம் தொடராது இப்புவிவில்
வேலனைய கண்ணாய் விளம்பு

இதன் பொருள்: இஞ்சியைத் தொடர்ந்து பயன்படுத்திவருவோர்க்கு வாதம் இருமல் என்னும் வியாதிகள் வராது. உடலை வாட்டும் காமாலைநோய் மாறும். மரணத்தை ஏற்படுத்தக்கூடிய சூலை மற்றும் காசநோய்கள் பரவாது. வேலை ஒத்த கண்ணை உடையவளே இதனை எல்லோருக்கும் எடுத்துரைப்பாயாக.

**பாடபேதம்:**

இஞ்சிக்கிழங்குக்கு இருமல் ஐயம் ஓங்காளம்
வஞ்சிக்கும் சன்னி சுரம் வன்பேதிவிஞ்சுகின்ற
சூலையறும் வாதம்போம் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய் விளம்பு

### பதார்த்தகுணசிந்தாமணி

மேலதிக விபரம்: வயிறு மற்றும் குடல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு மருந்தாக இஞ்சி நெடுங்காலமாகப் பயன்பட்டு வந்துள்ளது. குடல் வாயுவை வெளியேற்றவும் உணவுப்பாதையைச் சீராக்கவும் இஞ்சி உதவுகின்றது.

பிரயாணத்தின்போது குறிப்பாகக் கடல்பிரயாணத்தின்போது ஏற்படக்கூடிய தலைச்சுற்று ஓங்காளம் வாந்தி என்பவற்றை நிறுத்த இஞ்சி பெரிதும் உதவும். பிரயாணச் சுகயீனம் (motion sickness) தொடர்பான குறிகுணங்களை குறைப்பதற்காக ஆங்கில மருந்துக்கடைகளில் விற்கப்படும் ட்ராமாமைன் (Dramamine) என்னும் மருந்திலும் பார்க்கச் சிறந்த

பலனை இஞ்சி கொடுக்கக்கூடியது என்ற உண்மை சமீபத்தைய ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.
கர்ப்பம் அடைந்திருக்கும் பெண்களுக்கு ஆரம்பகாலத்தில் (20 கிழமைகளுக்குள்) ஏற்படக்கூடிய ஓங்காளம் சத்தி என்பவற்றின் கடுமையைக் குறைக்கவும் இஞ்சி பெரிதும் உதவும். பக்கவிளைவு எதனையும் இஞ்சி ஏற்படுத்தாது என்பது இதன் இன்னுமொரு சிறப்பு. இதுபற்றிய ஆய்வுமுடிவுகள் *Obstetrics and Gynecology* என்னும் மருத்துவ விஞ்ஞான சஞ்சிகையின் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இதழில் தரப்பட்டுள்ளன.
ஓங்காளம் வாய்குமட்டல் போன்ற குணங்கள் காணப்படும்போது அரை அங்குலம் நீளமான ஒன்று அல்லது இரண்டு இஞ்சித்துண்டுகளை ஒரு கோப்பை சுடுநீரில் ஊறவைத்து எடுத்த இஞ்சிக்குடிநீரைக் குடிப்பதன் மூலம் சுகம் காணலாம்.

மூட்டுவாதத்தால் முழங்காலில் நோவு ஏற்பட்டு அவதிப்படுவோருக்கு இஞ்சி நிவாரணம் அளிக்கின்றது. இஞ்சியில் செறிந்து காணப்படும் ஜிஞ்ஜெறோல் (*gingerol*) என்னும் இரசாயனமே இதற்குக்காரணம் என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சாப்பாட்டில் இஞ்சியை வழக்கமாகச் சேர்த்து வருபவர்களுக்கு மூட்டுக்களில் ஏற்படும் வலியின் தாக்கம் குறைகிறது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள் (*Life Sciences, November* 2003).

தோலில் உள்ள வியர்வை சுரப்பிகளினால் சுரக்கப்படும் டேர்மிசைடின் (*dermcidin*) என்னும் ஒருவகைப் புரதப்பொருள் தோலில் தொற்றுப் புண்களைத் தோற்றுவிக்கும் பற்றீரியா மற்றும் பங்கசுக் கிருமிக ளுக்கெதிரான பாதுகாப்பை அளிப்பதாக ஜெர்மன் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். குளிர்நாட்களில் இஞ்சி உடலுக்கு உஷ்ணத்தைக் கொடுப்பதுடன் வியர்வையையும் ஊக்குவிக்கும். வியர்வை உடலில் உள்ள அசுத்தங்களை வெளியேற்றுகின்றது. வியர்வையில் உள்ள கிருமிகொல்லும் இரசாயனங்கள் தடுமல், காய்ச்சல் (*Flu*) போன்ற தொற்றுநோய்கள் வராமல் தடுக்கின்றன.

*Ginger* என்பது இதன் ஆங்கிலப்பெயர். *Zingiber officinale ROSC.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## உள்ளி

உள்ளிக்குப் பித்தம் ஓங்கிப்பெருகிவிடும்
கள்ளமுள்ள சேட்டுமத்தைக் கட்டறுக்கும்மெள்ளவே
வாதம்தனைப்போக்கும் வாய்வுக்கிகிராணி ரத்த
சீதம் தனைப்போக்கும் செப்பு

இதன் பொருள்: உள்ளி பித்தத்தைக் கூட்டிவிடும். நெஞ்சுச்சளி தொடர்பான நோய்களைக் குணப்படுத்தும். வாதநோய் ஏற்படுவதைத் தவிர்க்கும். சமிபாட்டுக் கோளாறினால் ஏற்படும் மாந்தம் வயிற்றோட்டம் என்பவற்றைக் குணப்படுத்தும்.



Garlic (உள்ளி)

Image source - www.tamilxp.com

மேலதிகவிபரம்: நல்ல கொலெஸ்ரறோலைப் (*HDL cholesterol*)) பாதிக்காது கெட்ட கொலெஸ்ரறோலை (*LDL cholesterol*) மாத்திரம் குறைக்கும் குணம் உள்ளிக்கு உள்ளது. இரத்தக்குழாய்களைவிரிவடையச்செய்வதன் மூலம் உயர் இரத்த அழுத்தத்தை சிறிதளவு குறைக்கவும் உள்ளி உதவுகின்றது. உள்ளியை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் மாரடைப்பு (*heart attack*) மற்றும் பக்கவாதம் (*stroke*) போன்ற வியாதிகள் தோன்றும் அபாயத்தை ஓரளவு குறைக்கமுடியும் என்று நம்பப்படுகிறது. இரசவர்க்கத்தில் 'உள்ளிக்குப் பித்தம் ஓங்கிப்பெருகிவிடும்' என்று கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். அளவுக்கு அதிகமாக உள்ளியைச்சாப்பிடுவது ஓங்காளம், நெஞ்செரிவு, வயிறெரிவு என்பவற்றைத் தோற்றுவிக்கலாம்.

காதுவலியைக் குணப்படுத்துவதற்கு உள்ளி சிறந்த மருந்து என்பது பலரும் அறிந்த உண்மை. எனினும் இதற்கு உள்ளியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அறிந்துவைத்திருத்தல் அவசியம். மூன்று உள்ளிப்பூடுகளைச் சுத்தம்செய்து நசித்து எடுத்தபின் அவற்றை அரை கப் (120 *mL*) சுத்தமான ஒலிவ் (*olive*) எண்ணெயில் இலேசான சூட்டில் இரண்டு நிமிடங்கள்வரை விடவேண்டும். பின்னர் எண்ணெயை மாத்திரம் வடித்து எடுத்து குளிர்சாதனப்பெட்டிக்குள் வைக்கவும். காது வலி ஏற்படும்போது இந்த எண்ணெயில் சிறிதளவு எடுத்துச் சற்று சூடாக்கி ஒன்று அல்லது இரண்டு துளிகளை இளஞ்சூட்டுடன் காதுக்குள் விடவும். ஆயுள்வேத வைத்தியர்கள் ஒலிவ் எண்ணெய்க்குப் பதிலாகக் கடுகு எண்ணெயைப் (*mustard oil*) பயன்படுத்தி உள்ளித் தைலம் தயாரிக்கிறார்கள்.

இவர்களது முறைப்படி 5 அல்லது 6 உள்ளிப்பூடுகளை நசித்துஎடுத்து அவற்றை 4 தேக்கரண்டி (20 *mL*) கடுகெண்ணெயில் போடவேண்டும். இந்தக்கலவையை 5 தொடக்கம் 10 நிமிடங்கள் வரை இலேசான சூட்டில் உள்ளி பிறவுண்நிறம் அடையும்வரை விடவேண்டும். பின்னர் எண்ணெயை வடித்தெடுத்து ஒரு கண்

ணாடிக் குப்பியில் அடைத்து வைக்கவேண்டும்.
வலி உள்ள காதுக்குள் ஒவ்வொரு துளியாக சில துளிகள் விட்டபின் 30 நிமிடங்களுக்குக் காதைப் பஞ்சினால் அடைத்துவைக்கவும். காதில் விடப்படும் சமயத்தில் எண்ணெய் அதிக சூடாகவோ குளிராகவோ இருத்தல் கூடாது. ஒரு நாளைக்கு இரு தடவைகள் வலி குறையும் வரை 2 அல்லது 3 நாட்களுக்குத் தொடர்ந்து செய்யலாம். இதற்கு மேலும் காதுவலி நீடித்தால் உடனடியாக வைத்தியரிடம் செல்லவும். காதில் சீழ் வடியும்போது இந்தச் சிகிச்சையைச் செய்யக்கூடாது.
உள்ளியை வெள்ளைப்பூடு அல்லது பூடு என்று குறிப்பிடும் வழக்கம் உண்டு. *Garlic* என்பது உள்ளியின் ஆங்கிலப்பெயர். *Allium sativum L.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## இலவங்கப்பட்டை (கறுவா)

பித்த மிகப் போக்கும் பேதியொடு வாந்திபோம்
சுத்த ரத்தக்கடுப்பு சூழாதுமெத்த
இலவங்கப் பட்டை இதமாகக் கொண்டால்
மலங் கட்டும் என்றே மதி

இதன் பொருள்: பித்தத்தைப் போக்கும். பேதியையும் வாந்தியையும் நிறுத்தும். இரத்தக்கடுப்பு ஏற்படாது. உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொண்டால் மலக்கட்டு ஏற்படும்.



**இலங்கைக்கறுவா**
(Ceylon cinnamon)



**சீனக்கறுவா**
(Cassia cinnamon)

Image source - singhecinnamon.com

மேலதிகவிபரம்: உணவுக்குச்சுவையூட்டுவது என்ற விடயம் ஒருபுறம் இருக்க கறுவாப் பட்டையின் மருத்துவப் பயன்பாடுகள் இன்று உலகின் பலபாகங்களிலும் பேசப்பட்டும் ஆராயப்பட்டும் வருகின்றன.

பற்றீரியா மற்றும் பூஞ்சணங்களை அழிக்கும் கறுவாப்பட்டைத் தைலத்தின் குணம் பற்றிய எனது ஆய்வின் பெறுபேறுகளை 1976 ஆம் ஆண்டில் நடைபெற்ற இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் சமர்ப்பித்து உரையாற்றினேன். இன்று கறுவாவின் தொற்றுநீக்கும் இயல்பு பல்வேறு ஆராய்ச்சியாளர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக்குணம் வயிற்றுப்புண்ணைத் (*ulcer*) தோற்றுவிக்கும் ஒருவகையான பற்றீரியாக்கிருமியை (*Helicobacter pylori*) அழிக்க உதவுகின்றது.

இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைக்கும் குணமுடைய கறுவாப்பட்டை நீரிழிவு நோயாளர்க்கு உபயோகமானது. கறுவா இரத்தத்தை ஐதாக்குவதால் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் இயல்பு உடையது. இதன் காரணமாக இருதயவியாதிகள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கின்றது.

கறுவா சாப்பிடுவோர் ஒரு நாளைக்கு அரைத்தேக்கரண்டி கறுவாத்தூளுக்கும் அதிகமாக எடுக்கவேண்டியதில்லை. இதனைத்தேனீருடன் சேர்த்தும் அருந்தலாம். அதிக அளவிலான கறுவா கெடுதி விளைவிக்கக்கூடியது.

கறுவாவில் உள்ள சினமால்டிஹைட் (*cinnamaldehyde*) என்னும் இரசாயன உள்ளடக்கம் பெண்களில் பாலியல் ஹார்மோன்களின் (*sex hormones*) சமநிலையைப் பேணுவதன் மூலம் மாதவிலக்கின் போது ஏற்படக்கூடிய வலி, கருத்தரித்தலில் குறைபாடு என்பவற்றைத் தவிர்க்கக்கூடியது.

கறுவாத் தைலமும் கர்ப்பூரமும் சேர்ந்த தைலத்தை மூட்டுவாதத்தால் அவதிப்படுவோர்கள் நோவுள்ள மூட்டுக்களில் தேய்த்து உருவுவதன் மூலம் உடனடி நிவாரணம் பெறுகிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆதியில் கறுவா மரத்தின் வேரில் இருந்து கர்ப்பூரம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வகையான சமையல்களிலும் உணவுப் பண்டங்களிலும் சுவையூட்டியாகப் பயன்படும் கறுவாவில் இருவகையுண்டு. ஒன்று உண்மையான கறுவா (*true cinnamon*) எனப்படும் இலங்கைக்கறுவா. மற்றது கசியா சினமன்( *cassia cinnamon*) எனப்படும் சீனக்கறுவா. இலங்கைக்கறுவா தரமுடையதாயினும் இரத்தத்தில் உள்ள சீனியைக் குறைப்பதில் இதன் செயல் திறன் சீனக்கறுவாவை விடக் குறைவானது.
கறுவாவை மருந்தாகப் பயன்படுத்தும்போது பக்கவிளைவுகள் ஏதும் இல்லை. எனினும் அளவுக்கதிகமான கறுவா அதிலும் குறிப்பாக சீனக்கறுவா ஈரலைப் பாதிக்கக்கூடியது.
நீரிழிவு, இருதய வியாதி என்பவற்றுக்குக் கொடுக்கப்படும் வேறு மருந்துகளினதும் அன்ரிபையோற்றிக் (*antibiotics*) அஸ்பிரின் என்பவற்றினதும் செயற்பாட்டில் கறுவா குறுக்கிடலாம். எனவே இம்மருந்து

> சாதிக்காயில் இருந்து அற்ககோல் மூலம் பெறப்பட்ட சத்து ஆண் எலிகளின் பாலுறவுச் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்வதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

களை எடுப்போர் கறுவாவைத் தொடர்ந்து பயன்படுத்தும் முன் குடும்ப டாக்டரைக் கலந்தாலோசிப்பது அவசியம்.
சீனக்கறுவா செங்கபில (reddish brown) அல்லது கபிலநிறத்துடனும் (dark brown) தடிப்பான பட்டைகளாகவும் காணப்படும். இலங்கைக் கறுவா சற்று வெளிறியும் எளிதில் உடைந்துவிடக்கூடிய மெல்லிய பட்டைகளாகவும் காணப்படும்.

முதலில் அராபியரும் பின்னர் போர்த்துக்கேயர் முதலான ஐரோப்பியரும் இலங்கையில் காலூன்ற விரும்பியதற்கு ஒரு முக்கியமான காரணம் இந்தக்கறுவா. வட இலங்கையை ஆரியச்சக்கரவர்த்தி என்றழைக்கப்பட்ட தமிழரசர் ஆண்டுகொண்டிருந்த காலம் அது. இபின்பதுதா என்னும் பெயருடைய அராபிய யாத்திரிகர் ஆரியச்சக்கரவர்த்தியின் ஆட்சிக்குட்பட்டிருந்த புத்தளத்தில் மலைபோலக் குவித்து வைக்கப்பட்டிருந்த கறுவாப் பட்டைக் குவியலைக்கண்டு வாய்ப்பிளந்து நின்றாராம். அவர் இங்கு வந்த ஆண்டு கி.பி.1344. *Cassia cinnamon* என்பது சீனக்கறுவாவின் ஆங்கிலப்பெயர். *Cinnamomum cassia BLUME* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர். *True cinnamon* என்பது இலங்கைக் கறுவாவின் ஆங்கிலப்பெயர். *Cinnamomum zeylanicum BL.* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப்பெயர்.

## சாதிக்காய்

ஆதிக்கமுண்டாம் அழகுமிகும்மேனி
சாதிக்காய் நோய்களைத் தானகற்றும்பேதிக்காய்
கமலவிழிமாதர் கலவிக்கு நல்லதாம்
நிமலுதரம்போக்கும் நேர்

இதன் பொருள்: உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்வையும் பொலிவையும் தரும் சாதிக்காய் பலநோய்களுக்கும் மருந்தாகும். உடலுறவுக்கு உந்துதல் அளிக்கும்.

மேலதிகவிபரம்: சாதிக்காய் மூளைக்குப் புத்துணர்ச்சி கொடுக்கக்கூடியது. பதட்டம், மன உளைச்சல் என்பவற்றுக்கு மருந்தாக உதவக்கூடியது. வேலையிலும் படிப்பிலும் கூடுதல் கவனம் செலுத்த உதவும்.
முகப்பரு, அவற்றினால் ஏற்படும் அடையாளங்களை அகற்ற சாதிக்காய் பயன்படும். இதற்கு ஒரு தேக்கரண்டி சாதிக்காய்த்தூளை சிறிதளவு தேனுடன் கலந்து ஒரு பசையாக எடுத்து பரு அடையாளங்கள் உள்ள இடத்தில் பூசவும். அரைமணித்தியாலத்தின் பின்னர் இலேசான சூடு உள்ள நீரினால் முகத்தைக்கழுவவும். தேனுக்குப் பதிலாக பசும்பாலையும் பயன்படுத்தலாம்.



**Nutmeg (சாதிக்காய்)**


Image source - enine.lk

எக்சிமா (eczema) உள்ள இடங்களில் சாதிக்காய்த்தூளைச் சிறிதளவு தண்ணீருடன் கலந்து மெல்லிய பசையாகப் பூசுவதும் ஒரு வீட்டு வைத்திய முறையாகும்.

உடலுறவுக்கு ஊக்கமளிக்கும் சக்தி சாதிக்காய்க்கு உள்ளது என்பது அரபு நாட்டவரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. சாதிக்காயில் இருந்து அற்ககோல் மூலம் பெறப்பட்ட சத்து ஆண் எலிகளின் பாலுறவுச் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்வதை ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். 'கமலவிழிமாதர் கலவிக்கு நல்லதாம்' என்று இரசவர்க்கத்தில் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்
வயிற்றோட்டம், தொற்றுக்கள், வாதம் போன்ற பலவியாதிகளுக்கு மருந்தாகப் பயன்பட்டாலும் சாதிக்காயை மிகச்சிறிய அளவிலேயே பயன்படுத்தவேண்டும். மூன்று தொடக்கம் பத்து கிராமுக்கு அதிகமாக இதனை எடுக்கக்கூடாது.

இற்றைக்கு முன்னூறு ஆண்டுகளுக்குமுன்னர் இந்தோனேசியாவுக்குச் சொந்தமான பண்டாதீவுகள் (Banda islands) என்றழைக்கப்பட்ட சிலதீவுகளில் மாத்திரமே சாதிக்காய் மரங்கள் காணப்பட்டன. பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளில் இத்தீவுகளைக் கைப்பற்ற டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் போர்களில் ஈடுபட்டதுண்டு. சாதிக்காயின் விலை தங்கத்திலும் கூடியதாக இருந்த நேரம் அது. ஆங்கிலேயர்கள் சாதிக்காய் மரங்களை ஆபிரிக்கா, மேற்கிந்திய தீவுகள் போன்ற இடங்களிலும் வளர்க்கத் தொடங்கியதால் பண்டாத்தீவுகள் வருமானத்தை இழந்து இன்று வறுமையில் வாடுகின்றன.
*Nutmeg* என்பது சாதிக்காயின் ஆங்கிலப்பெயர். *Myristica fragrans HOUTT* என்பது இதன் இலத்தீன் விஞ்ஞா னப்பெயர்.

தொடரும்.



தென்னிந்தியாவில் இருந்து வந்த செட்டிகள்

Image source - www.roar.media

# 18ம் நூற்றாண்டில் வடஇலங்கையின் வேளாளர்கள் : வர்த்தகமும் முயற்சியாண்மையும் சமூக உயர்ச்சியும்



கட்டுரை

● கந்தையா சண்முகலிங்கம்

இத்தொடர் யாழ்ப்பாணத்தில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டமைப்பின் இருப்பியலையும், சாதிமுறையின் இறுக்கமான பின்பற்றுகைகளையும் பற்றிய ஆங்கில ஆய்வுக்கட்டுரைகளை மொழி பெயர்த்து வழங்குவதாக அமைகின்றது.

சமூகப்பிரிவுகள், சமூகப்படி நிலையில் உயர்ச்சியடைதல் என்னும் சமூக அசைவியக்கத்திற்கான (Social Mobility) வழிகளில் வர்த்தகமும், முயற்சியாண்மையும் (Entrepreneurship) முக்கியமானவை. யாழ்ப்பாண மாவட்டத்தில் வர்த்தகம், அதனோடு தொடர்புடைய வட்டிக்குப் பணம் கொடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் மரபுவழியாக ஈடுபட்டுவந்த சமூகப் பிரிவினர் மிகச் சிறிய எண்ணிக்கையினராக இருந்தனர். இதனால் இச்சிறிய வர்த்தக சமூகப்பிரிவு, வேளாளர்களுக்கு அறைகூவல் விடுக்கக்கூடியளவுக்குப் பலம் உடையதாக இருக்கவில்லை. நாம் முன்னரே குறிப்பிட்டது போல, செட்டிகள் என்ற சமூக பிரிவினரான வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களிலேயே குடியேறி வாழ்ந்து வந்தனர். இச்சமூகப் பிரிவினர் கடல்கடந்த வர்த்தகத்திலும், உள்நாட்டில் சில்லறை



**மீன்பிடித் தொழில்**

Image source - www.hindutamil.in

வர்த்தகத்திலும் செல்வாக்குச் செலுத்தி வந்தனர். புகையிலை, யானை ஏற்றுமதி என்பன முக்கியமான ஏற்றுமதிகளாக இருந்த அக்காலத்தில் செட்டிகள் இப்பண்டங்களின் (Commodities) தரகர்களாக (Brokers) செயற்பட்டு இலாபம் ஈட்டினர். முன்னர் குறிப்பிட்டது போன்று இச்சமூகப்பிரிவைச் சேர்ந்த சில தனிநபர் கள், வர்த்தகர், வட்டிக்குப் பணம் கொடுப்போர், ஏற் றுமதிப் பண்டங்களின் தரகர்கள் ஆகிய வகிபாகங் கள் மூலமாக சமூகத்தில் பிரபலம் பெற்ற ஆளுமை களாக விளங்கினர். இவர்கள் 'பரதேசிகள்' என்ற சமூ கப்பிரிவினருடன் இணைந்து கொண்டனர். வேளா ளர், செட்டிகள் ஆகிய சமூக அந்தஸ்துடைய உயர் குழுக்களுக்கு சமதையானவர்கள் இந்த பரதேசிகள் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டி ருந்தோம். செட்டிகள், வேளாளர்களுடன் நல்லுறவைப் பேணி வந்தனர். வேளாளர் சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்க ளாய் இருந்தனர். அவர்கள் விவசாய வளங்கள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தனர். இக்காரணங்க ளால் செட்டிகள், வேளாளர்களோடு நட்புறவைப் பேணியமை, அவர்களின் வர்த்தக நடவடிக்கைக ளுக்கு உதவியது.

வர்த்தகம், பண்டங்களின் தரகுவேலை, ஏனைய முயற்சி யாண்மை நடவடிக்கைகள் என்பனவற்றில் டச்சுக்கா ரர் ஆட்சியின்போது வேளாளர்களும் படிப்படியாக ஊடுருவத் தொடங்கினர். அக்காலத்தின் முக்கிய மான மாற்றங்களில் வேளாளர்களின் வர்த்தகத்துறை ஊடுருவல் குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். தென்னிந்தியாவில் ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் முதலியார்கள் என்ற சமூகப் பிரிவினர், 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதராஸ், பாலக் காடு, புதுச்சேரி ஆகிய இடங்களில் நிலை கொண்டி ருந்த ஐரோப்பியக் கம்பனிகளுடன் வர்த்தக நல்லு றவை வளர்த்துக் கொண்டு, வர்த்தகத்துறையில் உயர்ச்சி பெற்றதை, யாழ்ப்பாணத்தின் வேளாளர்களின் வர்த்தகத்துறை உயர்ச்சியுடன் ஒப்பிடுவது பொருத்த மானது எனக் கருதுகிறேன். வேளாளர்களும் தென் னிந்திய நகரங்களில் நிலைகொண்டிருந்த கம்பனிக ளுடன் புகையிலை, யானை ஆகிய பண்டங்களின் தரகர் தொழில் (Brokerage) நடவடிக்கைகளில் ஈடுபட்டு இலாபம் ஈட்டினர். யானை ஏற்றுமதி வர்த்தகம் யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக நிலைபெற்றி ருந்த வர்த்தக நடவடிக்கையாகும். வங்காளம், கோல்

**புகையிலைத் தரகு வேலையும் பணம் திரட்டுவதற்கான இன்னொரு வழியாக இருந்தது. தரகு வேலையைச் செய்தது மட்டுமல்லாது கிராமங்க ளிற்குச் சென்று விவசாயிகளிடம் புகையிலை யைக் கொள்வனவு செய்து, பிற ஏற்றுமதியாளர் களுக்கு மொத்தமாக விற்பனை செய்தல் அல்லது தாமே நேரடியாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தல் ஆகிய வர்த்தக நடவடிக்கை களிலும் வேளாளர்கள் ஈடுபட்டனர்**



**புகையிலை உற்பத்தி**

**Image source - www.virakesari.lk**

கொண்டா, மதுரா ஆகிய தூர இடங்களில் இருந்து யானை வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திற்கு யானைகளைக் கொள்வனவு கொள்வதற்காக வந்து போயினர். டச்சு கிழக்கிந்தியக் கம்பனி யானை ஏற்றுமதி வர்த்தகத்தைத் தனது ஏகபோக உரிமையாக வைத்திருந்தது. இந்நிலையில் இந்திய வர்த்தகர்களுக்கு யானைகளின் ஏல விற்பனை நடைமுறைகளில் நல்ல பரிச்ச யம் உடைய உள்ளூரவர்களான தரகர்களின் (Brokers) உதவி தேவைப்பட்டது. வர்த்தகர்கள் மட்டுமல்லாது தென்னிந்தியாவின் தஞ்சாவூர், திருச்சிராப் பள்ளி, இராமநாதபுரம் ஆகிய இராச்சியங்களின் அரசர்களும் யானைகளைக் கொள்வனவு செய்வதற்கு தரகர்களின் உதவியை நாடினர்.

வர்த்தகர்களதும், மேற்குறித்த அரசர்களதும் நம்பிக்கையைப் பெற்றிருந்த யானைத் தரகர்கள் பெருந்தொகைப் பணத்தைத் தரகுக் கூலியாக உழைத்தனர். புகையிலைத் தரகு வேலையும் பணம் திரட்டுவதற்கான இன்னொரு வழியாக இருந்தது. தரகு வேலையைச் செய்தது மட்டுமல்லாது கிராமங்க ளிற்குச் சென்று விவசாயிகளிடம் புகையிலையைக் கொள்வனவு செய்து, பிற ஏற்றுமதியாளர்களுக்கு மொத்தமாக விற்பனை செய்தல் அல்லது தாமே நேரடியாக இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தல் ஆகிய வர்த்தக நடவடிக்கைகளிலும் வேளாளர்கள் ஈடுபட்டனர். தரகர்களுக்குரிய புகையிலைத் தரகுப்பணம் (Commission) பொதுவாக
10 வீதமாக இருந்து வந்தது. தரகர்கள் இதற்குக் கூடிய அளவிலும் இலாபம் ஈட்ட முடிந்தது. வரிக்குத்தகை இன்னொரு முக்கியமான முயற்சியாண்மையாகும்.

காலனிய அரசாங்கம் அறவிட வேண்டிய பல்வகை வரிகள், வாடகைப்பணம் என்பனவும் (தபால் சேவை, படகுச்சேவை போன்ற) சேவைகளும் ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டது. ஏலத்தில் குத்தகையைப் பெறுவோர் வரிக்குத்தகை மூலம் இலாபம் உழைத்தனர். பணம் படைத்தவர்களே ஏலத்தில் போட்டியிட்டு முதலிடவும், இவை போன்ற வர்த்தக ஆபத்துக்களை (Business Risk) ஏற்கக்கூடிய முயற்சி யாண்மையுடையோராயும் இருந்தனர். 18 ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியின் வரிக்குத்தகை ஆவணங்களைப் பரிசீலனை செய்யும்போது குத்தகைக்காரர் அட்டவணைகளில் வேளாளர்களான வர்த்தகர்கள் பலரின் பெயர்கள் முதலிடம் பெற்றிருந்ததைக் காணமுடிகிறது. அத்தோடு வேளாளர்கள் பல்வேறு வகைப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமையையும் காணமுடிகிறது. தமது விவசாய உற்பத்தித் தொழிலோடு தொடர்புடையதான நெல்வரியை அறவிடுதல், கள்ளுச் சீவுதலுக்கான வரியை அறவிடுதல், கடலின் சில வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்குள் மீன்பிடிப்போரிடமிருந்து

வரியை அறவிடுதல் ஆகிய வரிக்குத்தகைகளை வேளாளர்களான வர்த்தகர்கள் நடத்தினர். மீனவர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் கடற்பகுதியில் மீன்பிடித்த லுக்கு வரி அறவிடுதல், மீன்சந்தைக் குத்தகை என்பனவற்றில் வேளாளர் தம் ஆதிக்கத்தை விரிவாக்கியிருந்தமை குறிப்பி டத்தக்க மாற்றமாகும். மரபுவழியாக இவ்வதிகாரம் வேளாளர்களிடம் இருக்கவில்லை. 18ஆம் நூற்றாண்டு ஆவணங்களான குத்தகை உடன்படிக்கை விதிகளைப்பார்க்கும் போது, மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், காவல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரம் என்பன வேளாளர்களான குத்தகைக்காரர்களுக்கு இருந்தமையைக் காணமுடிகிறது. படகுகளின் சொந்தக்காரர்களாகவும், மீனவர்களைப் படகுகளில் வேலைக்கு அமர்த்தி தொழில் செய்விப்போராகவும் இருந்தமையைப் பார்க்கும்போது, இலாபம் தரும் கடற்றொழில் பொருளாதார நடவடிக்கைகளிலும் வேளாளர்கள் முதலீடு செய்திருந்தமை தெரியவருகிறது.

ஒருவர் வரிக்குத்தகைக்காரராக ஏலத்திற்கான போட்டியில் உயர்ந்த கூறுவிலையைக் கோரி, குத்தகையைப் பெற்றுக் கொள்வதற்கு அவருக்குச் சில அடிப்படைத் தகைமைகள் இருக்கவேண்டும். 'குத்தகைக்காரரும், அவரது பங்காளிகளும் மதிப்பும் நாணயமும் மிக்க வர்கள், அவர்களிடம் பெறுமதியான சொத்துக்கள் உள்ளன' என்பதை அதிகாரிகளுக்கு நிரூபிக்க வேண்டும். ஏலத்தை நடத்தும் உத்தியோகத்தர் இவைபற்றி தனது மேலதிகாரிகளுக்கு அறிக்கையனுப்பி உடன்படிக்கை கையொப்பமிடப்படுவதற்கு முன்னர் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பணம் படைத்தவர்களும், செல்வாக்கு மிக்கவர்களுமான வேளாளர், சமூகத்தில் மேல்நிலைக்கு உயர்ச்சி பெற்றிருந்ததைக் காணமுடிகிறது. அவர்களில் சிலர் அடுத்தடுத்து ஆண்டுதோறும் ஏலத்தில் போட்டியிட்டு குத்தகை உரிமையைப் பெற்றுக்கொண்டதை அவதானிக்க முடிகிறது. ஏலத்தில் வெற்றி பெறுபவர் குறித்த தொகையைப் பிணைப் பணமாகச் செலுத்த வேண்டும். உடன்படிக்கையில் ஏலத்தின் பெறுமதியை செலுத்தக்கூடிய தகுதி குத்தகைக்காரருக்கு உண்டு என பிணையாளிகள் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். குத்தகை உடன்படிக்கைகளைப் பெற்றுக் கொள்வதில் வேளாளர்கள் பிறரைவிட முன்னணியில் விளங்கினர் என்பதோடு, மடப்பள்ளி, செட்டி, முஸ்லிம்கள் போன்ற பிற சமூகப் பிரிவினர்களோடு பங்காளிகளாகச் சேர்ந்து வரிக்குத்தகை நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும் காணமுடிகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தின் குத்தகைகளுள், யாழ்ப்பாணத் துறைமுகத்தின் சுங்கக் குத்தகையே அதிகூடிய பெறுமதி உடையதாக இருந்தது. 1760 ஆம் ஆண்டில் இக்குத்தகையை வேளாளர், மடப்பள்ளி, கரையார், முஸ்லிம் வர்த்தகர்கள் ஆகிய நான்கு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தோர் கூட்டாக இணைந்து ரூ.41,000ற்குப் பெற்றுக் கொண்டனர். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வரிக்குத்தகை வியாபாரத்திலும், பண்டங்களின் ஏற்றுமதித் தரகர் வேலையிலும் முஸ்லிம் வர்த்தகர்கள் வேளாளர்களுக்குப் போட்டியாக உயர்ச்சி பெற்றனர். ஏனைய சமூகப்பிரிவினர் பின் தள்ளப்படுவதை அல்லது வேளாளருடன் கலப்புற்றுத் தமது அடையாளத்தை இழந்து போவதையும் காணமுடிகிறது. மீனவர் சமூகம் பின்ன டைந்தமைக்கான காரணங்களை ஊகித்து அறியும் நிலையிலேயே உள்ளோம். அவர்கள் முன்னைய நிலையில் இருந்து ஏன் தாழ்ந்தனர் என்பது புதிராகவே உள்ளது. தென்னிலங்கையின் கராவ சமூகப் பிரிவினர் இக்காலப் பகுதியில் சிங்கள சமூகத்தில் உயர்ச்சியும் பலமும் பெறுவதைக் காண்கிறோம். தென்மேற்குக் கரையோரப் பகுதிகளின் கராவ சமூகப் பிரிவினர் சமூகப் படிநிலையில் உயர்ந்து செல்வதற்கு அவர்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தியமை முக்கிய காரணமாகும். மீன்பிடியும் கடலோடுதலும் அவர்களது மரபுவழித் தொழில்களாக இருந்தன.இவற்றைவிட அவர்கள் தச்சுவேலையில் சிறந்த நிபுணத்துவம் பெற்றவர்களாயும், தோணிகளைக் கட்டுதல் தரைவழிப் போக்குவரத்துக்கான வண்டிக்காரர் தொழில், ஒப்பந்தக்காரர், வரிக்குத்தகை ஆகிய பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டனர். அவர்களின் வாழிடமான இலங்கையின் தெற்கு, மேற்குக் கரையோரப் பகுதி பல பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்படும் வர்த்தக பொருளாதார மையங்களாகத் திகழ்ந்தன. யாழ்ப்பாணத்தின் மீனவர் சமூகப் பிரிவினர் தமது பாரம்பரியத் தொழில்களான மீன்பிடித்தல், கடலோடுதல், கரையோர வர்த்தகம் ஆகியவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டனர். ஆனால் இந்நடவடிக்கைகள் வளர்ச்சிப் பாதையில் முன்னேறும் தன்மைகொண்டனவாக அமையவில்லை. இதனைவிட யாழ்ப்பாணத் துறைமு கத்திற்குள் நுழைவதற்கும், வெளிச்செல்வதற்கும் தடைவிதிக்கும் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தமையால், அவர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது. மீனவர் சமூகம் பிறதொழில் துறைகளில் புகுவதற்கு சாதி வேற்றுமையும் தொழிசார் சாதி உணர்வும் தடையாக இருந்தது.

பாரம்பரியத் தொழிலான வர்த்தகத்தில் சிறந்து விளங்கிய செட்டிகளும் வேளாளர்களுடன் ஒப்பிடுமிடத்துப் பின்னடைவைச் சந்தித்தனர். செட்டிகளில் பலர் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாகக் குடியேறியிருக்கவில்லை என்பதும், அவர்களின் பின்னடைவுக்கு ஒருகாரணமாகும். அத்தோடு டச்சுக்காரர்களின் வர்த்தகக் கொள்கைகள் செட்டிகளின் நலன்களுக்கு விரோதமானவையாக

> **கொழும்புச் செட்டிகளும், சிலாபத்தைச் சேர்ந்த செட்டிகளும் கிறிஸ் தவர்களாக மாறியது போல் யாழ்ப்பாணச் செட்டிகள் தம்மை மத மாற்றம் செய்து கொள்ளவில்லை. இந்து சமயத்தை பின்பற்று வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும், யாழ்ப்பாணத்திற்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே பயணத்தடைகள் விதித்தமை யால் பிராமணப் பூசகர்கள் பயணிப்பதில் தடைகள் ஏற்பட்டமை யும் செட்டிகளுக்கு தொல்லை தருவனவாக இருந்தன.**

அமைந்தன. செட்டிகளின் வர்த்தகத்தில் முக்கிய மான வையாக விளங்கிய நெசவு செய்யப்பட்ட துணியின் இறக்குமதி, யானைகளின் ஏற்றுமதி என்ற இரண்டையும் டச்சுக்காரர் தமது ஏகபோக உரிமை யாக அறிவித்தனர். தென்னிந்தியத் துறைமுகங்க ளிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பிரயா ணத்தினையும் டச்சுக்காரர் அனுமதிப்பத்திரம் நடை முறை மூலம் கட்டுப்படுத்தினர். எல்லோரிடமும் கட்டாய உடலுழைப்பை டச்சுக்காரர் கோரினர். இதற்காக உழைப்பாளர்களுக்கு கூலிகொடுத்துத் தமது சார்பில் ஊழியர் கடமையை வழங்கும் கட் டாயம் செட்டிகளுக்கு ஏற்பட்டது.

கொழும்புச் செட்டிகளும், சிலாபத்தைச் சேர்ந்த செட்டிகளும் கிறிஸ்தவர்களாக மாறியது போல் யாழ்ப்பாணச் செட்டிகள் தம்மை மதமாற்றம் செய்து கொள்ளவில்லை. இந்து சமயத்தை பின்பற்று வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும், யாழ்ப் பாணத்திற்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே பய ணத்தடைகள் விதித்தமையால் பிராமணப் பூசகர்கள் பயணிப்பதில் தடைகள் ஏற்பட்டமையும் செட்டிக ளுக்கு தொல்லை தருவனவாக இருந்தன. இதனால் செட்டிகளில் பலர் தமது தாயகமான தென்னிந்தியா விற்கே திரும்பிச் சென்றனர். இன்னும் சிலர் கூடிய வர்த்தக வாய்ப்புகள் உள்ள இலங்கையின் தென்பகு திக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

யாழ்ப்பாணத்திலேயே தங்கியவர்கள் வேளாளர்க ளோடு நெருங்கிய உறவுகளை வளர்த்து, காலப் போக்கில் அவர்களோடு கலப்புற்றனர். 1796 ஆம் ஆண்டில் டச்சுக்காரர் கையில் இருந்து யாழ்ப்பா ணம் (அத்தோடு கரையோர மாகாணங்களும்) பிரித்தானியர் கைக்குமாறியது. பிரித்தானியர் யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றிய மூன்றாவது காலனிய ஆட்சியாளர்களாவர். பிரித்தானியர் ஆட்சியும், மேல் நிலைக்கு வந்து கொண்டிருந்த வேளாளர்களுக்கு சமூக மேலாதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது.

பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் (பத் தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்) விவசா யத்துறையில் வேளாளர்களுக்குப் போட்டியான வேறு எந்த சமூகப்பிரிவும் தோன்றவில்லை. கிராம நிலைப் பதவிகளும் மாவட்டமட்டப் பதவிகளும் பெரும்பான்மையாக வேளாளர்களிடம் இருந்தன. வர்த்தகம், முயற்சியாண்மை எனக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நடவடிக்கைகள் ஏதேனும் இருந்த னவெனில் அவையும் வேளாளர் கையிலேயே இருந் தன. சாதி அந்தஸ்து நிலையில் தாழ்த்தப்பட்டவர்க ளாக இருந்தோர் செல்வாக்கு மிக்க நில உடை மையாளர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர்க ளாக ஆயினர்.

சுதந்திரமான சமூகப் பிரிவுகளாக இருந்து வந்த சமூ கப் பிரிவினரும் வேளாளர்களின் மேலாண்மையை ஏதோ ஒரு வகையிலாயினும் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவானது.

பிரித்தானியர் ஆட்சியில் ஏற்பட்டுக் கொண்டிருந்த இம்மாற்றங்களின் பின்னணியில் 1830 களில் ஆங்கி லக் கல்வி யாழ்ப்பாணத்தில் வேகமாகப் பரவியமை சமூக அசைவியக்கத்திற்கு (Mobility) ஓர் உந்துதலை வழங்கியது. ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொள் வதில் வேளாளர் மிகுந்த ஊக்கத்துடன் செயற்பட்ட னர்.

கிறிஸ்தவ மிசனரி பாடசாலைகள் மூலமும் இந்துப் பாடசாலைகள் மூலமும் வேளாளர் பெற்றுக் கொண்ட கல்வி அச்சமூகத்தினரின் உயர்ச்சிக்கு உத வியது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் உருவாக்கிய அதிகாரக் கட்டமைப்பில் (Power Structure) பிரித்தா னியர் உயர் நிலையில் இருந்தனர். பிரித்தானியருக்கு அடுத்த நிலையில் வேளாளர்கள் இவ் அதிகாரக் கட் டமைப்பில் இடம் பிடித்துக் கொண்டனர். போர்த் துக்கேயர் ஆட்சியிலோ அல்லது டச்சுக்காரர் ஆட் சியிலோ வேளாளர் பெற்றிராத உயர்ந்த இடம் அவர்களுக்குப் பிரித்தானியர் ஆட்சியில் கிடைத் தது.





பரமு புஷ்பரட்ணம்

# இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்திக் காட்டும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வுகள்

இந்தக் கட்டுரைத் தொடர், சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடபகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், இலங்கையில் பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை, அவர்களின் கலாசார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

## கட்டுக்கரையின் பண்டைய கைத்தொழிற்சாலைகள்

கட்டுக்கரையின் பண்பாட்டுத் தொன்மையையும், தொழில்நுட்பச் சிறப்பையும் அடையாளப்படுத்திக் காட்டுவதில் அங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்களின் சிறு கைத்தொழிற்சாலைகளுக்கு முக்கியமான இடமுண்டு. தென் தமிழகத்திலும், இலங்கையிலும் இரும்பின் பயன்பாட்டை முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களாவர். இதன் விளைவால் இதுவரை காலமும் கல்லாயுதங்களைப் பயன்படுத்திவந்த மக்கள் இரும்புக் கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். இந்தமாற்றம் பெருங்கற்கால மக்களின் பொருளாதாரத்திலும், பண்பாட்டிலும் புரட்சிகர மாற்றங்களேற்பட வழிவகுத்தன. இங்கு இரும்புத்தாதின் படிமங்களை அகழ்வாய்வு செய்யப்பட்ட குழிகளிலும், பிற தேவைகளுக்கு மண்ணகழப்பட்ட ஆழமான குழிகளிலும் பரவலாகக் காணமுடிந்தது. பெருங் கற்கால கலாசார மண் அடுக்குகளில் அந்தப்பண்பாட்டு மக்கள் இரும்பை உருக்கிக் கருவிகளைச் செய்ததற்கான சான்றுகள் (*Iron Slacks*) அதிக அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதை மேலும் உறுதிப்படுத்துவதாக இரும்புத்தாதை உருக்குவதற்கு பயன்படுத்திவந்த சிறிய இரும்புச் சூளைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய நிரந்தரப் பொருளாதாரக் கட்டமைப்பால் ஏற்பட்ட மிகை உற்பத்தி , மக்களுக்கு ஓய்வுகாலத்தை வழங்கியது. இதன் விளைவால் ஆன்மீகம், கலைகள், அழகுசாதனப் பொருட்கள் போன்ற துறைகளில் நாட்டம் காட்டினர். பெண்களின் அலங்காரப் பொருட்களாக கற்கள், சங்குகள், சிற்பிகள், மிருக எலும்புகள், மீன்களின் முள்ளந்தண்டு எலும்புகள் என்பவற்றைப் பயன்படுத்திக் கழுத்துமாலைகள், காற்சலங்கைகள், கைவளையல் என்பவற்றை உற்பத்தி செய்தனர். கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வில் பல அளவுகளில், பல வடிவங்களில் பயன்படுத்தப்பட்ட கல்மணிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கார்லினிலேயன், அகட் முதலான கற்களில் செய்யப்பட்டவை. இந்தக்கல்மணிகள் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்பட்ட பிரதான அம்சங்களில் ஒன்றாகும்.

விலையுயர்ந்த கற்கள் வடஇந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு தமிழகப் பெருங்கற்கால மையங்களில் வைத்து கல்மணிகள் உற்பத்திசெய்யப்பட்டமைக்கு கொடுமணல், காரைக்காடு முதலான தொல்லியல் மையங்களில் சான்றாதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அம் மையங்களில் இருந்தே இலங்கைக்கான கல்மணிகள் கொண்டு வரப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் பேராசிரியர் ஒஸ்மோன் பொப்பே ஆராய்ச்சி, இலங்கைப் பெருங்கற்கால மையங்களிலும் கல்மணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் இருந்ததாகக் கூறு கின்றார். அவரின் கூற்று பொருத்தமானது என்பதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் சில சான்றுகள் கிடைத்துள்ளன. இங்கு பலவகை கல்மணிகளுடன், கல்மணிகளை உற்பத்தி செய்யப் பயன்படுத்திய விலையுயர்ந்த கற்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்





**நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்**

Image source

கட்டுக்கரை தொல்லியல் அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

> **பூர்வீக மக்கள் வாழ்ந்த இடங்களை அடையாளம் காண்பதற்கு மட்பாண்டங்கள் முக்கிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. பண்டைய காலங்களில் அனைத்து தேவைகளுக்கும் மட்பாண்டங்களே பயன்படுத்தப்பட்டன. இவை இலகுவாக அழிவடைந்து போவதால் அவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்யவேண்டியிருந்தது.**

தக்கற்களில் பல அளவுகளில் கல்மணிகள் வெட்டியெடுக்கப்பட்டதற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. இவை கட்டுக்கரை மக்களிடையே கல்மணிகளை உற்பத்தி செய்யும் தொழிற் கூடங்கள் இருந்ததற்குச் சான்றாகும்.

பூர்வீக மக்கள் வாழ்ந்த இடங்களை அடையாளம் காண்பதற்கு மட்பாண்டங்கள் முக்கிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. பண்டைய காலங்களில் அனைத்து தேவைகளுக்கும் மட்பாண்டங்களே பயன்படுத்தப்பட்டன. இவை இலகுவாக அழிவடைந்து போவதால் அவற்றைத் தொடர்ந்து உற்பத்தி செய்யவேண்டியிருந்தது. இதனால் பண்டைய குடியிருப்புகள் இருந்த இடங்களில் இவையே அதிக அளவில் காணப்படுகின்றன. கட்டுக்கரையில் பல அளவுகளில், பல வடிவங்களில், பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட மட்பாண்டங்கள் முழுவடிவிலும், உடைந்த நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் தொழில்நுட்பம், வடிவமைப்பு, அலங்காரங்கள், வர்ணங்கள், குறியீடுகள் என்பவற்றின் அடிப்படையில் அவற்றின் காலங்களைக் கணிப்பிடமுடிகின்றது. கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகள், வட்டில்கள், மண்தட்டுக்கள், மண்பானைகள், குவளைகள், உடைந்த மட்பாண்ட விளிம்புகள் என்பவற்றின் வடிவமைப்பு, தொழில்நுட்பம், வர்ணம், அலங்காரம் என்பன பெருமளவு ஒரே தொழில்நுட்பம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இதற்கு அவை சக்கரங்கள் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டதே காரணமாகும். உற்பத்திசெய்யப்பட்ட மட்பாண்டங்களை செம்மைப்படுத்தவும், அவற்றின் மீது அலங்காரங்களைப் பொறிக்கவும், வர்ணங்கள் தீட்டவும் பயன்படுத்தப்பட்ட தனித்துவமான கற்கருவிகள் பல கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கட்டுக்கரைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களிடையே மட்பாண்டங்களை உற்பத்திசெய்யும் சிறுதொழிற் சாலைகள் இருந்தமைக்குச் சான்றாகும். மேலும் பெருங்கற்கால ஈமச் சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கையான சங்குகளுடன் சங்கை வெட்டியெடுத்து செயற்கையாகச் செய்யப்பட்ட சில பொருட்களும் கிடைத்துள்ளன. இவை சங்குத் தொழிற்சாலைகள் இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

## கட்டுக்கரைக்கு புலம்பெயர்ந்து வந்த பூர்வீக மக்கள்

கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்விலிருந்து இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் நுண்கற்கால, பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரியவர்கள் என்பது உறுதியாகின்றது. தொல்லியல் அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் ஒரே இனவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர். தொல்லியலாளர் அல்ஜின், இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இருபக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் உள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே

பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார் (*Sitrampalam*, 1990:34). மொழியியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழி தென்னிந்தியாவில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழியோடு கொண்டுள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் தற்காலத்தில் இலங்கையில் பேச்சுவழக்கில் உள்ள 200 க்கும் மேற்பட்ட சொற்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் பேசிய ஆதிஒஸ்ரிக் மொழிச் சொற்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள தேரிமணற்குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா, வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கூறுகிறார். இக்குடியேற்றம் கட்டுக்கரையிலும் ஏற்பட்டதை அங்கு கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகள் உறுதிசெய்கின்றன.

நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து புலம்பெயர்ந்த பெருங்கற்கால மக்களையும், அவர்களின் பண்பாட்டையும் அறிஞர்கள் பலரும் இலங்கை நாகரிகத்தின் ஆக்ககாலமாகவே எடுத்துக் கொள்கின்றனர். இப்பண்பாடு எங்கே தோன்றியது? எப்போது தோன்றியது? தோற்றுவித்த மக்கள் யார்? என்பது தொடர்பாக அறிஞர்களின் மத்தியில் வாதப்பிரதி வாதங்கள் உள்ளன. ஆயினும் திராவிட மொழி பேசும் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலப் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படும் தனித்துவமான அம்சங்கள் ஒரே பிராந்தியத்திற்குரிய பண்பாடாகத் தோற்றமளிக்கின்றன. இப்பண்பாட்டு வட்டத்திற்கு உள்ளேயே இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடும் உள்ளடக்கப்படுவதால் இப்பண்பாட்டைத் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர் என்பது அறிஞர்கள் பலரின் கருத்தாகும். பேராசிரியர் இந்திரபாலா நுண்கற்காலப் பண்பாட்டு மக்களைப் போல் பெருங்கற்கால மக்களும் தென் தமிழகத்தில் இருந்தே வடஇலங்கை ஊடாக இலங்கைக்குப் புலம்பெயர்ந்தனர் எனக் கூறுகின்றார். இதற்கு



கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட குறியீடுகளும் பிராமி எழுத்துக்களும்

கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் மேலும் சான்றாகும்.

### பெருங்கற்காலப் பண்பாடும் நாக இனக்குழுவும்

கலாநிதி சிரான் தெரணியாகல போன்ற அறிஞர்கள் இலங்கைக்கு பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் என அடையாளப்படுத்திக் கூறுகின்றனர் (*Deraniyagala*, 1992:735). பேராசிரியர் இந்திரபாலா இம்மக்கள் தென் தமிழகத்திருந்தே இலங்கைக்குப் புலம் பெயர்ந்ததாகக் கூறுகின்றார் (இந்திரபாலா 2006). தென்னாசியாவில் பண்டுதொட்டுப் பயன்படுத்தப்பட்ட பெயர்களில் ஒன்றாக “நாக” என்ற பெயர் காணப்படுகின்றது. இதற்கு மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்து வந்ததே காரணம் எனக் கூறப்படுகின்றது. வட இந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத்தின் பண்டைய தலைநகரான நாகபட்டினம் நாகரின் தலைநகர் என்ற கருத்துண்டு. சங்ககாலத்தில் இப்பெயர்கள் குறுநிலத் தலைவர்களுடனும், புலவர்களுடனும், நாடு, நகர், ஊர் ஆகிய இடப் பெயர்களுடனும் இணைந்து வருகின்றன. சமகால இலங்கையின் பாளி நூல்களிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் இப்பெயர்கள் அரசர்களுடனும், சிற்றரசர்களுடனும், நகரங்களுடனும், தனிநபர்களுடனும் இணைந்து வருகின்றன.

கட்டுக்கரைப் பெருங்கற்கால குடியிருப்பு மற்றும் ஈமச்சின்ன மையங்களில் நடத்தப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட, நாக வழிபாட்டுச் சின்னங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்களே என்பதை உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறு

கின்றன. இவ்வகையான சான்றாதாரங்கள் இலங்கையின் வேறு எந்தப் பெருங்கற்கால மையங்களிலும் இது வரை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அகழ்வாய்வின் போது முதலாவது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆய்வுக் குழியில் இருந்து இப்பிரதேசத்திற்கு அந்நியமான வெண்மையான கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அக் கற் களில் சில வடிவங்கள் செயற்கையாகச் செதுக்கப்பட்டிருந்தன. அக்கற்களை ஆய்வுசெய்த தமிழக ஆய்வாளர்கள் அவற்றில் செதுக்கப் பட்டுள்ள உருவம் நாக பாம்பைப் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் முதலாம், இரண்டாம் ஆய்வுக்குழிகளில் இருந்து பல்வேறு அளவுகளில், பல வடிவங்களில் சுடு மண் நாக சிற்பங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரிய அளவிலான நாக சிற்பங்கள் சில சாதாரணமாகப் படுத்த நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஏனைய நாக சிற்பங்கள் வாயைப் பிளந்து படமெடுப்பது போன்ற தோற்றத்தில் செதுக்கப்பட்டிருந்தன. ஐந்து தலைகொண்ட சிறிய நாக சிற்பங்கள் படமெடுத்து ஆடுவது போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றன. இவை மண் சட்டியில் வைத்து வழிபடப்பட்டவையாக இருக்க லாம். சில சிறிய நாக சிற்பங்கள் பீடத்துடன் காணப் படுகின்றன. இச்சிற்பங்களின் கீழ்ப்பகுதில் காணப்படும் அரைவட்ட வளைவு இவை பிற தெய்வங்களுடன் இணைந்திருந்ததைக் காட்டு கின்றன. இந்த அம்சம் பிற்கால நாக வழிபாட்டு மரபை நினைவுப்படுத்துவதாக உள்ளது.







**நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்**

Image source
கட்டுக்கரை தொல்லியல் அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக இன மக்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் அடையாளப்படுத்துவதில் 2016 2017 காலப்ப குதியில் நாகபடுவான் என்ற இடத்தில் மேற் கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மேலும் முக் கியத்துவம் பெறுகின்றன. இவ்விடம் கட்டுக் கரைக்கு வடக்கே ஏறத்தாழ 50 கிலோ மீற்றர் தொலைவில் பூநகரிப் பிராந்தியத்தின் காட்டுப் பகுதியிலுள்ள சிறிய கிராமமாகும். இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயரே நாக மக்க ளோடு தொடர்புடையதாகக் காணப்படுகின் றது. இப்பெயர் நாகர்களின் குளம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட் டுள்ளது. இதனால் நாகர்க ளின் குளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன் றும் மாற்றம் அடையாது நாக படுவான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில் அழைக்கப் பட்டு வருகின்றது. கலாநிதி இர குபதி, நாகபடுவான் என்ற இடப்பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக்குலமரபாகக்கொண்ட மக்கள் வாழ்ந்ததன் காரணமா கத் தோன்றியது எனக் கூறுகி றார்.

நாகபடுவானில் 4 x 3 மீற்றர் நீள அகலத்தில் ஆறு ஆய் வுக் குழிகள் ஏற்படுத்தப் பட்டு அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணும்வரை அகழ்வு செய்யப்பட்டது. இங்கு வாழ்ந்த தொடக்ககால மக் கள் பெருங்கற்காலப் பண்பாட்டிற் குரியவர்கள் என்பதை 4ஆம் 5ஆம் ஆய்வுக்குழிகளில் கண்டுபிடிக்கப் பட்ட பெருங்கற்கால ஈமத் தாழிக ளின் எச்சங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் 2ஆம், 3ஆம் ஆய்வுக்குழி களில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றா தாரங்களில் 90 வீதமானவை நாக வழிபாட்டுடன் தொடர்புடைய வையாகக் காணப்பட்டன. அக்குழி களில் இருந்து களிமண், குருமணல், உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து செய்யப்பட்டு பின்னர் நெருப்பினால் சுடப்பட்ட பலவகை யான நாகவழிபாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற் றுள் ஆண் - பெண் சிலைகள், அவற் றின் பீடங்கள், நாகக் கற்கள், பல அளவுகளில் வடிவமைக்கப்பட்ட நாக சிற்பங்கள் என்பன அதிக எண்ணிக்

**“**

**பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக இன மக்களுக்கும் இடையிலான தொடர்பை மேலும் அடையா ளப்படுத்துவதில் 2016 2017 காலப்பகுதியில் நாகபடுவான் என்ற இடத்தில் மேற்கொள் ளப்பட்ட அகழ் வாய்வுகள் மே லும் முக்கியத் துவம் பெறு கின்றன.**

கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆண் பெண் சிலைகள் நாக, நாகினி தெய்வங்களின் சிலைகளாகக் கருதப்படுகின்றன.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு சான்றாதாரங்கள், பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக மக்களுக்கும் இடையிலான தொடர்பை ஆராய்வதில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. அவற்றுள் மூன்றாவது ஆய்வுக்குழி அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட மண் சட்டிகளின் விளிம்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்புகள் படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வளையமாகக் காணப்படுகின்றன. இம்மரபு தற்கால நாக வழிபாட்டில் செப்புத்தட்டத்தில் அல்லது மண்பாத்திரத்தில் நாகபாம்புகளை வைத்து வழிபடுதல் அல்லது நாகதோசம் நீங்குவதற்காக அதனை ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபை நினைவுபடுத்துவதாக உள்ளது. இவற்றில் இருந்து நாகதோசம் நீங்குவதற்கு நாகபாம்பை மண் சட்டியில் வைத்து வழிபடுதல் அல்லது ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தோன்றியதெனக் கூறலாம்.



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்
Image source
கட்டுக்கரை தொல்லியல் அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

இவ்வாய்வுக்குழியின் இன்னொரு இடத்தில் கவிழ்க்கப்பட்ட நிலையில் பெரிய பானையும், பானையின் மேற்பகுதியின் மையத்தில் நீண்ட வாய்ப்பகுதியும், அதைச் சுற்றி மூடிய நிலையில் நான்கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நாக பாம்பு காணப்படுகிறது. இவை நாக வழிபாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. இப்பானையில் செய்யப்பட்ட துவாரமும், அதைச் சுற்றிக் கவிழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் சிறிய கலசங்களும் மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றன. இதனால் இப்பானைக்குள் இருக்கக் கூடிய சின்னங்களை கண்டறியும் நோக்கில் தமிழகத் தொல்லியல் அறிஞர் வை.சுப்பராயலு அவர்களின் ஆலோசனையுடன் ஆராய்ந்த போது அதற்குள் அழகான நாகபாம்புச் சிலையைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதிலிருந்து நிலத்தில் நாட்டப்பட்ட நாக பாம்புச் சிலையை அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பானையால் மூடி அதை அக்கால மக்கள் வழிபட்டனர் என்பது தெரியவந்துள்ளது. இம்மரபே பிற்காலத்தில் பாம்புப் புற்று வழிபாடு தோன்றக் காரணமாக இருந்துள்ளது. இவ்வழிபாடு பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதன் முக்கியத்துவம் தொடர்பாக கலாநிதி பொ.இரகுபதி கூறும்போது “பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்களை பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து பாம்பு வெளியேறும் வழியாகவும் உள்ளன. பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாகக் கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துவதாகக் கொள்ள முடிகின்றது” எனக் குறிப்பிடுகின்றார்.

ஆகவே இலங்கைக்கான பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இனக்குழு என அறிஞர்கள் கூறிய கருத்துக்களையும், ஊகங்களையும் நம்பத்தகுந்த தொல்லியல் ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்துவதில், கட்டுக்கரை மற்றும் நாகபடுவான் தொல்லியல் ஆய்வுகள் வரலாற்றில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன எனலாம்.

## நாகரும் தமிழரும்

பௌத்த மதம் அரச மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை வரலாற்றை வாய்மொழிக் கதைகளாகப் பேணும் மரபும் தோற்றம் பெற்றது. இந்தக்கதைகளை அடிப்படையாகக் கொண்டே பாளி வரலாற்று இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இவ்விலக்கியங்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றிய மக்கள், அம்மதத்திற்கு தொண்டாற்றிய மன்னர்கள் ஆகியோரின் வரலாற்றை முதன்மைப்படுத்தி எழுந்ததினால் அவை தமிழர் வரலாற்றையோ, பண்பாட்

டையோ அறிவதற்கு பெரிதும் உதவவில்லை. இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து எழுந்த வரலாற்று ஆய்வுகளில் விஜயன் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட மக்கள் குடியேற்றம், பௌத்த மதம், எழுத்து, மொழி, கலை, பண்பாடு என்பன சிங்கள மக்களின் வரலாறாகவே பார்க்கப்பட்டன. அவற்றில் விஜயன் வருகைக்கு முன்னர் வாழ்ந்த யக்ஷ, நாக மக்கள் பற்றியோ, இலங்கை நாகரிகத்திற்கு வித்திட்ட பெருங் கற்காலப் பண்பாடு பற்றியோ அல்லது பிற்கால வரலாற்றுடன் அம்மக்களுக்குள்ள தொடர்புகள் பற்றியோ ஆராய்ந்து பார்ப்பதில் அக்கறை காட்டப்படவில்லை. அவ்வாறு ஆராய்ந்து பார்க்கப்பட்டிருந்தால், இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறும், பண்பாடும் யக்ஷ, நாக மக்களுடன் சிறப்பாக பெருங்கற்காலப் பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய நாக இன மக்களுடன் தொடங்கியது என்ற உண்மை துலக்கம் பெற்றிருக்கும். அவற்றைப் பின்வரும் சான்றாதாரங்களின் அடிப்படையில் எடுத்துக்காட்டலாம்.

பேராசிரியர் இந்திரபாலா, தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுக்கள் அநுராதபுரத்திலும், தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழுவாக உருவாகிய போது, ஏனையோர் வடக்கில் தமிழ் இனக்குழுவுடன் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார் (Indrapala 2005:172 73). இக்கூற்று மேலும் விரிவாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டும். பேராசிரியர் கே.எம்.டி. சில்வா கி.பி. 7 ஆம் நூற்றாண்டு அளவில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கினால் இலங்கையில் இந்து - பௌத்தம் என்ற சமய வேறுபாடுகள் ஏற்பட்டு அது தமிழ் - சிங்கள இன முரண்பாட்டுக்கு வழிவகுத்த போது இரு இனமக்களும் தமது தனித்துவத்தைப் பேணுவதில் அக்கறை கொண்டனர் எனக் கூறுகின்றார். இந்நிலையில் இனம், மொழி, மதம், பண்பாடு என்பவற்றால் தமிழகத்துடன் ஒன்றுபட்ட இலங்கைத் தமிழர்கள், தமிழகத்திற்கு அண்மையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களை தமக்குப் பாதுகாப்பான பிராந்தியம் எனக் கருதினர். ஆயினும் இப்பக்தியியக்கத்திற்கு முன்னர் இங்கு வாழ்ந்த நாக இனக்குழுக்களின் ஒரு பிரிவினர் பௌத்த மதத்தையும், அம்மத மொழியான பிராகிருதத்தையும ஏற்றுக் கொள்வதற்கு முன்பாகவே அவ்வினக் குழுக்கள் வடக்கில் மட்டுமல்ல கிழக்கிலும், தென்னிலங்கையின் பல வட்டாரங்களிலும் தமிழ் மொழி பேசும் நாகர்களாகவே வாழ்ந்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இதனால் இலங்கையில் தமிழ் மொழியின் தோற்றகாலம் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் உருவானதெனக் கூறலாம்.

தென்னாசியாவில் தோன்றிய முதலாவது எழுத்து வடிவம் பிராமி என அழைக்கப்படுகின்றது. வடஇந்தியாவில் அசோக மன்னனது ஆட்சிக்காலத்தில் இருந்து கல்வெட்டுக்களை எழுதுவதற்கு பிராமி எழுத்து பயன்படுத்தப்பட்டதால், இதற்கு அசோக பிராமி அல்லது வடபிராமி எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவ்வெழுத்தே கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து பௌத்தமதம் பரவிய தென்னாசியா, தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றின் தொடக்ககால எழுத்தாக இருந்ததெனக் கூறப்படுகின்றது. ஆனால் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பெர்ணாந்தோ, சத்தமங்கல கருணாரத்ன, ஆரிய அபயசிங்கா போன்ற அறிஞர்கள் பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்து இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு திராவடி (தமிழ்) எழுத்து முறை பயன்பாட்டில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். அண்மையில் அநுராதபுரத்திலும், தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால மட்பாண்ட பிராமிச் சாசனங்கள் பற்றிய நவீன காலக்கணிப்புகள் வடபிராமி எழுத்திற்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனக் கணித்துள்ளன. இப்புதிய காலக்கணிப்புகளால் வடஇந்தியாவிற்குரிய பிராமி எழுத்து தமிழகத்திலிருந்து அல்லது இலங்கையிலிருந்து சென்றிருக்க வேண்டும் என்ற வலுவான புதிய கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இக்கருத்து மாற்றங்கள் இலங்கையின் தொடக்ககால எழுத்தையும், தமிழ் மொழியையும் இலங்கையில் வாழ்ந்த நாக இன மக்களுடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதற்கு வழிவகுத்துள்ளன.

தென்னாசியாவில் பௌத்த மதம் பரவிய எல்லா நாடுகளிலும் பிராகிருதமே கி.பி. 4ஆம் நூற்றாண்டுவரை கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. ஆனால் தமிழகத்தில் பௌத்த மதம் பரவிய போதும் அதன் கல்வெட்டு மொழி தமிழாக இருந்ததுடன் தமிழ் மொழிக்கே சிறப்பான எழுத்து வடிவங்களும் காணப்பட்டன. இதனால் இக்கல்வெட்டுக்கள் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்கள் என அழைக்கப்படுகின்றன. அதேவேளை தமிழகத்திலும் இலங்கையிலும் பிராமி எழுத்துக்கள் கல்லில் எழுதப்படுவதற்கு முன்னரே அவ்வெழுத்துக்களை மட்பாண்டங்களில் எழுதும் மரபு இருந்துள்ளது. இம்மரபு இருநாடுகளுக்கும் உரிய தனிப்பண்பாகக் காணப்படுகின்றது. இது பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தோன்றிய மரபாகும். தமிழகத்தில் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட பெருங்கற்கால மையங்களில் இருந்து பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அச்சாசனங்களில் மட்பாண்டத்தை செய்தவர்களின் அல்லது அவற்றைப் பயன்படுத்தியவரின் பெயர்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இலங்கையில் கந்தரோடை, சாட்டி, பூநகரி, இரணைமடு, ஈழவூர், கட்டுக்கரை, அநுராதபும், அம்பாந்தோட்டை, அண்மையில் மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இனக்குழுவினர் என்பதை ஏற்

றுக் கொள்ளும் போது, அந்தப்பண்பாட்டு மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட தொடக்க கால எழுத்தையும், மொழியையும் அவ்வினக்குழுவுடன் தோன்றியதெனக் கூறுவதே பொருத்தமாகும். இதன் மூலம் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் எழுத்து வாசனையுடைய சமூகம் இலங்கையில் தோன்றியிருந்ததையும் எடுத்துக்காட்டுகின்றன.

அண்மையில் மட்டக்களப்பில் நாகன், ணாகன், வண்ணக்கன், தம்பன் முதலான பெயர்கள் பொறித்த பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் வண்ணக்கன் என்ற பெயர் மட்டக்களப்பு சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கும் வண்ணக்கருக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு உண்டு என்பதற்கு சான்றாகும். நாகன், ணாகன் என்ற பெயர் பொறித்த சாசனங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்தியவர்கள் நாக இனக்குழுவினர் என்பதற்கும், அவ்வினம் மட்டக்களப்பில் பண்டுதொட்டு வாழ்ந்து வருகின்றனர் என்பதற்கும் சான்றுகளாகக் காணப்படுகின்றன. 1999 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் அக்றுகொட என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த பல நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Bopearachchi 1999:5160). அவை சிற்றரசர்களால் அல்லது குறுநிலத் தலைவர்களால் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளில் வெளியிடப்பட்டவையாகும். அவற்றுள் இரு நாணயங்களில் நாக என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஒரு நாணயத்தில் தமிழில் "திஷபுர சடநாகராசன்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது (Pushparatnam 2002: 56). இதன் பொருள் திஷபுரத்தில் ஆட்சிபுரிந்த சடநாகராசனால் வெளியிடப்பட்ட நாணயம் என்ற கருத்தைத் தருகின்றது. இதிலிருந்து நாகச் சிற்றரசனின் ஆட்சி தென்னிலங்கையில் இருந்தமையும், அவன் ஆட்சிக்கு உட்பட்ட மக்கள் தமிழர்களாக இருந்துள்ளனர் என்பதும் உறுதிப்படுத்தப்படுகின்றது. இதற்கு மேலும் சான்றாக சமகால அரசியல் வரலாறு கூறும் மகாவம்சத்தில் துட்டகாமினி, எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொள்வதற்கு முன்னர் தென்னிலங்கையில் 32 தமிழ்ச் சிற்றரசர்களை வெற்றி கொள்ளவேண்டியிருந்ததாகக் கூறப்பட்டதையும் இங்கு சிறப்பாக கவனத்தில் கொள்ளத்தக்கது.



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்

Image source

கட்டுக்கரை தொல்லியல் அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

பௌத்த மதத்தின் அறிமுகத்தைத் தொடர்ந்து இலங்கையில் தோன்றிய புதிய பண்பாட்டில் பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களும் இணைந்து கொண்டுள்ளன. அவற்றுள் தமிழ் மொழி, தமிழ்ப் பிராமி எழுத்து என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. பௌத்த மதத்து டன் அம்மத மொழியான பிராகிருதத்தை எழுதுவதற்கு தேவையான 40 வடபிராமி எழுத்துக்களும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆயினும் தொடக்க காலப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழ்ப் பிராமி எழுத்துக்களுடன் தமிழ் மொழியில் அமைந்த தனிநபர்களின் பெயர்களும் காணப்படு கின்றன. அவற்றுள் மகன், மகள், மருமகன், மருமான், மருகன், சகலன் முதலான குடும்ப உறவு முறைப் பெயர்களும், வேள், ஆய் முதலான பட்டப்பெயர்களும், அடி, கல், நாடு, ஆவி, வாவி, காடு முதலான இடப்பெயர்களின் பின்னொட்டுச் சொற்களும், பரதவ சமூகம் பற்றியும் கூறப்பட் டுள்ளன. அப்பெயர்களுக்குள் நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பதுடன் பிராகிருத மொழியில் நாஹ என எழுதப்படவேண்டிய இப்பெயர் சில கல்வெட்டுக்களில் நாக, ணாக என தமிழ் மயப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளன. இத்தமிழ்ப் பெயர்களுக்குள் குடும்ப உறவு முறை சார்ந்த உறவுமுறைப் பெயர்கள், அக்காலத்தில் குறிப்பட்ட சில இடங்களில் தமிழர்கள் ஒரு குழுவாக அல்லது குடும்பமாக வாழ்ந்ததை உறுதிப்படுத்துகின்றன. மேலும் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து பிராமிக் கல்வெட்டுகள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் வாழ்ந்த வணிகர்கள் பற்றிக் கூறுகின்றன. அவற்றுள் அநுராதபுரத்தில் கண்பிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டைத் தவிர ஏனைய நான்கு கல்வெட்டுக்களும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கண்டுபிடிக்கப்பட்டவை. இக்கல்வெட்டுக்கள் வணிகர்களை தமிழ் வணிகர் என தனித்து அடையாளப்படுத்திக் கூறியிருப்பதன் மூலம் தமிழர்கள் இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னரே மொழியால் ஒரு இனக்குழுவாக இலங்கையில் வாழத் தொடங்கிவிட்டனர் என்பதைக் காட்டுகின்றன. இதற்கான உருவாக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து ஏற்பட்டதெனக் கூறலாம்.

**பாலியல் வாழ்க்கையையும் பாலீர்ப்பையும் தாண்டி மற்றவர்களைப் போல குயர் மக்களுக்கும் ஒரு வாழ்விருக்கிறது. நட்பு, குடும்பம், உறவுகள் என அவர்களும் இந்தச் சமூகக் கட்டமைப்பின் அங்கங்களே.**



Jaffna Pride

Image source - www.instagram.com/jaffnapride

# பண்பாட்டுத் திணிப்பும் பால்நிலைச் சமத்துவம் நோக்கிய நகர்வும்




கட்டுரை

அனுதர்ஷி கபிலன்



இக்கட்டுரைத் தொடர், வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதற்குக் கலாசாரமும் சமய அல்லது மத கட்டமைப்புக்களின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புக்கள், கல்வியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக் கருத்து வெளிப்பாட்டளர்கள் குயர் அரசியல் அல்லது அதுசார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றி பேசவிழைகின்றது.


இயற்கை’, ‘இயல்பு’ என்ற வரையறைக்குள் அடங்கா தவைகளை சமூகம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. இயற்கையானது மற்றும் இயல்பானது என்பவைகளை யார் தீர்மானிக்கிறார்கள்? எதிர்ப்பால் காதலைக் கொண்டாடுகின்ற இந்தச் சமூகம், குயர் மக்களின் காதலையும் அழகியலையும் இயல்பா கவாவது பார்க்கப் பக்குவப்படவேண்டும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இன்றைய கால கட்டத்தில் பால்நிலை சார்ந்த மாற்றுச் சிந்தனைகளின் அவசியம் உணரப்பட்டிருக்கிறது. இலங்கை போன்ற தந்தை ஆதிக்கக் கருத்தியல் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு நாட்டில் பால்நிலை சார்ந்த விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுதல் காலத்தின் தேவையாகவுள்ளது. ஏனெனில் தந்தையாதிக்கக் கருத்தியல்கள் குயர் மக்களையும் பெண்களையும் அதிகம் பாதிக்கின்றன. குறிப்பாக அவர்களது குடும்பம், சமூகம் மற்றும் தொழில் வாழ்க்கையில் அதிகம் சிக்கல்களை உருவாக்குகின்ற அதேவேளை ஒருபாலீர்ப்பு வெறுப்பாளர்கள் உருவாகுதலும்

இந்தக் கருத்தியலின் இன்னொரு பரிணா மம் ஆகும்.

பால்நிலை என்ற விடயம் குறிப்பாக இலங்கையின் வடபுல தமிழ்ச் சமூகப் பின்புலத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அளப்பரியவை. பால்நிலை ரீதியான பண்பாட்டுத் தாக்கங்கள் இங்கு அதி கம். பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் அல்லது சமூகம் தனது சமூக வளர்ச்சியினூடாகத் தோற்று வித்துக்கொண்ட மக்களின் வாழ்நிலை, வாழ்வியல் நடைமுறைகள், கருத்துக் கள், பழக்கவழக்கங்கள், வாழ்வியல் போக்குகள் ஆகியவற்றின் தொகுதியா கும். இது மாற்றமடையக் கூடியதாகும். காலங்கால மாக மனிதன் வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறான். காலவோட்டத் தில் ஒவ்வொரு சமூகமும் ஏனைய சமூகத்தின் பண் பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் தனதாக் கியே நகர்ந்திருக்கிறது. எனவே பண்பாட்டின் பெயரால் மனிதர்களைப் பாகுபாட்டிற்கு உட்படுத் தல் இல்லாதொழிக்கப்படல் வேண்டும். அதே போல் மத நடைமுறைகளும் பால்நிலைச் சமமின் மைக்கு மிக முக்கிய காரணம் எனலாம். பெரும்பா லானமதங்கள்குயர்மக்கள்தொடர்பில்மீள்வருவார்ப்புக் களை(stereotype) உருவாக்குவதுடன் மோசமாகச் சித் திரிக்கின்றமையையும் அவதானிக்க முடிகிறது. மீள் வருவார்ப்புக்கள்(stereotype) எப்போதும் பால்நிலை ரீதியில் மோசமான தாக்கங்களையே சமூகத்தில் உருவாக்கக்கூடியனவாக இருக்கின்றன.

இவ்வாறான சமத்துவமின்மைக்கு எதிராகவே இன் றைய காலகட்டத்தில் போராடவேண்டியுள்ளது. அந்தவகையில் பெண்ணியம் அனைத்துப் பெண்க ளுக்கும் சம உரிமையை வலியுறுத்துகின்ற அதே வேளை, பெண்களுக்கான சமூக, பொருளாதார, அரசி யல், மத மற்றும் ஏனைய சுதந்திரங்களையும் உரி மைகளையும் பேசுகின்றது. ஆண் மேலாதிக்கத்தி னால் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிரா கவே பெண்ணியம் தோற்றம் பெற்றது எனலாம். அதேபோல குயர்னஸ்(Queerness) என்பது சமூகத்தில் இருக்கக்கூடிய எல்லாவிதமான சமத்துவமின்மை யையும் கேள்விக்குட்படுத்துகிறது. குயர் செயற் பாட்டாளர்கள் பால்நிலை, சாதியம், வர்க்க வேறு பாடு, இன, மத வேறுபாடு எனச் சமூகத்தின் அனைத்து விடயங்களிலும் சமத்துவம் அவசியம் என்பதனை வலியுறுத்துகின்றனர். மேலும் குயர் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் சமூக ஏற் புக்காகவும் பல்வேறுபட்ட போராட்ட வடிவங்



lgbtq flag

Image source - www.hrw.org

கின்ற அதேவேளை ஒருபாலீர்ப்பு வெறுப்பாளர்கள் உருவாகுதலும் இந்தக் கருத்தியலின் இன்னொரு பரிணாமம் ஆகும்.

பால்நிலை என்ற விடயம் குறிப்பாக இலங்கையின் வடபுல தமிழ்ச் சமூகப் பின்புலத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அளப்பரியவை. பால்நிலை ரீதியான பண்பாட்டுத் தாக்கங்கள் இங்கு அதிகம். பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் அல்லது சமூகம் தனது சமூக வளர்ச்சியினூடாகத் தோற்று வித்துக்கொண்ட மக்களின் வாழ்நிலை, வாழ்வியல் நடைமுறைகள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், வாழ்வியல் போக்குகள் ஆகியவற்றின் தொகுதியா கும். இது மாற்றமடையக் கூடியதாகும். காலங்கால மாக மனிதன் வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறான். காலவோட்டத் தில் ஒவ்வொரு சமூகமும் ஏனைய சமூகத்தின் பண் பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் தனதாக் கியே நகர்ந்திருக்கிறது. எனவே பண்பாட்டின் பெயரால் மனிதர்களைப் பாகுபாட்டிற்கு உட்படுத் தல் இல்லாதொழிக்கப்படல் வேண்டும். அதே போல் மத நடைமுறைகளும் பால்நிலைச் சமமின் மைக்கு மிக முக்கிய காரணம் எனலாம். பெரும்பா லான மதங்கள் குயர் மக்கள் தொடர்பில் மீள்வரு வார்ப்புக்களை(stereotype) உருவாக்குவதுடன் மோச மாகச் சித்திரிக்கின்றமையையும் அவதானிக்க முடி கிறது. மீள்வருவார்ப்புக்கள்(stereotype) எப்போதும் பால்நிலை ரீதியில் மோசமான தாக்கங்களையே சமூகத்தில் உருவாக்கக்கூடியனவாக இருக்கின்றன.

இவ்வாறான சமத்துவமின்மைக்கு எதிராகவே இன் றைய காலகட்டத்தில் போராடவேண்டியுள்ளது. அந்தவகையில் பெண்ணியம் அனைத்துப் பெண்க ளுக்கும் சம உரிமையை வலியுறுத்துகின்ற அதே வேளை, பெண்களுக்கான சமூக, பொருளாதார, அரசியல், மத மற்றும் ஏனைய சுதந்திரங்களையும் உரிமைகளையும் பேசுகின்றது. ஆண் மேலாதிக்கத் தினால் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதி ராகவே பெண்ணியம் தோற்றம் பெற்றது எனலாம்.

களை கையாள்கின்றனர்.

LGBTIQA+ என்பது பொதுவாகக் குயர் மக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. LGBTIQA+ என்பதுடன் 2S அதாவது Two Spirit என்பது இன்று கனடாவில் சில பழங்குடியினரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அதாவது சில பழங்குடியினருடைய வேறுபட்ட பால்நிலை அடையாளங்களைக் குறிக்கப் பயன்படுகிறது. அத்துடன் ஆண்மைத்துவ மற்றும் பெண்மைத்துவ வெளிப்பாடுகளையும் இது குறித்து நிற்கிறது. இதனால் 2SLGBTIQA+ என்ற பதம் குயர் மக்களைக் குறிக்க கனடாவில் பயன்படுத்தப்படுகிறது.

குயர் மக்கள் காலங்காலமாக ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றனர். எல்லாப் பால்நிலையினரையும் பாரபட்சமற்று நோக்குகின்ற பால்நிலை ரீதியான பன்மைத்துவம் என்பது சமூகத்தில் அவசியமானதாகும். ஒடுக்கப்படும் சமூகங்கள் ஒன்றிணைந்து சமத்துவத்துக்கான குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யமுடியும். அப்போதுதான் குயர் சமூகத்தினர் மட்டுமல்லாது, ஒடுக்கப்படுகின்ற அனைவரும் இந்த சமூகத்தில் சுயாதீனமாக இயங்க முடியும். ‘ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் பயிலப்படும் சகலவிதமான நம்பிக்கைகளுக்கும் அங்கீகாரம் வழங்குவதனூடாக பன்மைத்துவம் ஏற்படுகின்றது’ என்று பன்மைத்துவ சமய கற்கைக்கான தளம் குறிப்பிடுகின்றது.

எனவே ஜனநாயக நாடொன்றில் மாறுபட்ட கருத்துக்கள் ,சிந்தனைகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் கொண்ட சூழல் அவசியமானதாகும். இலங்கையில் பல் இனங்களையும் மதங்களையும் மற்றும் பல் வேறு பண்பாடுகளையும் பின்பற்றுகின்ற மக்கள் வாழ்கின்றார்கள். அத்துடன் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் சிறியளவிலான சமூகங்கள் வாழ்கின்றனர். இலங்கை மக்களால் வேறுபட்ட கலைகள், பழக்கவழக்கங்கள், உடை, மொழி, பண்பாடுகள், சடங்குகள், வழிபாடுகள், பண்டிகைகள் போன்றன பின்பற்றப்படுகின்றன. மனிதர்கள் ஒவ்வொருவரும் சமத்துவத்துடன் வாழ்கின்ற வாழ்வே அனைவரதும் தேவையாகும்.

அதேவேளை பாலியல் வாழ்க்கையையும் பாலீர்ப்பையும் தாண்டி மற்றவர்களைப் போல குயர் மக்களுக்கும் ஒரு வாழ்விருக்கிறது. நட்பு, குடும்பம், உறவுகள் என அவர்களும் இந்தச் சமூகக் கட்டமைப்பின் அங்கங்களே. குயர் மக்கள் அனைவருக்குள்ளும் உங்கள் ஒவ்வொருவரைப் போலவும் இலட்சியங்களும் கனவுகளும் இருக்கின்றன. பால்நிலை மற்றும் பாலியல் ரீதியான தெளிவின்மையும் கூட இந்த சமூகம் குயர் மக்களை சக மனிதர்களாக மதிக்கத் தவறிவிடுவதற்கு ஒரு காரணம் எனலாம்.

அண்மைக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசும் குயர் மக்களின் எழுச்சி என்பது மிகப் பெரும் சாதனையாகவே பார்க்கவேண்டியிருக்கிறது. யாழ் குயர் விழா இதற்கு ஒரு உதாரணம் எனலாம். ஏனெனில் யாழ்ப்பாணம் ஏனைய பிரதேசங்களைப் போன்றதல்ல. இது முற்றிலும் வேறுபட்ட பண்பாட்டுக் கட்டமைப்பையும் மிக இறுக்கமான சூழலையும் கொண்டிருக்கிறது. ஆண், பெண் என்ற பால்நிலைகளையும் எதிர்ப்பால் ஈர்ப்பையும் மட்டுமே இயற்கையாகவும் இயல்பாகவும் கருதும் இந்த மக்கள், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மற்றெல்லாப் பால்நிலைகளைப் பற்றியும் உணர்வுத்தளத்தில் நின்று சிந்திக்கத் தவறிவிட்டனர். பால்நிலைச் சமமின்மை என்பது வடபகுதிச் சமூகத்தில் குயர் மக்களுக்கு எதிரானதாக மட்டுமல்லாமல், அது பெண்கள் மீதும் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. அதிலும் குயர் மக்கள் கிராமப்புறங்களில் இருக்கின்றபோதிலும் கிராமப்புற மக்களுக்கு குயர் மக்கள் பற்றிய விடயங்கள் அந்நியப்படுத்தப்பட்டிருக்கின்றன.

சமூகத்தில் குயர் மக்கள் மீதான வன்முறையானது, அவர்களுக்கு மனஅழுத்தம், வலி மற்றும் சவால்களைப் பரிசளித்திருக்கின்றது. குயர் வெறுப்பு சமூகத்தில் புரையோடிப்போயுள்ளமையால் அது குடும்ப உறுப்பினர்களால் குயர் மக்கள் வெறுக்கப்படக் காரணமாகின்றது. பெரும்பாலான பெற்றோர் தமது குழந்தைகள் குயர் என்பதை அறிந்து தோள் கொடுப்பவர்களாக இல்லை. மிகச் சிலரே தமது குழந்தைகள் குயர் என்பதை அறிந்து ஆதரிப்பவர்களாக இருக்கிறார்கள்.

இனிவரும் காலத்திலாவது பால்நிலை தொடர்பில் சமூகம் அடிப்படை விடயங்களையாவது தெரிந்து வைத்திருத்தல் அல்லது தெரிந்து கொள்ள முயற்சித்தல் அவசியமானது. பெரும்பாலான புலமையாளர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் கூட எமது சமூக அமைப்பில் பால்நிலை சார்ந்து சிந்திக்கத் தயாராக இல்லை. பால்நிலையானது சமூகத்திற்குச் சமூகம், எல்லை அடிப்படையில், இன, மத மற்றும் அவர்கள் பின்பற்றும் பண்பாட்டின் அடிப்படையிலும் கூட மாற்றமடைய முடியும். பால்நிலை ரீதியான சமூகப் பாத்திரங்கள் சில சமூகங்களில் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. அதற்கு உதாரணமாக கேள்விக்குட்படுத்தப்படாமல் இருக்கின்ற பிற்போக்கான சில யாழ்ப்பாணப் பண்பாட்டின் கூறுகளைக் குறிப்பிடமுடியும்.

பால்நிலைசார் அடிப்படை அறிவானது சமூகத்தின் எல்லாமட்டங்களிலும் அவசியமானது. இன்றைய எண்ணிம (Digital) காலத்தில் இணைய வெளியில் நிகழும் வன்முறைகளும் குற்றங்களும்கூடப் பால்நிலையின் ஒரு பரிணாமத்தையே கொண்டுள்ளன. எனவே இந்தச் சமூகம் தனிமனித சுதந்திரம் பற்றிச் சிந்திக்கவேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமானதாகும்.

ஐரோப்பிய நாடுகளை எடுத்துக்கொண்டால் பல்வேறு தரப்பில் இருந்தும் குயர் அரசியல் பற்றிய குரல்கள் ஓங்கி ஒலிப்பதை அவதானிக்க முடியும். அத்துடன் குயர் மக்கள் தொடர்பான ஏராளமான இலக்கியங்களும் தோன்றியுள்ளன. ஆனால் தமிழில் குயர் இலக்கியங்கள் மிக அரிதாகவே உள்ளன. அவற்றிலும் சில இலக்கியங்கள் எதிர்மறை உணர்வுகளை உருவாக்குபவையாகவும் இருக்கின்றன. பெரும்பாலும் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளிலேயே ஒரேபாலீர்ப்பு சட்டவிரோதமாக உள்ளது. அதிலும் இலங்கையைப் பொறுத்தமட்டில் குயர் மக்களுக்கான உரிமைக் குரல்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருக்கின்றன. வடபுலத்தில் குயர் மக்கள் தொடர்பான முன்னெடுப்புக்களையும் அவர்கள் பல்வேறு தளங்களிலும் எதிர்கொள்ளும் வாய்ப்புக்களையும் சவால்களையும் ஆய்வுக்குட்படுத்தலும் பேசுதலும் அவசியம். குயர் மக்களுடைய வாழ்க்கை, இந்த சமூகத்தின் மத்தியில் இலகுவானதாக இல்லை என்பதே யதார்த்தம். அவர்கள் பல தடைகளைத் தாண்டியே தமது நாளாந்த வாழ்வைக் கடக்கின்றனர். பெரும்பாலும் குயர் மக்கள் அனைவரும் சவால்களைச் சந்திக்கின்றார்கள். இந்த சவால்கள் அவர்களை ஒரு சமூகமாக இணைத்திருக்கின்றமையைக் காணமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் அதிகமான திருநங்கைகளும் குறைந்தளவிலான திருநம்பிகளும் இருக்கிறார்கள். இங்கு தன்பாலீர்ப்பாளர்களான பெண்கள் தம்மை அடையாளப்படுத்திக்கொள்வது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகிறது. அவரவர் பாதையையும் பயணத்தையும் தீர்மானிப்பது தனிமனித சுதந்திரம் ஆகும். ஆனால் பெரும்பாலானவர்கள் இந்தச் சமூகத்தின் வன்முறைகளுக்குப் பயந்து தமது பால்நிலையைக் கூட வெளிப்படுத்தத் தயங்குபவர்களாக வெளிப்படையான சமூக வாழ்வை வாழமுடியாதவர்களாக இருக்கிறார்கள். புறக்கணிப்புக்களால் தமது திறமைகளைக்கூட வெளிப்படுத்தாமல் பொதுவெளியில் இயங்கமுடியாதவர்களாகப் பலர் இருக்கிறார்கள்.
பண்பாடு மற்றும் மதநம்பிக்கைகள் போன்றவற்றைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்கள் இந்த சமூகத்தில் அதிகம். மனிதநேயத்தை விட மதத்தையும் பண்பாட்டையும் பெரிதாகக் கருதும் மனோபாவம் தான் அதிகமானோருக்கு வாய்த்திருக்கிறது. மாற்றுக் கருத்தியல்களை ஏற்பதென்பது வடபகுதிச் சமூகத்தில் மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. இந்நிலையில் வடபகுதிச் சமூகத்தில் குயர் மக்களை, அவர்களும் தங்களில் ஒருவர் தான் என்ற மனோபாவத்துடன் ஏற்றுக்கொள்கின்ற ஒரு சமூகம் சிறுக உருவாகி வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. இதனை ஒரு ஆரோக்கியமான சமூக மாற்றமாகப் பார்க்க முடியும். தினம் தினம் வெறுப்பை, பாரபட்சத்தை, நிராகரிப்பை அடிப்படை மனிதம் அற்ற மனிதர்களிடம் இருந்து, குயர் மக்கள் எதிர்கொள்கிறார்கள். மனிதர்களை சக மனிதர்களாக நடத்த வேண்டியது அடிப்படை மனித உரிமையாகும். சட்டத்திற்கு முன் அனைவரும் சமமானவர்கள் ஆவர். எனவே மனிதர்கள் என்ற ரீதியில் அனைவருக்கும் இந்த நாட்டில் சுதந்திரமாகப் பாரபட்ச



Jaffna Pride

Image source - www.instagram.com/jaffnapride

மற்று வாழும் உரிமை இருக்கிறது. இங்கு சமூக நீதி நிலைநாட்டப்படல் அவசியமானதாகும். குயர் மக்களுக்கான சமூக நீதி என்பது உண்மையையும் சமத்துவத்தையும் வலியுறுத்துகின்ற அதேவேளை சமத்துவமின்மையையும் பாரபட்சத்தையும் கேள்விக்குட்படுத்துகின்றது. குயர் மக்கள் மீதான புரிதல், அவர்களது இயல்புத்தன்மையை ஏற்றல், முற்போக்கான கருத்தியல் மற்றும் அடிப்படை அணுகுமுறை சார்ந்த புரிதலை வரையறுத்தல் என்பன வடபுல குயர் அரசியல் தளத்தில் முக்கியமானவையாக அமையும்.

தொடரும்.



**தினம் தினம் வெறுப்பை, பாரபட்சத்தை, நிராகரிப்பை அடிப்படை மனிதம் அற்ற மனிதர்களிடம் இருந்து, குயர் மக்கள் எதிர்கொள்கிறார்கள்.**

# கீழைக்கரையும் அதன் புவிச்சரிதவியலும் II



இலங்கையின் காடுகள்

Image source - www.srilankaview.com




கட்டுரை

அ. கேதீஸ்வரன்



பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார். யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012 ஆம் ஆண்டு "திட்டமிடல் மூல தத்துவங்கள் என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.


உ நிலப்பயன்பாட்டின் அடிப்படையில் 1,888,607 ஹெக்டெயர் நிலப்பரப்பை கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில், வடமாகாணம் 889,007 ஹெக்டெயர் நிலப்பரப்பையும், கிழக்கு மாகாணம் 999,600 ஹெக்டெயர் நிலப்பரப்பையும் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் கிழக்கு மாகாணம் அதிக நிலப்பரப்பை கொண்டிருப்பதுடன், நீர்ப்பரப்பு என்ற வகையில் வடமாகாணத்தில் 8% சதவீதமும், கிழக்கு மாகாணத்தில் 6.35 சதவீதமுமாக மொத்தமாக இவ்விரு மாகாணங்களிலும் 14.35 சதவீதம் நீர்ப்பரப்பாகக் காணப்படுகின்றது. நிலப்பாவனையின் அடிப்படையில் வடமாகாணத்திலேயே அதிக காடுகள் காணப்படுகின்றன. 735, 413.67 ஹெக்டெயர் அடர்காடுகள் இவ்விரு மாகாணங்களிலும் காணப்படுகின்றன. வடமாகாணத்தில் 459,129.67 ஹெக்டெயரிலும், கிழக்கில் 276,286 ஹெக்டெயரிலும் அடர்காடுகள் காணப்படு கின்றன. இவைதவிர மனிதப் பாவனைக்குட்பட்ட காணிகள் என்ற வகையில் வடக்கில் 75,749.79 ஹெக்டெயரிலும், கிழக்கில் 74,942 ஹெக்டெயருமாக மொத்தம் 179,031.38 ஹெக்டெயர் பரப்பில் காடுகள் காணப்படுகின்றன.

காடுகளின் வளங்கள் இவ்விரு மாகாணங்களிலும் அதிகம் காணப்பட்டிருந்தாலும் அதனை வருமானம் தரும் வளமாகப் பாவிக்கும் தன்மை குறைவாகவே உள்ளது. காடுகளை பொருளாதார வளமாகக் கொண்ட மலேசியா, பர்மா, வியட்நாம் போன்ற நாடுகளில் இருந்தே இன்றைய சர்வதேசச் சந்தையின் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. எனினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காடுகள் பொதுக்காடுகளாக மட்டுமே காணப்படுகின்றன. வனபரிபாலன திணைக்களம் மற்றும் அரசமரக்கூட்டுத்தாபனம் ஆகிய இரு அரச அமைப்புக்கள் இதன் முகாமைத்துவத்துக்கு பொறுப்ப ளிக்கப்பட்டுள்ளன. வனபரிபாலன திணைக்க ளத்தின் பிரதான நோக்கம், காடுகளைப் பாதுகாத்து இயற்கை - பசுமைப் போர்வையை உறுதி செய்வதாக இருந்தப்போதும், மனிதப் பாவனைக்குத் தேவையான மரங்களை பெற்றுக்கொடுப்பதில் இது பாரிய பங்களிப்பை வழங்கவில்லை. உள்ளூரில் தேவைப்படும் மரங்களின் கேள்விக்காக மனிதர்கள் உருவாக்கிய மனிதக் காடுகளில் மரங்களை அறுப்ப

GERMANWATCH

**Climate Risk Index 2020**

| Ranking 2018 (2017) | Country | CRI score | Death toll | Deaths per 100 000 inhabitants | Absolute losses (in million US$ PPP) | Losses per unit GDP in % | Human Development Index 2018 Ranking |
|---|---|---|---|---|---|---|---|
| 1 (36) | Japan | 5.50 | 1 282 | 1.01 | 35 839.34 | 0.64 | 19 |
| 2 (20) | Philippines | 11.17 | 455 | 0.43 | 4 547.27 | 0.48 | 113 |
| 3 (40) | Germany | 13.83 | 1 246 | 1.50 | 5 038.62 | 0.12 | 5 |
| 4 (7) | Madagascar | 15.83 | 72 | 0.27 | 568.10 | 1.32 | 161 |
| 5 (14) | India | 18.17 | 2 081 | 0.16 | 37 807.82 | 0.36 | 130 |
| 6 (2) | Sri Lanka | 19.00 | 38 | 0.18 | 3 626.72 | 1.24 | 76 |
| 7 (45) | Kenya | 19.67 | 113 | 0.24 | 708.39 | 0.40 | 142 |
| 8 (87) | Rwanda | 21.17 | 88 | 0.73 | 93.21 | 0.34 | 158 |
| 9 (42) | Canada | 21.83 | 103 | 0.28 | 2 282.17 | 0.12 | 12 |
| 10 (96) | Fiji | 22.50 | 8 | 0.90 | 118.61 | 1.14 | 92 |

**The Global Climate Risk Index for 2018: the 10 most affected countries**

www.germanwatch.org/en/cri

**Climate change vulnerability index 2020**

**Image source - www.germanwatch.org**

தற்கான அனுமதியினை பிரதேச செயலகங்கள் வழங்குகின்றன அல்லது பனை அபிவிருத்திச்சபை, தெங்கு அபிவிருத்திச்சபை என்பன வழங்குகின்றன. காட்டு மரங்கள் அறுப்பதற்கான அனுமதியை வனப்பாதுகாப்பு திணைக்களம் வழங்கி வருகின்றது.

மரங்கள் வெட்டப்படும் போது, முதல் விளைவு பொருளாக மட்டுமே அது பாவனைக்குட்படுத்தப்படுகின்றது. அதனால், வெட்டப்பட்ட மரத்தின் பிரதான பாகம் மட்டுமே பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது. மீதமுள்ள அனைத்தும் அப்படியே விடப்படு கின்றன. இவற்றைப் பயன்படுத்தி செயற்கை முறையிலான கன்வஸ் போன்ற மரங்களை இலங்கையில் தயாரிப்பது கிடையாது. இந்தச் செயற்கை மரங்கள் தயாரிக்கும் தொழிற்துறை மீது முதலீடும் அக்கறையும் செலுத்தப்படுமாயின், காட்டு வளத்தின் முறையான பாவனையை விரிவாக்க முடியும். முறைசார்ந்த காட்டுத்தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்யத் தவறுவதனால் தான், சட்ட விரோத காட்டுத் தொழிலில் பலர் ஈடுபடத் தூண்டப்படுகின்றனர். காடுகள் யாரும் தீண்டப்படாததாக பேணப்பட வேண்டிய அதேநேரம் காட்டுவளத்தை பயன்படுத்தும் முகாமைத்துவமும் முறைப்படுத்தப்படல் வேண்டும். விறகு, பலகை, தேனீ வளர்ப்பு, வனஜீவராசிகளின் பாதுகாப்பும் பயன்பாடும் என்பன குறித்து ஒருங்கிணைந்த செயல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, மனிதக்காடுகள், மாற்றுத்தேவைக் காடுகள் என்பன பிரிக்கப்பட்டு, உருவாக்கப்படல் வேண்டும். காடுகள் இயற்கை காடுகளாக இருப்பினும் அதனை வெட்டுதல், மீள் நடுகை செய்தல், பாதைகள் அமைத்தல் போன்றவற்றை முறைப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சமூகக் காடாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நிலங்களை வழங்கி இது வரை பயன்பாட்டுக்குட்படுத்தாத வெளிகள், சதுப்புக்கள் உவர்நிலத் தொடர்களில் புதிய முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பிக்கலாம். இதற்காக நிலத்தைப் பெறுபவரிடமிருந்து வருட வரி ஒன்றை உள்ளூர் அதிகாரசபைகளுக்கு பெற்றுக் கொடுப்பதுடன், கூட்டு முயற்சிக் கம்பனிகளையும் பொறுப்பாக்கம் செய்து கொள்ளலாம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பெருமளவிலான கடற்கரைகளில் உவர் நீர் உட்புகுதல் காரணமாக செழிப்பற்ற நிலங்கள் அதிகரித்து வருவதுடன், பூகோள வெப்பமயமாதல் மூலம் கடல் நீர் மட்டமும் உயர்ந்து வருகின்றது. இதனால் உவராகுதல் என்பது ஒரு பாரதூரமான சூழலியல் பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. இந்தப் பிரச்சினையைக் குறைக்கும் பொருட்டு, சமூகக் காடாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை தனியார் முதலீட்டிலிருந்து உருவாக்கி கொள்வதோடு, அதனூடாக பங்களிப்புடன் கூடிய வளங்களை உருவாக்கி கொள்ளக் கூடியதாகவும் அமையும். கிழக்கு மாகாணத்தின் வனவள மூலங்களில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிக காடுகள் காணப்படுகின்றன. மொத்த மாவட்ட நிலப்பரப்பில் 34.47% பகுதிகள் காடுகளாகவே காணப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் 29.96 சதவீத நிலப்பரப்பு காடாகவே உள்ளது. மட்டக்களப்பு மாவட்டமே இம்மாகாணத்தில் ஆகக்குறைந்த காட்டுவளத்தை கொண்ட மாவட்டமாக காணப்படுகின்றது. இங்கு 14.96 சதவீத நிலப்பரப்பிலேயே காடுகளே காணப்படுகின்றன. கிழக்கில், அம்பாறை மாவட்டத்தின் உகண பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகளவான காடுகள் காணப்படுகின்றன. வடமாகாணத்தை பொறுத்தவரை முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அதிகளவான காடுகள் காணப்படு கின்றன. இங்கு 178,721 ஹெக்டேயர் நிலப்பரப்பில் காடுகள் காணப்படுவதுடன், அடுத்து அதிகளவான காட்டுவளத்தை கொண்ட மாவட்டமாக மன்னார் விளங்குகின்றது. இங்கு 122,038 ஹெக்டெயர் காடுகளும், வவுனியா மாவட்டத்தில் 112,711 ஹெக்டெயரில் காட்டு வளமும் காணப்படுகின்றன. இந்த வகையில் வடக்கு மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் 52 சதவீதமான நிலங்கள் காடுகளாகவே அமைந்துள்ளன.

மாறிவரும் காலநிலை மாற்றத்துக்கேற்ப உற்பத்தி மீதான தாக்கத்தை குறைத்துக் கொள்வதில் , பாதுகாப்பான பசுமைப் போர்வையை பெறுவது தொடர்பில் இலங்கை செய்து கொண்டுள்ள சர்வ

தேச சூழல் பாதுகாப்பு உடன்படிக் கைக்கமைய , காபன் நன்கொடையை (Carben Credit) பெற்றுக் கொள்வதற்கு மிகவும் உதவியளிக்கும் மாகாணங்க ளாக இவ்விரு மாகாணங்களுமே இருந்து வருகின்றன. இலங்கை, வெப்ப வலயத்தில் அமைந்துள்ள இயற்கை அழகு நிறைந்த தீவொன்றாகும். அத் துடன் பல்வேறான சூழல் அமைப் புக்களையும் பொதுவாகக் கொண்டி ருப்பதுடன், சிறப்பான ,பாரியளவு எண்ணிக்கையினை கொண்ட உயிர்ப் பல் வகைமைத் தன்மையொன்றைக் கொண்ட (high Bio Diversity) நாடாக வும் காணப்படுகின்றது. உலகளா விய நிலையில் உயிர்ப்பல்வகைமைத் தன்மையின்படி சிறப்பார்ந்த 36 பிர தேசங்களில் இலங்கையும் சேர்க்கப் பட்டுள்ளது. எனினும் தற்காலத்தில் காணப்படும் மனித நடவடிக்கைகள் காரணமாக உயிர் வளங்கள் மிகவும் அச்சுறுத்தலுக்குள்ளாகும் போக்கினை கொண்ட நாடு எனவும் இலங்கை இனங்காணப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டின் காலநிலை மாற்றங்களுக்கு உட்ப டுதல் பற்றிய குறியீட்டின்படி (Climate Change Vulnerabil ity Index) இலங்கை உலகில் 6 ஆவது இடத்தினை வகிக் கிறது. இதன்படி இலங்கையானது சூழல் ரீதியில் முக்கியமான, உணர்வுமிக்க வலயமொன்றில் அமைந் துள்ள நாடென்பது தெளிவாகின்றது. இந்நாட்டின் சூழலியல் வளர்ச்சியில் வடக்கு கிழக்கு மாகாணங் களே அதிகம் முன்னுரிமை பெற்றிருக்கின்றன. 2025 ஆம் ஆண்டில் இலங்கையின் வன அடர்த்தியை 30% உயர்த்திக் கொள்வது என்ற எண்ணத்துடன் நீரேந்துப் பிரதேசங்களை பாதுகாத்தல், வளிமண்டலத்தில் காப னீரொக்சைட்டை மட்டுப்படுத்தல், பூகோள வெப்ப மடைதலை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் மீது இலங்கை அதிக நாட்டம் கொண்டுள்ள நிலையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காடு களின் தொழில்துறை மீது அதிக முதலீட்டை மேற் கொள்ளும் வாய்ப்பும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக இலங்கையின் முழுப்பரப்பிலும் 32 சதவீத மான வனப்போர்வையை விருத்தி செய்வதனூடாக, சர்வதேச ரீதியில் வழங்கப்படும் அந்நியச் செலாவணி வடிவிலான வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய தாக இருக்கும். அத்துடன் தாவர ஒளித்தொகுப்பின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் மேலதிக காபனீ ரொட்சைட்டை உள்நாட்டு மற்றும் சர்வதேச காபன் சந்தையின் கேள்விக்கான 'காபன் கடன்' (Carben Credit) திட்டத்துக்கமைய, விற்பதனால் நிதியினையும் திரட் டக்கூடியதாக இருக்கும். அதனை ஒரு திரட்டு நிதியா கப் பேணி ஒரு முறைசார் தொழிலாகவும் மாற்றக்கூ



**கருங்காலி மரம்**

Image source - www.webdunia.com

**இலங்கையின் முழுப்பரப்பிலும் 32 சதவீதமான வனப்போர் வையை விருத்தி செய்வதனூடாக, சர்வதேச ரீதியில் வழங்கப்படும் அந்நியச் செலாவணி வடிவிலான வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.**

டிய வாய்ப்புள்ளது. மரம் வளர்ப்பதனூடாக வளி மண்டலத்துக்கு காபனீரொட்சைட் செல்வதனை குறைத்தல், பச்சை வீட்டு விளைவுகளை குறைத்தல் என்பவற்றின் மூலம் இதற்கென சர்வதேச ரீதியாக நிறுவப்பட்டுள்ள காபன் கடன் நிதியிலிருந்தும் உத விகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படு கின்றது. வடக்கு - கிழக்கில் அதிகம் காணப்படும் மரங்கள் எரிதிறன் கூடிய சக்திவளமாக உள்ளன. குறிப்பாக பாலை, வீரை, முதிரை, கருங்காலி, வேம்பு, மலைவேம்பு, தேக்கு போன்ற மரங்கள் வளர்வதற் கான உள்ளார்ந்த கட்டமைப்பு இங்கு காணப்படு கின்றது. மரத்தேவை, எரிபொருள் தேவை எனும் இரண்டு முக்கியமான தேவைகளை நிறைவு செய் யக்கூடிய வளங்கள் வடக்கு - கிழக்கிலேயே அதிக ளவில் காணப்படுகின்றன. வனப்பகுதிகளாக ஒதுக் கப்பட்டுள்ள நிலப்பரப்புக்கள் பலவற்றில் மரச்செறிவு குறைவாகக் காணப்படுவதும், காட்டு வளங்கள் முறையாக முகாமை செய்யப்படாமையும் எமது பாரிய குறைபாடாகவுள்ளன. அதேசமயம், காட்டு வளங்க ளின் தொழில்துறை மீது தனியார் மற்றும் குழு முறை முதலீட்டை வரவேற்று அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களும் அதிகளவில் காணப்படுகின்றன.

தொடரும்.

# கீழைக்கரையும் அதன் புவிச்சரிதவியலும்

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல் மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார் வையில் எழுதும் முயற்சியே இக்கட்டுரைத்தொடர்.





## கட்டுரை

● விவேகானந்தராஜா துலாஞ்சனன்


கடந்த தொடரில், கீழைக்கரை என்ற நமது ஆய் வுப்பரப்பை சமூக, பொருளாதார, வரலாற்றுக் காரணிகளின் அடிப்படையில் வரையறுத்துக் கொண்டோம். இந்துமாக்கடலின் ஓரமாக, மூதூர் கொட்டியாற்றுக்குடாவில் தொடங்கி சுமார் 250 கி.மீ கிழக்கே நகரும் கீழைக்கரை, கூமுனையில் குமுக்கனாற்றில் முடிவடைகின்றது. அதன் வடக் கில் இலங்கையின் நீளமான ஆறான மகாவலி கங் கையும், தெற்கே குமுக்கனாறும் எல்லைகளாக நீடிக் கின்றன. மொனராகல் மாவட்டத்தின் 'சியம்] பலாண்டு வைக்கு அருகே சிங்களத்தில் |கோவிந்தஃகெல (Gvin da hela) என்றும் ஆங்கிலத்தில் வெ`ச்|ட்மினி`ச்|டர் அ|பே (Westminister Abbey) என்றும் அழைக்கப்படும் கழிகாமமலை[1] கீழைக்கரைக்கு குறிப்பான தென் மேற்குப் புற எல்லையாக சொல்லப்படுவதுண்டு. ஐரோப்பியக் குறிப்புகளில் விந்தனை மலைத்தொ டர்களும் விந்தனைப் பெருங்காடும்[2] கிழக்கிலங்கை யின் மேற்கு எல்லையாகச் சொல்லப்படுகின்றது. இவற்றைத் தவிர, கிழக்கு மாகாணத்துக்கும் ஊவா மாகாணத்துக்கும் எல்லையாக மேற்கே இன்று பாய்ந்துகொண்டிருப்பது மாதுரு ஓயா எனும் நட் டூர் ஆறு.

எனவே, இன்றைய நிர்வாகப் பிரிவுகளின் படி, திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர், சேறுவில், வெருகல் பிரதேசங்களும், அம்பாறை மாவட்டத் தின் தெகியத்தகண்டி, தவிர்ந்த ஏனைய நிர்வாகப் பிரதேசங்களும் முழு மட்டக்களப்பு மாவட்டமும் கீழைக்கரையில் அடங்கும் (உரு 01). இந்த எல்லைக ளின் அடிப்படையில், சுமார் 9000 சதுர கிமீ பரப்ப ளவைக் கொண்ட கீழைக்கரையானது, முழு இலங்





உரு.01 கீழைக்கரையில் அடங்கும் நிர்வாகப் பிரிவுகளின் எல்லைகளும் முக்கியமான இடங்களும்.

Image Source - wikimedia.org
Image Edit - வி.துலாஞ்சனன்

கையின் பரப்பில் சுமார் 15%ஐ அடக்குகிறது. தமிழர், சோனகர், சிங்களவர் ஆகிய மூவினத்தார் இங்கு பரந்து வாழ்ந்துவருகின்றனர்.

கீழைக்கரையை, ஆய்வியல் நோக்கில் சமூக பண் பாட்டு அரசியல் காரணங்களைச் சுட்டிக்காட்டி இவ் வாறு வரையறுத்துக்கொள்ளும் போதும், கீழைக்க ரைக்கு இயற்கையாகவே தனித்துவமான புவியியல் தரைத்தோற்ற அமைப்பு அமைந்திருக்கிறது என் பதை நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும். அந்த அமைப்பே இங்கு குடியேறிய பல்வேறு பண் பாடுகளையும் பல்வேறு மொழிகளையும் மதங்க

ளையும் கொண்ட மக்களை ஒன்றுதிரட்டி, ஒற்றைப் பண்பாடாக மாற்றி இருக்கிறது.

இந்த புவியியல் சிறப்பம்சங்களில் இரண்டு மிகவும் முனைப்பானவை. முதலாவது, மூதூரிலிருந்து பொத்துவிலூடாக கூமுனை வரை கணிசமான எண்ணிக்கையில் களப்புகளைக் கொண்ட அதன் சமதரை அமைப்பு. இந்தச் சமதரை நிலத்தில் மிகச்சில இடங்களிலேயே மலைக்குன்றுகள் அமைந்திருக்கின்றன. இரண்டாவது சிறப்பு, இந்நிலப்பரப்பு முழுவதும் கடலுக்கு சமாந்தரமாக நிலத்தில் நீளவாக்கில் அமைந்துள்ள நீர்நிலைகள். இவை கடற்கரையிலிருந்து சுமார் 15 கிமீ நீளத்துக்குள், தொடர்ச்சியான, அல்லது சதுப்பு நிலங்களால் துண்டிக்கப்படுகின்ற, களப்புகளாக அல்லது நீர்ப்பரப்புகளாகக் காணப்படுகின்றன (Ranawella 2011:2223). இந்த நீர்ப்பரப்புகளுக்கு ஊவா அல்லது விந்தனை மலைத்தொடர்களில் ஊற்றெடுக்கும் சிற்றாறுகள் மூலம் தொடர்ச்சியான நன்னீர் வரத்து கிடைக்கிறது.


கீழைக்கரையெங்கணும் தொன்மையான குளங்களும் கால்வாய்களும் பெருமளவில் காணப்படுகின்றன. எனவே வாழ்தகைமைக்கான குறைந்தபட்சத் தேவைகளை நிறைவேற்றியபடி, இங்கு ஒரு காலத்தில் அடர்ந்து செறிந்து வாழ்ந்த பெரும் குடித்தொகை ஒன்று காணப்பட்டிருக்க வேண்டும் (Brohier 1935:41). அது உண்மை என்பது போல், சிற்றாறுகளின் கரைகள், களப்புகளின் அயற்பகுதிகள் அவற்றினருகே அங்குமிங்கும் துண்டிக்கப்பட்டுள்ள மலைக்குன்றுச் சாரல்களிலேயே கீழைக்கரையின் தொல்நாகரிகம் உருவாகி வளர்ந்த பழங்குடியிருப்புகளை இன்று கண்டறியமுடிகின்றது.

சிற்றாறு, சதுப்புநிலங்களக் கொண்ட இந்த நீர்ப்பரப்புகளின் வலையானது, இந்நிலத்தின் போக்குவரத்திலும் பாதுகாப்பிலும் வியாபார அரசியல் பண்பாட்டு வளர்ச்சியிலும் இன்றியமையாத இடத்தை வகித்திருக்கின்றது. ஒல்லாந்தர் காலத்திலும் இந்த நீர்த்தொடர்பு வலை அறுபடாது நீடித்திருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறது.

ஒரு டச்சுக் குறிப்பின் படி, அக்கரைப்பற்றுக்குத் தெற்கே ஒருவர் மரங்களையும் ஏனைய வணிகப்பொருட்களையும் ஒரு வள்ளத்தில் ஏற்றி (பெரிய களப்பு) ஆற்றில் நுழையும் போது, அவரால் (மாங்கேணிக் களப்பு) கொக்குவில் பளை வரை அவற்றை சுலபமாக எடுத்துச் செல்ல முடியும் (Ferguson 1998:173). அங்கிருந்து (பனிச்சங்கேணிக் களப்பு) சதுப்பு நிலங்களூடே படகை விடுத்தால், மகாவலி கங்கையின் கிளையான வெருகல் கங்கையை அடையலாம். அங்கிருந்து வடக்கே திருக்கோணமலைத் துறைமுகம் ஊடாக தமிழகத்துக்கோ, திரும்பி மகாவலி கங்கை வழியே நுழைந்து இலங்கை உள்நாட்டுக்குள்ளோ செல்வது மிக எளிமையான ஒரு வணிகப்பாதை.

இங்கு சொல்லப்படும் பெரிய களப்பின் தென் அந்தம் திருக்கோவில் மற்றும் வெருகல் கங்கைக்கு இடையிலான இன்றைய தரைவழி இடைத்தூரம் 150 கிமீ ஆகும். இந்த நீளத்தில் வணிகத்துக்கும் போக்குவரத்துக்கும் உதவிய ஒரு துண்டிக்கப்படாத நீர்ப்பாதை இருந்தது என்பது மிக முக்கியமான வரலாற்றுக் குறிப்புத் தான். கீழைக்கரையின் வரலாற்றைக் கட்டமைத்ததே இந்தப்பாதை தான் என்றால் அது மிகையாகாது. அம்பாறைப் பகுதியின் பழைய பெயராகச் சொல்லப்படும் "திகாமடுல்ல" அல்லது தீர்க்கவாபிமண்டலம் (பாலிமொழி: நீளமான வாவி மண்டலம்) என்ற பெயருக்கும், இந்த நீண்ட நீர்வழிப் பாதைக்கும் தொடர்பிருக்கிறதா என்பதை மேலும் ஆராயவேண்டும். இந்த நீர்வழிப்பாதையே தீர்க்கவாபி மண்டலத்தின் பெயருக்கான உண்மைக் காரணம் எனில், நாம் ஆராயும் "கீழைக்கரை" வெறுமனே பிற்கால வரையறை அல்ல; அது மிகத் தொன்மையான புவியியல் காரணத்தால் இயல்பாகவே உருவாகிவந்த ஒரு வரலாற்றுக்கால வரையறை தான் என்பது உறுதியாகின்றது.

எனவே கிழக்குக்கரையின் வரலாற்றுக்குள் நுழைய முன்னர், இந்தத் தனித்துவமான தரைத்தோற்றத்தை சற்று விரிவாகக் கற்கவேண்டிய தேவை இருக்கிறது. அதிலும் குறிப்பாக, சமதரை அமைப்பையும் நீர்ப்பின்னலையும் பார்த்தால் போதுமானது.



உரு. 02 இலங்கையின் நிலவியல் பிரிவினைகளைக் காட்டும் வரைபடம். கீழைக்கரையின் பெரும்பாகம் இதில் இயல்பாகவே வி`சயன் சிக்கலில் அமைந்துள்ளது.

Image Source - wikimedia.org
Image Edit - வி.துலாஞ்சனன்

## கீழைக்கரையின் சமதரை:

மில்லியன் கணக்கான வருடங்களாக புவியின் மேற்பரப்பு மீது படிந்த வண்டல் பாறைகளின் அடுக்குகளைத் தோண்டி ஆராய்வதன் மூலமும், ஒவ்வொரு பாறை அடுக்குகளின் மாதிரிகளை எடுத்து அவற்றிலுள்ள தாவர - விலங்குகளின் உயிர்ச்சுவடுகளை ஆராய்வதன் மூலமும், குறித்த தரை அடுக்குகளின் வயதைக் கணக்கிட முடியும். இந்த நிலவியல் கணக்கிடலின் படி, இலங்கையின் தரையானது, இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ப்ரீகாம்ப்ரியன் (Precambrian) காலத்தில் அதாவது இற்றைக்கு 600 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்

உருச்சிதைவடைந்து உண்டான பாறைப்படிவுகளாலானது இலங்கைத்தீவின் 90% பரப்பு. மீதி 10% மயோசீன் காலத்து (25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர்) உருவான சுண்ணப்படிவுகளால் ஆனதாகும் (Subrayamaniyam & Kuyanesathasan 2020:07). இந்த வரையறைகளின் படி, இலங்கைத்தீவின் நிலவியலானது ஐந்து பிரிவுகளைக் கொண்டுள்ளது (Cooray 1994; Chandrajith 2020:2334). (உரு 02)

1. வின் வட அந்தத்திலுள்ள சுண்ணப்பாறைகளைக் கொண்ட மயோசீன் நாற்புடைப் படிவுகள் (ம்யோ`சீன் க்வார்|ட்னரி `செடிமென்|ட்`ச் Miocene Quaternary Sediments).
2. தீவின் வடகிழக்கிலிருந்து தென்மேற்கு வரை குறுக்காக நீண்டுள்ள பெலி|டிக் நை`ச் (pelitic gneiss), மெ|டாக்வார்ட்`சை|ட் (metaquartzite), மார்|பில் (marble), சார்னோகி|டிக் நை`ச் (charnockitic gneiss) முதலிய பாறைகளாலான உயர்நிலச் சிக்கல் (ஃகைலாண்ட் கொம்|ப்லக்`ச் - Highland Complex)
3. உயர்நிலச் சிக்கலின் கிழக்கும் தெற்கும் காணப்படும் மி|க்ம|டை|ட்`ச் (migmatites), |க்ரனை|டிக் நை`ச் (granitic gneiss), |க்ரனை|டொய்ட்`ச் (granitoids) பாறைகளாலான வி`சயன் சிக்கல் (வி`சயன் கொம்|ப்லக்`ச் - Vijayan Complex).
4. உயர்நிலச்சிக்கலின் வடக்கும் மேற்கும் காணப்படும் மி|க்ம|டை|ட்`ச் (migmatites), |க்ரனை|டிக் நை`ச் (granitic gneiss), |க்ரனை|டொய்ட்`ச் (granitoids) பாறைகளாலான வன்னிச் சிக்கல் (Wanni Complex)
5. |பயோ|டை|ட் நை`ச் (biotite gneiss), ஃகோர்ன்|ப்லெண்ட் |பயோ|டை|ட் நை`ச் (hornblendebiotite gneiss) ஆகிய பாறைகளின் நீட்சிகளைக் கொண்ட பள்ளத்தாக்குகளாலான கடுகண்ணாவைச் சிக்கல்.

இவற்றில் கீழைக்கரையானது பெருமளவு வி`சயன் சிக்கலில் அடங்குகின்றது. சாதாரண மொழியில் கருங்கல் என்று அறியப்படும் மி|க்ம|டை|ட்`ச் (migmatites), |க்ரனை|டிக் நை`ச் (granitic gneiss), |க்ரனை|டொய்ட்`ச் (granitoids) முதலிய பாறைகளாலானது கீழைக்கரையின் தரை. சில இடங்களில் சிலிக்கேற்றுப் (Silicate - `சிலிகே|ட்) படிவும், தம்பிலுவில், பாணமை முதலிய இடங்களில் இல்மனைற்றுப் (Ilmenite - இல்மெனை|ட்) படிவும் கிடைக்கின்றது (கணபதிப்பிள்ளை 1980:33).

மி|க்ம|டை|ட் (Migmatite), கருங்கல் (|க்ரனைட் - granite) படிவுகளால் ஆன கீழைக்கரை, கடல்மட்டத்திலிருந்து 10 மீற்றரைத் தாண்டாத உயரம் கொண்ட சமதரை ஆகும். இதில் ஆங்காங்கே நை`ச் (gneiss) வகைப் பாறைகளாலான சிறுசிறு குன்றுகள் காணப்படுவதுண்டு. இவற்றில் வெருகல் கல்லடி - ஈச்சிலம்பற்றுக் குன்றுகள், வாகரை கதிரவெளி - மதுரங்கேணிக் குன்றுகள், கிரான் பேரில்லாவெளிக் குன்றுத்தொடர், அக்கரைப்பற்று பொத்தானை - மொட்டையாகல் குன்றுகள், திருக்கோவில் சங்கமன்கண்டிக் குன்றுகள், கோமாரிக்குன்றுகள், பாணகை உகந்தைமலைக் குன்றுகள், என்பன குறிப்பிடத்தக்கவை.
ஊவாப்பீடபூமி நோக்கி அல்லது உயர்நிலச் சிக்கல் நோக்கி நகர நகர, இக்கற்பாறைகளின் உயரங்கள் அதிகரிக்கின்றன. எவ்வாறெனினும் கீழைக்கரையானது இலங்கையின் அதிகிழக்கே உள்ள மிகவுயர்ந்த மலைகளான

658 மீ உயரமான நடுக்குடும்பி மலை[3] (சிங்களம்: வாலிம்|பே ஃகெல [Wlimbehela], ஆங்கிலம்: ஃப்ரையர்`ச் ஃகூட் - Frair's Hood) மற்றும் 558 மீ உயரமான கழிகாம மலை என்பவற்றுடன் வரம்பிடப்படுவதால், அந்நிலம் பெருமளவு சமதரையானது என்ற கருத்து உறுதிப்படுத்தப்படுகிறது.


## கீழைக்கரையின் நீர்நிலைகள்:

கீழைக்கரையின் சமதரையில் பெருமளவு நீர்நிலைகள் காணப்படுகின்றன என்பதையும் அவை அமைத்த நீர் வலைப்பின்னல்கள் கடலுக்குச் சமாந்தரமாக நிலப்பகுதியில் நீண்டு செல்வதையும் முன்பும் குறிப்பிட்டிருந்தோம். இந்தத் தனித்துவமான நிலவியல் தோற்றப்பாட்டிற்கு என்ன காரணமாக இருக்கும்?

நிலவியலாளர்களின் கருத்துப்படி, இரண்டு புவியியல் சம்பவங்கள் இதற்குக் காரணமாகின்றன. இற்றைக்கு 11,700 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கும் ஃகோலோசீன் காலத்தில் ஏற்பட்ட சடுதியான கடல்மட்ட உயர்வும் இற்றைக்கு முன் 22 - 24ஆம் ஆயிரமாண்டுகளில் ஏற்பட்ட "நாற்புடைக்குப் பிந்திய காலக் கடற்கோள்" (Late Quartenary Marine Transgression) நிகழ்வும் அவை (Katupotha & Fujiwara 1888:189, Weerakody 1992:02)

இற்றைக்கு17,000ஆண்டுகளுக்குமுன்னர், "ஃகோலோசீன்" (Holocene) என்று வரையறுக்கப்படும் புவிச்சரிதவியல் காலத்தின் ஆரம்பத்தில், உலகெங்கும் பனியுகம் முடிந்து சற்று வரண்ட காலநிலை நிலவியது. இக்காலத்தில் தற்போது உள்ளதிலும் பார்க்க, 10 முதல் 20 மீ கடல் மட்டம் தாழ்வாகக் காணப்பட்டது (Katupotha 1995).

ஃகோலோசீன் காலத்தின் நடுப்பகுதியில், அதாவது இற்றைக்கு முன் சுமார் 6000 ஆண்டுகளில் கடல் மட்டம் சடுதியாக உயர்ந்து, இன்றுள்ளதிலும் 2.5 மீ உயரமாகக் காணப்பட்டது. இதன்போது அப்போதிருந்த கரையோர வடிநிலப் பள்ளத்தாக்குகள் நீரில் மூழ்கின. சூழலும் வெப்பநிலையும் சாதகமாக இருந்தமையால், அவற்றில் பவளப்பாறைகள், முருகைக்கற்கள் பெருக்கமடையத்தொடங்கின. ஆனால், அடுத்த ஈராயிரம் ஆண்டுகளில் கடல் மட்டம் குறையத் தொடங்கியது. தாழ்வடிநிலங்களில் பெருகியிருந்த முருகைக்கற்பாறைத்தொடர்களும் சிப்பி சங்கு முதலிய ஓட்டு உயிரினங்களும் உள்நாட்டு நன்னீர் ஆறுகளால் அடித்து வரப்பட்ட வண்டல் மண்ணில்




**உரு. 03: களப்புகளின் புவிச்சரிதவியல் தோற்றத்தைச் சொல்லும் பரும்படி வரைபடம்**

Image source - வி.துலாஞ்சனன்

புதைந்து தேங்கத்தொடங்கின. கடற்காற்று, அலைத்தொழிற்பாட்டால் அவற்றின் மீது முருகைக்கல் படிவுகளும், மணலும் படிய அம்மேடு உயர்ந்து புதிய கரையை உருவாக்கலாயிற்று (உரு. 03). எனவே நீரில் மூழ்கியிருந்த பழைய வடிநிலங்கள் புதிய கரையால் கடலிலிருந்து துண்டிக்கப்பட்டு களப்புகள் உருவாகலாயின (silva et al, 2013:1215; Ranasinghe et al, 2013:3335).

உள்நாட்டு நன்னீர் சிற்றாறுகள் இக்களப்புகளில் தொடர்ச்சியாகக் கலந்ததால் அவற்றின் நீரின் உவர்த்தன்மை மாறுபடலாயிற்று. அத்துடன் உள்நாட்டு ஆறுகள் கொண்டுவந்து சேர்த்த வண்டல்மண் படிந்து இந்தக் களப்புகளின் ஆழம் குறைந்தது. தொடர்ச்சியான வண்டல்மண் படிவால், பல களப்புகள் சதுப்புநிலமாக மாற்றமடைந்து பின்னாளில் சேற்றுநிலமாக மாறியதுடன், இன்றுள்ள களப்புகளும் தொடர்ச்சியான சிற்றாற்றுப் படிவுகளால் அகலம் குறைந்து வருகின்றன. களப்புகள் சதுப்பாகி சேறுமண்டிய பின்னர், அவை விவசாயத்துக்குப் பொருத்தமான வயல்நிலங்களாக மாற்றமடைந்தன. இன்றுள்ள களப்புகளின் இடையேயுள்ள பல வயல் நிலங்கள், பழைய களப்புகள் அல்லது கடல்நீரேரிகள் என்பதை செய்மதி வரைபடங்களிலும் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

இனி, இந்தக் கீழைக்கரையின் நீர்வலைப்பின்னல்களை இரண்டு பிரிவாகப் பார்க்கலாம். முதலாவது களப்புகள். இரண்டாவது அக்களப்புகளில் கலக்கும், அல்லது கடலில் நேரடியாகக் கலக்கும் சிற்றாறுகள்.

## களப்புகள்:

களப்புகள் (அல்லது காயல், ஆங்கிலம்: Lagoon - லகூன்) ஒடுங்கிய நிலப்பரப்பால் கடல் அல்லது பெரிய நீர்நிலையொன்றிலிருந்து பிரிக்கப்பட்டு தனிப்படுத்தப்பட்ட ஆழங்குறைந்த நீர்நிலைகள் ஆகும். இவற்றுக்குள் பெரும்பாலும் ஆறுகளோ ஓடைகளோ திறப்பதில்லை (Silva et al 2013; Probert 2017:277312). ஆனால் கீழைக்கரையில் காணப்படுபவை வெறும் களப்புகள் அல்ல; அவை நன்னீர் ஆறுகளின் தொடர்ச்சியான நீர்வரத்தைக் கொண்ட கடலோடு குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் திறக்கும் உவர்த்தன்மையான நீர்நிலைகள். களப்புகளின் வரைவிலக்கணத்திலிருந்து மாறுபட்ட இவற்றை ஆங்கிலத்தில் "Estuary - எ`ச்டுவரி" என்று அழைப்பர். மட்டக்களப்புத் தமிழில் இவை "கரைச்சை" என்று அழைக்கப்படுகின்றன. கிழக்கிலங்கையிலுள்ள களப்புகள் யாவும், உண்மையில் கரைச்சைகளே. லகூன், எ`ச்டுவரி என்ற சொற்கள் ஆங்கில அறிவியல் கட்டுரைகளிலும் ஒத்தகருத்துச் சொற்களாகப் பயன்படுவதால், சிலர் இரண்டும் இணைந்த Estuarine Lagoon - எ`ச்டுவரைன் லகூன் எனும் பதத்தைப் பயன்படுத்துவது வழக்கம். இதைத் தமிழில் 'கரைச்சைக் களப்பு' என்று கூறலாம்.

கீழைக்கரையின் கரைச்சைக் களப்புகளில் ஊவா மலைத்தொடரில் ஊற்றெடுக்கும் ஏராளமான ஆறுகள் திறந்துகொள்கின்றன. இக்கரைச்சைகள் கடலுடன் மிகச்சிறிய மணல் திட்டுக்கள் மூலமே பிரிக்கப்பட்டுள்ளதால், வெள்ளப்பெருக்குக் காலத்தில், இயற்கையாக அல்லது செயற்கையாக இந்தத் திட்டுக்கள் திறக்கப்படுவதன் மூலம் கடலில் மேலதிக நீர் வடிகின்றது. கோடை காலத்தில் இவை மீண்டும் கடற்காற்று - கடலலை இயக்கத்தால் மூடிக்கொள்கின்ற போது, களப்பு நீர் உவர்த்தன்மை அடைகின்றது. இவற்றின் உவர்த்தன்மை கோடை காலம் உச்சமடைந்து களப்புகளின் நீர் வற்றும் வைகாசி, ஆணி மாதங்களில் அதிகரிக்கின்றது. ஏனைய காலங்களில் இக்களப்பு நீர், குடிநீராகவும் சில இடங்களில் விவசாயப் பாய்ச்சல் நீராகவும் கூட பயன்பட்டுள்ளது. சில இடங்களில் கரைச்சைகளை கீழைக்கரை மக்கள் "ஆறு" என்று அழைப்பதற்கு, இவற்றின் நன்னீர்த் தன்மையே காரணமாகும்.

இவ்வாறு ஓராண்டு காலத்துக்குள் கரைச்சையின் நீர் உவர்த்தன்மை மாறுபடுவதால், உவர்நீர் சகிப்புமையுடைய நன்னீர் தாவர மற்றும் விலங்கினங்களே இக்களப்பு ஈரநிலங்களில் காணப்படுகின்றன. கண்டல் தாவரங்களையும் நீர்வாழ் விலங்கினங்கள் செறிவான சதுப்புநிலங்களும் இக்களப்புகளை அண்டிக் காணப்படுகின்றன.

வெருகலிலுள்ள உல்லைக்களிக் களப்பு, வாகரையிலுள்ள பனிச்சங்கேணி உப்பாற்றுக் களப்பு, பாசிக்குடாவில் திறக்கும் வாழைச்சேனைக் களப்பு, புது முகத்துவாரம், கல்லாறு ஆகிய இடங்களில் கடற்கழிமுகங்களைக் கொண்ட மட்டக்களப்பு வாவி என்பன கீழைக்கரையின் வடபுறக் கரச்சைகளாகும். இவை நிலவியலில் "வடகிழக்குக் களப்பு வலயமாகக்" கருதப்படுகிறது. அக்கரைப்பற்றுப் பெரிய களப்பிலிருந்து, குமுக்கனாற்றின் அருகே உள்ள கிரிக்குளக் களப்பு வரையான பதினான்கு களப்புகளும் கீழைக்கரையின் தென்புறத்தில் அமைந்துள்ள கரைச்சைகள். இவை கிழக்கு வலயக் களப்புகள்.

கிழக்கு வலயக் களப்புகளில் தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல அங்குள்ள களப்புகளின் பரப்பளவுகள் குறைகின்றன. அவை இலங்கைத்தீவின் முப்பரிமாண அமைப்பில் பிறைவடிவக் கரையில் அமைந்திருப்பதால், கடலலை, கடற்காற்று என்பவற்றின் நேரடியான பாதிப்பின்றிக் காணப்படுகின்றன. ஏனைய களப்புகளில் கடற்காற்றின் மற்றும் பருவப்பெயர்ச்சிக் காற்றின் நேரடித் தாக்கத்தால் அவற்றின் பரப்பளவுகள் அதிகரித்துக் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. (Silva et al 2013:21).

(தொடரும்)




கட்டுரை

● வி.துலாஞ்சனன்

# கீழைக்கரையும் அதன் புவிச்சரிதவியலும் II


இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல் மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார் வையில் எழுதும் முயற்சியே இக்கட்டுரைத்தொடர்.

கீழைக்கரையில் 21 கரச்சைக் களப்புகள் காணப்படுகின்றன (உரு. 01 & 02). உள்நாட்டு ஆறு கள் பெருகிப் பாய்வதால், இவற்றின் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வண் டல் மண் படிந்து விட்டது. ஒப்பீட்டளவில் பெரிய கரைச் சைகளான மட்டக்களப்பு வாவி, பெரியகளப்பு, வாழைச் சேனைக் களப்பு என்பன இவ் வண்டல் மண் படிவால் இன்று பெருமளவு அகலம் குறைந்தி ருக்கின்றன. இலங்கைத்தீ வின் கரையோரம், மட்டக்க ளப்பு வாவிக்குத் தெற்கே பிறைத்துண்ட வடிவில் அமைந் தி ருப்பதால், களப்புகளின் அளவை அதிகரிக்கும் கடுங் காற்று, பருவப்பெயர்ச்சிக் காற் றுகள் என்பன அங்கு அவ்வளவாகச் செல்வாக்குச் செலுத்தவில்லை (உரு.02). அதனால் அங்கு களப்புக ளின் பரப்பு தெற்கே செல்லச் செல்ல சிறுத்துச் செல்கி றது (Silva et al 2013:21).




உரு. 01 கீழைக்கரையின் வடகிழக்கு வலயக் களப்புகள் ஐந்து. உல்லைக்களிக் களப்பு, உப்பாறு – பனிச்சங்கேணிக் களப்பு,. வாழைச்சேனைக் களப்பு, மட்டக்களப்பு வாவி. உல்லைக்களிக்கு மேலே இலக்கமிடப்படாதது இலக்கந்தைக் களப்பு.

(படம்: Silva et al. 2013)




உரு. 02. கீழைக்கரையின் கிழக்கு வலயக் களப்புகள் 16. பெரியகளப்பு, கோரைக்களப்பு, திம்பூற்றுக்களப்பு, கோமாரிக்களப்பு, பொத்துவில் ஊறணிக்களப்பு, அறுகங்களப்பு, பாணமைக்களப்பு, பணாகலைக் களப்பு, சாளம்பைக்களப்பு, குணுகலைக்களப்பு, சலைவைக்களப்பு, உகந்தைக் களப்பு, கிரிகுலக் களப்பு. காட்டப்படாதவை வாகூரைக்களப்பு, காரைதீவுக் கரைச்சை.

(படம்: Silva et al. 2013)

கடலுக்குச் சமாந்தரமாக முழுநீளத்துக்கும் களப்புக ளின் தொடர் சங்கிலி காணப்படுவதால், கீழைக்கரை அந்தக்களப்புகளின் இருபுறமும் கிழக்கிலும் மேற்கி லும் இரு தனித்தனி நிலப்பரப்புகளாகத் தனிமைப்ப டுத்தப்பட்டுள்ளது. இக்களப்புகள் உள்ளூரில் ஆறு கள் என்றே அறியப்படுகின்றன. எனவே கடலுக்கும் ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலம் "எழுவான்கரை" (சூரியன் எழுகின்ற கரை - கிழக்குக்கரை) என்றும் ஆற்றுக்கு அப்பாலுள்ள மற்றைய நிலம், "படுவான் கரை" (சூரியன் மறைகின்ற / படுகின்ற கரை - மேற் குக்கரை) என்றும் அழைக்கப்படுகின்றன. எழுவான் கரை ஊர்களும் படுவான்கரை ஊர்களும் தொன்று தொட்டே ஒன்றோடொன்று கொண்டும் கொடுத் தும் வந்திருக்கின்றன.

படகு, ஓடம், தோணி முதலியன மூலமான நீர்வழிப் போக்குவரத்தே இவ்வூர்களை இணைக்கும் பிரதான போக்குவரத்து மார்க்கமாக இருந்து வந்தது. தரைவ ழிப்பாதை பிரதான போக்குவரத்து மார்க்கமாக மாறி யுள்ள சமகாலத்தில் இந்நீர்வழிப்பாதைகள் மறக்கடிக் கப்பட்டுள்ளன. இவற்றின் எச்சங்களை இன்றும் நீடிக்கும் குறுமண்வெளி - மண்டூர், குருக்கள்மடம் - அம்பிளாந்துறை, இலங்கைத்துறை - இலங்கைத்துறை முகத்துவாரம் முதலிய படகுப்பாதை போக்குவரத்து களில் காணலாம். இந்நீர்வழிப் பாதைகளில், கரைச்

சைகளுக்குச் சமனாக, அல்லது கரைச்சைகளை விட ஒருபடி மேலாக முக்கியத்துவம் பெற்று விளங்கியவை, கீழைக்கரையின் ஆறுகள்.

## கீழைக்கரையின் ஆறுகள்

கீழைக்கரையில் மொத்தம் இருபத்தேழு ஆறுகள் பாய்கின்றன (Arumugam,1969). ஆறுகள் என்று கூறினாலும் இவை அகலத்தில் மிகக்குறைந்த சிற்றோடைகளே. செய்மதிப்படங்களை ஆராயும் போது, பட்டிப்பளை ஆறு, கூமுனையாறு, மாதுரு ஆறு முதலான ஓரிரு ஆறுகள் மட்டும் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை பேராறுகளாக ஓடியிருந்திருக்கின்றன என்பதை ஊகிக்கமுடிகின்றது.


கீழைக்கரையின் ஆறுகளில் பெரும்பாலானவை கடலில் நேரடியாகச் சென்றடையாமல், கடலோரமாக அமைந்துள்ள கரைச்சைகளில் கலக்கின்றன. மகாவலி கங்கை, கல்லாறு, கூமுனையாறு ஆகிய மூன்று மட்டுமே கரைச்சையூடாக அன்றி, கடலில் நேரடியாகக் கலக்கின்றன. அவற்றிலும், கூமுனையாறு மட்டுமே தூய கடற்கழிமுகத்தைக் கொண்ட ஆறாக இருக்கின்றது[1]. கீழைக்கரையின் வரலாற்றுத் தேவைப்பாட்டிற்காக, இங்குள்ள ஆறுகளில் முக்கியமான 11 ஆறுகளை மாத்திரம் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

### 1.மகாவலி கங்கை

இலங்கையின் மிக நீளமான ஆறு, மகாவலி கங்கை (335 கி.மீ நீளம்). சிவனொளிபாத மலையிலேயே மகாவலி கங்கையும் இலங்கையின் ஏனைய பேராறுகளான களனி கங்கை, கல் கங்கை, வளவை கங்கை ஆகிய மூன்றும் உற்பத்தியாவதாக, ஈழத்துத் தமிழ் - சிங்கள மரபுரைகள் கூறுகின்ற போதும், அங்கிருந்து சுமார் 30 கி.மீ. தள்ளி, மலைநாட்டின் ஃகட்டன் (Hatton) நகருக்கருகே ஃகோட்டன் (Horton) சமவெளி ஆற்றுப்பள்ளத்தாக்கிலேயே மகாவலி கங்கை ஊற்றெடுக்கின்றது[2]. (Ratnasiri, 2010:09)

மகாவலி கங்கை, கண்டியூடாகப் பாய்ந்து மகியங்கனை (பழைய பெயர்: விந்தனை), மன்னன்பிட்டி (பழைய பெயர்: தம்பன்கடவை[3]), என்பவற்றினூடாகச் சென்று, குரங்குமுனை என்ற இடத்தில் வெருகல் கங்கையாகப் பிரிந்து வெருகலில் கடலில் கலக்கின்றது. அதன் பிரதான கிளை, குருக்கள் கங்கை என்ற பெயரில் வடக்கே சென்று கொட்டியாற்றுக் குடாவில் கடலில் கலக்கின்றது.

மகாவலி கங்கையின் ஆழம், அது கடலில் கலக்கும் திருக்கோணமலையிலிருந்து விந்தனைக்கு (இன்றைய மகியங்கனை) தெற்கே பங்காரகம்மான வரை 130 மைல்கள் (209 கி. மீ) தூரம் படகுப்போக்குவரத்துக்கு உகந்ததாக இருந்ததால், பிரித்தானியர் காலத்தில், வணிகப்படகுகளின் போக்குவரத்துக்காக மகாவலி கங்கையைப் பயன்படுத்துவது பற்றி ஆராயப்பட்டிருந்தது. (Capper 1849:135, Tennent 1860:424425) உண்மையில் இது காலனித்துவ ஆட்சியாளர்களின் காலத்துக்கு முன்பு உள்ளூர் அரசர்களால் வணிகத்துக்கும் போக்குவரத்துக்கும் பயன்படுத்தப்பட்ட நீர்வழி மார்க்கமாகும். இடைக்கால இலங்கைத் தலைநகரான பொலனறுவையை அண்டி ஓடும் அம்பன் கங்கை, மகாவலி கங்கையின் துணையாறு தான். பொலனறுவையை திருக்கோணமலைத் துறைமுகத்துடன் இணைத்து அதன் வணிகத்தை வளர்த்தெடுத்ததில் மகாவலி வழி நீர்ப்பாதைக்கு தவிர்க்கவியலாத வகிபாகம் இருந்திருக்கிறது.




உரு. 03. மகாவலி கங்கை, நட்டூர் ஆறு, முந்தனை ஆறு, மகிழவட்டவான் ஆறு என்பவற்றின் படுகையின் பருமட்டான வரைபடம். முந்தனையாற்றின் துணைகளும் கிளைகளும் இலக்கமிடப்பட்டுள்ளன.

(படம்: கூகிள் வரைபடத்திலிருந்து உருவாக்கப்பட்டது.

எனவே இலங்கையின் பிரதான வர்த்தக - போக்குவரத்துப் பாதையாக விளங்கிய மகாவலிகங்கையின் இரு கிளையாறுகளான குருக்கள் கங்கை, வெருகல் கங்கை என்பவற்றுக்கிடைப்பட்ட பகுதியில் இலங்கையின் பண்பாடும் நாகரிகமும் செழித்து வளர்ந்திருக்கின்றன. மகாவலியால் செழுமையூட்டப்பட்ட இந்நிலம் சிங்கள வரலாற்றிலக்கியங்களில் "கொத்தசார" என்று அழைக்கப்பட்டதுடன், சோழராட்சிக்

காலத்தில் தஞ்சைப்பெருங்கோவிலுக்கு காணிக்கைப் பொருட்களை ஏற்றுமதி செய்யுமளவுக்கு வளம் நிறைந்ததாக விளங்கியது (Fernando ,1978:8586). இங்கு சேருவில், ஈச்சிலம்பற்று, இலங்கைத்துறை, கல்லடி, நீலாப்பளை, மத்தளமலை, திருமங்கலாய், கங்குவேலி உள்ளிட்ட இடங்களில் பல தொல்லியல் மையங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## 2. நட்டூர் ஆறு:

நட்டூர் ஆறின் சிங்களப்பெயர் மாதுரு ஓயா. இது 1541 சதுர கி. மீ. நீர்ப்பிடிப்புப் பகுதி கொண்ட பெரிய ஆறு. ஊவா மலைத்தொடரில் ஊறி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் மேற்கு எல்லையாக சுமார் 80 கி. மீ. தூரம் பாய்ந்து, பொலனறுவை வெலிக்கந்தைக்கருகே கிழக்கே திரும்பி, ஒட்டமாவடியில் வாழைச்சேனைக் களப்புடன் கலக்கின்றது. மாதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் அருகே பழங்காலத்தில் உயர் தொழிநுட்பத்துடனான நீர்ப்பாசனக் கட்டமைப்பு நீடித்திருந்தமைக்குச் சான்றுகள் பெறப்பட்டுள்ளன. கந்தேகம, கோராவெளி உள்ளிட்ட பல தொல்லியல் இடங்கள் நட்டூர் ஆற்றின் கரையோரமாக அமைந்துள்ளன.


## 3. முந்தனை ஆறு:

இங்கினியாகல் மலைத்தொடரில் உருவாகும் இறம்புக்கன் ஆறும், அதன் மேற்கே தோன்றும் மகா ஓயா ஆறும், மகா ஓயா நகருக்கருகே இணைந்து முந்தனை ஆற்றை உருவாக்குகின்றன. முந்தனை ஆற்றுக்கு இன்னும் இரு துணையாறுகள் உள்ளன (உரு.03). மகா ஓயாவுக்கும் மேற்கே ஊறிப்பாயும் கல்லோடை ஆறு, தெம்பிட்டிக்கு அருகே முந்தனை ஆற்றுடன் கலக்கிறது. ஒமுனை மலையடிவாரத்தில் தோன்றும் இலாவணை ஆறு, மயில் தங்கிய மலைக்கருகே முந்தனையாற்றுடன் இணைகின்றது, மொத்தம் 1280 சதுர கி. மீ. நீர்ப்படுகை கொண்ட முந்தனையாறு சித்தாண்டிக்கு மேற்கே வாழைச்சேனைக் களப்பில் கலக்கின்றது. அதன் ஒரு கிளை கரடியனாறாகப் பிரிந்து மட்டக்களப்பு வாவியில் கலக்கின்றது. உறுகாமக்குளத்துக்கு நீர்பாய்ச்சுவது முந்தனை ஆறு தான்.

முந்தனை ஆற்றின் படுகையும் பல ஆதிக்குடியிருப்புகளைக் கொண்டதாகும். குசலான்மலை, கரடியனாறு, வேலோடுமலை, கித்துள் உட்பட பல தொல்லியல் இடங்கள் முந்தனையாற்றோரமாக அமைந்துள்ளன.

## 4. மகிழவெட்டுவான் ஆறு:

இங்கினியாகல் மலைத்தொடரில் இறம்புக்கனை ஆற்றுக்கு சமாந்தரமாக ஊற்றெடுத்து 346 சதுர கி.மீ. நீர்ப்படுகைப் பரப்பில் பாய்ந்து, மட்டக்களப்பு மகிழவட்டவான் அருகே மட்டக்களப்பு வாவியில் கலக்கிறது . இவ்வாறு மகிழவட்டவான் ஆற்றின் குறுக்கே அணை கட்டி 1902 - 1919 க்கு இடைப்பட்ட காலத்தே அமைக்கப்பட்ட குளமே உன்னிச்சைக்குளமாகும். மகிழவட்டவான் அருகே கரைவெட்டி, உன்னிச்சை, புல்லுமலைப் பகுதிகளில் பழங்குடியிருப்புகள் அமைந்திருந்தன.




**உரு. 04 நவகிரியாறு, மூங்கிலாறு, கல்லாறு என்பவற்றின் படுகைகளும், அவற்றை அண்டியுள்ள நீர்த்தேக்கங்களும்**

படம் கூகிள் வரைபடத்தைத் தழுவி உருவாக்கப்பட்டது.

## 5. நவகிரியாறும் மூங்கிலாறும்:

ஊவா மலைத்தொடரின் கிழக்கே வாலிம்ப மலையருகே களுகல் ஓயா (கருங்கல்லாறு) என்ற பெயரில் ஊற்றெடுக்கிறது நவகிரியாறு. இவ்வாற்றுடன் கல்லோயா இடதுகரைக் கால்வாய் இணையுமிடத்தில், 19501954 க்கு இடையே நவகிரி நீர்த்தேக்கம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. நவகிரி நீர்த்தேக்கத்தின் அருகே தான் வரலாற்றுப்புகழ் பெற்ற இராசக்கல் மலை அமைந்துள்ளது. நவகிரியாற்றின் ஒரு கிளை கிழக்கே சென்று மூங்கிலாற்றுடன் கலக்க, மறுகிளை பல சிற்றோடைகளாகப் பிரிந்து வெல்லாவெளியில் நாதனையாறாக மட்டக்களப்பு வாவியுடன் கலக்கின்றது.


நவகிரியாற்றின் படுகையில் உஃகணையிலுள்ள இராசக்கல் மலை மற்றும் வெல்லாவெளிப் பிரதேச தொல்லியல் மையங்கள் உள்ளிட்ட பல வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்கள் காணப்படுவதால், இவ்வாற்றின் கரையிலும் பெருமளவு ஆதிகாலக் குடியிருப்புகள் தோன்றி வளர்ச்சி கண்டுள்ளன என்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

நவகிரி ஆறு ஒரு துணையாறாகத் திறக்கின்ற மூங்கிலாறு, சிங்களத்தில் ஆந்தலோயா என்று அழைக்கப்படுவதுடன், 522 சதுர கி. மீ. நீர்ப்பிடிப்புப் பகுதி கொண்டது. இங்கினியாகல் மலைத்தொடரில் ஊற்றெடுக்கும்

நாமல் ஓயாவும்[4] வேறு துணையாறுகளும் உஃகணையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அந்தலோயாக் குளத்தில் தடுக்கப்பட்டு கிழக்கே ஆந்தலோயாவாக நகர்கின்றன. மேலும் பல சிற்றோடைகளும் நவகிரியாறும் கலக்க, இறுதியில் மண்டூருக்கு வடக்கே மட்டக்களப்பு வாவியில் திறக்கிறது மூங்கிலாறு.

## 6. பட்டிப்பளை ஆறு (கல்லோயா / கல்லாறு)

பட்டிப்பளை ஆறு 108 கி. மீ. நீளமான இலங்கையின் முக்கியமான ஆறுகளில் ஒன்று. இன்று கல்லோயா என்றே பெரும்பாலும் அழைக்கப்படுகிறது. தமிழில் கல்லாறு எனலாம்[5]. ஊவா மலைத்தொடரில் மடுல் சீமை மலைச் சரிவுகளில் பாயும் ஓடைகள் இணைந்து




**உரு.05 அம்பலத்தாறு, ஊரக்கையாறு, நாவலாறு, வில்லாறு, கூமுனையாறு என்பவற்றின் படுகைகள்.**

படம்: கூகிள் வரைபடத்திலிருந்து உருவாக்கப்பட்டது

ஊற்றெடுக்கும் கல்லாற்றுக்கு “இப்பான் ஓயா”, திம்பிரி ஓயா ஆகிய இரண்டு முக்கியமான துணை ஆறுகள் உள்ளன.

துணையாறுகளிலிருந்து நீரைப் பெற்றுப் பாய்ந்து வரும் கல்லாறு இலங்கையின் மிகப்பெரிய செயற்கை நீர்த்தேக்கங்களில் ஒன்றான இங்கினியாகல் நீர்த்தேக்கம் அல்லது சேனாநாயக்க சமுத்திரத்தை உண்டாக்கிய படி கிழக்கே நகர்ந்து மலுக்கம்பிட்டிக்கு அருகே நான்கு கிளைகளாகப் பிரிகின்றது (உரு.04). ஒரு கிளை நேரே களியோடை ஆறு என்ற பெயரில் பாய்ந்து ஒலுவில்லில் கடலில் கலக்க, இன்னொரு கிளை செங்கற்படை ஆறு என்ற பெயரில் சற்று வடகிழக்காகப் பாய்ந்து, நிந்தவூர் அட்டப்பள்ளத்தில் கடலில் கலக்கிறது. மூன்றாவது கிளைநதி, பைந்தாறு என்ற பெயரில் சம்மாந்துறைக்கு அருகாகப் பாய்ந்து மட்டக்களப்பு வாவியிலும், காரைதீவுக் கரைச்சையிலும் இருகிளைகளாகப் பிரிந்து மறைகின்றது. பைந்தாற்றின் இவ்விரு கிளைகளுக்கும் இடைப்பட்ட தீவே காரைதீவு.

நான்காவது கிளை மலுக்கம்பிட்டியிலிருந்து சற்று கிழக்கே தீகவாவிக்கு அருகே இன்று பெருமளவு தூர்ந்துபோய் சிறு வாய்க்கால்களாகச் செல்கின்றது. அது, பாலமுனை - முள்ளிக்குளமூடாக ஓடி இரண்டாகப் பிரிகிறது. அதன் ஒருகிளை வன்னிபத்து ஆறு என்ற பெயரில் மீனோடைக்கட்டுக்கு வடக்காகச் சென்று அட்டாளைச்சேனை கோணாவத்தைக் கரைச்சையில் கலக்கின்றது. மறுகிளை அட்டாளைச்சேனைக்கும் அக்கரைப்பற்றுக்கும் மேற்காகச் சென்று தில்லையாறு என்ற பெயரில், பெரிய களப்போடு கலக்கின்றது. அக்கரைப்பற்றின் பழைய பெயர் கருங்கொடித்தீவு. அட்டாளைச்சேனையின் பழைய பெயர் முல்லைத்தீவு. இவை தீவுகளாக அறியப்பட்டதன் காரணம், இவ்விரு தீவுகளையும் சூழ வடக்கே வன்னிபத்தாறும், கிழக்கே கடலும், மேற்கே தில்லையாறும் தெற்கே பெரியகளப்பும் என்றவாறு அவை முற்றாக நீரால் சூழப்பட்டிருந்தது தான்.

கல்லாற்றின் இந்த நான்கு கிளையாறுகளின் கழிமுகங்களிலும் மலைநாட்டின் பெருமளவு வண்டல்மண் அள்ளப்பட்டு வந்திருப்பது தெரியவருகிறது. மட்டக்களப்பு வாவியின் தென்பகுதி வண்டல் படிந்து தூர்ந்து போனமைக்கு, காரைதீவில் கலந்த பைந்தாறும் ஒரு காரணமாக இருக்கவேண்டும். அதே வண்டல் மண் படிவாலேயே அக்கரைப்பற்று நகரின் மேற்கே தில்லையாறு வண்டல் படிந்து வயல்நிலங்களாக மாறியிருக்கிறது.

கல்லாற்றை மறித்து, இங்கினியாகல் மலைத்தொடர்களிடையே அமைந்த குறுகிய கணவாயை இணைத்து 1949 - 1951ஆம் ஆண்டுகளுக்கிடையே அமைக்கப்பட்ட சேனாநாயக்க சமுத்திரம் எனும் நீர்த்தேக்கம் கல்லாற்றின் நீர்வரத்தைப் பெருமளவு குறைத்துவிட்டது. இன்று இங்கினியாகல் நீர்த்தேக்கத்துக்குக் கிழக்கே சிற்றோடைகளாகவே பட்டிப்பளையாறு நகர்கின்றது. அந்த ஆறு தன் கிளைகளில் பெருமளவு நீரை நிரப்பிய ஒருகாலத்தில் தில்லையாறு, பைந்தாறு வழியே ஒரு தொடர்ச்சியான நீர்வலை நிலவியதால், பெரியகளப்பின் தெற்கு முனையிலிருந்து மட்டக்களப்பு வாவியின் வடக்கு முனை வரை நீர்வழிப் போக்குவரத்தை தடையின்றிச் செய்ய முடிந்திருக்கிறது.

(நாம் போன வாரத் தொடரில் பார்த்த ஒல்லாந்தர் காலக் குறிப்பை (Ferguson 1998:173) இந்தப் பின்னணி யில் தான் புரிந்துகொள்ள முடியும்.)

கீழைக்கரையின் நீர்ப்பாசன மற்றும் விவசாய உற்பத்தி யைப் பெருக்குவதற்கு இங்கினியாகல் நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டபோது, அதிலிருந்து இரண்டு கால் வாய்கள் அமைக்கப்பட்டன. இதில் நீர்த்தேக்கத்தின் தெற்காகச் சென்று அம்பாறை இறக்காமக் குளத்தில் முடியும் “வலதுகரைக் கால்வாய்” 32 கி. மீ. நீளமானது. வடக்காக மட்டக்களப்பு நவகிரி நீர்த்தேக்கம் வரை செல்லும் “இடதுகரைக் கால்வாய்”, 52 கி.மீ. நீளமா னது (Arumugam 1969).


கீழைக்கரையின் நடுநிலத்துக்கு பெருமளவு நீரை வழங் கும் கல்லாற்றைச் சூழ பெரும் எண்ணிக்கையிலான தொல்லியல் மையங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தீக வாபி விகாரமும் தீர்க்கவாபி மண்டலம் எனும் நிர்வா கப் பிரிவும் பழைமைவாய்ந்த இறக்காமம் கிராமமும் இவ்வாற்றை அண்டித்தான் உருவாகி நீடித்துள்ளன. கல்லாற்றின் படுகைக்கு அருகேயுள்ள மல்வத்தை, முள் ளிக்குளம் மலை, இறக்காமம், கொன்றைவட்டவான் குளம், அம்பாரக்குளம், என்பவற்றின் அருகே பிராமிக் கல்வெட்டுகளும் ஆயிரமாண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருட்களும் இடிபாடுகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. கீழைக்கரையின் நாகரிகம் பிறந்த மிக முக் கியமான ஆறுகளில் ஒன்று, கல்லாறாகும்.

## 7. அம்பலத்தாறு:

சிங்களப்பெயர் அம்பலம் ஓயா. நீத்தையாறு என்றும் அழைக்கப்படும். உகணையில் ஊற்றெடுக்கும் எக்கல் ஆறும், அம்பலம் ஓயாவும் இணைந்து 1961இல் அமைக் கப்பட்ட அம்பலம் ஓயா நீர்த்தேக்கத்தை நிரப்புகின்றன. அங்கிருந்து கிழக்கே பாயும் அம்பலத்தாறு, அக்கரைப் பற்று பனங்காட்டுக்கு தெற்கே பட்டிமேட்டில் பெரிய களப்போடு கலக்கின்றது. அம்பலத்தாற்றின் நீர்ப்படுகைப் பரப்பு 115 சதுர கி. மீ. இதன் கரையோர மாக பொத்தானை மலை, அலிக்கம்பை முதலான தொல்லியல் இடங்கள் அமைந்துள்ளன.

## 8. ஊரக்கை ஆறு:

தாலிபோட்டாறு என்றும் அழைக்கப்படும். சிங்க ளத்தில் பன்னல் ஓயா என்று பெயர். இதன் நீர்ப்படுகை 184 சதுர கி.மீ. மொனராகல் மலைக்குன்றுகளிடையே ஊற்றெடுக்கும் பன்னலோயா உகணையில் பன்னல்கம நீர்த்தேக்கத்தை உண்டாக்குகிறது. அங்கிருந்து உருவா கும் ஊரக்கை ஆற்றின் நீர்வரத்து சாகாமக் குளத்துக்குப் பாய்ந்து, பின்னர், சாகாமம் ஊரக்கைவெளிக்கருகே பெரிய களப்பில் கலக்கின்றது. ஊரக்கையாற்றின் படு கையில் மொட்டையாகல் மலை, சாகாமம், ஊரக்க வெளி உள்ளிட்ட பல தொல்லியல் மையங்கள் கண்ட றியப்பட்டுள்ளன.




உரு. 06. கீழைக்கரை டிசம்பர் முதல் பெப்ரவரி வரையான வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலத்தில் அதிகபட்ச மழைவீழ்ச்சியைப் பெறுகின்றது.

படம்: வளிமண்டலவியல் திணைக்களம்

## 9. நாவலாறு:

நாவலாற்றின் சிங்களப்பெயர் ஃகெட ஓயா. இதன் பழைய பெயர் சடாவை ஆறு என்பது இடச்சு வரைப டங்களிலிருந்து தெரிகின்றது. 611 சதுர கி. மீ. பரப்பள வுள்ள நீர்ப்படுகை கொண்ட நாவலாறு, மொனராகல் மலைக்குன்றுகளிடையே ஊறி கிழக்கே பாய்ந்து பொத் துவில்லுக்கும் பாணகைக்கும் இடையே இரட்டல் என்ற இடத்தில் இரட்டல் குளத்துக்கு நீரை வழங்கிய படி இரு கிளைகளாகப் பிரிந்து பாணகை சாத்திரிவெ ளியிலும், அறுகங்குடா பசறிச்சேனையிலும் கடலில் கலக்கிறது. நாவலாற்றை அண்டி இலகுகலை, மங்கல மகா விகாரம், நீலகிரி புத்த விகாரம், சாத்திரிவெளி, இரட்டல் உள்ளிட்ட பல தொல்லியல் மையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## 10. வில்லாறு:

வில்லாறு (சிங்களம்: வில ஓய), மொனராகலுக்கு அரு கில் அத்திமலைக் குளத்தில் ஊற்றெடுத்துப் பாய்ந்து பாணகை வாவி என்றழைக்கப்படும் பாணகைக் குளத் துக்கு நீரை வழங்கி கிழக்கே சென்று, பாணகைக் களப்பு மூலம் கடலில் கலக்கும் ஆறு. சுமார் 30 கி.மீ. நீளங் கொண்ட இச்சிற்றாற்றின் கரையிலேயே பிராமிக்கல் வெட்டில் ‘பணவ’ என்றழைக்கப்படும் பாணகை ஊரும், தென்குடும்பிமலை, குணுகொலைக் களப்பு உள் ளிட்ட தொல்லியல் மையங்களும் காணப்படுகின்றன.

> கடலுக்குச் சமாந்தரமாக முழுநீளத்துக்கும் களப்புகளின் தொடர் சங்கிலி காணப்படுவதால், கீழைக்கரை அந்தக்களப்புகளின் இருபுறமும் கிழக்கிலும் மேற்கிலும் இரு தனித்தனி நிலப்பரப்புகளாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இக்களப்புகள் உள்ளூரில் ஆறுகள் என்றே அறியப்படுகின்றன. எனவே கடலுக்கும் ஆற்றுக்கும் இடைப்பட்ட நிலம் "எழுவான்கரை (சூரியன் எழுகின்ற கரை – கிழக்குக்கரை) என்றும் ஆற்றுக்கு அப்பாலுள்ள மற்றைய நிலம், "படுவான்கரை (சூரியன் மறைகின்ற / படுகின்ற கரை – மேற்குக்கரை) என்றும் அழைக்கப்படுகின்றன.

### 11. கூமுனையாறு:

*கூமுனையாறு கீழைக்கரையின் தென்னெல்லையாகப் பாயும் சுமார் 116 கி.மீ. நீளமுள்ள ஆறாகும். ஊவா மலைத்தொடரில் மடுல்சீமை அருகே ஊற்றெடுக்கும் கூமுனையாறு, கிராவையாறு, சுளுந்தையாறு (ஃகுலாந்த ஓய) ஆகிய கிளைநதிகளிடமிருந்து நீரைப்பெற்று ஓடி, கூமுனையில் அல்லது பூமுனையில் கடலில் கலக்கிறது. இதன் சிங்களப்பெயர், கும்புக்கன் ஓயா. கும்புக் என்றால் சிங்களத்தில மருதமரம். இதன் கழிமுகத்துக்கு அருகே பூமுனை அல்லது கூமுனை எனும் கிராமம் அமைந்திருந்ததால், தமிழில் இது கூமுனையாறு என்று அழைக்கப்பட்டது.*

*கீழைக்கரையைப் பொறுத்தவரை, வேறெந்த இடத்தையும் விட அதிகளவு எண்ணிக்கையிலான தொல்லியல் மையங்கள் கூமுனையாற்றின் படுகையை அண்டியே கண்டறியப்பட்டுள்ளன. கூமுனையிலிருந்து உகந்தமலை வரை இந்தத் தொல்லியல் மையங்கள் பரந்து விளங்குகின்றன. போவத்தகல், கொத்ததாமுகல், பம்பரக`ச்தலாவை ஆகியவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை.*

*ஆக, கீழைக்கரையின் வரலாற்றைக் கட்டியமைத்ததில், அதன் புவிச்சரிதவியலும், குறிப்பாக கரைச்சை - ஆறுகள் நிறைந்த அதன் தரைத்தோற்ற அமைப்பும் முக்கியமான வகிபாகத்தை அமைத்தது என்பது உங்களுக்கு இப்போது புரிந்திருக்கும். இந்த நீர்நிலைகளை அண்டித்தான் பல தொல்குடியிருப்புகள் அமைந்திருக்கின்றன, வணிக - போக்குவரத்து பாதைகள் நீடித்தி ருக்கின்றன என்பதை ஓரளவு அனுமானிக்கக்கூடியதாக இருக்கும். தரைத்தோற்ற அமைப்புக்கு மேலதிகமாக இந்நிலத்தின் வரலாற்றைக் கட்டியமைத்த இன்னொரு காரணி, காலநிலை.*

*கீழைக்கரையின் நடுப்பகுதி (ஏறாவூர் முதல் திருக்கோவில் வரை), டிசம்பர் மாதம் முதல் பெப்ரவரி வரையான காலத்தில் வடகீழ் பருவக்காற்று மூலம் அதிகூடிய மழைவீழ்ச்சியைப் பெறுகிறது. இக்காலத்தில் பெறப்படும் மழைவீழ்ச்சியானது, 500 தொடக்கம் 1000 மி.மீ. ஆகும் (உரு.06). ஒக்டோபர் முதல் நவம்பர் வரையான இரண்டாம் பருவப்பெயர்ச்சி இடைக்காலத்தில் மட்டுநகருக்கு வடக்கேயுள்ள அரைப்பகுதி 500 தொடக்கம் 750 மி.மீ. மழைவீழ்ச்சியையும் தெற்கு அரைப்பகுதி 300 தொடக்கம் 500 மி.மீ. வரையான மழைவீழ்ச்சியையும் பெறுகின்றது. எனவே ஒக்டோபர் முதல் பெப்ரவரி (தமிழ் ஐப்பசி முதல் மாசி) வரையான ஐந்து மாத காலம், கீழைக்கரையில் மிதமான காலநிலை நிலவுகிறது (Department of Meteorology, 2022).*

*ஏனைய காலங்களில் வெப்பமான காலநிலையே நிலவும் போதும், இங்கு ஏராளமான எண்ணிக்கையிலுள்ள நீர்நிலைகள், குளங்கள், சிற்றாறுகள் குடிநீருக்கும் விவசாய நீர்ப்பாசனத்துக்கும் வேண்டிய நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானவையாக இருக்கின்றன. இப்பகுதியின் வெப்பநிலை வீச்சு 24 - 37 பாகை செல்சியசுக்குள்ளேயே காணப்படுவதும், இந்த மிதமான சுவாத்திய நிலைக்கும் காரணமாக அமைந்துவிடுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல வாழிடங்களை இங்கு கண்டுகொண்டு மனிதகுலம் பெருகத் தொடங்கியமைக்கு பிரதான காரணங்களாக அமைந்தவை இந்தச் சூழற் காரணிகளே என்றால் அது மிகையாகாது.*

தொடரும்.

தொடரும்.

கட்டுரை

சிவபாத சுந்தரலிங்கம்
கிருபானந்தகுமரன்



# பால்: உணவு முதல் வணிகம் வரை

பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்குண்டுள்ள சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்.

*இலங்கையில் இறக்குமதியாகும் பால் மாவின் விலை அதிகரித்துள்ளது. சில மாதங்களுக்கு முதல் 380 /= ரூபாவாக இருந்த 400 கிராம் பால்மா இன்று 1160/= வரை அதிகரித்துள்ளது. [ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகரிப்பு]. இது சாதாரண மக்கள் நுகரமுடியாத அதிகரிப்பாகும். அத்துடன் வழமையாக கிராமத்தின் பெட்டிக் கடைகளிலும் இலகுவாகக் கிடைக்கக் கூடிய பால் மாவை நகரங்களின் பிரதான பல்பொருள் அங்காடிகளிலும் பெறமுடியாது மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். கடந்த பல மாதங்களாகவே நாடு முழுவதும் பால் மாவுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. உள்நாட்டில் உள்ள பசுக்களில் இருந்து பெறப்படும் திரவப் பால் கூட கிடைக்க முடியாத நிலையே பல இடங்களில் நிலவுகிறது. பல இடங்களில் அதிக விலையில், அதாவது 170/= ரூபா வரையில் திரவப் பால் விற்கப்படுவதையும், விற்பனை நிலையங்களுக்கு வரும் பால் சில மணி நேரத்தில் முடிவடைவதையும் காண முடிகிறது. குறைந்த பட்சம் இரண்டு வேளை பாலையோ, பால்தேநீரை அருந்திய பல இலங்கை மக்கள் அதனை ஒரு வேளையாக குறைத்தோ அல்லது முற்றுமுழுதாக அருந்துவதை நிறுத்தியோ உள்ளனர். ஏனைய புரதம் போன்ற முக்கியமான ஊட்டச்சத்துகளை வழங்கும் உணவுகளின் தட்டுபாடு நிலவும் இந்த காலத்தில் பால் நுகர்வின் வீழ்ச்சி ஊட்டச்சத்*


துக்களின் குறைபாட்டுக்கு வழி ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் இதனால் கணிசமாகப் பாதிக்கப்படப் போகின்றனர்.

மனிதனின் மிக முக்கியமான உணவுப் பொருளாகக் காணப்படும் பால் தொடர்பான, பல விடயங்களை இந்தக் கட்டுரைத் தொடர் ஆராய்கிறது. பாலின் அடிப்படைகள், உலக பாலுற்பத்தியின் போக்குகள், அதன் நுண் அரசியல், இலங்கையின் பாலுற்பத்தித் துறையின் கூறுகள் மற்றும் மக்களின் பால் நுகர்வு தொடர்பான விடயங்களை இந்த தொடரில் உள்ளடக்கி யுள்ளேன். கட்டுரையாளனாகிய நான் கால் நடைவைத்தியர் என்பதால் என்னுடைய அனுபவத்தையும் துறை சார்ந்த அறிவையும் பயன்படுத்தியதோடு இலங்கை மற்றும் தமிழகத்திலுள்ள கால்நடை உற்பத்தித் துறையின் அதிகாரிகளினதும் பல்கலைக்கழக பேராசிரியர்களினதும், கால்நடை பண்ணையாளர்களின் கருத்துகளையும் உள்ளடக்கியுள்ளேன். இங்கு பால் என நான் குறிப்பி டுவது மாடு, எருமை, ஆடு போன்ற விலங்குகளில் இருந்து மனிதன் பயன்படுத்தும் பாலாகும்.

## பாலும் மனிதனும்


இயற்கையில் மனிதன் மற்றும் பல விலங்குகள் தமது இளம் பருவங்களுக்கு ஊட்டுவதற்காக, பெண் விலங்குகளின் முலைச் சுரப்பியில் இருந்து சுரக்கப்படும் சுரப்பே பால் எனப்படுகிறது. இந்த வகை விலங்குகள் முலையூட்டிகள்/பாலூட்டிகள் [mammals] என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஏனைய விலங்கு வகைகளை போலல்லாது மனிதன் பசு, எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, ஒட்டகம், யாக் போன்ற பல விலங்குகளின் பாலை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து நுகர்கின்றான். இந்த விலங்குகள் புற்களை பாலாக மாற்றக் கூடிய உணவுக் கால்வாய் தொகுதியை உடையவை. பால் பலவித ஊட்டச்சத்துகளை கொண்டமைந்த ஒரு நிறையுணவாகும். இது உடலின் வினைத்திறனான செயற்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுவூட்டவும் தேவையான விற்றமின்கள், புரதம், கொழுப்பு மற்றும் கல்சியம் போன்ற கனியுப்புகளையும் சிறப்பான விகிதத்தில் கொண்டமைந்துள்ளது. இறைச்சி, முட்டை போன்ற ஏனைய விலங்குணவுகளைப் போலன்றி சமய, சமூக வேறுபாடுகளின்றி சகலராலும் நுகரப்படும் பால், மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை சகல வாழ்க்கைப் பருவத்திலும் பயன்படும் ஒரு அற்புத உணவாக விளங்குகிறது. பாலைப் பொறுத்த வரை நேரடியாக திரவப் பாலாகவும், உருமாற்றம் செய்யப்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களாகவும் மனிதனால் பயன்படுத்தப்படுகிறது. பால் ஒரு உயிர்த் திரவம் என்றபடியால் கறந்த பாலை நீண்ட நேரத்துக்கு வைத்திருக்க முடியாது. நேரம் செல்லச் செல்ல நோய்க் கிருமிகளின் அளவு அதில் அதிகரிக்கும் என்பதால் நீண்ட காலம் பாலை வைத்திருக்க பல நுட்பமான முறைகளை கையாள வேண்டும்.




## பாற்பொருட்களின் உருவாக்கம் மற்றும் வியாபாரம்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கட்டாக்காலிகளாக காடுகளில் திரிந்த விலங்குகளை பழக்கப்படுத்திய மனிதன் அவற்றிலிருந்து பாலையும், பாலிலிருந்து தயிர், வெண்ணெய், நெய் போன்ற பல உணவுகளையும் உருவாக்கி உண்ணத் தொடங்கியிருந்தான். தொழில்நுட்பம் மேம்படத் தொடங்க குறிப்பாக குளிர்ப்பதன வசதிகள் உருவாக, நீண்ட காலம் வைத்திருக்க தக்க பாற் பொருட்கள் உருவாக்கப்பட்டன. பால் அதிகமாகக் கிடைக்கும் பருவத்தில் பால் பவுடர் போன்ற பல பொருட்கள் அதிகளவு உற்பத்தி செய்யப்பட்டு பால் கிடைக்காத பருவத்தில் பயன்படுத்தப்பட்டன. சர்வதேச போக்குவரத்து வசதிகள் மேம்பட அவை உலகில் பல நாடுகளுக்கும் விற்பனை செய்யப்பட்டன. முன்பு அருகருகே இருந்த வீடுகளுக்கு மட்டும் மிதமிஞ்சிய பால் விற்பனை செய்யப்பட்ட நிலை மாறி, உலகில் ஒரு மூலையில் உற்பத்தியாகும் பால் பொருட்கள் மில்லியன் கணக்கில் இன்னொரு மூலைக்கு விற்பனையாகும் ஒரு மிகப் பெரிய வணிகமாக பால் வணிகம் மாறி




யுள்ளது. இன்னும் விளக்கமாகச் சொன்னால் ஆரம்ப காலத்தில் தமது வீடுகளில் வளர்க்கப்படும் ஓரிரண்டு மாடுகளை விவசாயத்தில் பயன்படுத்தி, வைக்கோல் போன்ற விவசாயக் கழிவுகளையும், அங்கு வளரும் புற்களையும் மனிதன் பயன்படுத்தும் உணவுக் கழிவுகளையும் உணவாக வழங்கி அவற்றின் மூலம் கிடைக்கும் பாலை நுகரும் காலம் மாறி, மில்லியன் கணக்கான பணத்தைச் செலவிட்டு அதிக பால் தரக்கூடிய கால்நடை இனங்களை உருவாக்கி, சகல வசதிகளும் கொண்ட பிரமாண்டமான தொழிற்சாலைப் பண்ணைகளை அமைத்து, பல ஆயிரம் ஏக்கரில் செய்யப்படும் தீவனப் பயிர்களையும், பெருமளவு வர்த்தக விலங்குணவுகளையும் உணவாக வழங்கி, செய்யப்படும் மிகப் பெரும் வணிகமாகும். பல ஆயிரக் கணக்கான நேரடி, மறைமுகத் தொழில்களை தனிநபர்களுக்கும், நிறுவனங்களுக்கும், நாடுகளுக்கும் ஏற்படுத்தியுள்ள பெறுமதியான தொழிலாகவும் இது மாறியுள்ளது. பல நாடுகள் இந்தக் கால்நடைகள் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கும் பால் வருமானத்தை நம்பியே இருக்கின்றன.

பால் நுகர்வின் அவசியம் மற்றும் ஊட்டச் சத்து தொடர்பான விடயங்களை அரச, தனியார் சுகாதார அமைப்புக்களும் பால் வணிக நிறுவ னங்களும் மக்களுக்கு தொடர்ச்சியாக நேரடியாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் தெளிவுபடுத்துவதன் காரணமாக ஆரம்ப காலத்தில் உலக மக்கள் எல்லோராலும் நுகரப்படாமல் இருந்த பால் இன்று அதிகளவாகப் பயன்படுத்தப்படுகிறது. தொடர்ச்சியாக ஏற்படும் சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக தேவைப்படும் பாலும் அதிகரித்துள்ளது. அத்துடன் மிகச் சிறந்த பால் உற்பத்தி, விநியோக, விற்பனைக் கட்டமைப்புகள் உலகெங்கிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் மக்கள் இலகுவாக பால் பொருட்களை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை உள்ளது.

## பால் நுகர்வின் பயன்பாடுகள்

பாலில் சதவீதம் 87 % வரை தண்ணீர் உள்ளது. மிகுதியில் புரதம், *omega3* போன்ற கொழுப்பமிலங்கள், கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் A, D, B, B12, பொட்டாசியம், செலேனியம் என பலதரப்பட்ட ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. புரதம் உடல் வளர்ச்சிக்கும், நொதியங்களின் உருவாக்கத்துக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தவும், தேய்வடைந்த கலங்களை திருத்தவும் பயன்படுகிறது. பாலிலுள்ள *casein* மற்றும் *whey* புரதங்கள் முழுமையான புரதங்களாகும் [*complete proteins*] அதாவது அவை எல்லாவிதமான அமினோ அமிலங்களையும் கொண்டமைந்தவை.
பாலிலுள்ள விற்றமின் D, கல்சியம், பொஸ்பரஸ் என்பன எலும்பு வளர்ச்சிக்கும் தசைத் தொழிற்பாட்டுக்கும் அவசியமானவை. வயதானவர்களில் ஏற்படும் *osteoporosis* போன்ற நோய்களை தடுக்க குணமாக்க அதற்குரிய சரியான விகிதத்தில் கல்சியம், பொஸ்பரஸ் மற்றும் விற்றமின் D நிறைந்த பால் கலவைகள் சந்தையிலுள்ளன. மேலும் குழந்தைகளுக்குரிய பால், பால் சேர்வைகள், மாற்றுப் பெறுமதிசேர் பால் பொருட்கள் என பல வகைவகையாக, வயதுப் பிரிவுக்கு ஏற்ப சந்தையில் கிடைக்கின்றன. உலகிலுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடுகளை தீர்ப்பதில் இந்தப் பால் பொருட்கள் முக்கிய இடத்தை பிடிக்கின்றன என்றால் அது மிகையாகாது. பல்வேறு நோய்களையுடையவர்களுக்கு பிரத்தியேகமாக பயன்படக்கூடிய கொழுப்பு நீக்கிய, கொழுப்பு குறைத்த பால் மா [*skimmed milk*/ *nonfat milk*] வகைகளும் உள்ளன. உடல் வலுவூட்டும், உடல் வளர்ச்சி குறைந்தவர்களுக்குரிய அதிக ஊட்டச் சத்துள்ள பால் வகையும் [ *whey protein powder*] சந்தையில் உள்ளது. இறைச்சி, மீன் போன்ற ஏனைய விலங்கு உணவுகளை நுகராத மக்களுக்கு பால் மற்றும் பால் பொருட்கள் தான் சரியான ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன. இந்தியாவில் அதிகமாக உண்ணப்படும் விலங்கு சார் உணவு பால் தான்.

## எதிர்ப்பு வாதங்களும் எதிர்மறை விளைவுகளும்

எனினும் தரமற்ற பால் மற்றும் பால் பொருட்களின் நுகர்வு தொடர்பாக பலதரப்பட்ட வைத்திய நிபுணர்களின் எதிர்மறையான எச்சரிக்கையும் இல்லாமலில்லை. விலங்குகளின் பால் அவற்றுக்கே பொருத்தம் மனிதனுக்கு சரிவராது என்ற வாதமும் முன் வைக்கப்படுகிறது. எனினும் பல ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் விலங்குகளின் பாலை அருந்துகிறான் என்பது குறிப்பிடத்தக்கது. கெட்டுப்போன தரமற்ற பால் பல நோய்களுக்கு காரணமாகிறது. வியாபார ரீதியாக அதிக இலாபத்தை பெற, பாற் பொருட்களில் சேர்க்கப்படும் பதார்த்தங்கள் சிலவும் மனித சுகாதாரத்தை பாதிக்க கூடியன என்பதை மறுக்கவும் முடியாது. [சீனாவில் ஏற்பட்ட melamine சம்பவம் இதற்கு நல்ல உதாரணம்] மனிதர்களில் கணிசமான அளவினருக்கு lactose intolerance எனும் பால் ஒவ்வாமை நிலையும் ஏற்படுகிறது. அதாவது பாலிலுள்ள lactose சமிபாடடைய முடியாத நிலையாகும்.

அவர்கள் பாலை அருந்த முடியாது என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். பாலைப் பொறுத்த வரையில் நான் முன்பு கூறியது போல விலங்குகளின் இளம் பருவங்களுக்கு உணவூட்டவே தேவைப்படுகிறது. ஒரு குறித்த வயதின் பின் அவை வேறு உணவுக்கு மாறி விடுகின்றன. அவற்றுக்குத் தேவையான ஊட்டச்சத்து அந்த பாலில் குறைவது மட்டுமின்றி ஒரு குறித்த வயதின் பின் பாலைச் சமிபாடு அடையச் செய்யும் லக்டேஸ் போன்ற நொதியங்களின் அளவும் குறைவடைந்தும் விடும். மனிதனுக்கும் இதே நிலைமைதான் ஆரம்ப காலத்தில் இருந்தது. எனினும் தொடர்ச்சியாக பாலை குறிப்பாக விலங்குகளின் பாலை அருந்த அருந்த, மனித மரபணுவில் லக்டோஸ் எதிர்ப்பு நிலை மாற்றமடையத் தொடங்கி, இன்று மனிதரில் கணிசமான தரப்பினருக்கு பாலை அருந்தக் கூடிய நிலை உள்ளது.

எனினும் குறித்தளவு சீனர்கள் போன்ற மக்கள் கூட்டங்களில் இன்றும் இந்த எதிர்ப்பு நிலையை அவதானிக்க முடிகிறது. இந்த உலகிலுள்ள உயிரினங்களில் மனிதர்கள் மட்டும் தான் வாழ்நாள் முழுதும் ஏதோ ஒரு வகையில் பாலை அருந்துகிறார்கள்.

## உலக பால் நுகர்வு

உலகத்தில் வளர்ந்த நாடுகளில் தனி நபர் ஒருவர் வருடாந்தம் 200 லீட்டருக்கு அதிகமாக பாலை அருந்துவதோடு, வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளோர் 40 லீட்டருக்கும் குறைவாகவே பாலை அருந்துகின்றனர். சராசரி மனிதர் அருந்தக் கூடிய அளவாக நாற்பது லீட்டரை சுகாதார அமைப்புகள் நிர்ணயித்துள்ளன. இலங்கையில் பல வருடங்களாக நாற்பதுக்கும் குறைவாகவே சராசரி பால் நுகர்வு காணப்பட்ட போதும் நீண்ட முயற்சியின் பலனாக தற்போது 58 லீட்டர் வரை அதிகரித்துள்ளது. [தகவல் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வெளியீடு2019 ]. ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளில் உள்ள மக்கள் ஏனைய நாடுகளை விட அதிக பாலை நுகர்கின்றனர். அண்மைக்காலமாக ஆசிய நாடுகள் ஆபிரிக்க நாடுகளிலும் பாலின் நுகர்வு அதிகரித்துள்

**உலகத்தில் வளர்ந்த நாடுகளில் தனி நபர் ஒருவர் வருடாந்தம் 200 லீட்டருக்கு அதிகமாக பாலை அருந்து வதோடு, வளர்ந்து வரும் நாடுகளில் உள்ளோர் 40 லீட்டருக்கும் குறைவாகவே பாலை அருந்துகின்றனர்.**

ளதை காணமுடிகிறது. "பொதுவாக எமது கீழைத்தேய நாடுகளிலுள்ளவர்கள் பாலைக் குடி கின்றனர். மேலைத்தேய நாடுகளில் உள்ளவர்கள் பாலை உண்கின்றனர்." அதுதான் வித்தியாசம்.

இன்றைய உலக வருடாந்த பால் உற்பத்தி 906 மில்லியன் தொன் லீட்டர் ஆகும். இந்தியா தான் உலகின் முதன்மை உற்பத்தியாளர். உலக பாலுற்பத்தியில் 17 சத வீதத்தை இந்தியா கொண்டுள்ளது. [200 மில்லியன் தொன் லீட்டர்]. 1970 களில் இருந்து இந்திய அரசு Dr. வர்கீஸ் குரியன் அவர்களின் தலைமையில் தொடங்கியவெண்மைப்புரட்சியின்[whiterevolution operation flood] அடிப்படையில் இந்த முதல் நிலையை அடைந்துள்ளது. [இந்தியாவின் பால் தொடர்பான வெற்றிக் கதையை தனி ஒரு அத்தியாயத்தில் காண முடியும்] இந்தியாவைத் தொடர்ந்து அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், ஐரோப்பிய நாடுகள் உள்ளன. இந்த நாடுகளும் தமது உற்பத்தியின் பெரும்பாலானவற்றை உள்நாட்டு நுகர்வுக்கே பயன்படுத்துகின்றன. அவுஸ்திரே

லியா, நியுசிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகள் மிகை பாலுற்பத்தி நாடுகள். உலக பால் ஏற்றுமதி வர்த்தகத்தை இவை செய்கின்றன. திரவப் பாலாக வும். பால் பவுடராகவும் ஏனைய மதிப்பு கூடிய பொருட்களாகவும் ஏற்றுமதி செய்கின்றன. உலக மொத்த பால் உற்பத்தியில் ஏற்று மதிப் பால் 5 - 8 வீதமாக உள் ளது. நெஸ்ட்லே, பொண்டீரோ போன்ற பல தனியார், கூட்டுறவு அமைப்புகள் ஊடாக பால் விற் பனையாகிறது. சீனாதான் உல கின் பாலுற்பத்திகளை அதிகம் [20%] இறக்குமதி செய்கிறது. அதனைத் தொடர்ந்து ஜெர்மனி, ரஷ்யா, நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் சில அரபு நாடுகள், ஆபிரிக்க நாடுகள் பால் பொருட்களை இறக்குமதி செய் கின்றன. இந்த ஏற்றுமதி இறக்கு மதிகள் ஒரு வித சர்வதேச விலைக்கோரல் முறைகளின் ஊடாக இடம்பெறுகின்றன. மேய்ச்சலுக்குரிய இடப் பற்றாக்குறை கால்நடைகளுக்கு தேவையான தீவனங்க ளின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம், பெற்றோலி யப் பொருட்களின் விலையேற்றம் காரணமான போக் குவரத்துக் கட்டண உயர்வு, காலநிலை மாற்றம் எனப் பல காரணிகள் சர்வதேச பால் வளத் துறையைப் பாதிக்கின்றன. ஒவ்வொரு நாடுகளுக்கும் தனித்தனி அரசியல், சமூக, புவியியல் காரணிகள் உள்ளன. அண் மைய கொவிட் பெருந்தொற்றும் பாலுற்பத்தி, பால் வணிகம் மற்றும் பால் நுகர்வுச் செயற்பாட்டை தலை கீழாக மாற்றியுள்ளது.



**சீனர்களின் பால் நுகர்வு**

**Image source - www.iso.org**

**பாலில் சதவீதம் 87 % வரை தண்ணீர் உள்ளது. மிகுதியில் புரதம், omega3 போன்ற கொழுப்பமிலங் கள், கல்சியம், பொஸ்பரஸ், விற்றமின் A, D, B, B12, பொட்டாசியம், செலேனியம் என பலதரபட்ட ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன.**

**புரதம் உடல் வளர்ச்சிக்கும், நொதியங்களின் உருவாக்கத்துக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தவும், தேய்வடைந்த கலங்களை திருத்தவும் பயன்படுகிறது.**

**பாலிலுள்ள casein மற்றும் whey புரதங்கள் முழுமையான புரதங்களாகும் [complete pro teins] அதாவது அவைஎல்லாவிதமான அமினோ அமிலங்களையும் கொண்டமைந்தவை.**

இலங்கையானது நியுசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பாலை, பால் பவுடராக இறக்கு மதி செய்கிறது. ஆரம்ப காலங்களில் ஐரோப்பா, அமெ ரிக்க நாடுகளில் இருந்தும் பால் பொருட்கள் இறக்கு மதி செய்யப்பட்டன. இலங்கையில் பால் தேவையில் 40 வீதம் உள்நாட்டு பாலில் இருந்தும் 60 வீதம் வெளி நாடுகளில் இருந்தும் இறக்குமதியாகும் பால் பொருட் களில் இருந்து நிறைவு செய்யப்படுகிறது.

## அதிகரித்துள்ள சீனர்களின் பால் நுகர்வு

உலக சந்தையில் அண்மைக் காலமாக சீனர்களின் அதி கரித்த பால் பொருட்களின் நுகர்வு காரணமாக அதிக ளவு அந்த நாடு இறக்குமதியை செய்கிறது. [சீனர்க ளில் கணிசமானவர்களுக்கு லாக்டோஸ் எதிர்ப்பு நிலை உள்ளது] இது ஏனைய நாடுகளுக்கு செல்லும் பாலின் விலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சீனர்கள் தமது பால் உற்பத்தி துறையை மிக விரைவாக மேம்படுத்தி வருகின்றனர். இலங்கையும் பால் இறக்கு மதி மூலம் நாட்டுக்கு வெளியே செல்லும் பணத்தை தடுக்க பல முயற்சிகளை எடுத்து வருவதை காண முடி கிறது. குறித்த காலத்தில் பாலுற்பத்தியில் தன்னிறைவு காண, திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை யின் பால் நுகர்வு தொடர்பான விடயங்களை தொடர்ந்து வரும் வாரங்களில் ஒவ்வொன்றாக விரிவாக ஆராய் வோம்.

தொடரும்.



கட்டுரை

● தியாகராஜா சுதர்மன்

# அரிசிசார் யாழ்ப்பாண பாரம்பரிய உணவுகள்



மோதகம், பிட்டு, உறட்டி, கொழுக்கட்டை
Image source - www.sigiriyajungles.com

மனிதனின் ஆரோக்கிய வாழ்வுக்கான அடிப்படையே உணவுப்பழக்கவழக்கம் தான். நோய்கள் மலிந்துவிட்ட இந்தக்காலத்தில், ஈழத்தமிழர்களின் குறிப்பாக யாழ்ப்பா ணத்தில் நிலவிய பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங் களை மீட்டெடுப்பதன் மூலம், மீண்டும் ஆரோக்கியமான சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை சித்தமருத்துவக் கண்ணோட்டத்தில் இந்தக்கட்டுரைத் தொடர் முன்வைக்கின்றது.

சோறு, நெற்பொரி, அவல், கஞ்சிவகைகள் போன்று அரிசி மாவில் இருந்து பல்வேறு வகையான அரிசி சார்ந்த உணவுகள் நமது பாரம்பரியத்தில் காணப்படுகின்றன.

## அரிசிக்கூழ், களி, பாயசம்

“அரிசிக்கூழ் பித்தத் தோடே யரியநீர்க் கோர்வை யாற்றும்
தெரியுமிக் களிம்பு வாயு தீராத மந்த மின்னும்
தரும்வயிற் றிரைவு மென்று சாற்றினார் பாய சந்தான்
திரிபயித் தியமே பித்தஞ் செறிதாக மருவா வன்றே”
– பக். 62, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

### அரிசிக்கூழ்

அரிசிக்கூழானது பித்த மாறுபாட்டால் ஏற்படும் நோய்நி லைகளையும், தலையில் நீர் கோர்த்து ஏற்படும் உபத் திரவங்களையும் மாற்றும். அரிசிக்கூழ் என்பது சமைத்த சாதத்தினை எடுத்து அதனை நன்கு மசித்து மீண்டும் நீர் விட்டு (1 டம்ளர் சாதத்துக்கு 2 டம்ளர் நீர்விட்டு) அடுப்பில் ஏற்றி, சிறிது உப்பு சேர்த்து, இறக்கி தேவை யான அளவு மோர் கலந்து கொள்வதாகும்.

### களி

உடலுக்கு பலத்தை தரினும் சோம்பலையும், வயிற் றில் இரைச்சலையும் தரும்.

### அரிசிப் பாயாசம்

பித்தம் அதிகரித்து பைத்தியம் ஏற்படாதவாறு நம்மை வைத்திருக்கும். அரிசிப்பாயாசம் - புறத்திணை நன் னாகரானால் பாடப்பெற்ற 381 ஆவது புறநானூற்றுப் பாடலில் 14 வரிகளில் பாயாசம் குடித்தால் உண்ட களைப்புத் தெரியாது என்றும் விரைவில் சீரண மாகிவிடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க காலத்தில் சவ்வரிசி, சேமியா இருந்திருக்க வில்லை. அத்துடன் யாழ்ப்பாண நூலாகிய அமிர்த சாக ரம் பதார்த்த சூடாமணியில் , அரிசி உணவிலேயே மேற்படி பாயாசம் குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஊனும் ஊனும் முனையின் இனிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவு கலந்து மெல்லிது பருகி
விருந்து உறுத்து ஆற்ற இருந்தென மாகச்”
– பக்.91, சுவையான சங்க காலச் சமையல்

### அரிசிப்பாயாசம் உள்ளீடுகளும் செய்முறையும்

| | |
|---|---|
| பச்சையரிசி | – 100 கிராம் |
| சீனி | – 200கிராம் (தேவையான அளவு) |
| தேங்காய்ப்பால் | – 200 மில்லிலீற்றர் |
| நெய் | – சிறிதளவு |
| முந்திரிப்பருப்பு | – தேவையான அளவு |
| ஏலக்காய் | – சிறிதளவு. |

உடைத்த பச்சையரிசியை (குறுணல்) நீர்விட்டு நன்றாக அவிந்தபின், சீனி சேர்த்து நன்றாகக் கரைத்து, ஏலக்காய்த் தூளைப் போட்டு கலக்கி, முந்திரிப்பருப்பு, தேங்காய்ப்பால் சேர்த்து கொதித்தவுடன் இறக்கிக் கொள்ள வேண்டும்.

**பாலுடை அடிசில் / பாற்சோறு**

**"துவரப் புலர்ந்து தூமலர் கஞலித்**
**தகரம் நாறுந் தண்ணறுங் கதுப்பின்**
**புதுமண மகடூ அயினிய கடிநகர்ப்**
**பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ"**

**– பக்.37, சுவையான சங்க கால சமையல்**

*நக்கீரரால் பாடப்பெற்ற 141 ஆவது அகநானூற்றுப் பாடலில் 1114 வது வரிகளில் திருமணமான மணப்பெண் புகுந்தவீட்டில், உலைநீருக்குப் பதிலாக பாலினை உலை வைத்து, சோற்றினைச் சமைப்பதாக கூறப்பட்டுள்ளது. நிறை உணவான பால் மற்றும் நெய், தேவையான சக்தியைத் தரக்கூடிய மாப்பொருள் கொண்ட அரிசி என்பன முழுமையான ஆகாரமாக மாறி, சந்தான விருத்தியை பெருக்குவதற்கு அடிப்படையாக அமைகின்றது.*

*சந்தான விருத்திக்குரிய ஹோர்மோன்களின் தொகுப்புக்கு கொலஸ்ரோல் அவசியமாகின்றது. இதன் ஊட்டச்சத்து பெறுமதிக்கமைவாக நவராத்திரியில் ஒரு நாள் 'அடிசிலை' பிரசாதமாகப் படைக்கப்படுகின்றது. எனினும் அதிகமான பால், நெய் என்பவற்றில் உள்ள விலங்குக் கொழுப்பான கொலஸ்ரோலை தொடர்ச்சியாக - அதிகமாகப் பயன்படுத்துவது - இதயத்துக்கு உகந்தது அல்ல எனக் கீழ்வரும் திருமூலரது திருமந்திரப்பாடல் கூறுகின்றது.*

**"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே"**
**– பாடல் 148, முதல் தந்திரம், யாக்கை நிலையாமை.**

*புதிதாகத் திருமணம் செய்தவர் தொடர்ந்து அடிசில் செய்து உண்டார்கள், கணவன் மனைவி இன்புற்றிருந்தார்கள். அவ்வாறு இருக்கும்போது இடப்பக்கம் வலிக்கிறது என்ற கணவன் இறந்து போகின்றான். இங்கு உடம்பு நிலையில்லாதது என்பது பற்றி தெளிவூட்டினாலும் உணவின் தன்மையையும், அதில் உள்ள விலங்குக்கொழுப்பு அதிகமாகும்போது எவ்வாறு இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு மாரடைப்பு ஏற்படுகின்றது என்பது பற்றியும், அடிசில் உணவினைக் கையாண்டு, கிட்டத்தட்ட 3000 ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர் கூறியுள்ளார்.*

### பாலுடை அடிசில் உள்ளடக்கங்கள்

அரிசி – 200 கிராம்
பால் – 500 மி.லீ
உப்பு – தேவையான அளவு
நெய் – 2 மேசைக்கரண்டி
கட்டுச்சோறு / புளிச்சாதம்

**"குழைந்தசோ றுண்கிற் சேடங் கொண்டிடுஞ் சோம்புண்டாகும்**
**கழிந்திடும் பிரமே கங்கள் கட்டுச்சோ றுண்கின் மேகம்**
**கிளர்ந்தகண் டத்து ரோகங் கெட்டிடச் செய்யுங் குன்மம்**
**எழுந்திடும் பீனி சங்க டாமுமென் றியம்பி னாரே"**

**– பக். 62, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி**

*புளிச்சாதம் உண்டால் மேக ரோகங்கள் இல்லாது போகும். ஆனால் தொடர்ச்சியாக உட்கொள்ளும் போது வயிற்றுப்புண், பீனிசம் என்பவற்றை உருவாக்கும். மேக ரோகம் என்பது அனுசேபத் தொழிற்பாடுகளில் ஏற்படும் மாற்றங்களால் அல்லது தொற்றுக்களால் சிறுநீரில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியது.*

*குடவாயிற் கீரத்தனார் எனும் புலவரால் பாடப்பெற்ற 79 ஆவது அகநானூற்று பாடலில் 14 வரிகள் கட்டுச்சோறு பற்றி குறிப்பிடுகின்றது.*

**"தோட்பதன் அமைத்த கருங்கை ஆடவர்**
**கனைபொறி பிறப்ப நூறி, வினைப் படர்ந்து**
**கல்லுறுத்து இயற்றிய வல்உயர்ப் படுவில்**
**பார்உடை மருங்கின் ஊறல் மண்டிய....."**

**– பக். 38, சுவையான சங்ககால சமையல்.**

*வேகவைத்த சோற்றினை நீண்டதூரப் பயணத்தின் போது பழுதாகாமல் இருக்க தமிழர்கள் உப்பு, புளி ஆகியவற்றைப் பயன்படுத்திக்கொண்டனர். தூர இடங்களுக்கு கட்டிக் கொண்டு செல்வதால் கட்டுச்சோறு என்றும் புளியைப் பயன்படுத்துவதால் புளிச்சாதம் என்றும் இது அழைக்கப்படுகின்றது.*
*நீண்டதூரம் செல்லும் ஆடவர் தோளில் கட்டுச்சோறினை சுமந்து சென்றதாக பாடல் கூறுகின்றது என நூலாசிரியர் கூறுகின்றார்.*



புளிசாதம்

Image source - www.youtube.com/Annai Samayal

**புளிச்சாதம் – தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| வடித்தசாதம் | – 2 குவளை (200மி.லீ) |
| புளி | – ஒரு எலுமிச்சம் காய் அளவு |
| மிளகு | – 1 மேசைக்கரண்டி |
| கறிவேப்பிலை | – சிறிதளவு |
| நெய் | – 1 மேசைக்கரண்டி |
| கொத்தமல்லி இலை | – சிறிதளவு |
| கடுகு | – தேக்கரண்டி |
| பெருங்காயத்தூள் | – தேக்கரண்டி |
| கடலைப்பருப்பு | – 1 மேசைக்கரண்டி |
| உளுத்தம்பருப்பு | – 1 மேசைக்கரண்டி |
| உப்பு | – தேவையான அளவு |
| சீரகம் | – 1 தேக்கரண்டி |
| வெந்தயம் | – மேசைக்கரண்டி |
| மஞ்சள் தூள் | – தேக்கரண்டி |

சிறிதளவு சுடுநீரில் புளியைக் கரைத்து வைத்துக்கொள்ளவும். கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, சீரகம், வெந்தயம், பொடித்த பெருங்காயம் என்பவற்றை நெய் சேர்க்காமல் வறுத்து எடுத்துக்கொள்ளவும். சூடு ஆறியதும் அருவல்நொருவலாக பொடித்து, கொத்தமல்லி இலை, கறிவேப்பிலை, கடுகு, மஞ்சள்தூள் என்பவற்றை சேர்த்து நெய்யில் வதக்கவும். இதனுள் கரைத்து வைத்த புளியைச் சேர்த்து கொதிக்கவிடவும். இதன் போது அருவல்நொருவலாக உள்ள பொடியையும் சேர்த்து நன்கு கொதிக்கவிடவும். தேவையான அளவு உப்பையும் சேர்க்கவும். கொதித்த புளிச்சாற்றை விட்டு நெய் மிதந்து வரும் போது அடுப்பில் இருந்து இறக்கி அதனுள் சாதத்தை போட்டு நன்றாக கலந்துகொள்ளவும்.

## கோழிப்புற்கை - சுறாப்புற்கை

இவை விசேடமாக யாழ்ப்பாணம் வடமராட்சியில் புழக்கத்தில் உள்ள நல்லதொரு ஆரோக்கியமான உணவாகும். கூடுதலாக நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கும்போது அல்லது நோய்கள் வந்து மாறிய நிலையில் போசாக்கினை வழங்கி உடலைத்தேற்றுவதற்காக எடுக்கப்படுகின்றது.

இதன் விசேட அம்சம் உடல் பலவீனமான நிலையில் உடற்தொழிற்பாடுகளுக்கு, சமிபாட்டுக்கு தேவையான சக்தியை சாதம் வழங்கி புரத சமிபாட்டு சிக்கலை தவிர்க்கும் அதேவேளை சாதத்துடன் சேர்க்கப்படும் இறைச்சி, சுறா என்பன உடலுக்குத் தேவையான புரதத்தினையும், நேரடியாக அகத்துறிஞ்சக்கூடிய நிலையில் உள்ள இரும்புச்சத்தையும் ஏனைய உயிர்ச்சத்துக்கள், கனிமங்களையும் இவ்வுணவு தாராளமாக வழங்குகின்றது. இதில் சேர்க்கப்படும் அரிசி பாரம்பரியமாக மொட்டைக்கறுப்பன் அரிசியாகவே உள்ளது. இது நடுத்தரமான Glycemic Index ஐ கொண்டதாகக் காணப்படுகின்றது. இதனால் நீரிழிவு நோயாளிகளும் அளவுடன் உட்கொள்ளக் கூடியதாக உள்ளது.

சுறா சேர்க்கும்போது பாலூட்டும் தாய்மார்களில் தாய்ப்பால் அதிகம் சுரப்பதற்கு உதவுகின்றது. இதனால் உடல் நன்கு தேறுவதுடன் நோய்களின் தாக்கமும் குறைவடைகின்றன.

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| மொட்டைக்கறுப்பன் பச்சையரிசி | – கிலோ |
| கோழி இறைச்சி / சுறா | – கிலோ |
| தேங்காய் பெரியது | – 1 |
| மிளகாய்த்தூள் | – 4– 5 மே.கரண்டி |
| சின்ன வெங்காயம் | – கிலோ |
| இறைச்சித் தூள் | – 1 தெக்கரண்டி |
| தேசிப்பழம் | – 2 |
| உப்பு | – தேவையான அளவு |

பால் புளிந்த தேங்காய் பூவினுள் இரண்டு போத்தல் நீர்விட்டு நீர் கொதித்தபின் அரிசி, இறைச்சி என்பவற்றைப்போட்டு அவிய விட்டு, முக்காப்பதம் அவிந்துவரும்போது தூள், வெங்காயம் என்பவற்றையும் போட்டு அவியவிடவும்.

இறைச்சிக்குப் பதில் சுறா சேர்ப்பதாயின் அரிசி ஓரளவு அவிந்தபின்னரே சுறா சேர்த்துக்கொள்ளல் வேண்டும். உலைநீர்வற்றி சாதம் பதத்துக்கு வரும்போது பிழிந்த பாலையும், இறைச்சித் தூளையும் சேர்த்து கிழறிக் கொள்ளவும். மாமிச உணவு உண்ணாதோருக்கு இறைச்சிக்குப்பதில் வெங்காயம் சேர்த்துக் கொள்ளலாம். இதனை வெங்காயப் புற்கை என்பர். இதேபோல் நெய்ச்சோறு, தயிர்ச்சோறு, மஞ்சட்சோறு, குழைசோறு என்பனவும் எமது பாரம்பரியத்தில் உள்ளது.

## மோதகம், பிட்டு, உறட்டி, கொழுக்கட்டை

**"சட்டகம் பருக்குஞ் சக்குக் குளிர்ந்திடும் பெலனுஞ் சாரும்**
**கட்டமா மலமும் போக்குங் கழறுமோ தகத்தினோடு**
**பிட்டுறட் டியுமே கொள்ளும் பிடிக்கொழுக் கட்டை யெல்லாம்**
**இட்டமாம் வாயு மந்த மிசைவிக்கும் பெலனுண் டாமே"**

– பக். 62, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி.

## மோதகம்

மோதகத்துக்கு உடல்பருக்கும், கண்குளிர்ச்சியடையும், உடற்பலம் உண்டாகும். மலமிளக்கியாக செயற்படும். உண்மையில் மோதகம் ஒரு நிறையுணவாகவே கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் மோதகத்தில் சேரும் பொருட்கள் பெரும்பாலான சத்துக்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. முக்கியமாக மாபோசணைக் கூறுகளான மாப்பொருள், புரதம், கொழுப்பு என்பவற்றை முறையே மோதகத்தில் சேரும் அரிசிமா மற்றும் சர்க்கரை, பயற்றம்பருப்பு, தேங்காய்ப்பூ என்பன வழங்குகின்றன.
அதேபோல் அரிசிமா, பயறு, தேங்காய்ப்பூ என்பவற்றில் தேவையான அளவு உயிர்ச்சத்துக்களும், கனிமங்களும் காணப்படுகின்றன.
மோதகத்துக்கு ஏலக்காய் சேர்ப்பது வழக்கம். இதனால் உடலுக்குத் தேவையற்று ஏற்படும் ஒவ்வாமைகளைக் குறைப்பதுடன் சமிபாட்டினையும் நன்றாகச் செயற்பட வைக்கின்றது. சித்தமருத்துத்துவத்தில் ஏலக்காய் திரிதோச சம திரவியப் பொருட்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

**"ஒன்றிய வாத பித்த கபமிவை யுயரா வண்ணம்**
**நன்றுறு கறிக ளெல்லா நாளுமே சமைப்ப ராய்ந்தோர்**
**தின்றிடு மிளகு மஞ்சள் சீரக முயர்ந்த காயம்**
**வென்றிகொள் சுக்கோ டேலம் வெந்தய முள்ளி சேர்த்தே"**

– பக்.360, பதார்த்தகுண சிந்தாமணி.

மிளகு, மஞ்சள், சீரகம், பெருங்காயம், சுக்கு (வேர்க்கொம்பு), ஏலம், வெந்தயம், உள்ளி என்பன திரிதோசங்களை சமப்படுத்துபவை ஆகும். இதனால் இவற்றை திரிதோச சமனிகள் என்பர். இவற்றில் குறைந்தது ஏதாவது ஒன்று பயன்படுத்தல் வேண்டும். திரிதோசங்கள்/ முக்குற்றங்கள்/ உயிர்த்தாதுக்கள் என்றால் என்ன என்பது பற்றி சுருக்கமாக கீழே தரப்படுகின்றது.

## உயிர்த்தாதுக்கள் / முக்குற்றங்கள் / திரிதோசங்கள்

உயிர்த்தாதுக்கள் எனப்படுபவை வாதம், பித்தம், கபம் என்பவையாகும். இவை மூன்றுமே உடல் உயிர்ப்புடன் செயற்படுவதற்கும் உடலில் உள்ள அனைத்து தொழிற்பாடுகளுக்கும் சித்தமருத்துவ அடிப்படையில் காரணமானவையாகும். உண்மையில் இவை பஞ்சபூதங்களின் சேர்க்கைகளின் அளவுகளினை அடிப்படையாகக் கொண்டு வளி (வாதம்), அழல் (பித்தம்), ஐயம் (கபம்) என்பன சித்தமருத்துவ சொல்லாடல்களால் குறிப்பிடப்படுபவை. பின்னர் வடமொழியின் கலப்புக்களினால் வாதம், பித்தம், கபம் என சொல்லாடல்கள் நிலைபெற்று விட்டன.

இம்மூன்றும், உடற் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் அதேவேளை அகக் காரணிகளாலும் புறக்காரணிகளாலும் சடுதியாக மாற்றங்களைப் பெறக்கூடியன. இவ்வாறான மாற்றங்களினால் உடலில் மாறுபாடுகள் ஏற்பட்டு நோய்கள் உருவாகின்றன. இதனாலேயே இவை முக்குற்றங்கள் அல்லது திரிதோசங்கள் எனப்படுகின்றன.

இதனையே திருவள்ளுவர் திருக்குறளில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்

**"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று"**

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று உயிர்த்தாதுக்களும் கூடினாலும் குறைந்தாலும் நோய்களை உருவாக்கும் என மருத்துவநூல்கள் கூறுகின்றன. இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் புறக்காரணிகளில் முக்கியமானவை உணவும், உணவுப்பழக்கங்களும் தான். இதனாலேயே திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உள்ள பத்துக் குறள்களில் ஆறு குறள்கள் உணவைப்பற்றி கூறுகின்றன.

உதாரணமாக,

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்"**

நாம் உண்ட உணவு நன்றாகச் சமிபாடு அடைந்தது அறிந்து, அதன் பின் உணவினை உட்கொண்டோமானால் எமது உடம்புக்கு மருந்து என்ற ஒன்று தேவையில்லை என்கின்றார்.

பொதுவாக நாம் உணவுகளுடன் மேற்படி திரிதோச சம திரவியங்களை வாசனைக்காகவும், சுவைக்காகவும் சேர்த்துக் கொள்வது எமது பாரம்பரிய உணவுப்பழக்கங்களின் சிறப்பாகும். இதன்மூலம் தோசங்களின் சமநிலை குழம்பி நோய்கள் ஏற்படுவது குறைக்கப்படுகின்றது. வருமுன் காப்பதே நமது யாழ்ப்பாண பாம்பரிய உணவுப்பழக்கங்கள் ஆகும்.
மோதகமானது சித்தமருத்துவத்தில் குறிப்பிட்டுள்ள காலை உணவுபற்றிய கொள்கையுடன் மிகவும் ஒத்துப்போவதுடன், காலை ஆகாரத்துக்கு சிறுவர்களுக்கு சிறந்ததொன்றாகவும் காணப்படுகின்றது.

## பிட்டு, உறட்டி, பிடிக்கொழுக்கட்டை

பிட்டு, உறட்டி, பிடிக்கொழுக்கட்டை என்பன வாயு வையும் சோம்பலையும் தோற்றுவிக்கும் என்றாலும் உடலுக்கு பலத்தைக் கொடுக்கக்கூடியன.

### பிட்டு

> **“செம்புனலுங் கட்டுத் தெளியும் உரமாகும்**
> **வெம்பனிலம் உட்புறத்தில் வீறுங்காண் – செமீபழத்தை**
> **வட்டைப் பழிக்கும் வனமுலைமா தேயரிசிப்**
> **பிட்டைப் புசிப்பார்க்குப் பேசு”**
>
> **– பக்.404, பதார்த்தகுண சிந்தாமணி**

அரிசிமாப் பிட்டுப் உடலைப் பலமாக்கும், உடலுள் வாத வெப்பத்தை அதிகரிக்கும். அதாவது உடலைச் சுறுசுறுப்பாக்கும். மாதர்களுக்கு மாதவிலக்கில் ஏற்ப டும் உதிரப்பெருக்கை கட்டுபடுத்தும்.

### பொருத்துமான்கொடி பிட்டு

யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதிகளில் பொருத் துமான் கொடி இலைகளை அரிசிமா அரைக்கும் போது அரிசியுடன் சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்வார்கள். இப்பொருத்துமான் கொடி சேர்ந்த பிட்டானது பெண்களுக்கான கர்ப்பரோகங்களை வரவிடாது செய்வதுடன் கர்ப்பப்பை உரமாக்கியாக வும் செயற்படுகின்றது.

பெண்களின் ஆரோக்கியத்தில் சிறந்தபலனை பாரம் பரியமாக அப்பிரதேச மக்கள் பயன்படுத்துகின்றார் கள். பொருத்துமான் கொடி யானது இப்பிரதேசத்தில் இயற்கை யாக வளரும் ஒருகொடி வகையாகவும், இப்பிரதேசத்துக்குரிய சிறப்பான மூலிகையாகவும் காணப்படுகின்றது.

### களப்பன்னம் பிட்டு

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக தீவுப்பகுதிகளில் (புங்கு டுதீவு) அரிசிமாவுடன் களப்பன்னை (களப்பன்னம்) சேர்த்து பிட்டவித்துக் கொள்வார்கள். இது வாதரோ கங்கள் ஏற்படுவதில் இருந்து பாதுகாக்கின்றது. உடல்நோ, குத்துழைவு, அடிபட்டநோ போன்ற வற்றை நீக்குகின்றது. உடற்சூட்டை அதிகரிக்கின்றது. களப்பன்னத்தின் தாவரவியற் பெயர் - *Glycosmis pentaphylla (Retz) correa* / *English Name - Opal ormge* தாவரக் குடும்பம் - *Rutaceae*

களப்பன்னம் இலைகளை சுத்தமாக்கி அரிசியுடன் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும். பின்னர் அதனைவைத்து பிட்டு அவிக்கும்போது தேங்காய்ப் பாலில் குழைத்து பிட்டவித்து வைத்துக்கொள்ளவும்.

பிறிதொரு தாச்சியில் முதல் தேங்காய்ப்பாலை கொதிக்கவைத்து அதனுள் தேவையான அளவு சின் னவெங்காயம், மஞ்சள், சீரகத்தூள், பனங்கட்டி, உப்பு என்பவற்றைச் சேர்த்துக் காய்ச்சும்போது எண் ணெய் மிதக்கும் போது பிட்டைக் கொட்டிக்கிளறி இறக்கிக் கொள்ளவும்.

இதனை பொட்டணியாகக் கட்டி நோவுகளுக்கு ஒத் தடமும் கொடுக்கலாம். களப்பன்னை தொடர்பாக யாழ்ப்பாணத்து நூலான அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> **“கரப்பன்சில் விசமு மாறுங் கருதுமுட் டணமா மென்றே**
> **உரைத்தனர் முனிவர் தாமு முயர்கோழி யவரைக் கேதான்**
> **கருத்துறு புரசினோடு களப்பன்னை யிவைக டம்மிற்**
> **பெருத்திடு குணங்கள் சொல்லிற் பேசுமுட் டணமே தாமே”**
>
> **– பக்.66, அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி**

மேற்படி பிட்டுக்களைப்போன்று குறிஞ்சா, சிறுகுறிஞ்சா, பூவரசம் பழுத்தல் மற்றும் விடத்தல் அலைகளையும் அரிசியுடன் அரைத்து பெண்கள் சம்பந்தப்பட்ட நோய்களான மாதாந்த அதிக இரத்தப்போக்கு, வெள் ளைப்படல் மற்றும் நீரிழிவு நோய்நிலைகளுக்கு பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

பூவரசம் பழுத்தல் சேர்க்கும்போது இலையின் நரம்பு கள் நீக்கப்பட வேண்டும்.
இவைபோன்று பிட்டு அவிக்கும்போது அரிசிமா நீர் விட்டு குழைத்தபின்னர் அதனுடன் கீரை, தவசி



Glycosmis pentaphylla (Retz.) Correa

Image source - indiabiodiversity.org

முருங்கை, சண்டியிலை, வல்லாரை, முருங்கையிலை, குறிஞ்சா, பயரி என பல மூலிகைகள் உணவுப்பொரு ளாகி, நமது பாரம்பரிய உணவுப்பழக்கங்களில் உணவே மருந்தாகியுள்ளன.

## பாற்புட்டு

அரிசிமாவுடன் (ஒரு பங்கு) உளுத்தம் மா (ஒரு பங்கு), சேர்த்து பிட்டவித்தல், தேவையான அளவு தேங்காய்ப்பால் சீனி, மிளகு, சீரகம் சேர்த்து காய்ச்சி இதனுள் பிட்டினைப்போட்டு கிளறி எடுத்தல்.



பால் புட்டு

Image source - www.globaltnn.com

## சில்லுப்பிட்டு

பாற்பிட்டினைப்போல் அரிசிமா உளுத்தமா என்பவற்றைக் கலந்து இடியப்ப பதத்தில் குழைத்து, சில்லு சில்லாக தட்டி அவித்து உடுத்த பின், போற்பிட்டில் தேங்காய்ப் பால் ஏனைய பொருட்கள் சேர்த்து காய்ச்சி எடுத்து அப்பாணியினுள் அவித்த சில்லுப்பிட்டு களை தோய்த்துவிடல். பாற்புட்டைவிட தேங்காய்ப்பால் பாணி அதிகமாக இருக்கும்.

## குழல் பிட்டு


மூங்கில் துளையினுள் குழைத்து கொத்திய அரிசிமாவினையும் தேங்காய்ப் பூவினையும், மாறி மாறி போட்டு நீராவியில் அவித்து எடுத்துக் கொள்ளல் வேண்டும். “பிட்டு” சொல் அதன் செயன்முறையை அடிப்படையாகக்கொண்டு சித்தமருத்துவத்தில் உட்கொள்ளும் மருந்து வகைகளான 32 இல் ஒன்றாகப் காணப்படுகின்றது.

அரிசி மாவினைக் கொண்டு பலவிதமான பலகாரங்கள் செய்யப்படுகின்றன. விசேடமாக பால்ரொட்டி, அரியதரம், முறுக்கு, சிப்பி போன்றன. அதேபோல் சிற்றுண்டியாக பொரிஅரிசிமா, அப்பம், தோசை,இடியப்பம் போன்றனவும் காணப்படுகின்றன.

குறிப்பாக புளிக்கவைத்து செய்யப்படும் உணவுகளில் போசணைகள் செறிவாவதுடன், உடலுக்கு நன்மைதரும் பற்றீரியாக்கள், மதுவம் போன்றன (Probiotics) இவ்வுணவுகளில் இருந்து தாராளமாகக் கிடைக்கின்றன. இவை உணவுச் சமிபாட்டை சீராக்குவதுடன் மலச்சிக்கலையும் தடுக்கின்றன. இதன் மூலம் உணவுக்கால்வாய்த் தொகுதிகளில் ஏற்படும் புற்றுநோய்கள் குறைகின்றன.
யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் யாரேனும் நோய் வாய்ப்படும்போது இலகுவாகச் சமிபாடு அடையக்கூடியதும் தேவையான சக்தியை வழங்கக்கூடியதுமாக இடியப்பமே வழங்கப்பட்டு வருகின்றது.

மெல்லிய இழைகளாகவும், நீர்ச்சத்தையும் அதிகமாகக் கொண்டதாக காணப்படுவதால் விரைவாகச் சமிபாடு அடையக்கூடியதாக இடியப்பம் காணப்படுகின்றது.

தொடரும்.




களப்பன்னத்தின் மருத்துவ குணங்கள்

Image source - www.sciencedirect.com



தேயிலை தோட்டங்களில் ஏற்படும் மண்ணரிப்பு

Image source - www.importmirror.com

# இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கையும் இயற்கைச்சூழலின் மீது அதன் தாக்கங்களும்




கட்டுரை

பேராசிரியர் எம். சின்னத்தம்பி




மலையகச் சமூகத்தினர் காலம் காலமாகக் அனுபவித்த துயரங்களையும், உரிமை மறுப்புக்களையும், பல்வேறு பரிமாணங்களையும், வளர்ச்சித் தடயங்களையும் ஒருமித்து வெளிக்கொண்டு வருவதாக இத்தொடர் அமைந்துள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் இலங்கையில் வளர்ச்சியடைந்து வந்த பெருந்தோட்டத்துறையானது தொடர்ந்துவந்த காலப்பகுதியில் இலங்கையினது பொருளாதாரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துறையாக மாறியது. தேயிலை உற்பத்தியும், அதன் ஏற்றுமதியும் இதில் முதன்மை வகித்தது. சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக நாட்டினது பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளும் சமூக பொருளாதார முன்னேற்றமும் பெருந்தோட்டத்துறையினது வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டனவாக இருந்தன. இத்துறையினது தோற்றமும் வளர்ச்சியும் பொருளாதாரத்தில் அடிப்படையான சில மாற்றங்களை ஏற்படுத்தியது. பெருந்தோட்டத்துறையினது அறிமுகத்தால் அதுவரை காலமும் நிலவிவந்த மானியமுறைப் பொருளாதார அமைப்பு முதலாளித்துவப் பொருளாதாரமுறைக்கு நெகிழ்ந்து கொடுத்ததுடன், பெருந் தோட்டத்துறையினது நடவடிக்கைகளோடு தொடர்புபட்ட புதிய பல தாபனங்களும் உருவாகின. ஆரம்பத்தில் இத்துறைக் குத் தேவையான வங்கிச்சேவைகளை வழங்குவதற்காக சில வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் இங்கு திறக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து, பெருந் தோட்ட உற்பத்திக்

குத் தேவையான நிதி சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்கும் பல்வேறு நிதிநிறுவ னங்களின் கிளைகளும், தேயிலைத் தொழிற்சாலைகளின் பொறியியல் தேவை களைப் பூர்த்தி செய்வ தற்கும், பெருந்தோட்டப் பிரதே சங்களுக்கு அமைக்கப்பட்ட புகையிரதப்பாதை, பெருந்தெருக்கள், அவற்றில் கையா ளப்பட்ட இயந்திர சாதனங்கள் என்பவற்றைப் பராமரிப்பதற்கும் தேவை யான பொறியியல் நிறுவனங்கள் சிலவும் தாபிக்கப் பட்டன.

தேயிலையைப் பொதிசெய்தல், அதனை ஏலத்தில் விற்றல், தரகு நடவடிக்கைகளையும் காப்புறுதி நடவ டிக்கைகளையும் மேற்கொள்ளுதல் போன்றவற்றிற் கான சில தாபனங்களும், தேயிலையையும் றப்பரை யும் கப்பல் மூலம் ஏற்றுமதி சேவைகளை வழங்கு வதற்குத் தேவையான துணைத்தாபனங்கள் சிலவும் படிப்படியாக வளர்ச்சியுற்றன.

## நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருந்தோட்டத்துறையினது பங்களிப்பு

1930 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் நாட்டினது மொத்த ஏற்றுமதி உழைப்பில் பத்தில் ஒன்பது பங்கு பெருந்தோட்டப் பண்டங்களின் ஏற்றுமதியினின்றே பெறப்பட்டதுடன், அதில் தேயிலையின் ஏற்றுமதி முதன்மை வகித்தது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரும் இதில் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படவில்லை. ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி நான்கு மடங்குகளால் அதிகரித்த போதும், அதில் பல்வேறு துறைகளின் ஏற்றுமதி உழைப்பினது விகிதாசாரப் பங்குகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை.

தொடர்ந்தும் பெருந்தோட்டப் பண்டங்களின் ஏற்றுமதி, அதிலுங்குறிப்பாக, தேயிலை ஏற்றுமதி முதன்மை வகித்தது. 1960 ஆம் ஆண்டுகளிற்கூட, நாட்டினது மொத்த ஏற்றுமதி வருவாயில் 60.0 வீதத்திற்கும் மேலான பகுதி பெருந்தோட்டப் பண்டங்களின் ஏற்றுமதிகளினின்றே பெறப்பட்டது. உள்நாட்டு உற்பத்தி, அரசாங்க வரிவருவாய் என்பவற்றிற்கும் கணிசமான பங்கு அளித்ததோடு, சுமார் 800,000 பேருக்கு நேரடியான வேலைவாய்ப்பையும் அது அளித்தது. இது நாட்டினது மொத்த வேலைவாய்ப்புக்களில் ஏறக்குறைய 20.0 வீதமாக இருந்தது. தேயிலைத் தொழிற்சாலைகளின் பொறியியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல், பெருந்தோட்டப் பிரதேசத்திற்கு அமைக்கப்பட்ட புகையிரதப்பாதைகள், பெருந்தெருக்கள் என்பவற்றைப் பராமரித்தல், தேயிலையைப் பதனிடல், பொதி செய்தல், அதனோடு தொடர்புபட்ட போக்குவரத்து, கப்பல் மூலமான ஏற்றுமதி , ஏலவிற்பனை, தரகுநடவடிக்கைகள், காப்புறுதிசெய்தல் போன்ற சேவைகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட துணைத்தொழில்களிலும் பலர் வேலைவாய்ப்பினைப் பெற்றனர். மொத்தமாக ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்களை பெருந்தோட்டத்துறையிலும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய துறைகளிலும் அது உருவாக்கிற்று. வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதில் அண்மைக்காலம் வரை நெல்உற்பத்திக்கு அடுத்த முக்கிய துறையாக அது இருந்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த சுமார் நான்கு தசாப்த காலப்பகுதியில் பல்வேறு காரணங்களினால் இத்துறையினது பொருளாதார சார்புமுக்கியத்துவத்தில் தொடர்ச்சியான வீழ்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. எண்பதாம் ஆண்டுகளின் முற்பகுதியில் அது மொத்த ஏற்றுமதி வருவாயில் சுமார் 50.0 வீதத்தையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 7.0 வீதத்தையும் பெற்றுக் கொடுத்தது. எண்பதாம் ஆண்டுகளின் பிற்பகுதி முதல் இப்பங்குகள் மேலும் வீழ்ச்சியடையத் தொடங்கின. மொத்த உற்பத்தியில் அதன் பங்கு 2005இல் 4.0 வீதமாகவும், வெளிநாட்டு நாணய உழைப்பில் அதன் பங்கு 10.0 வீதமாகவும் குறைந்தது. கடந்த சில ஆண்டுகளில் தேயிலை ஏற்றுமதியின் மூலம் கிடைத்த வெளிநாட்டு செலாவணி உழைப்பு சற்று உயர்ந்து வந்துள்ளது.

> **பெருந்தோட்ட உற்பத்திமுறையானது சூழல் சார்ந்த பல பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. சூழலின் பன்மைத்தன்மை இழக்கப்படுதல், மண்ணரிப்பு, நிலச்சீரழிவு, நிலத்தின் உற்பத்தித்திறனில் ஏற்படும் வீழ்ச்சி போன்றவற்றை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம்.**

2008 ஆம் ஆண்டில் அது 1.23 பில்லியன் அமெரிக்க டொலராகவும், 2012ம் ஆண்டில் 1.5 பில்லியன் டொலராகவும் உயர்ந்தது. இது நாட்டினது மொத்த வெளிநாட்டு நாணய உழைப்பின் 15.0 வீதமாக இருந்தது. எனினும், இத்துறையினின்று கிடைக்கும் அரசாங்க வரிவருவாயில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. 1992 ஆம் ஆண்டு தோட்டங்களைத் தனியார்மயப்படுத்துவதற்கு சற்று முன்னர் தேயிலை ஏற்றுமதி மீதான வரிகள் நீக்கப்பட்டதே இதற்கான காரணமாகும். ஆனால் வெளிநாட்டு நாணயத்தை உழைப்பதிலும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதிலும் இத்துறை தொடர்ந்தும் முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

அண்மைய ஆண்டுகளில் வெளிநாட்டு நாணய உழைப்பில் பெருந்தோட்ட ஏற்றுமதிகளிலும் பார்க்க புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையரது வருமானச்செலுத்தல்கள், கைத்தொழிற் பொருட்களின் ஏற்றுமதி, உல்லாசப்பயணத்துறை போன்றவற்றினின்று கிடைக்கும் வெளிநாட்டு நாணய உழைப்பு உயர்வாக இருப்பதாக சில அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இவற்றுள் முதலாவது எண்பதாம் ஆண்டுகளின் பின்னர் வெளிநாட்டுநாணய உழைப்பின் பிரதான மூலமாக மாறியுள்ளது என்பதை மறுக்

கமுடியாது. ஏனையவை மொத்த வெளிநாட்டு நாணய உழைப்பின் அடிப்படையில் மட்டுமே உயர்வாக உள்ளன. அவற்றின் உற்பத்தியின் பல்வேறு கட்டங்களில் கையாளப்படும் இறக்குமதி செய்த உள்ளீடுகளின் பெறுமதி நீங்கலாக, அதாவது, தேறிய வெளிநாட்டு நாணய உழைப்பின் அடிப்படையில், பெருந்தோட்டப் பொருட்களின் ஏற்றுமதியே இன்றும் முதலிடம் வகிக்கின்றது. புடவைகள், தைத்த ஆடைகள், பெற்றோலியப் பொருட்கள் போன்றவற்றோடு, ஒப்பீட்டு ரீதியில் தேயிலை, றப்பர் என்பவற்றின் உற்பத்தி குறைந்த இறக்குமதிச் சேர்க்கையைக் கொண்டதாகும். இதன் காரணமாக, இவற்றினது ஏற்றுமதியின் மூலம் கிடைக்கும் தேறிய வெளிநாட்டு நாணய உழைப்பு மொத்த வெளிநாட்டு நாணயஉழைப்பின் 70.0 தொடக்கம் 80.0 வீதமாக உள்ளது.

மேலே குறிப்பிட்ட ஏனைய பொருட்களைப் பொறுத்த வரை இது தலைகீழாக உள்ளது. அப்பொருட்களை உற்பத்தி செய்வதற்குக் கையாளப்படும் இறக்குமதி செய்த உள்ளீடுகள் மொத்த ஏற்றும திப்பெறுமதியில் சுமார் 80.0 வீதமாக உள்ளன. இந்தவகையில், பல்வேறு ஏற்றுமதிப் பொருட்களை அவற்றின் வெளிநாட்டு நாணய உழைப்பின் அடிப்படையில் வரிசைப்படுத்தும்போது அது மொத்த அடிப்படையிலா, தேறிய அடிப்படையிலா செய்யப்படுகின்றது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.



**தேயிலைச் செடிகளுக்கு பயன்படுத்தப்படும் இரசாயன களைக்கொல்லி**

Image source - www.shutterstock.com/editorial

### தேயிலைச்செய்கை இயற்கைச்சூழலின் மீது ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

தேயிலைப்பயிர்ச்செய்கை, தேயிலை ஏற்றுமதி என்பவற்றின் பொருளாதாரப் பங்களிப்பைப் பற்றி ஆராயும் பொழுது இயற்கைச்சூழலின் மீது அது ஏற்படுத்தும் தாக்கத்தினை கவனத்தில் கொள்ளாது விடமுடியாது. பெருந்தோட்ட உற்பத்திமுறையானது சூழல் சார்ந்த பல பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது. சூழலின் பன்மைத்தன்மை இழக்கப்படுதல், மண்ணரிப்பு, நிலச்சீரழிவு, நிலத்தின் உற்பத்தித்திறனில் ஏற்படும் வீழ்ச்சி போன்றவற்றை இங்கு விசேடமாகக் குறிப்பிடலாம். தேயிலை உற்பத்தி அப்பிரதேசங்களின் உயிரியல் பன்மைத்தன்மையினைப் பாதிக்கின்றது. பல்வகைத்தன்மை கொண்ட சாதனங்கள் காணப்படும் மலைசார்ந்த பகுதிகளில் தேயிலை உற்பத்தி மேற்கொள்ளப்படுவதால் இது ஏற்படுகின்றது. 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பெருந்தோட்ட உற்பத்திக்காக பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டதால் நிலத்தின் மேற்பரப்பு மண் பெரிதும் இழக்கப்பட்டது. தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்ட பின்னர் பல தோட்டமுகாமைகள், மரக்கறி, காய்கனி மரங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தோட்ட வேளாண்மையில் ஈடுபடுவதால் சூழல் பாதிப்பிற்கு உள்ளாகின்றது. ஒரு குறிப்பிட்ட காணியில் தொடர்ந்து பல வருடங்களுக்கு தனியொரு பயிர் மட்டுமே செய்கை பண்ணப்படுவதும் நிலத்தின் செழிப்பைப் பாதிக்கின்றது. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக உயர்நிலப் பிரதேசங்களில் காடுகள் அழிக்கப்பட்டதாலும், அங்கு தேயிலை பயிரிடப்பட்ட காணிகளில் களைகளின் வளர்ச்சி தடைசெய்யப்பட்டதாலும், அங்குள்ள நீரேந்துப் பகுதிகளில் மழைவீழ்ச்சியின் மூலம் கிடைக்கும் நீர் இலகுவாக மலைச்சரிவுகளில் வழிந்தோடி விடுகின்றது. இதனால் இப்பிரதேசங்களில் மழைவீழ்ச்சியின் மூலம் கிடைக்கும் நீருக்கும் ,வழிந்தோடிவிடும் நீருக்கும் இடையிலான விகிதாசாரம் உயர்வாக இருப்பதனால் நிலத்திற்கு அடியில் சேமித்து வைக்கப்படும் மழைநீரின் விகிதாசாரம் குறைவடைந்து வந்துள்ளது. இங்கு ஊற்றெடுக்கும் நீரோடைகளிலும் ஆறுகளிலும் கோடைகால நீரினளவை இது பாதிக்கின்றது. அத்துடன், சரிவான மலைப்பிரதேசங்களிலேயே தேயிலை பயிரிடப்படுவதால் அவை மண்ணரிப்பிற்கும் மண்சரிவிற்கும் உட்படக்கூடிய பிரதேசங்களாக மாறியுள்ளன.

தேயிலையைப் பயிரிட்டு அதிலிருந்து கிடைக்கும் தேயிலைத் தளிரைப்பதப்படுத்தி தேயிலைத்தூளாகவும் வேறு வடிவங்களுக்கும் அதனை மாற்றுவதற்கு பெருமளவு சக்தி (energy) தேவைப்படுகின்றது. இவ்வாறு பெருமளவு சக்தியைக் கையாளுவது இயற்கைச்சூழலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. இயற்கைச்சூழலை இது எவ்வாறு பாதிக்கும் என்பது எவ்விதமான சக்தி கையாளப்படுகின்றது என்பதில் தங்கியிருக்கும்.

உதாரணமாக, தேயிலைத்தளிரை உலரவைப்பதற்கு காடுகளிலிருந்து பெறப்படும் பெருமளவு விறகு கையாளப்படுகின்றது. இது காடழிப்பிற்கு இட்டுச்செல்வதோடு அவ்வித காடழிப்பு சூழலின் மீது பல தாக்கங்களையும் ஏற்படுத்தும். கடந்த சுமார் 150 ஆண்டுகளாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கும், தேயிலையைப் பதனிடல் உட்பட்ட வேறு நடவடிக்கைகளுக்கும் தேவையான சக்தி பெற்றோலியம், இயற்கை வாயு, விறகு என்பவற்றின் மூலமும், சில சந்தர்ப்பங்களில் வசதிக்கேற்ப நீர்மின்சக்தி மூலமும் பெறப்பட்டு வருகின்றது. அத்துடன், தேயிலையின் உற்பத்தித்திறனை உயர்த்திக்கொள்வதற்காக பலவித இரசாயனப்பசளைகள், களைக்கொல்லிகள், கிருமிநாசினிகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் உபயோகம் ஏதோ ஒரு வகையில் இயற்கைச்சூழலின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் தேயிலைச் செய்கையின் ஆரம்ப காலந்தொட்டே அதில் அக்கறை

கொண்ட பல்வேறு சாராரின் கவனத்தை ஈர்த்து வந்துள்ளது. மண்ணரிப்பு, மண்சரிவு என்பன தொடர்பான பிரச்சினையும், அதனைத்தடுத்து நிறுத்துவதற்கான மண்பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் முக்கியத்துவமும் தேயிலைச்செய்கையின் ஆரம்பக்காலத்திலேயே உணரப்பட்டது. கண்மூடித்தனமாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன் மூலம் எழும் ஆபத்துக்களை 1873இல் ஹுக்கர் (Hooker) என்பவர் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து, 1500 மீற்றருக்கும் உயரமான பிரதேசங்களில் தேயிலைச்செய்கையினை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. மேலே கூறியவாறு, தேயிலைச்செய்கையின் ஆரம்பகாலத்திலேயே மண்ணரிப்பு தொடர்பான பிரச்சினை இனங்காணப்பட்டபோதும், அது தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் காலப்போக்கில் அது தீவிரமடைந்தும் வந்துள்ளது.

தேயிலை உற்பத்தியில் மறுநடுகை செய்தல், களைகளை அகற்றுதல், தவறான பயிர்ச்செய்கை முறைகள் கையாளப்படுதல் என்பவற்றால் மண்ணரிப்பு கூடுதலாக ஏற்படலாம். விதைத்தேயிலைச்செடிகள் காணப்படும் எல்லைத்



**ஆடை தொழிற்சாலை**

Image source - kuruvi.lk

தேயிலைக்காணிகளில் மண்ணரிப்பு கூடுதலாக இருக்கலாம். பெருந்தோட்டப் பிரதேசங்களில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட மண்ணரிப்பு, மிதமிஞ்சியதாக உள்ளமை இன்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உயர்நிலப் பிரதேசங்களில் தேயிலைப் பயிர்ச்செய்கை அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து சுமார் 30 செ.மீற்றர் மேற்பரப்புமண் இழக்கப்பட்டுள்ளதென மதிப்பிடப்பட்டுள்ளது. உயர்நிலப்பிரதேசங்களில் ஏறக்குறைய 181,000 ஹெக்டயர் காணிகள் அல்லது அப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 28.0 வீதமான பகுதி மண்ணரிப்பு, மண்சரிவு என்பவற்றால் பாதிப்படையக்கூடிய நிலையில் இருப்பதாக 1979இல் வெளியிடப்பட்ட காட்டியல் முதன்மை அறிக்கை (Forestry Master Plan) கூறியது. மகாவலி வடிநிலப்பிரதேசத்தின் மேற்பகுதிகளில் 39.0 வீதமான பகுதியில் மோசமான மண்ணரிப்பு காணப்படுவதாகத் தெரியவருகின்றது. மேலும், காடுகள் துரிதமாக அழிக்கப்பட்டதன் காரணமாக ஈரலிப்பு வலயத்தில் காணப்படும் காடுகளின் பரப்பு அப்பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 9.0 வீதமாகக் குறைந்துள்ளது. தொடர்ச்சியான மண்ணரிப்பும் மண்சரிவுகளுமே காடுகள் அழிக்கப்பட்டதன் உடனடியானதும் நாசகாரமானதுமான விளைவுகளாகும். எழுபதுகளில் ஏற்பட்ட கடும்வரட்சியும், 1986இலும் 1989 இலும், அண்மையில் மீரியபெத்த உட்பட பல இடங்களில் ஏற்பட்ட மண்சரிவுகளும் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். காடுகளை அழித்து சுத்தப்படுத்தியதன் பின்னர் மறுநடுகை செய்யப்படாமலும், மண்ணரிப்பிற்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமலும் விடப்பட்ட காணிகளே மீண்டும் காடுகளாக மாறாது பட்னா புற்றரைகளாக மாறியதாகக் கூறப்படு கின்றது. மேற்பரப்பு மண் கழுவிச் செல்லப்பட்டதால் வேறு உள்நாட்டுத்தாவரங்கள் எதுவும் பட்னாப்புற்களோடு போட்டியிட்டு வளர்ச்சியடைய முடியவில்லை. இப்பிரதேசங்களே அதிக மண்ணரிப்பிற்கு உள்ளாகின. காடுகளின் அழிப்பும் அதனாலேற்பட்ட மண்ணரிப்பும் காரணமாக நிலத்தின் மேல்மட்டமண் அடித்துச் செல்லப்படுவதோடு, நிலஅடிமட்டப்பாறைகளை அது நிலத்திற்கு வெளியே தள்ளி உள்ளது. உயர்நிலப்பிரதேசத்தில் ஏற்படும் மண்ணரிப்பின் விளை வாக பொல்கொல்ல அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டு (1976) 12 ஆண்டுகளுக்குள் அதன் 44.0 வீதமான இயலளவு வண்டல்மண்களால்நிரம்பிஇருந்ததாக ஆய்வொன்று சுட்டிக்காட்டியது.

ஆற்றுப்படுகைகளில் வண்டல்மண் நிரம்புவது அதன் இன்னொரு பாதகமான விளைவாகும். நிலத்தடி நீரின் அளவும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கையான காடுகள் அழிக்கப்பட்டமை இன்னொரு முக்கிய பிரச்சினை யையும் ஏற்படுத்தியுள்ளது. இயற்கையான காடுகளில் காணப்படுவதுபோன்று பெருந்தோட்டங்களில் பல்லினத்தாவரங்கள் காணப்படுவதில்லை. ஓரிரு வகையான தாவரங்கள் மட்டுமே அங்கு பயிரிடப்படுகின்றன. பல்லினத் தாவரங்கள் இயற்கைச்சூழலில் ஏற்படுத்தும் நுண்ணிய சமநிலையைப் பாதிக்கும். இது பயிர்நோய்களையும் ஒட்டுண்ணிகளையும் பெருகச்செய்துள்ளதோடு, அவ்வித நோய்களுக்கெதிரான பயிர்களின் எதிர்ப்புத்தன்மையையும் வீழ்ச்சி அடையச்செய்துள்ளது. 1990ம் ஆண்டுகளில் றப்பர் மரங்களுக்கு ஏற்பட்ட நோய் இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறப்படுகின்றது.

தேயிலைக்காணிகளில் வளரும் களைகளை அகற்றுவதற்கு ஏற்படும் ஊழியச் செலவைக் குறைக்கும் நோக்கமாக தனியார்மயமாக்கலின் பின்னர் பெருந்தோட்டங்களின் முகாமையைப் பொறுப்பேற்ற பிராந்திய பெருந்தோட்டக்கம்பனிகள் இரசாயன களைக்கொல்லிகளைப் பெருமளவில் கையாளுவதாகவும், அது இப்பிரதேசங்களில் இருந்து ஊற்றெடுக்கும் அருவிகளை மாசுபடுத்துவதோடு, தேயிலைச் செடிகளின் மீதும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக கூறப்படுகின்றது.
மேற்படி விடயங்களைக் கவ னத்தில்கொண்டு உயர்நிலப் பிரதேசங்களில் தேயிலை உற்பத்தியில் ஈடுபடும் கம்பனிகளும், அரசகூட்டுத்தாபனங்களும், தனிப்பட்ட உற்பத்தியாளரும் இப்பாதகமான விளைவுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வது இயற்கைச் சூழல் மேலும் பாதிப்பிற்கு உள்ளாகாது பாதுகாக்கப்படுவதற்கு இன்றியமையாததாகும்.

தொடரும்.

# மலையகத்திலே ஒரு பல்கலைக்கழகமும்

# சமூக பொருளாதார மேம்பாடும்



கட்டுரை

● பேராசிரியர் எம். சின்னத்தம்பி

**மலையகச் சமூகத்தினர் காலம் காலமாகக் அனுபவித்த துயரங்களையும், உரிமை மறுப்புக்களையும், பல்வேறு பரிமாணங்களையும், வளர்ச்சித் தடயங்களையும் ஒருமித்து வெளிக்கொண்டு வருவதாக இத்தொடர் அமைந்துள்ளது.**

லனங்கள் இல்லாத நீர் ஒருபோதும் கடலையடையமாட்டாது. அது போன்றே, காலத்தின் தேவை களுக் கேற்ப மாற்றங்களை அடைந்து கொள்ளமுடியாத ஒரு சமூகமும் வளர்ச்சியை அடையமாட்டாது. ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின், காலத் திற்குக் காலம் அதில் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாததாகும். அப்படியெனின், சமூகத்தில் இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவது யார் என்ற கேள்வி எழுகின்றது. ஒரு சமூகத்திலிருந்து உருவாகும் தொலைநோக்குள்ள அரசியற் தலைவர்கள், ஆற்றல்மிகு அறிவியலாளர்கள், சிறந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், திறமைமிக்க வியாபார முகாமையாளர்கள், ஆளுமைநிறைந்த நிர்வாகிகள் போன்ற துறைசார் நிபுணர்களே இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். சுதந்திரம் பெற்ற காலம் முதல் குறைந்த தலாவருமானத்தையும் மிதமான பொருளாதார வளர்ச்சியையும் கொண்டிருந்த எமது நாடு, மனித அபிவிருத்தியில் இன்று உன்னதமான ஒரு நிலையை அடைந்துள்ளது. இதனை அடைந்து கொள்வதில் எமது ஆரம்பகால அரசியற் தலைவர்களும் சமூக முன்னோடிகளும் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளனர் என்பதும், அவர்களுட் பெரும்பாலானோர் சிறந்த கல்விமான்களாகவிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன. இது போன்ற சமூக முன்னோடிகளை உருவாக்க முடியாத ஒரு சமூகம் வளர்ச்சியில் பின்தங்கி நிற்கும் என்பதற்கு மலையகச் சமூகம் சிறந்ததொரு உதாரணமாக இருந்து வந்துள்ளது.




**இலங்கை பல்கலைக்கழகங்கள்**

Image source - island.lk

நாட்டின் ஏனைய சமூகங்களோடு ஒப்பீட்டுகையில் மலையகச் சமூகமானது சமூக, பொருளாதார, கல்வித் துறைகளில் பின்தங்கியிருப்பது எல்லோரும் அறிந்த ஒரு உண்மையாகும். இச்சமூகத்திற்கு உண்மையான விடிவு ஏற்பட வேண்டுமாயின் இந்தநிலை மாறவேண்

டும். கல்வித்துறையில், அதிலுங்குறிப்பாக, பல்கலைக் கழக அல்லது மூன்றாம் நிலைக்கல்வியில் அது துரித முன்னேற்றம் அடைவது இன்றியமையாதது. கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக ஆரம்பக்கல்வியி லும், இடைநிலைக் கல்வியிலும் அது ஓரளவு முன் னேற்றம் கண்டுள்ளது. ஆனால், மூன்றாம்நிலைக் கல் வியைப் பொறுத்தவரை, அது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. 1960 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்விக்கான வசதிக ளும் வாய்ப்புக்களும் அதிகரித்து வந்துள்ளபோதும், உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான வயதுப்பி ரிவினரில் ஒரு சிறிய விகிதாசாரத்தினரே இன்றுங் கூட, பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்று உயர் கல்வியை பெறக்கூடியதாக உள்ளது. உதாரணமாக, பல்கலைக்கழக அனுமதிக்கான நடப்பு விதிகளுக்க மைய 2008 - 09 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் மொத்தமாக 130,236 பேர் ஆகக்குறைந்த தகுதியையாவது பெற்றிருந்த போதும், அவர்களுள் 20,846 பேர் மட்டுமே பல்கலைக்கழகங் களில் அனுமதிக்கப்பட்டதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினது 2009 ஆம் ஆண்டறிக்கை காட்டுகின்றது. இது அவ்வாண்டில் அனுமதிக்கான தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 17.0 சதவீதம் மட்டுமேயாகும். மேலும், இலங்கையில் 20 - 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களுள் 2. 0 வீதமா னோர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ப தும், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இது 18.0 சதவீதமாக இருப்பதும், ஏனைய விருத்தி யடையும் நாடுகளில் சராசரியாக 3.0 சதவீதமாகவி ருப்பதும் இங்கு குறிப்பி டத்தக்கன. எமது பல்கலைக் கழகங்களில் காணப்படும் இடவசதி போதாமையும் சாதனங்களின் பற்றாக்குறையுமே இதற்கான முக்கியமான காரணங்களாகும். அண்மைக்காலத்தில் தாபிக்கப்பட் டுள்ள தனியார்துறை உயர்கல்வி நிறுவனங்கள் இதை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்வதாக உள்ளன. வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பயிற்சிநெறிகளை உள்நாட்டிலேயே பயின்று, அந்தப் பல்கலைக்கழகங் களின் பட்டங்களை பெறுவதற்குத் தேவையான வசதி களை இவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. எனினும், மாணவர்களிடமிருந்து இவை மிகவும் உயர்ந்த கட்ட ணங்களை அறவிடுவதால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவற்றிற் சேர்ந்து உயர்கல்வி யைப் பெறுவது சாத்தியமற்றதாக உள்ளது. நிதிவசதி படைத்த ஒரு சிலர் தமது பிள்ளைகளை வெளிநாட் டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி பட்டம் பெற வைக்கின்றனர். எமது நாட்டில் பட்டதாரிகளிடையே பரவலான வேலையின்மை காணப்பட்டபோதும், கடந்த காலங்களில் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு உயர்கல்வியே சிறந்த மார்க்கமாக இருந்துள்ளதோடு, தொடர்ந்து இருந்தும் வருகின்றது. மேலும், பல்க லைக்கழகக் கல்வியானது ஒருவனது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. எனவேதான், பட்டதா ரிகளிடையே வேலையின்மை காணப்பட்டாலுங் கூட, பல்கலைக்கழகக் கல்விக்கான கேள்வி உயர் வாக உள்ளது. 1960 களில் எமது பல்கலைக்கழகங்களில் தாய்மொழிமூலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசு பல புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்ததாலும், அதனைத்தொடர்ந்து பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் அவற்றில் அனுமதி பெறுவதற்கு மாவட்ட அடிப்படையிலான தரப்படுத்தலை அறிமுகம் செய்ததாலும் , ஆயிரக்க ணக்கான கிராமிய இளைஞர்க்கும் யுவதிக்கும், வறிய குடும்பங்களைச் சேர்ந்த பலருக்கும் அவற்றில் அனு மதி கிடைத்து உயர்கல்விக்கான வாய்ப்பினைப் பெற் றனர். பல அரச நிறுவனங்களிலும், தனியார் தாபனங் களிலும், ஏன் சில சர்வதேச நிறுவனங்களிலுங்கூட, இன்று உயர்மட்டப் பதவிகளை வகிக்கும் பல இலங் கையர்கள், இதன்மூலம் உருவாக்கப்பட்டவர்களே. தேசியமட்டத்தில் இவ்வித மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலப்பகுதியில் மலையகச்சமூ கம் பல்வேறு காரணங்களினால் இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி மூன்றாம் நிலைக்கல்வி யில் முன்னேற முடி யாது போயிற்று.



இலங்கையில் தொழிற்கல்வி

Image source - parimaanam.wordpress.com

இலங்கையில் கடந்த நான்கு தசாப்தகாலப்பகுதியில் ஏனைய சமூகங்கள் மூன்றாம் நிலைக்கல்வியைப் பெற் றுக்கொள்வதில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளன. 1970 ஆண்டுகளுக்கு முன்னர் கல்வியில் மிகவும் பின் தங்கியிருந்த எமது சகோதர முஸ்லிம் சமூகம், சமூக உணர்வுமிக்கதும் தொலைநோக்கு கொண்டதுமான அதன் அரசியற்தலைவர்கள் மேற்கொண்ட காத்திர மான நடவடிக்கைகள் காரணமாக, தொடர்ந்துவந்த

காலப்பகுதியில் பாடசாலைக்கல்வியில் துரிதமாக முன்னேற்றமடைந்தது. இன்று அச்சமூகத்தினர் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் அரச பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதில் வெற்றி கண்டதன் மூலம் தமது இளைஞர்களின் உயர்கல்விக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக - கலாசார வளர்ச்சிக்கும் உறுதியானதொரு அடித்தளத்தை அவர்கள் அமைத்து கொண்டுள்ளனர். இதை ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்வோமாயின், மலையகச் சமூகம் செறிந்து வாழும் மலையகப் பிரதேசத்தில் இதே போன்றதொரு பல்கலைக்கழகத்தை அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மலையக இளைஞர்கள் உயர்கல்வியைப் பெறுவதன் அவசியத்தையும் அதற்கென ஒரு பல்கலைக்கழகம் தேவையென்பதையும் மேலே குறிப்பிட்ட உள்நாட்டுக் காரணிகளின் அடிப்படையில் மட்டுமன்றி, சர்வதேசரீதியான காரணிகளின் அடிப்படையிலும் நோக்கலாம். தொழில்நுட்பத்தில் அண்மைக் காலத்தி லேற்பட்டு வந்துள்ள வியத்தகு முன்னேற்றங்களினால் தகவல்பரிமாற்றம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பவற்றில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி மாற்றங்கள் காலத்தையும் தூரத்தையும் அர்த்தமற்றதாக்கி விட்டன. எனவேதான், உலகம் இன்று சுருங்கி வருவதாக, முழு உலகமுமே ஒரு கிராமமாக மாறி வருவதாகக் கூறப்படுகின்றது. கிராமங்கள், நகரங்கள், நாடுகள் என்ற எல்லைகளைத்தாண்டி பொருட்கள், சேவைகள் என்பவற்றிற்கான சந்தைகள் இன்று உலகெங்கும் வியாபித்துக் காணப்படுகின்றன. பல்நாட்டுக்கம்பனிகளின் உலகளாவிய உற்பத்தி நடவடிக்கைகள் காரணமாக பொருட்கள் எங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன, நுகர்வோர் அவற்றை எங்கே கொள்வனவு செய்கிறார்கள், அந்த நுகர்வோர் எங்கு வாழுகின்றார்கள் என்பதெல்லாம் முக்கியத்துவமிழந்து வருகின்றன. அதே போன்றே, ஊழியத்திற்கான சந்தையும் இன்று உலகளாவிய ஒரு சந்தையாக மாறிவிட்டது. போக்குவரத்து, தகவல் பரிமாற்றம், தொடர்பாடல் என்பவற்றுக்கான செலவுகள் குறைந்து செல்லும் அதேவேளையில், அவற்றிற்கு ஏற்படும் காலதாமதமும் குறைந்து வருகின்றது. இதனாலேற்படும் துரிதமான உலகமயமாக்கம் காரணமாக அறிவாற்றலும் வினைத்திறனும் கொண்டோர், போட்டியடிப்படையில் தத்தமது நாடுகளின் அரசியல், புவியியல் எல்லைகளுக்கு வெளியே பிறநாடுகளிலும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மூன்றாம்நிலைக்கல்வி பயின்றோருக்கே இவ்வாறான வாய்ப்புக்கள் அதிகமாக விருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றைய உலகம் ஒரு அறிவுசார் உலகமெனக் கூறப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு அறிவே இன்று முக்கிய உந்து சக்தியாக மாறிவிட்டது. இந்தியாவின் பெங்களூர் நகரம் இன்று கணினி மென்பொருள் உற்பத்தித்துறையில் முன்னணியில் இருப்பதும், தமிழ்நாடு இத்தொழில்நுட்பத்துறையில் துரிதகதியில் வளர்ந்துவருவதும், கணினி மென்பொருள் உற்பத்தித்துறையில் அது பெங்களூருக்கு அடுத்த இடத்தைப்பிடித்து வருவதும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். கடந்தகாலங்களில் தொழில்வாய்ப்புக்களையும் செல்வத்தையும் பெருக்கிக் கொள்வதற்கு நாடுகள் தமது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்வ திலேயே பாரிய முதலீடுகளை மேற்கொண்டன. ஆனால் அதே நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இன்று மக்களது அறிவாற்றல், ஆக்க சக்தி, வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் அவர்கள் மீதே இவ்வித முதலீடுகள் செய்யப்படுகின்றன. அறிவினை உற்பத்திசெய்தல், அதனைக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகத் தெரிவுசெய்தல், அந்நோக்கங்களுக்காக அதனை சரியானமுறையில் பயன்படுத்திக்கொள்தல் என்பவற்றில் சமூகத்திற்கு உள்ள ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

இன்றைய அறிவுசார் உலகில் மலையக இளைஞர்களும் இணைந்து கொள்ளவேண்டுமாயின், அவர்கள் தமது அறிவாற்றலையும் ஆக்கத்திறனையும் பெருக்கிக்கொள்வது இன்றியமையாததாகும். இதனை அடைந்து கொள்வதற்கு அவர்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் பல்கலைக்கழகமொன்று அமைவது அவசியமானது. நாட்டில் இருக்கும் பல்கலைக்கழகங்கள் சிலவற்றிலாவது தமிழ் மொழி மூல கல்விக்கான வாய்ப்புக்கள் இருந்தபோதும், அவை மலையக மாணவர்களின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. அறிவாற்றலால் உந்தப்படும் பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமான கல்வி, பயிற்சி என்பவற்றை உறுதி செய்துகொள்வதில் மூன்றாம்நிலைக்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்களிக்கின்றன என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மலையகச் சமூகம் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் அரச பல்கலைக்கழகமொன்றை அமைத்துக்கொள்வதன் ஊடாக அவர்கள் உயர்கல்வியை பெற்றுக் கொள்வதோடு, தமது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினை கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இனங்காண்பதற்கும், தமது சமூகத்தின் கலை, கலாசார, பாரம்பரியங்களை வளர்த்துக் கொள்வதற்கும் அது உதவியாகவிருக்கும்.

தேசிய பல்கலைக்கழகமொன்றினது இடவமைவானது தேசியரீதியான தேவைகளின் அடிப்படையிலேயன்றி, ஒரு மாகாகாணத்திற்கு ஒன்று என்ற எளிமையான அடிப்படையிலோ, இன அல்லது வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டோ அமைக்கப்படக்கூடாது என தேசிய கல்வி ஆணைக்குழு (National Education Commission - 1996) கூறுகின்றது. வேறுபட்ட சமூக - பொருளாதார பின்னணிகளைக் கொண்ட மாணவர்களை ஒன்றாகக் கொண்டு வருவதன் மூலம் அவர்களிடையே சமூக ஊடாடலை ஏற்படுத்தி அதனூடாக ஒத்துழைப்பு, சமா

தான சகவாழ்வு போன்ற நற்பண்புகளையும், உயரிய சமூகப்பெறுமானங்களையும் ஏற்படுத்துவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டுமெனவும் அது கூறுகின்றது. இக்கருத்து பெருமளவிற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றே. எனினும், இலங்கையைப் பொறுத்தவரையில், பிராந்தியரீதியிலும், ஓரளவு இனஅடிப்படையிலும் ஏற்கனவே பல பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டுள்ள நிலையில், மலையக இளைஞர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அம்மக்கள் செறிந்துவாழும் ஒரு பிரதேசத்திலே பல்கலைக்கழகமொன்றை நிறுவுவது மலையக இளைஞர்களின் உயர்கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க உதவுமென்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

மூன்றாம்நிலைக்கல்வியில், அதிலுங்குறிப்பாக, பல்கலைக்கழகக் கல்வியில் பங்குபெறுவது எந்தவொரு சமூகத்தினதும் கல்வி அடைவினை அளவிடுவதற்கான நியமமானதொரு சுட்டியாக கருதப்படுகின்றது. பெருந்தோட்டத் தமிழ்மாணவர்களைப் பொறுத்தவரை, குறிப்பிட்ட வயதுக்குட்பட்டோரில் வருடாந்தம் ஒரு வீதத்திற்குக் குறைவானோரே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். இலங்கையின் மொத்த சனத்தொகையில் இந்திய வம்சாவழித்தமிழரின் இனவிகிதாசாரம் ஏறக்குறைய 7.0 சதவீதமாகவிருக்கும் நிலையில் குறைந்தது இச்சமூகத்தைச் சேர்ந்த 3,000 மாணவர்களாவது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் உண்மையில் 400 தொடக்கம் 450 பேர் மட்டுமே எமது பல்கலைக்கழகங்களில் பயின்று வருவது கவலைக்குரியதே. பல்கலைக் கழகங்களில் இணையும் மலையக மாணவர்களின் மொத்த எண்ணிக்கையானது காலப்போக்கில் ஓரளவு அதிகரித்து வந்துள்ளபோதும், பல்கலைக்கழக மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் அவர்களது பங்கில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இம்மாணவர்களது பாடசாலைக்கல்வியில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளே இதற்கான முக்கியமான காரணமாகும். உதாரணமாக, இச்சமூகத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், கல்விஅதிகாரிகள் என்போரின் பற்றாக்குறை, இப்பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளும் ஏனைய வளங்களும் போதாமை, பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் அசமந்தப்போக்கு, வறுமைநிலை போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். இவ்விதக் குறை பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே இம்மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான வாய்ப்பினை அதிகரித்துக் கொள்ளமுடியும். அத்துடன், கடந்த காலங்களில் அறிமுகம் செய்யப்பட்ட பிரதேசரீதியான தரப்படுத்தல் போன்று இம்மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதியில் ஏதோ ஒருவகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்ட கல்வித்துறை களில் பட்டப்படிப்பினை நடத்துவதோடு நின்றுவிடாது, பல விசேட துறைகளில் குறுகியகால டிப்ளோமா, சான்றிதழ் மட்ட பயிற்சிநெறிகள் போன்ற விரிவாக்கல் பாடநெறிகளை நடத்துவதற்கும் வாய்ப்பு இருப்பதால், பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு ஆகக்குறைந்த கல்வித் தகைமைகளையாவது கொண்டிராதோர் மேற்படி பயிற்சி நெறிகளில் பங்குபற்றி ஏதெனுமொரு துறையில் விசேட திறமைகளை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் தொழிற்சந்தையில் போட்டியிட முடியும். இவ்வித பயிற்சி நெறிகள் ஏற்கனவே தொழிலில் இருப்போருக்கும் வழங்கப்படலாம். அத்துடன், பல்கலைக்கழகங்கள் நடத்தும் பல்வேறு கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான ஆகக்குறைந்த தகைமைகளாவது உள்ளோரின் எண்ணிக்கை மலையகச் சமூகத்தினரிடையே குறைவாக விருப்பதாலேயே பல்கலைக்கழகங்களில் பயிலும் மலையகமாணவர்களின் எண்ணிக்கை யும் குறைவாக உள்ளது. இப்படியான மாணவர்கள் தேவையான போதிய தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு புதிதாகத் தாபிக்கப்படும் பல்கலைக்கழகம் 1½ தொடக்கம் 2 வருட கால துணை பட்டப்பயிற்சி (Associate degrees) அல்லது அடிமட்டப் பயிற்சி நெறிகளை (Foundation Courses) நடத்தலாம். இப்பயிற்சி நெறிகளில் தேர்ச்சியடைவோர் குறிப்பிட்ட காலத்திற்கு ஏதேனுமொரு தொழிலைச் செய்துவிட்டு, மீண்டும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, 1 தொடக்கம் 1½ வருடகாலப்பயிற்சியின் பின்னர் முழுமையான பட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை அளிக்கலாம். இப்படியானதொரு பட்டப்பயிற்சி முறை திறந்த பல்கலைக்கழகத்தில் காணப்படுவதை இங்கு சுட்டிக்காட்டலாம். மலையக மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் அதேவேளையில், மலையகத்தைப் பொறுத்தவரை இவ்வித பயிற்சிநெறிகள் மனிதவளத்தையும், மானுட அபிவிருத்தியையும் மேம்படுத்து வதில் குறிப்பிடத்தக்க பங்கினை அளிக்கலாம்.

புதிதாகத் தாபிக்கப்படும் பல்கலைக்கழகமானது கல்விநடவடிக்கைகளை மேற்கொள்தல், ஆராய்ச்சியில் ஈடுபடுதல் என்பவற்றோடு நின்றுவிடாது தம்மைச்சுற்றி இருக்கும் சமூகத்துடன் தொடர்பாடலையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். அதாவது, பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள அமைப்புக்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி அச்சமூகம் எதிர்நோக்கும் சமூகப்பிரச்சினைகள், அவற்றிற்கான சாத்தியமான தீர்வுகள் என்பன பற்றிய தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம். அதேபோன்று, பல்கலைக்கழகத்துக்கும் அந்த அமைப்புக்களுக்கும் இடையே அச்சமூகத்தைப் பற்றிக் காணப்படும் பொதுவான அக்கறைகள் பற்றி அறிந்துகொண்டு, அவற்றை மேம்படுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபடலாம். மலையகச் சமூகம் போன்றதொரு சமூகத்தைப் பொறுத்தவரை இது அந்தப் பல்கலைக்கழகத்தின் முக்கியமானதொரு கடமையுமாகும். எனவே, மேலும் தாமதிக்காது இவ்வித பல்கலைக்கழகமொன்றை மலையகப் பிரதேசத்தில் தாபிப்பது அரசாங்கத்தின் தலையாயக் கடமையாகும். அதேபோன்று, மலையகச் சமூகத்தின் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார மேம்பாட்டில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அனைவரும் இதற்குத் தமது பூரணமான ஆதரவை அளிப்பது காலத்தின் தேவையுமாகும்.

தொடரும்.



# வாசகர் கருத்து

## கச்சிதமான வடிவமைப்பு காத்திரமான கட்டுரைகள்

'எழுநா' துரதிர்ஷ்டவசமாக முதலொரு தடவை தொடர்ச்சியான அதன் இயக்கத்தை நிறுத்தியிருந்தாலும், மீண்டும் நண்பர் சசீவனது, விடாப்பிடியான முயற்சியில் எழுத்து மற்றும் காணொலித் தளங்களில் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு, அபிவிருத்தி சார்ந்த அறிவார்ந்த ஆய்வுகளாக விடயதானங்கள் தொடர்ச்சியாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

மிகுந்த கவனத்திற்குரிய இவ்வகை எழுத்துக்களை ஒரு தொகுப்பாகப் படிப்பது வாசிப்பை இலகுபடுத்தும் என்ற காரணத்தினால் அவை ஓர் இதழுக்குரிய வடிவமைப்பில் PDF கோப்பாக மாதந்தோறும் வெளியாக உள்ளன. கச்சிதமான வடிவமைப்பு. காத்திரமான கட்டுரைகள்.

வாழ்த்துகள்

**சயந்தன் கதிர்**
14/10/2022

## மீண்டும் எழுநா!

'எழுநா' என்ற பெயரில் ஒரு பதிப்பகம் 2012 இல் தொடங்கப்பட்டு பத்துக்கும் மேற்பட்ட முக்கியமான நூல்கள் வெளிவந்ததை நண்பர்கள் அறிந்திருப்பீர்கள். அதன் பின் பல்வேறு நடைமுறைக் காரணங்கள் காரணமாக அது நின்று போய் விட்டிருந்ததுவும் தெரிந்ததே. இப்போது நூலகத்தின் செயற்பாட்டாளரும் அதன் இயக்குநர் சபையின் உறுப்பினருமான நண்பர் சசீவனின் முன்முயற்சியில் எழுநா என்ற பெயரில் கவனத்துக்குரிய சஞ்சிகை ஒன்று வெளிவரத் தொடங்கியுள்ளது. இலங்கையின் சமகால நிலைமைகள், பொருளாதாரம், வரலாறு, பண்பாடு, அரசியல் என்பவை தொடர்பான பல காத்திரமான கட்டுரைகளை இரண்டாவது இதழ் தாங்கி வெளிவந்துள்ளது.

**எஸ்.கே. விக்னேஸ்வரன்**
**17/10/2022**

## எழுநா: அவசியம் படிக்க வேண்டிய இதழ்

எழுநா என்றொரு சமூகப் பண்பாட்டு வரலாற்று இணைய இதழ் ஈழத்தவர்களால் நடத்தப்படுகிறது. இலங்கைத் தமிழர்கள், மலையக மக்கள், முஸ்லிம்கள் குறித்து சமூகம், பண்பாடு, வரலாறு, கல்வி சார்ந்த தளங்களில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. ஈழத்தமிழர், மலையக மக்கள், முஸ்லிம்கள் சார்ந்து மேற்கொள்ளப்படும் மிகச் சிறந்த பண்பாட்டு முயற்சி இது. முதலில் எழுத்தாளர்கள்/ ஆய்வாளர்களை அணுகி தங்களது ஆய்வுகளுக்கான Concept Note ஐக் கேட்டுப் பெற்று அதனை ஆசிரியர் பீடம் பரிசீலனை செய்த பின்னரே ஆய்வினைத் தொடராக வெளியிடுவதற்கான அனுமதியை வழங்குகின்றனர். இதனால் ஆய்வுகள் சமூகம், காலம் சார்ந்து முக்கியத்துவம் கொண்டதாகவும், ஆழமானதாகவும் அமைந்திருக்கின்றன. எனவே இது நாம் அவசியம் படிக்க வேண்டிய இதழ். 'இலங்கைத் தமிழ் முஸ்லிம்களின் இனத்தொடர்ச்சியும் சமூகவியலும்' குறித்து ஓர் ஆய்வை எழுநாவில் விரைவில் தொடங்குகிறேன். ஆய்விற்கான Concept note ஐயும் பரிசீலித்து அனுமதி அளித்திருக்கிறார்கள்.

எழுநா நாம் அவசியம் படிக்க வேண்டிய சமூகப் பண்பாட்டு ஆய்வுக் களஞ்சியம் என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது.

**ஜெப்ரி ஹாசன்**
**04/11/ 2022**

# எழுநா
# புத்தக மன்றம்

எழுநா புத்தக மன்றம் வருடாந்த சந்தாவை அடிப்படையாகக் கொண்டது. எழுநா புத்தக மன்றத்தில் இணைவதன் மூலம் எழுநாவின் முயற்சிக்கு ஆதரவளிக்க முடியும். அதேநேரம், இச்சந்தா மூலம் எழுநா புத்தக மன்றத்தின் இணைபவர்களுக்கு எழுநாவின் சகல வெளியீடுகளும் கிடைக்கப்பெறும்.

| | |
|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 GBP |
| ஐக்கிய அமெரிக்கா | 125 USD |
| கனடா | 150 CAD |
| அவுஸ்திரேலியா | 175 AUD |
| ஐரோப்பா | 125 EURO |
| நோர்வே | 1200 NOK |
| இலங்கை | 25,000 LKR |

## எழுநா விளம்பர ஆதரவு

சமூக நிறுவனங்களோ அல்லது வியாபார நிறுவனங்களோ தம்முடைய சேவையை எழுநாவின் காணொலிகள் ஊடாக விளம்பரம் செய்யலாம். எழுநாவின் சகல காணொலிகளிலும் குறிப்பிட்ட மாத காலப்பகுதிக்கு நிறுவன இலச்சினை காட்சிப்படுத்தப்படும். இப்போது எம்மிடம் 15,000 பேரை சென்றடைவதற்கான வலையமைப்பு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><td>ஐக்கிய இராச்சியம்</td><td>100 GBP | 50 GBP</td></tr>
<tr><td>ஐக்கிய அமேரிக்கா</td><td>125 USD / 60 USD</td></tr>
<tr><td>கனடா</td><td>150 CAD / 75 CAD</td></tr>
<tr><td>அவுஸ்திரேலியா</td><td>175 AUD / 100 AUD</td></tr>
<tr><td>ஐரோப்பா</td><td>125 EURO / 60 EURO</td></tr>
</table>

S ENTREPRENEURS

DELIVERY WITHOUT EXCUSE

CALL CENTER SOLUTION

SOCIAL MEDIA MARKETING

PROPERTY MANAGEMENT

www.s-entrepreneurs.com

No,11, Kachcheri Lane,Jaffna,Sri Lanka

Info@s-entrepreneurs.com

Contact us :

+94 21 222 59 50

ஆதிரை

வெளியீடு

தமிழிலும் சிங்களத்திலும்

நாவல்கள் • சிறுகதைகள் • கவிதைகள்

திருநெல்வேலி

யாழ்ப்பாணம்

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE***

**Immediate Payment to Any Account**

***Partnership** with*

**CargillsBank**
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

**get 5% Discount* on Purchases**

**0207 341 7300**

**www.spoton.money**

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE




# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking

Real Estate Investment


Real Estate Buying and Selling

remaxcommunity.ca /remaxcommunityinc /remax_community

/remaxcommunity /UCD-3WoKApsSL2P4SqInHVIA

வணக்கம் London

www.vanakkamlondon.com




# யாதும் ஊரே யாவரும் கேளிர்

## தமிழால் இணையும்
## தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the ‘friends and family’ stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**